In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவமஞ்சரி

சிவமஞ்சரி 12 தொகுதி

பூசை. ச. அருணவசந்தன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

C.S.S.

உ

சிவமயம்

சிவமஞ்சரி

- பன்னிரண்டாம் தொகுதி -

(பக்கங்கள்- 1761 முதல் 1920 வரை)

ஆசிரியர்

சிவமஞ்சரிச் செம்மல் அருட்பணிஅரசு, சிவசேவா ரத்னம்

பூசை. ச. அருணவசந்தன்

சித்தாந்த சிரோன்மணி ஜெ. மோகன் அவர்களின்

-சிவாலயம்-

வழங்கிய நல்லாதரவின் துணைகொண்டு

விரோதி வருஷம் நவராத்திரி - சரஸ்வதி பூஜை

நன்னாளில் (27.09.2009) இந்நூல் வெளியிடப்பட்டது

சிவசுந்தரி கலைக்கூடம்

29, பீமண்ண முதலி தோட்டத் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை-18

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூலின் விவரம்

நூலின் பெயர்	சிவமஞ்சரி (பன்னிரண்டாம் தொகுதி) 12
நூலின் ஆசிரியர்	பூசை. ச. அருணவசந்தன்
பதிப்பு ஆண்டு	முதற் பதிப்பு- 2009
உரிமை	ஆசிரியருக்கு
பதிப்பாளர் / ஆசிரியர்	பூசை. ச. அருணவசந்தன்
முகவரி	ப. எண். 29, பீமண்ண முதலி கார்டன் தெரு ஆழ்வார்பேட்டை, சென்னை 600 018. அலைபேசி : 9941124964
பக்கங்கள்	8+160 ஆக 168பக்கங்கள்
நூல் அளவு	கிரௌன் 1.4 -(24 c.m. x 18,2 c.m.)
அச்சிட்டுள்ள பரப்பளவு	21.5 செ.மி x 15.2 செ.மி
பயன்படுத்தப்பட்டுள்ள தாள்	பலாபூர் எச்.பி டபுள் கிரௌன் 11.6 கி.கி.
பயன்படுத்தப்பட்டுள்ள எழுத்துக்கள்	10.8 புள்ளிகள்
மின் அச்சுக் கோர்வை	சிவசுந்தரி , செங்கழுநீர் பிள்ளையார் கோயில்தெரு மயிலாப்பூர் சென்னை -4.
மறுதோன்றி அச்சகம்	ஶ்ரீ ஆப்செட் பிரிண்டர்ஸ் 3, பழைய ஜெயில்ரோடு,தங்கசாலை , சென்னை 1.போன் 25283554
நூலின் பொருள்	சிவபெருமானைப்பற்றி, புராணங்கள், வடமொழி தமிழ்வேதங்கள்,தலவரலாறுகள் ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பட்ட செய்திகள் தனித்தனி தலைப்புகளில்
விலை	ரூபாய் 100/-
நூலகக் குறியீட்டு எண்	-

அட்டையில்- மதுராபுரி வசந்தரான சோமசுந்தரப் பெருமான் மீனாட்சி தேவியுடன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

முகவுரை

அருள்நிதி தரவரும் ஆனந்த ஜோதி அண்ணாமலையாராகச் சிவபெருமான் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றான். சோதி வடிவமாக விளங்கும் பெருமானை ஜோதிர் லிங்கங்கள் என போற்றி வழிபடு கிறோம். சோதியை (ஒளியை) பன்னி ரண்டு என்ற எண்ணோடு தொடர்பு படுத் துகின்றனர். அதையொட்டி பாரத தேசத் திலுள்ள ஜோதிர் லிங்கங்களில் புராணச் சிறப்புமிக்க பன்னிரண்டு லிங்கங்களை வரிசைப்படுத்தி ஜோதிர் லிங்கங்கள் என்று கொண்டாடுகிறோம். ஜோதிர் மயமான பெருமான் சிறப்புகளைப் பேசுவதாக சிவமஞ்சரியின் பன்னிரண் டாம் தொகுதி மலர்ந்து தங்கள் திருக்கரங் களில் தவழ்கிறது.

இதில் சிவபெருமான் எளிவந்த பெருங் கருணையால் பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் அருள் செய்தது. தேவேந்திர உலகில் வாழும் இந்திரனுக் கும், தெய்வ யானையாகிய ஐராவதத்திற் கும் அருள் செய்தது சிவபெருமானைச் சுற்றி விளங்கும் சிவபரிவாரங்கள், சிவ பெருமான் ஏந்தும் ஆயுதங்கள், யாவற் றிற்கும் மேலாக உயிர்களுக்குப் பேரின்பத் தைத் தரும் ஆனந்த பைரவரின் அருட் கோலங்கள் பற்றிய செய்திகள் தொகுத்த ளிக்கப் பட்டுள்ளன.

இந்நூல் மலரும் இந்த நல்வேளையில் இம்மலர் மலர்ந்து மணம் பரப்பத் துணை நின்ற அனைவரையும் நன்றியுடன் போற்றி வணங்குகிறோம்.

சிவமஞ்சரியின் முதல் இதழைக் கண்ணுற்று நேரில் அழைத்துக் குருவரு ளையும் திருவருளையும் வழங்கி அருளி யதுடன் தொடர்ந்து ஆதரித்துவரும் **திருக் கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன கர்த்தர் குருமகாசந்நிதானம் சீர்-வளர்-சீர்சிவப்பிரகாச பண்டார சந்நிதி சுவாமி கள்** அவர்களின் திருவருளைப் போற்றி வணங் குகின்றேன்.

இப்பணியில் அருள் உதவி செய்து வரும் எனது வணக்கத்திற்குரிய **குருநாதர் குருஜி ஆர்.துரைராஜன் (எ) பத்மநாபன்** அவர் களைப் போற்றி வணங்குகிறேன். அவர் பல்வேறு திருப்பணிகளைச் செய்து வரும் நிறைதவச் செல்வர். நுங்கம்பாக்கம், அருள்மிகு அகத்தீசுவரர் ஆலயத்தில் தினந் தோறும் சொந்த செலவில் ஏராளமான தீபங்களை ஏற்றியும், நீர்சுமந்தேத்தியும் மலர்ப் பணி செய்தும் வருபவர். அவரைப் போற்றி வணங்குறோம்.

எனது சிவப்பணிகளுக்கும் தெய்வீக் பணிகள் அனைத்திற்கும் துணைநின்று வரும் எனது அன்பிற்கினிய சகோதரி **திருமதி.அனந்த லட்சுமி** அவரது கணவர் கயிலைப்புனிதர் சிவத்திரு **வரத.வீரராகவன்** தம்பதியருக்கு எனது நன்றியைத் தெரிவித் துக் கொள்கிறேன்.

அவரை அடியொற்றி அவரது அன்ப ரும், நுங்கம்பாக்கம் எல்.வி.ஜே. பில்டர்ஸ் உரிமையாளரும் சிவசுந்தரி அறக்கட்ட ளையின் நிறுவனருமான திருப்பணிச் செல்வர் **எம்.வி.ஜெய்சங்கர்** அவர்கள் நல்லாதரவை வழங்கி வருகின்றார்கள்.

மாபெரும் திருப்பணியாளரான அவரையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவரது குடும்பத்தினரையும் வாழ்த்தி மகிழ்கிறோம்.

இந்த ஐந்து மலர்களும் அன்பர்க ளின் நல்லாதரவுடன் தனித்தனியே இலவச வெளியீடாக வெளிவந்தன.

முதல் மலரான (56) 'பறவைகளும் பரமனும்' எனும் நூல் **திரு.ஜெய்சங்கர், டாக்டர்.சத்யநாராயணா, பெங்களூர்சிவ ஸ்ரீ.லட்சுமணன், சிவஸ்ரீ டி,ஆர். ரமேஷ்** ஆகியோர் உதவியுடன் வெளிவந்தது. இரண்டாவதான (57) **ஐராவதேசுவரர்** சென்னை மயிலாப்பூர் **சிவஸ்ரீ தன்ராஜ்– சாந்த குமாரி** தம்பதியினர் உதவியால் வெளிவந்தது.

மூன்றாவதான (58) **சிவாயுதங்கள்** நமது அன்பர் **எம்.வி.ஜெய்சங்கர்** உதவி யாலும், நான்காவதான(59)**சிவாலயப் பரிவாரங்கள்,திருமிகு.சி, மோகன்குமார் சி.பிரேம் குமார்** சகோதரர்களுடன் **சிவஸ்ரீ முத்துக் குமாரசாமி சிவாசாரியார்** செய்த உதவியினாலும் வெளிவந்தன. ஐந்தாவ தான(60) **ஸ்ரீ பைரவர்**, சென்னை அறுபடை வீடு **ஸ்ரீ.சுந்தரம்** அவர்களின் வழிகாட்டு தலின் பேரில் சென்னை அறுபடை முருகன் ஆலய நிறுவனரும் , நிர்வாகியு மான **திரு.அழகப்ப அழகப்பன்** அவர்க ளின் அருட்கொடை பெற்று வெளியிடப் பட்டது.

இப்போது இவை ஐந்தையும் தொகுத்துப் பன்னிரண்டாவது மலராக மலர நல்லாதரவு அளித்து உதவியவர் **திரு,ஜெ.மோகன்** அவர்களாவார். இந்த ஆதரவுக்கு உடன் நின்ற செந்தமிழ்வாரிதி பேராசிரியர். **இரா.செல்வக்கணபதி** அவர்களுக்கு எனது நன்றி. இவர் களுக் கும் வழக்கமான வெளியீடுகளுக்கு உதவி வரும் அன்பர்களுக்கும் எமது நன்றி உரித்தாகுக.

சிவமஞ்சரியின் அச்சுப் பிரதிகளைப் படித்து செம்மைப்படுத்தி உபகரித்து வரு பவர் அடையாறு கற்பகம் கார்டன்ஸ் பிரம்மஸ்ரீ **ஜி.எஸ்.நடராஜன்** அவர் களா வர். இவருடைய குமாரர் **என்.பாலு (எ) பால சுப்பி ரமணியன்** (ஸ்பீகீள் பிரிண்ட்டர்ஸ்) அவர்களும் அனேக உதவிகளைச் செய்து வருகின் றார். மேலும் படிகளைத் திருத்தி உதவிவரும் அன்பர்கள் சிவஸ்ரீ. **த.பூமிநாக நாதன்** (உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் தரமணி) **சிதம்பரம் வெ.ரமணன்** ஆகி யோருக்கும் எமது நன்றி உரித் தாகுக.

இந்நூலுக்குத் தேவையான ஓவியங் களை வரைந் தளித்த , மயிலை **காசி ஸ்தபதி யார்கோவி(எ)கோவிந்தராஜன்)**ஆகியோ ருக் கும் எமது நன்றி உரித்தாகுக.

மேலும்தேவையானபடங்கள் தமிழ்நாடு தொல்லி யல்(ம)அருங் காட்சி யத் துறையினரிடமிருந்தும் திருவாவடு துறை ஆதீனத்திலிருந்தும்பெறப்பட்டன. இந்திய மத்திய தொல்லியல்துறை மே னாள் அதிகாரி திரு .**தியாக சத்திய மூர்த்தி** அவர்களும்திருவான்மியூர் பாம்பனடிமை **வே.ந சௌந்தரராஜன் - பிரகதா** தம்பதி யரும் இன்னும் பல அன்பர்களும் அளித் தார்கள். இவர்கள் யாவருக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

இந்நூலினைப்பலருக்கும் அறிமுகப் படுத்தி நல்லாதரவினைத் தேடித்தந்து வரும் சிதம்பரம் பிரம்மஸ்ரீ **ஜி.பரமேஸ்வர தீக்ஷிதர்** அன்பர்கள் பரமக்குடி **திரு(ம) திரு மதி.ஹரிவாசுதேவ்** தம்பதியினர் அவர் களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளு கின்றேன்.

நமது பணிக்கு வேண்டிய நூல் ஆதாரங்களைத் திரட்ட உதவியாக இருந்த **டாக்டர் உ.வே.சாமிநாதையர்** நூலகத்தினர்க்கு எங்கள் நன்றி.

இந்நூல் அச்சிடுவதற்கு உதவியாக கணினி தட்டச்சு செய்துதவிய **திரு.சு.கதிர் வேலு** அவர்களுக்கும், நிழற்பிரதிகளைச் செய்துதந்த சத்தியா பிராஸ ஸ்திரு .**ராதா கிருஷ்ணன்** அவர்களுக்கும், நன்முறை யில் அச்சிட்டளித்த **ஸ்ரீஆப்செட்** பிரிண் டர்ஸ் உரிமையாளர்கள் **திரு.சுந்தர மூர்த்தி, திரு.**



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செல்வராஜ் ஆகியோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

எனது வாழ்க்கைத் துணைவி திருமதி. **கே.வசந்தா** எனது அனைத்து சிவப் பணிகளும் நன்கு நடைபெற இல்லப் பொறுப்புகள் அனைத்தையும் தானே ஏற்றுக் கொண்டு உதவியாக இருந்துவருகிறாள். அவளுக்கு இந்த வேளையில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளு கின்றேன்.

அன்பர்கள்அனைவருக்கும் உண்ணாமுலை அம்பிகை உடனாகிய அண்ணாமலை யெம்மண்ணல் சகல செல்வ யோக மிக்கப் பெருவாழ்வை அளித்து அருள்பாலிக்க வேண்டு மென்று அவருடைய பொன்னார் திரு வடிகளைப் போற்றிப் பணிந்து வேண்டுகின்றேன்.

விரோதி ஆண்டு சரஸ்வதிபூஜைநன்னாள்
(27.09.2009) ஞாயிற்றுக்கிழமை

இங்ஙனம்,
சிவப்பணியில் மீளாஅடிமை,

பூசை.ச.ஆட்சிலிங்கம்

பூசை ச. அருணவசந்தன் (எ) பூசைச.ஆட்சிலிங்கம்

சைவ சித்தாந்த சிரோன்மணி' சிவாலயம்' ஜெ. மோகன் அவர்களுக்கு எங்கள் நன்றி . . . . .

சைவ சித்தாந்த சிரோன்மணி ஜெ. மோகன் அவர்கள் உயர் மின்னணு மென் பொறியாளர். இருதய சிகிச்சைக்கான மின்னணுக் கருவிகளை இறக்குமதி செய்து விற்பனை செய்து வருகிறார்.

சிறந்த சிவநெறியாளர். சமய சாத்திர தோத்திர நூல்களில் பயிற்சி உடையவர். சிவாலயம் என்னும் அறநிலையத்தை நிறுவி அதன்மூலம் சமயப் பணிகளைச் செய்து வருபவர். சமயாச்சாரியார்கள்பாலுள்ள மிகுந்த ஈடுபாட்டால் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றை ஒலிச்சித்திரமாகத் தயாரித்துள்ளார். இப்போது சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாற்று ஒலிச்சித்திரமாகத் தயாரித்து வருகின்றார். 'வில்லிசையில் ஔவையார்' ஒலிஒளி குறுந்தகட்டையும் வள்ளலார் வாழ்க்கை வரலாற்றையும் ஒலிச்சித்திரமாக வெளியிட்டுள்ளார். இவர் சிறந்த வரலாற்றுச் சிந்தனையாளராக விளங்கிவருபவர்.

பழந்தமிழ் சமய நூல்களைப் பதிப்பதில் ஆர்வம் காட்டிவருபவர். இப்போது மயிலைத் தலபுராணம் என்ற 115 ஆண்டு பழைமையான நூலை மறுபதிப்பாக வெளியிட உள்ளார்.

இவ்வகையில் சிவமஞ்சரியின் இந்தப் பன்னிரண்டாம் தொகுப்பு வெளிவரப் பேருதவி புரிந்துள்ளார். இவருடைய இந்த உதவிக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். சிவத்திரு ஜெ.மோகனின் சிவப்பணிகள் மேன்மேலும் வளரவும், இவரது "சிவாலயத்தின்" பணிகள் சிறந்தோங்கி வளரவும் வாழ்த்துவதோடு இவர்களுக்கு உண்ணாமுலை நாயகி உடனாய அண்ணாமலை எம் அண்ணல் சகல செல்வ யோக மிக்க பெருவாழ்வை அளிக்க வேண்டு மென்று அவர்தம் பாதமலர்களைப் போற்றிப் பணிந்து வேண்டுகிறேன்.

இங்ஙனம் சிவப்பணியில் மீளா அடிமை
பூசை ச.அருணவசந்த என்கிற (பூசை.ச.ஆட்சிலிங்கம்)

" மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் "

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நன்றி மலர்கள்

எமது அனைத்துச் சமய நூற்பணிகளுக்கும் பேருதவி செய்துவரும் கீழ்க்காணும் அன்பர்களுக்கு எமது நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்,

பிரம்மஸ்ரீ ஜி,பரமேஸ்வர தீக்ஷிதர்,சிதம்பரம்

சிவஸ்ரீ .T.R. ரமேஷ்
டி சில்வா சாலை, ஆழ்வார்பேட்டை,சென்னை18

'சிவஸ்ரீ Prof.Dr.M.V. சத்தியநாராயணா IIT
தண்டீஸ்வரம், வேளச்சேரி, சென்னை-42

சிவஸ்ரீ .தங்க.சொர்ணகுமார்
டிவிஎஸ் சுந்தரம் பிரேக்ஸ் லைனிங் லிமிடெட்

சிவஸ்ரீ P.B. வெங்கட்ராமன்
ஆஷியானா, ஆழ்வார்பேட்டை, சென்னை-18

சிவஸ்ரீ Dr.C.ரவிசங்கர். B.D.S.,
ஜெய்சற்குரு பல் மருத்துவமனை, புதுச்சேரி

குருஜி சிவஸ்ரீ கே.கே. கோபாலசர்மா
பரமேஸ்வரி நகர், அடையாறு, சென்னை-20

டாக்டர் V.P.R.வரதராஜன் M.B.B.S,
Dr.V.P.ராமபாண்டியராஜ் கிளினிக், சென்னை

சிவஸ்ரீ M. ராஜா
மேனாள் ரிசர்வ் வங்கி அதிகாரி, சென்னை

சிவஸ்ரீ M. சச்சிதானந்தம்
தனலட்சுமி வங்கி, அண்ணாநகர் கிளை, சென்னை

சிவாகமஸ்ரீ.ஞானஸ்கந்த மூர்த்தி
சிவாச்சாரி யார்
அறுபடைவீடு, பெசன்ட்நகர், சென்னை

சிவஸ்ரீ.L. ஆறுமுகம் B.Sc.,S.I.(Retd)
சென்னை மாநகராட்சி

சிவஸ்ரீ ஏ. வெங்கடேசன்
ராஜா அண்ணாமலை புரம்,சென்னை-28

சிவஸ்ரீ .N. கார்த்திகேயன்
பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5

திருமதி, பானுமதி மாதவன்
திருவல்லிக்கேணி

சிவஸ்ரீ,சாமி.சுப்பையாஸ்தபதியார்குமாரர் சிவஸ்ரீ.சிவா.ஸ்ரீ
சுவாமிநாத ஸ்தபதியார்
ஏகாம்பரநாதர் மேற்கு மாடவீதி,காஞ்சிபுரம்

சிவஸ்ரீ கே,பி,பி. பன்னீர்செல்வன்
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி)

சிவஸ்ரீ.M.இராஜசிம்ம மகேந்திரன்,
சிவஸ்ரீ.S.மோகன சம்பத்
பெருமாளகரம், திருவேற்காடு

சித்தாந்த ரத்தினம்
சிவஸ்ரீ கே.இரத்தினசபாபதி
திருவேங்கட முதலி தெரு புதுப்பேட்டை, சென்னை-2

சிவஸ்ரீ நீலகண்டன்
2, ரயில்வே காலனி 2வது தெரு
அமைந்தகரை , சென்னை-29

சிவஸ்ரீ வி,எஸ்.கல்யாணராமன்
சுக்ருதா, மாருதிநகர், பெங்களூரு. 560072

திருவாசகச்செம்மணி
திருவையாறு வே.ரமணன், சிதம்பரம்

ஜினஸ்ரீ. மல்லி. ஜினேந்திரதாஸ்
CLRI .கிண்டி சென்னை

சிவஸ்ரீ,ஆறுமுகம்
CLRI .கிண்டி சென்னை

சிவஸ்ரீ.க .சுப்பிரமணியன்
அபிராமபுரம், சென்னை-4



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

ஸ்ரீ பச்சையம்மன் துணை

இந்நூலின் உள்ளே....

மலர்	56	பறவைகளும் விலங்குகளும்		பக்கம்
		வழிபட்ட பரமன்	”	1761
மலர்	57	ஸ்ரீ ஐராவதீஸ்வரர்	”	1793
மலர்	58	ஸ்ரீ சிவாயுதங்கள்	”	1825
மலர்	59	ஸ்ரீ சிவாலயப் பரிவாரங்கள்	”	1857
மலர்	60	ஸ்ரீ பைரவர்	”	1889

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவசுந்தரி கலைக்கூடம்

29, பீமண்ண முதலி தோட்டத் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை 600 018.

பேரன்புடையீர், சிவநேயச் செல்வப் பெருந்தகையீர்,

சிவபெருமானின் எல்லையில்லாத பெருமைகளை இயன்றவரை விளக்கும் வகையில் சிவமஞ்சரி என்ற தொடர் நூலை எமது கலைக்கூடம் வெளியிட்டு வருகின்றது. இதனை 60 தலைப்புகளில் சிறந்த புகைப்படங்கள் வரைபடங்களுடன் நேர்த்தியாக அச்சிட்டு வெளியிட முனைந்து, செயல்பட்டு வருகிறோம். (தடித்த எழுத்தில் உள்ள 5 நூல்கள் இந்த பன்னிரண்டாம் தொகுதியில் இடம் பெற்றுள்ளன).இவை

1, சிவமே செம்பொருள்
2 மச்சேந்திரர்
3 திருவாவடுதுறைஆதீனம்
4. முகலிங்கம்
5. பிரதோஷம்
6. பசுபதி
7. உமாமகேஸ்வரர்
8 .ஐந்தும் சிவபெருமானும்
9. திருக்கயிலாயம்
10 மகாசிவராத்திரி
11. ஸ்ரீருத்திரர்
12. ஆதித்யேசுவரர்
13 சோமஸ்கந்தர்
14 சைவ சமய சாத்திரங்கள்
15. ஸ்ரீதியாகராஜர்
16 .சந்திரசேகரர்
17. அக்னீஸ்வரர்
18. சித்தீசுவரர்
19 அகத்தீசுவரர்
20 அதி(கு) தியாகராஜர்
21, கேதார கௌரீசுவரர்
22 அம்பிகாபதீஸ்வரர்
23,அரம்பேசுவரர்
24 ஸ்ரீகாளீசுவரர்
25திருமணக்கோலநாதர்
26.பிரம்மபுரீசுவரர்
27. பன்னிருதிருமுறை அறிமுகம்
28.வேதஆகம புராணீசுவரர்
29.திருமாலீசுவரர்
30.மூவராய்நின்ற முதல்வன்
31.ஸ்ரீவீரட்டகாசர்
32.ஸ்ரீகாலசம்ஹாரர்
33 ஸ்ரீமன்மதேசுவரர்
34.ஸ்ரீதிரிபுராந்தகர்
35. ஸ்ரீவீரபத்திரர்
36.தீபமங்களேசுவரர்
37.தலவிருட்சங்கள்
38. ராஜகோபுரங்கள்
39. விமானேசுவரர்
40.தீர்த்தேசுவரர்
41. பூதலிங்கேசுவரர்
42. இராட்சதலிங்கம்
43. சப்தரிஷீசுவரர்
44. தட்சணாமூர்த்தி
45. சிவாசாரியர்கள்
46. புஷ்ப ரதீசுவரர்
47. கங்காதீசுவரர்
48. எட்டும் சிவபெருமானும்
49. விருந்திட்டீசுவரர்
50.சிவாலயத் திருவிழாக்கள்
51. சபாநாயகர்
52. ஆனந்தத் தாண்டவம்
53. ஊர்த்துவ தாண்டவர்
54. நாகநாதர்
55. இராஜ லிங்கேசுவரர்
56. ப்றவைகளும் பரமனும்
57. ஐராவதீசுவரர்
58. சிவாயுதங்கள்
59. சிவாலயப் பரிவாரங்கள்
60.பைரவர் என்பனவாகும்

மொத்தம் 2000 பக்கங்களுக்கும் அதிகமான அளவில் வெளிவரும் இந்நூல்

சிவபெருமானுக்குச் சொல்லால் கட்டப்பட்ட திருக்கோயிலாகும்

இந்நூல் ஆசிரியர் பூசை ச. அருணவசந்தன், ஓதுவார் மரபில் வந்த சைவநெறியாளர். சென்னை பல்கலைக்கழகத்தில் முதுகலைப்பட்டம் பெற்றவர். தமிழகமெங்கும் பயணம் செய்து ஏறத்தாழ 20,000 கோயில்களைத் தரிசித்தவர். தான் கண்டும் கேட்டும் உணர்ந்த செய்திகளைப் பதினெண்புராணங்கள், தெய்வத்திருமுறை நூல்கள், தலவரலாறுகள், கல்வெட்டுகள், செவிவழிச் செய்திகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒப்பு நோக்கித் தொகுத்து நூலாக அளிக்கின்றார். மேன்மைகொள் சைவ நெறி உலகெங்கும் விளங்க, குறைந்த விலையில் நிறைந்த செய்திகளைத் தாங்கி, சிவமஞ்சரி வலம் வருகிறது. இவருடைய பணியைப் பாராட்டி திருவாவடுதுறை ஆதினம் குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பராமாச்சாரிய சுவாமிகள் சிவமஞ்சரிச் செம்மல் என்ற பட்டத்தையும் அகில உலக பக்தி இலக்கிய பேரவையினர் அருட்பணி அரசு என்ற பட்டத்தையும், சேலம் அறுபத்து மூவர் விழாக் குழுவினர் சிவசேவாரத்தினம் எனும் விருதையும் அளித்து கௌரவித்துள்ளனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

பசுங்கிளிக்கு அருளிய பரமனே போற்றி! பன்றிக்கு முலை சுரந்த முதல்வனே போற்றி! போற்றி!!

பரமனருள் பெற்ற பறவைகளும் விலங்குகளும்

உயிர்கள் ஓயாது பிறவி எடுத்து உழல்கின்றன. புல்லாய், பூடாய், புழுவாய், பல்மிருகமாய் பறவையாய், கல்லாய், தேவராய் ,கணங்களாய் என்று அதன் பட்டியல் நீளுகிறது.அவற்றில் உயர்ந்ததாக மனிதப் பிறவி விளங் குகிறது. இப்பிறவியில்தான் ஆலயங்களை அமைத்து இறை வழிபாடு செய்து மந்திரங்கள் ஓதிப் புண்ணியங் களைச் செய்து மேன்மை பெற முடியும். ஆயினும் பூர்வ புண்ணியத்தாலும், நல்லோர் அடிதொழுது நிற்றலா லும், புண்ணியத் திருத்தலங் களில் தோன்றியதாலும் நல்லுணர்வு பெற்ற பறவைகள், விலங் குகள், ஊர்வன முதலிய உயிர்களும் சிவவழிபாடு செய்து மேன்மை பெற்றுள்ளன. அத்தகைய வரலாறுகளைத் தலவரலாறு களும் மகா புராணங்களும் விரிவாகக் கூறுகின்றன.

சமய நூல்கள் கூறும் பறவைகள், விலங்குகள் பற்றிய தெய்வீகச் செய்திகளை மூன்று நிலைகளில் காணலாம். முதல் வகையில் இறைவனே உயிர்களைக் காக்கப் பறவை அல்லது விலங்கு வடிவம் கொண்டு வந்ததாகும்.சிவபெருமான் நரசிம்மரை அடக்கப் பேரண் டப் பட்சியாகவும், பன்றிகளுக்குப் பால் ஊட்டப் பெண் பன்றியாகவும், வந்து அருள்பாலித்ததை நினைவு கூறலாம்.

இரண்டாம் நிலையில் பூர்வ புண்ணியத்தால் நல்லுணர்வு பெற்று விலங்குகளும் பறவைகளும் சிவவழிபாடு செய்து பேறுபெற்றதைக் கூறலாம்.

மூன்றாம் நிலையில் சாபத்தாலும், அச்சத்தாலும் விலங்குகள் பறவைகள் உருவம் தாங்கியவர்கள் சிவவழிபாடு செய்து மேன்மை பெற்ற வரலாறுகளைக் காண்கிறோம். எடுத்துக்காட்டாக சூரபதுமனுக்கு அஞ்சிய தேவர்கள் வண்டு வடிவத்துடனும், சிவ சாபத்தால் அம்பிகை மயில் வடிவுடனும், வீரபத்திரருக்கு அஞ்சிய இந்திரன் குயில் வடிவிலும் வாழ்ந்து சிவ வழிபாடு செய்து பேறு பெற்றதைக் கூறலாம்.

திருவானைக்காவிலும், காளஹஸ்தியிலும் யானை, சிலந்தி, பாம்பு ஆகியவை வழிபட்டது. குரங்க ணில் முட்டத்தில் காக்கை, அணில், குரங்கு ஆகியவை வழிபட்டது இவ்வகையினதாகும்.

இவ்வாறு விலங்குகள், பறவைகள் வழிபட்டு மேன்மை பெற்ற வரலாறுகளை இயன்றவரை எடுத்துக் கூறும் வகையில் சிவமஞ்சரியின் ஐம்பத்தாறாவது மலர் மலர்ந்து தங்கள் கரங்களில் தவழ்கிறது. இவற்றிலுள்ள செய்திகளை அறிந்து சிவனருளில் திளைக்க அன்புடன் உங்களை வேண்டுகிறோம்.

அன்பர்களுக்கு இளங்கிளி நாயகி உடனாய பறவையீச்சரர் சகல செல்வ யோகம் மிக்க பெருவாழ் வை அளித்து அருள்பாலிக்க வேண்டுமென்று அவர் களின் பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பணிந்து வணங்குகிறோம்

–.சிவசுந்தரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கயிலைக்காட்சியில் அப்பர் கண்டபறவைகளும் விலங்குகளும்

அப்பர் சுவாமிகள் தமிழகத் திருத்தலங்களைத் தரிசித்தபின் கயிலை மலையானைக் காணும் விருப் பத்தால் பல்வேறு இந்தியப் பகுதிகளைக் கடந்து இமயத்தின் அடிவாரத்தை அடைந்தார். பனியையும் கடுங்குளிர்காற்றையும் பொருட்படுத்தாமல் மலை மீது பல காத தூரம் கடந்தார்.

மிகவும் களைத்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்த நேரம், சிவபெருமான் ஒரு துறவி வடிவில் அவர் முன்னே தோன்றி, அன்பரே! கயிலைமலையை அடைவது கடினம். உமது முயற்சியை விடுத்து ஊருக்குத் திரும் புங்கள் என்றார். அப்பர் "கயிலை மலையானைக் காணாது மாயும் இவ்வுடல் கொண்டு மீளேன்" என்று கூறித் தமது பயணத்தைத் தொடர்ந்தார். அவரது உறுதியைக் கண்டு மகிழ்ந்த சிவபெருமான், அவரை அருகிலுள்ள குளத்தில் மூழ்கும்படிக் கூறினார்.

அப்பர் அடிகள் அக்குளத்தில் மூழ்கியபின் எழுந்து பார்க்கும் போது திருவையாற்றுத் தலத்திலுள்ள திருக்குளத்தில் இருக்கக் கண்டார். அவருக்கு அங்கே கயிலைக்காட்சியை இறைவன் காட்டினான். அங்கு சிவபார்வதியருடன் தேவ கணங்கள் சூழக் கண்டார். அதில் ஆண்யானையும் பெண் யானையும் (காதல் மடப்பிடியோடு களிறு); கோழியும் சேவலும் (கோழி பெடை யொடும்கூழி, குயில் இணையும் (வரிக்குயில் பேடையோடாழி, ஆண், பெண் வண்டுகளும் (சிறையிளம் பேடையோடாழி, மயில் இணை (பேடை மயிலொடும்கூழி) பகன்றில் (வண்ணப் பகன்றில்) பன்றிகள் (ஏனம் இசைந்து) மான்களும் (கருங்கலை பேடையோடும்) நாரைகளும் (நற்றுணைப் பேடையோடு நாரை) கிளிகளும் (பைங்கிளி பேடையோடாழி)பசுவும் எருதும் (இளமணநாகு தழுவிஏறு) இணைஇணையாக வரும் அற்புதக் காட்சிகளைக் கண்டு, திருக்கயிலையைத் தரிசித்த பேருவகையை அடைந்தார்.

காணற்கரிய அந்த அற்புதத்தைச் சொல்லோ வியமாக," மாதர்ப்பிறைக் கண்ணியானை" என்று தொடங்கி, கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன் என்று மகுடமிட்டு மிகுந்த பரவசத்துடன் பதிகம் இசைத்தார்.

குலக்குறியீடுகளைக் குறிக்கும் பறவைகளும் விலங்குகளும்

ஆதியில் உயர்நிலை பெற்ற விலங்குகள், பறவைகள் ஆகியவற்றிடமிருந்து முனிவர்கள் தோன்றினர். அவர்கள் தமது தவ ஆற்றலால் தமது வம்சாவளியைப் பெருக்கினர். அந்த வம்சத்தினர் அவர்களைக் குல முதல்வர்களாகக் கொண்டு அவர் பெயரால் கோத்திரங்களை அமைத்துக் கொண்டனர். மணிமேகலைக் காப்பியம் பசுவிடமிருந்து அசலமுனியும், மானின் மகனாக ச்ருங்க முனிவனும்; புலியிடமிருந்து விரிஞ்சி முனிவனும், நரியிடமிருந்து கேசகம்பள முனிவனும் தோன்றினர் என்று கூறுகிறது.

விசுவாமித்திரன் நரியிடமும்; அத்ரி கோவேரிக் கழுதையிடமிருந்தும், பாரத்வாஜன் வலியனிடமிருந்தும் (கருவட்டுவால் குருவி); சுகர் கிளியிடமிருந்தும் தோன்றினரென்று புராணங்கள் கூறுகின்றன.

இந்தப் பறவைகளாலும் விலங்குகளாலும் வழிபடப்பட்ட சிவபெருமான் அவற்றின் பெயரால் அசலேசர், ச்ருங்கேசர், விருஞ்சீசர், சம்புகேசர், விசுவாமித்ரேசர், அத்ரீசர், பாரத்வாஜேசர், சுகவனேசர் என்று அழைக்கப்படுகிறார்.

கொங்கு மாவட்டத்தில் பல இனத்தினர் பறவைகளையும் விலங்குகளையும் குலமரபு அடையாளங்களாகக் கொண்டுள்ளனர். வேளாளக்கவுண்டர் இனத்தில் ஆந்தைக் குலம், காடைக் குலம், பைரவ குலம் எனப் பறவைகள் பெயரால் குலங்கள் வழங்கப்படுகின்றன. காடைக் குலத்தினர் வழிபட்ட சிவபெருமான் காடையீசர் என்று அழைக்கப்படுகின்றார். ஈரோடுக்கு அருகிலுள்ள காடையூரில் சிவபெருமான் காடையீசராக விளங்குகிறார். இதே மாவட்டத்தில் நத்தைக் காடையூர் என்ற ஊரும் உள்ளது.

அன்பர்களின் கவனத்திற்கு

பசு, புலி, பாம்பு, யானை முதலியவை வழிபட்டுப் பேறு பெற்ற செய்திகள் தனித்தனி (சிவமஞ்சரி) மலர்களில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. அவை பற்றிய செய்திகளை அங்கே காணலாம். பின்வரும் வரிசையில் விலங்கின் பெயரும் அடைப்புக் குறிக்குள் பக்க எண்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இந்நூலில் இயன்ற வரை மற்ற செய்திகள் தொகுக்கப்பட்டுள்ளன.

பசு (பசுபதி 6ம் மலர்) யானை (ஐராவதேசுவரர் 57ஆம் மலர்) புலி (புலீச்சுவரர் 5ம் மலர்)
பாம்புகள் (நாகநாதர் 54ஆம் மலர் மயில் (தல விருட்சங்கள் 37 ஆம் மலர்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் அருள் செய்த பரமனே எமக்கும் அருள்செய்வாய்

பறவைகளும் விலங்குகளும் சிவபூசை செய்து மேன்மை பெற்றதை அறிந்த பெரியோர்கள் சிவபெருமானிடம் அவற்றிற்கு அருள் செய்ததைப் போல் எமக்கும் அருள் செய்யக் கூடாதா என்று விண்ணப்பம் செய்து பாடல்களை அருளிச் செய்துள்ளார். இவ்வகையில் நக்கீரர், கமலை ஞானப்பிரகாசர், பாம்பன் சுவாமிகள் முதலானோர் பாடியவை தனிச்சிறப்பு மிக்கவைகளாகும்.

நக்கீரர் தாம் அருளிய கோபப் பிரசாத சாதத்தில் பெருமான் பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் அருளிச் செய்ததைக் கூறுகிறார். இதன் சாரத்தைப்

பருங்கை மால் யானை யேனம்
பாய்புலி, அரிமான் மீனம்
இருங்குறள் ஆமை கொண்ட
இகல்வலி கடந்தாய் போற்றி
குரங்கு பாம்பு எறும்பு நாரை
கோழி ஆண் அலவன் தேரை
கருங்குரீஇகழுகின் அன்புக்கிரங்கிய
கருணை போற்றி

என்று வரும் திருவிளையாடற்புராணத் தொடர்களால் அறியலாம். கமலை ஞானப்பிரகாசர் தாம் அருளிச் செய்த புஷ்பவிதி என்ற நூலில் பறவைகளும் விலங்குகளும் அருச்சித்துப் பேறுபெற்றதைக் (பாடல் எண் 35) குறித்துள்ளார். மலர்களின் வகைகளையும் அவற்றைச் சாத்துவதால் உண்டாகும் பயன்களையும் விரிவாகக் கூறியுள்ளார். இது பொதுவிதி என்றும் பக்தியில் மூழ்கியிருப்பார்க்கு விதிகள் ஏதுமில்லை என்றும் கூறுகிறார்.

தொடர்ந்து, பறவைகளும் விலங்குகளும் சிவபூஜை செய்யும் போது எந்த விதியைக் கடைப்பிடிக்க இயலும்? எனினும் இவற்றின் பூசையையும் இறைவன் ஏற்றுக் கொண்டு அருள்புரிந்துள்ளார் அல்லவா? என்று கேட்கிறார். இறைவன் மீது அன்பு கொண்டு செய்யும் எதுவும் பூசையே என்பது இதன் பொருளாகும். அப்பாடல்

குதிரை சிலந்தி கழுகு உடும்பு
குரங்கு நரிஈ எறும்பு
மதுவண்டு அலவன் கரியரியா
மஞ்சை யெகினம் புறா வார்ந்தை
ததியென் காமை முயல் கோம்பி
தத்தை கேழல் அர்ச்சிப்ப
விதியும் விலக்கும் கடந்தார்க்கு
விதியாலொன்றை விதிப்பார் யார்?

பொருள்: குதிரை, சிலந்தி, கழுகு, உடும்பு, குரங்கு, நரி, ஈ, எறும்பு, தேள், தேனீ, நண்டு, யானை, சிங்கம், பசு, மயில், அன்னம், புறா, ஆந்தை, கரடி, ஆமை, முயல், பச்சை ஓணான், கிளி, பன்றி முதலியவை செய்த பூசையையும் சிவபெருமான் ஏற்றுக் கொண்டுள்ளார். அவை அன்பினால் விதியையும் ஆர்வத்தால் விலக்கையும் கடந்தவை. அவை செய்யும் பூசைக்கென ஒரு விதியை விதிக்க முடியுமா? தொடர்ந்து வரும் 37 ஆம் பாடலில் பறவைகளும் விலங்குகளும் பூசித்துப் பேறு பெற்றது குறிக்கப்பட்டுள்ளது.

திருவாசகத்தில்மாணிக்கவாசகர் பறவைகளுக்கும், விலங்குகளுக்கும் பெருமான் அருள் செய்ததைப் பல இடங்களில் குறித்துள்ளார்.

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளின் வேண்டுதலையும் காணலாம். சுவாமிகள் திருப்பா (18 வதான பகுதியில்) பரம்பொருள் என்னும் தலைப்பில் பத்து பாடல்களை அருளிச் செய்துள்ளார். அதில் பல் வேறு தலங்களில் பூசித்துப் பேறு பெற்ற பறவைகள், விலங்குகளின் பெயர்களைக் கூறியுள்ளார். மனிதனாகப் பிறந்த நான் இதுவரை உனது திருவருளைப் பெறவில்லையே. இந்தப் பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் கீழ்ப்பட்டவனாகி விட்டேனே நீ திருவுள்ளம் இரங்கி எனக்கு அருள்புரிவாய் என்று வேண்டுகிறார். ஒவ்வொரு பாடலிலும் இந்த வேண்டுதலைக் குறிப்பிடுகிறார்.

அவர் குறிப்பிடும் தலத்தையும் அங்கு வழிபட்டுப் பேறுபெற்ற விலங்குகள் பறவைகள் பெயர்களையும் தனிக் கட்டத்தில் காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கரிவலம் வந்த நல்லூர்	யானை	திருநெல்வேலி	யானை, பறவை
மதுரை	கருங்குருவி, நாரை	திருவான்மியூர்	பசு, காமதேனு
மயேந்திரபள்ளி	எலி	திருவண்ணாமலை	கஸ்தூரி மான்
ஓமாம்புலியூர்	புலி	குரங்கணில் முட்டம்	காக்கை, அணில்
அவிநாசி	காக்கை	திருவலிவலம்	கரிக்குருவி
ஆடானை	ஆடு	இராமேசுவரம்	குரங்கு, நரி
ஆவூர்	பசு	மயிலாடுதுறை	யானை குதிரை, குரங்கு
புலிப்பாறை	புலி		பாம்பு, பூனை, நரி, கழுகு, கிளி
திருக்கழுக்குன்றம்	கழுகு	திருநாரையூர்	நாரை
திருநாகேச்சுவரம்	பாம்பு	திருக்காளத்தி	சிலந்தி, யானை, பாம்பு
திரு ஆனைக்கா	சிலந்தி, யானை	எறும்பியூர்	எறும்பு
திருந்துதேவன் குடி -	குதிரை, நண்டு	திருப்பைஞ்ஞீலி	வாழை மரம்

கொற்றவன்குடி –முள்ளிச்செடி

சிவ வழிபாட்டில் பறவைகள்- விலங்குகள் சிந்தனைத் துளிகள்

ஆலயங்களில் பூசையின் அங்கமாக விலங்குகளும் பறவைகளும் வழிபடப்படுகின்றன. தினமும் கோ பூசை என்ற பெயரில் பசுவையும், கஜ பூஜை என்ற பெயரில் யானையையும், வழிபடுகின்றனர். பெரிய ஆலயங்களில் யானையும் பசுக்களும் வைத்துப் பராமரிக்கப்படுகின்றன.

சில தலங்களில் மயில்கள் வளர்க்கப்படுகின்றன. மயிலாடுதுறையில் நடைபெறும் குடமுழுக்கு விழாக்களின் போது மயில்களை யாகசாலையில் வைத்துப் பூசிக்கின்றனர்.

திருக்குளங்களில் வாத்து முதலிய நீர்ப் பறவைகளும் மீன்களும் வளர்க்கப்படுகின்றன.

கோயில் கோபுரங்களிலும் மதில்களிலும் புறாக்களும் கிளிகளும் தங்கிச் சுகமாக வாழக் கூடுகள் அமைக் கப்பட்டுள்ளன.

இறைவனை கிளி, அன்னம், மயில், சிங்கம், புலி, யானை, குதிரை, முதலான வாகனங்களில் அமர்த்தி உலாவரச் செய்கின்றனர். இதற்கென மரத்தால் செய்து வண்ணம் தீட்டப்பட்டுப் பொலிவுடன் விளங்கும் வாகனங்களும் வெள்ளித் தகடு, தங்கத் தகடு பொதியப் பட்ட வாகனங்களும் உள்ளன.

பெண்தெய்வங்கள் கிளிகளை ஏந்துகின்றன. சிவபெருமான் மானேந்துகிறார். வீரபத்திரருடன் ஆட்டுத் தலை கொண்ட தட்சன் இருக்கிறான்.

தெய்வங்கள் அணியும் ஆபரணங்களிலும் விலங்கு, பறவைகள் இடம் பெற்றுள்ளன. காசு மாலைகளின் கோர்வை முகப்பில் யாளி, புலி, கிளி ஆகியவை இருப்பதைக் காணலாம். இடுப்பில் அணியும் ஒட்டியாணத்தில் கீர்த்திமுகம் என்னும் சிங்கமுகத்தைக் காண்கிறோம். காதுகளில் அணியும் குண்டலங்களில் மகரம் இடம் பெற்றுள்ளது. மார்பில் அணியும் பதக்கத்தில் பேரண்டப் பட்சிகள்/இரட்டை அன்னங்கள் கல்லிழைத்துச் செய்யப்பட்டுள்ளன.

தினமும் பலிபீடத்தில் வைக்கும் சோற்றுருண்டை காக்கைக்கு இடப்படுகிறது.

முருகன் கோயில்களுக்கும் நாகர்கள் கோயிலுக்கும் சேவல்கள் நேர்ந்து விடப்படுகின்றன. ஓ

கல்லால மரத்தடியில் பெருமான் விலங்குகளும் பறவைகளும் சூழ்ந்திருக்கச் சிவபெருமான்தட்சிணா மூர்த்தியாகக் காட்சியளிக்கிறார். இவருக்கு நிழல் பரப்பும் ஆலமரத்தின் கிளைகளில் கிளி, குயில், மயில் முதலியனவும் அடியில் பொந்தில் ஆந்தைகளும், கூகைகளும் உள்ளன. பீடத்தைச் சுற்றிலும் மான், முயல், பாம்பு, பன்றி ஆகியன இடம் பெற்றுள்ளன. இவ்வாறு பறவைகளும் விலங்குகளும் சூழக் காட்சியளிக்கும் கோலம் தட்சிணாமூர்த்திக் கோலம் மட்டுமேயாகும்.

சிந்து சமவெளியில் கண்டெடுக்கப்பட்ட ஒரு முத்திரையில் ஆறுவிலங்குகள் சூழப் பெருமான் காட்சியளிப்பது சித்தரிக்கப்பட்டுள்ளது. இதனைப் பசுபதி என்கின்றனர். ஓ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கிளி



சமய வாழ்வில் கிளிகள் தனியான இடத்தைப் பெற்றுள்ளன. கிளியை அறத்தின் வடிவமென்று கூறுவர். கிளிக்குச் சுகம் என்பதும் பெயராதலின் இறைவனின் அருளாற்றலையும் அது குறிக்கிறது. அம்பிகையைக் கிளியே கிளைஞர் மனத்தே கிடர்ந்தொ ளிரும் ஒளியே என்று அபிராமி பட்டர் போற்றுகிறார். அவள் அன்பர்களின் மனமாகிய கூட்டில் வாழ்கிறாள் என்று துதி நூல்கள் புகழ்கின்றன.

வழுவூர், அச்சிறுபாக்கம் முதலிய தலங்களி லுள்ள அம்பிகை இளங்கிளி நாயகி என்று அழைக்கப் படு கிறாள்.

கிளி முகத்துடன் பிறந்த சுகர் என்ற முனிவர் சிறந்த ப்ரம்மரிஷி. இவர் மானுடர்களின் எதிர் காலத்தை எடுத்து ரைக்கும் நாடி நூல்களை அருளிச் செய்துள் ளார்.இவர் கிருஷ்ணரின் பெருமைகளைக் கூறும் பாகவதத்தைப் பரப்பியவர்.

கிளிவடிவத்தைக் கொண்ட இவர் பல தலங்களில் பூசித் துள்ளார். அவற்றுள் காஞ்சீபுரத்தை அடுத்துள்ள (கரி வேடு) களத்தூர் குறிப்பிடத்தக்கதாகும். இங்கு பெருமான் தத்தைநாதர் என்று அழைக்கப்படுகிறார். கிளியைக் குறிக்கும் சொல் தத்தை. மேலும் கிளியனூர், பூவனூர் முதலியனவும் இவர் பூசித்த தலங்களாகும். பூவனூரில் இவர் நந்தவனம் வைத்து வழிபட்டதாகத் தலபுராணம் கூறுகிறது.

சேலத்தின் மையப்பகுதிக்குச் சுகவனம் என்ற பெயர் வழங்கியதைப் புராணங்கள் கூறுகின்றன. அங்கு கிளிகள் கூடி வழிபட்டதால் சிவபெருமான் சுகவனேசுவரர் என்று அழைக்கப்படுகிறார்.

சமய வழிபாட்டில் சிறப்புப்பெற்ற சில கிளிகளை இங்குக் காணலாம்.

தியாகேசக்கிளிகள்

திருவாரூர் தியாகராஜரின் பெருமைகளை விளக்கும் நூல் தியாகராஜலீலை. இதில் சிவபெருமான் புரிந்த 360 லீலைகள் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் இரண்டு கிளிகளோடு தொடர்புடையன. அதிலொன்று சுவை மிகுந்ததாகும்.

திருவாரூர்க் கமலாலயத்தின் கரையில் பெரிய ஆலமரத்தில் அழகிய கிளியொன்று வாழ்ந்து வந்தது. அங்கு நீராடி தியாகேசரைப்பணியும் பக்தர்களைக் கண்ட கிளிக்கு மிகுந்த சிவபக்தி உண்டாயிற்று. அது தினமும் கமலாலயத்தில் நீராடி ஆலயத்தை வலம் வரத் தொடங்கியது. அந்தச் செய்கையால் அதன் நல்லுணர்வு மேலும் வளர்ந்தது.

அது ஒரு சமயம் இங்குள்ள அன்பர்கள் எல்லோரும் ஏதாவது ஒரு பணி செய்து தியாகேசரைப் போற்றுகின்றனர். எனக்கு அவர்களைப் போல் கை கால்கள் இல்லாததால் எப்பணியும் செய்ய முடிய வில்லை என்செய்வேன் என்று மிகவும் வருந் தியது.

மறுநாள் நெடுந்தூரம் வடக்கே பறந்து சென்றது. அங்கிருந்த காட்டில் மூங்கில்கள் முற்றி வெடித்திருந்தன. அவற்றிலிருந்து ஏராளமான முத்துக்கள் சிதறிக் கிடந்தன. அவற்றைக் கண்ட கிளி, முத்துக்களை மாலை யாக்கிப் பெருமானுக்கு அணிவிப்பது எனக்கு எளியது. அதனை முழுநிலவுநாளில் செய்வேன் என்று உறுதி பூண்டது.அதன்படியே முத்துமாலை செய்து ஆலயத் திற்கு அளித்து வந்தது.

எளிதில் கிடைக்காத மூங்கில் முத்துக்களால் ஆன அந்த மாலைகள் அபூர்வமானதாகவும், கிளியின் மனப் பூர்வமான பக்தி கலந்ததாகவும் இருந்ததால் தனித்தன் மையுடன் விளங்கின. அதைக் கண்டு எல்லோரும் அதிசயித்து, ஏதோ ஓர் தேவதை இப்படிச் செய்கிறது என எண்ணினார். அம்மாலைகளைப் பெருமானுக்கும் அம்பிகைக்கும் சூட்டினர். கிளி அதைக்கண்டு மனம் மகிழ்ந்தது. அதன் பணியைத் தொடர்ந்தது.

ஒரு சமயம் பௌர்ணமி தினத்தின் மாலை நேரம் மழைபெய்து கொண்டிருந்தது. கிளி தனது கூட்டில் அமர்ந்து மாலை கோர்ப்பதில் மூழ்கி இருந்தது. அவ்வேளையில் ஒரு வேடன் அந்த மரத்தடிக்கு வந்தான். காலை முதல் அலைந்து திரிந்தும் அவனுக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேட்டையில் ஒரு பொருளும் சிக்கவில்லை. பசியாலும் களைப்பாலும் வருந்தியவனுக்கு மழைவேறு தொல்லை கொடுத்தது. மரத்தடியில் ஒண்டிய அவன் மிகுந்த துன்பத்துடன் இருந்தான்.

அப்போது கிளியின் கால் இடுக்கிலிருந்து ஒரு முத்து நழுவி அவன் முன்னே விழுந்தது. காட்டில் மட்டுமே அபூர்வமாகக் கிடைக்கும் முத்து இங்கே விழுகிறதே என்று அண்ணாந்து பார்த்தான். அங்கு கிளியைக் கண்டான். இதைப் பிடித்துத் தின்று பசியாறலாம் என எண்ணினான்.

மெதுவாக ஓசைப்படாமல் மேலே ஏறினான். அவனைக் கண்ட கிளி," அன்பரே வருக உமது வரவால் மகிழ்ச்சி அடைகிறேன். நீங்கள் அமரத்தக்க பெரிய பொந்து இம்மரத்தில் இல்லை. ஆகவே நீர் இக்கிளையில் அமர்க" என்றது. வேடன் ஆச்சர்யமடைந்தான். அதனிடம் கிளியே! நான் பசியால் வருந்துகிறேன். உன்னைப் பிடித்துத் தின்னவே இங்கு வந்தேன் என்றான்.

"அன்பரே யான் புண்ணியம் செய்தவனானேன்". என் உடல் உமது பசியைத் தீர்க்குமானால் அதைவிட வேறுபாக்யம் எதுவுமில்லை. இப்போது தியாகேசருக்கு மாலை தொடுத்துக் கொண்டிருக் கிறேன். அது முடியும் தருவாயில் உள்ளது. அதை முடித்து பெருமானின் சந்நிதியில் வைத்துவிட்டு வந்து விடுகிறேன். அதுவரை சற்று பொறுத்துக் கொள்ளவும். சிரமத்திற்கு மன்னிக்கவும் என்றது.

கிளியின் அடக்கம் நிறைந்த அன்பு செறிந்த பேச்சைக்கேட்டு வேடன் திகைத்தான். கிளி மாலையை எடுத்துக் கொண்டு பறந்தது. வேடன் அங்கு கூடியிருக்கும் பக்தர்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். கிளி தனது பணிகளை முடித்துத் திரும்பி வரும் போது நிறைய சுள்ளிகளையும் எடுத்துக் கொண்டு வந்தது.

வேடரே உம்மைக் காக்க வைத்ததற்கு வருந்துகிறேன். எனது உடலைப் பச்சையாகத் தின்ன முடியாது. மழையாக இருப்பதால் அருகில் உலர்ந்த சுள்ளிகள் கிடைக்காது. உமக்குச் சிரமம் வேண்டாமென்று இந்தச் சுள்ளிகளையும் பொறுக்கி வந்துள்ளேன். என்னைச் சுட்டுத் தின்று பசியாற்றிக் கொள்ளும் என்று கூறி, கண்ணை மூடிக் கொண்டு தியானத்தில் ஆழ்ந்தது

அந்தக் கிளியின் செயல்களை உற்று நோக்கிய வேடனின் மனம் மாற்றம் அடைந்தது. எளிய கிளியே பக்தியால் மேன்மை பெற்றிருக்கிறது என்றால் மனிதனாகப் பிறந்த யான் மேன்மை பெற வேண்டாமா என்று எண்ணினான்.அந்தக் கிளியின் காலடியில் வீழ்ந்தான்.

"நீயே என் குரு எனக்கு அருள்புரிவாய்" என்றான். சிவபெருமான் அந்த வேடனுக்கும் கிளிக்கும் சுவர்க்கம் அளித்தார்

அன்பர்களுக்கு இனிய வாழ்க்கை அளிப்பதைக் குறிக்கும் வகையில் அம்பிகை கிளியை ஏந்தியுள்ளாள். மதுரை மீனாட்சியம்மன் கரத்தில் கிளி அமர்ந்திருப்பதைக் காணலாம். சிவாலயத்திலுள்ள அனைத்து அம்பிகையின் கரத்திலும் வெள்ளி அல்லது தங்கத்தாலான கிளி வடிவத்தைச் செய்து பொறுத்தும் வழக்கம் உள்ளது. இவை கைக்கிளிகள் எனப்படும்.சிதம்பரம் சபாநாயகர் ஆலயத்தில் காமகோட்டம் எனப்படும் அம்பிகை சந்நிதியில் அருள்பாலிக்கும் சிவகாமசுந்தரி இடதுமேற்கரத்தில் கிளியைத் தாங்கியுள்ளார். இது சிலையோடு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பெருந்திருவிழாவின் போது பெருமானுக்குப் பெரிய மாலைகளைஅணிவித்து அதில் பூ அல்லது வண்ணச் சரிகையால் செய்த பெரிய கிளிகளை வரிசையாகவும் நெருக்கமாகவும் பொருத்துவர். இவை தோள்கிளிகள் என்று அழைக்கப்படுகின்றன. சில ஆலயங்களில் சுற்றியுள்ள பிரபைகள், மாலைகள் ஆகியவற்றில் சிறிய அளவில் செய்யப்பட்ட கிளிகளை வரிசையில் பொறுத்துகின்றனர்.திருவான்மியூர் தியாகராஜர் புறப்பாட்டின் போது அவருடையபிரபையில்ஏராளமான கிளிகள் பொறுத்தப்படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குயில் (கோகிலம்)

வசந்த காலத்தை வரவேற்று இனிய குரலில் பாடும் சிறு பறவை குயில். வெளிர் கருநிறம் கொண்டது. நீல நிறக் குயில் என்றும் அழைப்பர். இந்திரன் குயில் வடிவில் பல தலங்களில் வழிபட்டுப் பேறுபெற்றதைத் தலபுராணங்கள் கூறுகின்றன.குயிலை இந்திர கோகிலம் எனவும் அழைப்பர்.

சிவனை மதியாது தட்சன் யாகம் செய்யத் தொடங்கியபோது, வீரபத்திரர் அந்த யாகத்தை அழித்ததுடன், அதில் கலந்து கொண்டவர்களையும் தண்டித்தார். இந்திரன் குயில் வடிவம் கொண்டு அங்கிருந்து தப்பியோட முயன்றான். வீரபத்திரர் அவனைப் பிடித்து அவனது சிறகுகளை அரிந்த துடன், தரையில் மோதி மிதித்து துன்பப்படுத்தித் தூக்கி எறிந்தார். அவன் விழுந்த இடம் இந்திர நீல பருப்பதம் என்பர். இது இமய மலைச் சாரலில் உள்ளது. இறைவன் நீலாசல நாதர். திருஞான சம்பந்தரால் பாடப்பட்ட பதி. அங்கு அவன் வழிபட்டுப் புதிய ஆற்றலும் தேவ வடிவமும் பெற்றான் என்பர்.

அவன் குயில் வடிவுடன் வழிபட்ட சோழநாட்டுத் தலம் கருங்குயில் நாதன் பேட்டை என வழங்குகிறது. அங்குள்ள இறைவர் கோகிலேசுவரர்(சக்திபுரீசர்) என்று அழைக்கப்படுகிறார்.அம்பிகை ஆனந்த வல்லி.

திருவாவடுதுறைக்கு அருகிலுள்ள திருக்கோழம்பமும் குயில் வழிபட்ட தலமாகும். சயந்தன் எனும் வித்யாதரன் இந்திரனின் சாபத்தால் குயிலானான். அவ்வடிவம் தீர இங்கு வழிபட்டான். இறைவன் கோகிலேசுவரர் அம்பிகை குயிலமிர்த நாயகி (எ) சௌந்தர்ய நாயகி.

சரஸ்வதி குயில் வடிவில் சிவ பூசை செய்தாள் என்று கூறுகின்றனர். அம்பிகை மீனாட்சியை,"கடம்ப வனப் பூங்குயில்" என்று இலக்கியங்கள் துதிக்கின்றன.

சகோரம்

இனிய காதற் பறவைகள் சகோரப் பறவைகளாகும். இவை சந்திர ஒளியை உண்டு வாழும் என்பதால் நிலாமுகி என்றும் அழைக்கப்படும். சக்ரப்பள்ளியில் சகோரப் பறவைகள் வழி பட்டுப் பேறு பெற்றன. திருவஞ்சைக் களத்திலும் சகோரப் பறவைகள் வழிபட்டதென்பர்.

சக்ரவாகம்

உருண்டையான சிறுவடிவம் கொண்ட பறவை சக்ரவாகம் பேசும் திறன் கொண்டது. அம்பிகை சக்ரவாகப் பறவையாக வடிவம் கொண்டு சிவபூசை செய்த தலம், சக்கரப்பள்ளி. இங்குள்ள இறைவர் சக்ரவாகேசுவரர் என்று அழைக்கப்படுகிறார்அம்பிகை அல்லியங் கோதை இலக்கியங்களிலும் திருமுறைகளிலும் சிறப்பித்துப் பேசப்படும் இப்பறவையை இந்நாளில் காண முடியவில்லை.

ஆந்தை

பெரிய வட்டமான கண்களுடன் இரவில் திரியும் பறவை ஆந்தை. இதில் கோட்டான், கூகை என்று பலவகைகள் உள்ளன.ஆந்தைகள் இலக்குமியோடு தொடர்பு கொண்டுள்ளன. வடநாட்டு லட்சுமி படங்களில் சோழிக்குவியல் மீது அமர்ந்திருக்கும் ஆந்தையைக் காணலாம்.

தட்சிணாமூர்த்தி வீற்றிருக்கும் கல்லால மரத்திலுள்ள பொந்தில் ஆந்தையும் இடம் பெற்றுள்ளதைக் காணலாம். தட்சிணாமூர்த்தி தலமான கள்ளில்(திருக்கண்டலம்) தேவாரத்தில் ஆந்தைகள் பாடுவது குறிக்கப்பட்டுள்ளது.அவை பாடுவதைக் "கூடிப் பொந்தில் ஆந்தைகள் கூகை குழற; ஆந்தைகள் பாட்டறாய் புகலூர் ஆந்தைகள் பாடடறாப் புனவாயில்" எனவரும் தொடர்களால் அறியலாம்

கூகைகள் வழிபட்ட தலம் கூகையூர். இது சின்னசேலத்திற்குத் தெற்கில் உள்ளது. கொடுங்குன்றம் என்றழைக்கப்படும் பிரான்மலையில் கூகைகள் வழிபடுவதாகக் கூறப்படுகிறது. இவை பாகா பாகா என்று இங்குள்ள மங்கை பங்கனை விளிப்பதாக இலக்கியங்கள் கூறுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காக்கைகள் வழிபட்டுப் பேறு பெற்றது

தினமும் காக்கைக்குச் சோறிட்ட பின்னரே உண்பது நெடுங்காலமாக மக்களிடையே இருந்துவரும் வழக்கமாகும். காக்கை மனிதர்களோடு இணைந்து வாழும் பறவை. பல தெய்வங்கள் காக்கை வடிவுடன் சிவபூசை செய்து பேறு பெற்றுள்ளன. யமன் காக வடிவுடன் பல தலங்களில் சிவபூசை செய்துள்ளான். . காகம் வழிபட்ட தலங்கள் சிலவற்றைச் சிந்திக்கலாம்.

மாயூரத்துக் காக்கை

மேருமலைச் சாரலில் ஒரு ஆலமரத்தில் காகம் ஒன்று அனேக கற்பகாலங்கள் வசித்து வந்தது. அதைக் கண்ட வசிட்டர் முதலான முனிவர்களும் தேவர்களும் அதனிடம் சென்று எண்ணற்ற காலம் சிறப்புடன் வாழும் உமது வரலாற்றைக் கூறுக என்று கேட்டனர்.

பெரியோர்களே, எனது பெயர், புசுண்டன், யான் காவிரிக்கரையில் கௌரி மாயூரத்தில் வசித்து வந்தேன். மாயூரநாதர் என் மீது அன்பு கொண்டு பலகாலம் ஞானியாக வாழ்வாய் என்ற வரத்தை அளித்தார்.

அதன்படி என்றும் மாறாத இளமையுடன் இங்கு வாழ்ந்து வருகிறேன். அத்தலத்தில் இருமுறை அம்பிகை சிவபூஜை செய்ததையும், பிரமன் ஐந்து முகங்களோடு இருந்த போது ஒரு முறையும், ஒரு முகத்தை இழந்தபின்பு பத்து முறையும் பூசை செய்ததை அறிவேன். திருமால் வெண்மையாக இருந்ததையும் அதன்பின் கரியவனானதையும் அறிவேன்.

இப்படி அனேக செயல்களைக் கண்டேன். அனேக ஆண்டுகள் வாழ்ந்து கொண்டிருப்பதில் பலனில்லை என்பதை இப்போது உணர்கிறேன். மோட்ச புரியான மாயூரம் சென்று இறைவனை வழிபட்டு முத்தியடையப் போகிறேன் என்றது. இதைக் கேட்ட எல்லோரும் அதனுடன் சென்று பெருமானை வழிபட்டுப் பேறு பெற்றனர். இதனை மாயூரபுராணம் விரிவாகக் கூறுகிறது.

ஆலப்பாக்கம் காக புசுண்டர்

தென்னாற்காடு (கடலூர்) மாவட்டத்தில் ஆலப்பாக்கம் என்னும் கிராமம் உள்ளது. இங்கு காகபுசுண்டர் என்ற சித்தர் வழிபட்ட சிவாலயம் உள்ளது. அவர் நெடுங்காலம் காக உருவில் வாழ்ந்ததாலும் காகங்களின் கூட்டத்திடையில் வசித்து வந்ததாலும் இப்பெயர் பெற்றார் என்பர். இவர் மக்களின் வருங்காலத்தை உரைக்கும் காகபுசுண்டர் நாடி சோதிடம் என்ற நூலை அருளிச் செய்தவர் ஆவார்.

காகம் அணுகாத மலை

பாடல் பெற்ற திருத்தலமான வாட்போக்கி இந்நாளில் இரத்தினகிரி என்றழைக்கப்டுகிறது. இங்குள்ள மலை மீது சிவபெருமான் கோயில் கொண்டுள்ளார். அதுமுதல் இம்மலைச் சாரலில் காகங்கள் பறப்பதில்லை. இலக்கியங்கள் இதனைக் காகம் அணுகா மலை என்றும், காகம் மேவிடில் கடுந்தழல் வீசும் பரம்பு என்றும் குறித்துள்ளன.

இக்கோயில் திருமஞ்சனக் குடத்தில் கங்கையின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

ஓரன்பர் பெருமானின் திருமஞ்சனத்திற்கு எடுத்துவந்த பாலைக் காகக் கூட்டம் தினமும் கவிழ்த்து வந்தது. அவர் சிவபெருமானிடம் முறையிட்டார். அதைக் கேட்டுக் கோபித்த பெருமான் இனி இப்பகுதியில் பறக்கக் கூடாது என்று காகங்களுக்கு ஆணையிட்டார். அப்படி மீறிப் பறந்தால், எரிந்து போகட்டும் என்று கூறினார். அதுமுதல் இப்பகுதியில் காகங்கள் பறப்பதில்லை என்று கூறுகின்றனர்.

காசியில் வசித்து வந்த சில காக்கைகள் பூர்வ புண்ணியத்தாலும், விசுவநாதர் தரிசனத்தாலும், ஒரு குளத்தில் வீழ்ந்து அன்னப் பறவைகளாக மாறிப் பேறுபெற்றதைக் காசிக் கண்டம் கூறுகிறது. இந்த தீர்த்தம் அம்ச தீர்த்தம் என்றழைக்கப் படுகிறது.

குரங்கணில் முட்டம்

தொண்டை நாட்டுப் பாடல் பெற்ற தலமான குரங்கணில் முட்டம் காஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ளது. இங்கு இந்திரன் அணிலாகவும், யமன் காக்கையாகவும், இருந்து பூசித்தனர். வாலி என்னும் குரங்கரசன் வழிபட்டது. எனவே, இத்தலம் குரங்கணில் முட்டம் என்றழைக்கப்படுகிறது. (முட்டம் காக்கை). இக்கோயில் முப்புறமும் ஏரி சூழ்ந்த பாறை மீது அமைந்துள்ளது. இந்த ஏரியைக் காக்கை மடு என்கின்றனர். இதுவே தல தீர்த்தமாகும்.

திருக்கழுக்குன்றத்தில் மலைக்கு எதிரில் சிறு குன்று உள்ளது. இதைக் காக்கைக் குன்று என்பர். இதன்மீது உருத்திர பாதங்கள் உள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புறா

தெய்வீகப் பறவைகளில் புறாவும் ஒன்று. இதன் குரலில் மகாலட்சுமி மகிழ்வதுடன் அவை இருக்கு மிடங்களில் அவளும் இருக்கிறாள் என்பர்.புறாக்கள் உயர்ந்த மாடங்களில் வசிக்கும். எனவே, மாடப்புறா என்றும் அது அழைக்கப்படுகிறது. கோயில் மதில்க ளிலும் ஸ்ரீவிமானங்களிலும் ராஜ கோபுரங்களிலும் புறாக்கள் கூட்டமாக வாழ்கின்றன. சங்க இலக்கியத்தில் மூன்று பாடல்களில் ஆலயங்களில் சிறகடித்துப் பறக்கும் புறாக் கள் சித்தரிக்கப்பட்டுள்ளன.

மதில்களிலும் ஆலயக் கொடுங்கைகளின் கீழும் புறாக்களும் கிளிகளும் வசிக்க இடைவெளிவிட்டு கட்டு வர். இந்த வரிசை கபோத வரிசை (கபோதம் - புறா) எனப் படும். இதில் வரிசையாக புறாக்களின் உருவங்களை அமைப்பதும் உண்டு.

பாடல்பெற்ற திருத்தலமான பனங் காட்டூர், " புறவார் பனங்காட்டூர்" என்ற அடைமொழி யுடன் குறிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள அம்பிகை புறவம்மை என்று அழைக்கப்படுகிறாள்.அவளுடன் அப்சர மகளிரும் தேவமகளிரும் புறாக்களாக இருந்து இத்தலத் தில் வழிபட்டுப் பேறு பெற்றனர். அவர்கள் ஆர்ப்பரித் ததால் இவ்வூர் புறவார் பனங்காட்டூர் என்றழைக்கப் படுகிறது. கல்வெட்டுகளில் இக்கோயில் பறவையீச்சரம் என்று குறிக்கப்பட்டுள்ளது. இராஜேந்திர சோழனின் காதலியான பரவை நாச்சியார் என்பவள் இக்கோயிலுக் குப் பல பணிகள் செய்துள்ளாள். அவள் பெயரால் பறவையீச்சரம் ஆனதென்பர்.

ஒரு சமயம் சிபிச்சக்கரவர்த்தியைச் சோதிக்க எண்ணிய இந்திரனும், அக்னியும் முறையே பருந்தா கவும், புறாவாகவும் அவன் முன்னே தோன்றினர். புறா(அக்னி) சிபியிடம் சென்று அரசே! என்னைக் கொன்று தின்ன ஒரு பருந்து துரத்தி வருகின்றது. எனக்கு அடைக்கலம் தருக! என்றது. அரசன் அப்படியே ஆகட்டும் என்றான்.

அப்போது பருந்து (இந்தி ரன்) அங்கு வந்தது. அரசே! நான் உண்டு பசியாறத் துரத்தி வந்த



இப்புறாவை என்னிடம் தருக என்றது.. மன்னன் அடைக்கலமாக வந்த பொருளைத் தரமாட்டேன்; அதற்குப் பதிலாக எனது தொடையை அறுத்து தருகி றேன்; நீ அதை உண்டு பசி யாறுக; அதுபோத வில்லை என்றால் என்னையேதருகிறேன் என்றான். அவனுடைய அன்பின் திறத்தைக் கண்டு அனைவரும் கொண்டா டினர். அக்னியும் இந்திர னும் அவன் முன்னே தெய்வ வடிவுடன் தோன்றி அருள் புரிந்தனர்.

❀ சிபியைச் சோதித்த பாவம் தீர அக்னி புறாவடிவுடன் சீர்காழிக்குச் சென்று லிங்கம் அமைத்து வழிபட்டான் அன்று முதல் சீர்காழிக்குப் புறவம் என்பதும் பெயரா யிற்று (விரிவை சிவமஞ்சரி 533(4)ல் காண்க) அங்கு அவன் புறாவடிவில் இருந்தபோது அங்கு அலகால் கீறி உண்டாக்கிய ஓடை புறாநதி என்றழைக்கப்பட்டது.

❀ அக்னிதேவன் பல தலங்களில் புறாவடிவுடன் இறைவனை வணங்கிப் போற்றியுள்ளான். திருப் புகலூர், திருவாரூர் முதலியவை அவன் வழிபட்ட தலங்களாகும்.

❀ திருக்குருகாவூர் என்ற தலத்திற்கு புறாவனம் என்பது பெயர். இது அக்னி புறாவடிவுடன் வழிபட்டதலம்.

❀ அமர்நாத் குகையில் இரண்டு புறாக்கள் எப்போ தும் வசிப்பதாகக் கூறுகின்றனர்.

❀ கிராமீய தெய்வ ஆலயங்களில் தளத்தின் மீது சட்டி பானைகளை வைத்து அதில் புறாக்கள் வாழ இடம் செய்து கொடுத்துள்ளனர். பல தெய்வங்கள் புறவார்த் தம்மன் என்று அழைக்கப்படுகின்றன. ❀❀

பறவையீச்சரங்கள்

பலவகையான பறவைகள் ஒன்றுகூடிச் சிவபெருமானை வழிபட்ட திருத்தலங்கள் பறவையீச்சரங்கள் என்று அழைக்கப்பட்டன. புறவார் பனங்காட்டூர் (எ) பனையபுரம் கண்கொடுத்த நாதர் ஆலயம் அக்கோயில் கல்வெட்டில் பறவையீச்சரம் என்று குறிக்கப்பட்டுள்ளது.வடமொழியில் இவை பட்சீசுவரங்கள் என்றழைக்கப்படுகின்றன. வேதபுரி எனப்படும் திருஓத்தூரிலும் வந்தவாசியை அடுத்த எரும்பூரிலும் பட்சீசுவரர் என்ற பெயரில் சிவாலயங்கள் உள்ளன.

வடமொழியாளர்கள் பறவை என்றால் கழுகுகளைக் குறிக்குமென்றும், கழுகுகள் வழிபட்ட தலங்களைப் பட்சீசுவரங்கள் என்றும் கூறுகின்றனர்.

பாண்டிச்சேரிக்கு அருகில் புளிச்சப்பள்ளம் என்னுமூர் உள்ளது. புள்ளிசைப்பள்ளம் (புள்- பறவைகள் இசைபாடி மகிழுமிடம்) என்பதே புளிச்சப்பள்ளம் ஆனதென்பர். இதுவும் பல்வகைப் பறவைகள் கூடி வழிபட்ட தலமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாரை

இலக்கியங்களில் போற்றப்படும் பறவைகளில் நாரையும் தனிச் சிறப்பு பெற்றதாகும். நாரையைத் தூதுவிடும் வழக்கம் இருந்துள்ளது. சக்திமுற்றப்புலவர், நாராய் நாராய் செங்கால் நாராய் என்று பாடிய பாடல் இலக்கிய உலகில் தனிச்சிறப்புடன் திகழ்கிறது.

நாரை வழிபாடு செய்து பேறுபெற்ற தலங்கள் பல உள்ளன. அவை அவற்றின் பெயரால் நாரையூர். வெண்ணாரையூர், நாரவாக்கம் என்று பலவாறு அழைக்கப்படுகின்றன. இவற்றில் திருநாரையூர் சைவ நல்லுலகில் தனிச்சிறப்புப் பெற்று விளங்குகிறது.

மதுரை மாநகர் நாரை

பாண்டிய நாட்டுக்குத் தென்திசையில் பெரிய குளமிருந்தது. அதிலிருந்த ஒரு நாரை மீன்களை உண்டு வாழ்ந்து வந்தது. ஒரு சமயம் கடும் வரட்சியால் குளம் வற்றிவிட்டது. நாரைக்கு உணவு ஏதும் கிடைக்கவில்லை.பலநாள் வருந்திய அது வேறு குளத்தைத் தேடிப்பறந்தது. மிகுந்த தேடலுக்குப் பின் முனிவர்கள் வாழும் ஒரு தவச்சாலைக்கு அருகிலிருந்த ஒரு குளத்தைக் கண்டது. அதில் ஏராளமான மீன்கள் இருந்தன. அதற்கு அச்சோதீர்த்தம் என்பது பெயர்.

அங்கே சிலநாள் தங்கிய நாரைக்கு நல்லுணர்வு தோன்றியது. மீன்களைத் தின்னும் எண்ணம் ஒழிந்தது. ஒரு நாள் அங்கிருந்த முனிவர்கள் மதுரையின் சிறப்புக்களைப் பேசக் கேட்டது. அதற்குத் தானும் மதுரை சென்று சோமசுந்தரரைத் தரிசிக்க வேண்டும் என்ற ஆவல் மிகுந்து மதுரைக்கு வந்தது.

அங்குக் கோயிலிலிருந்த பொற்றாமரைக் குளத்தில் தங்கி பெருமானை வழிபட்டு வந்தது.

ஒரு சமயம் அங்கே துள்ளும் மீன்களைக் கண்ட அதற்கு அவற்றை உண்ண வேண்டும் என்ற ஆசை தோன்றியது. மறுகணம் தவறு செய்து விட்டோமே இந்த எண்ணம் மறுபிறவிக்குக் காரணமாகி விட்டதே என்று வருந்தியது. இறைவன் திருவடியில் மனம் பதித்து நின்றது. அதற்கு அருளச் சோமசுந்தரப் பெருமான் விருப்பம் கொண்டார்.

அதன் முன்னே தோன்றி, "நாரையே உனக்கு வேண்டிய வரத்தைக் கேள் தருகிறேன்" என்றார். நாரை அவரை அன்புடன் பணிந்து பெருமானே உனது திருவடியில் வாழ்வதே இன்பம். அதனை எனக்கு அருளுக என்றது. பெருமான் அப்படியே ஆகட்டும் என்றார்.

மறுபடியும் நாரை அவரைப் பணிந்து புனிதமிக்க பொற்றாமரைத் தடாகத்தில் மீன்கள் உள்ளன. அவற்றை எமது இனம் புசிப்பதால் அவற்றிற்குப் பாவம் மூளும். எனவே எமது வழிவந்த பறவைகள் மீன்களை உண்டு பாவம் செய்யாதிருக்க அந்தத் திருக்குளத்தில் மீன்கள் இல்லாது செய்ய வேண்டும் என்றது. பெருமான் மீன்கள் மட்டுமல்ல. தவளை, பாம்பு முதலிய எதுவுமே இதில் வாழாது என்ற வரத்தையும் அளித்தார். நெடுங் காலம் வாழ்ந்த நாரை இறுதியில் முக்தி பெற்றது.

ஆவணி மாதம் நடைபெறும் புட்டுத்திருவிழாவின் போது 8–ஆம் நாள் காலையில் நாரைக்கு முக்தியளித்த ஐதீகக் காட்சி நடைபெறுகிறது. தங்கத்தால் செய்த நாரையின் திருவுருவம் சோமாஸ்கந்தருடன் வைக்கப் பட்டுப் பூசைகள் நடைபெறுகின்றன.

திருநாரையூர்

நடுநாட்டுத் திருத்தலம் திருநாரையூர். இங்குத் தோன்றிய நம்பியாண்டார் நம்பிகள் இத்தலத்தில் வீற்றிருக்கும் பொல்லாப் பிள்ளையாரின் அருளினால் திருமுறைகளைக் கண்டறிந்து தொகுத்து உலகிற்கு வழங்கியவராவார்.

இங்குள்ள இறைவர் சௌந்தரேசுவரர். அம்பிகை திரிபுரசுந்தரி. இப்பெருமானை ஒருநாரை வழிபட்டுப் பேறு பெற்றது என்று தலபுராணம் கூறுகிறது. ஒரு சமயம் அந்த நாரை கீழ்த்திசை சென்று நீராடிவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தது. ஒரு வேடன் அதன் மீது அம்பு எய்தான். அதன் ஒரு சிறகு பிய்ந்து விழுந்தது. அது விழுந்த இடம் சிறகிழந்த நல்லூர் என்றழைக்கப்படுகிறது.

ஒற்றைச் சிறகுடனே மிகுந்த துன்பத்துடன் பறந்து சென்ற நாரை தான் வழிபட்ட லிங்கத்தின் மீது விழுந்தது. சிவபெருமான் லிங்கத்திலிருந்து வெளிப்பட்டு அதற்கு முக்தியை அருளினார்.

இத்தலத்தின் விருட்சம் புன்னையாகும். புன்னை நாரையோடு தொடர்புடையது. புன்னைவனத்தில் நாரைகள் விரும்பி உறைகின்றன என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

நாரையின் சிறகு விழுந்த இடமான சிறகிழந்த நல்லூரிலும் பெரிய சிவாலயம் உள்ளது. இறைவர் கயிலாயநாதர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொக்கு வடிவம் கொண்ட பிரான்

சிவபெருமான் கொக்கு வடிவம் கொண்டு நாராயணரை அடக்கினார் என்று அதர்வண வேதம் கூறுகிறது. கொக்கு வழிபட்ட தலம் நீடாமங்கலமாகும் (நீடா- கொக்கு)

ஒரு சமயம் பிரம்மனிடமிருந்து படைப்புத் தொழிலுக்குரிய வேதங்களை கோமுகன் என்ற அசுரன் கவர்ந்து கொண்டு கடலுக்கடியில் சென்று ஒளிந்து கொண்டான். மீன் வடிவுடன் கடலுக்கடியில் சென்ற திருமால், அவனைக் கொன்று வேதங்களை மீட்டு வந்து பிரமனிடம் அளித்தார். அந்த வெற்றிக் களிப்பால் கடலைக் கலக்கி விளையாடினார். அதனால் கடல்வாழ் உயிரினங்களும் தேவதைகளும் துன்புற்றனர். சிவபெருமான் பெரிய கொக்கு வடிவுடன் தோன்றி மீனாகத் திரிந்த திருமாலை அலகால் பற்றி எடுத்தார். திருமால் கர்வம் நீங்கிப் பெருமானை வழிபட்டுப் பேறுபெற்றார்.

இதை விளக்கும் புடைப்புச் சிற்பம் காஞ்சி ஏகாம்பரநாதர் ஆலயப் பதினாறுகால் மண்டபத் தூணில் உள்ளது. செங்காடு எனும் தலத்திலும் சிவபிரானைக் கொக்கு வழிபட்டதாக உ.வே.சாமிநாத ஐயர் குறிப்பிட்டுள்ளார்.

வலியன் (கரிக்குருவி)

கரிய நிறத்துடன் நீண்ட வாலைக் கொண்ட குருவி வலியன் என்று அழைக்கப்படுகிறது. வெட்டுப்பட்டது போன்ற பிளவுபட்ட வாலை கொண்டிருப்பதால் கருவாட்டுவால் குருவி என்றும் அழைப்பர். சங்க இலக்கியங்களில் கூறும் சகுனம் காட்டும் பறவைகளில் இதுவும் ஒன்றாகும்.பாடல் பெற்ற சோழநாட்டுத் தலமான வலிவலமும் சென்னையிலுள்ள திருவலிதாயமும் வலியன் வழிபட்டுப் பேறு பெற்ற தலங்களாகும். வலியன்குருவியிடம் பிறந்த பாரத்வாஜ முனிவரும் இத்தலங்களில் வழிபட்டுப் பேறுபெற்றார். இங்கு அவர் உண்டாக்கிய தீர்த்தம் பாரத்வாஜ தீர்த்தமாகும். இது கோயிலுக்கு தென்புறம் உள்ளது. வடமொழியில் வலியனை பாரத்வாஜம் என்பர்.திருநீலக்குடியும் பாரத்வாஜம் (வலியன்) வழிப்பட்டு பேறுபெற்ற தலமாகும்.

கரிக்குருவிக்கு உபதேசித்தது

பாண்டிய நாட்டிலுள்ள ஒரு காட்டில் கரிக்குருவி ஒன்று வசித்து வந்தது.(முற்பிறவியில் மிகுந்த புண்ணியத்தையும் சிறிது பாவத்தையும் செய்த ஒருவன் கரிக்குருவியாகப் பிறந்திருந்தான்). அது கொஞ்சம் நோஞ்சானாக இருந்தது. எல்லா பறவைகளும் அதைக் குத்தி த் துரத்தி மகிழும்.அவற்றின் தொல்லையால் அது மிகவும் களைத்துச் சோர்ந்து விட்டது.

அந்தக் கரிக்குருவிக்கு எந்தப் பறவையைக் கண்டாலும் அஞ்சி அஞ்சிச் சாகும் பயம் வந்து விட்டது. இரை தேடுவதற்குச் செல்லக் கூட பயந்து செல்லும்.

ஒரு சமயம் அது தங்கியிருந்த மரத்தடியில் சில வழிப்போக்கர்களும் ஒரு சிவனடியாரும் அங்கு வந்து சேர்ந்தனர். சிவனடியார் வழிப் போக்கர்களுக்கு மதுரையின் பெருமைகளையும் அங்கு வீற்றிருக்கும் சோமசுந்தரப் பெருமானின் அருள்திறங்களையும் விரிவாகக் கூறினார்.

அதைக் கேட்ட கரிக்குருவிக்கு முன் வினைப் பயனால் நல்லுணர்வு பிறந்து, உடனடியாக மதுரை சென்றது. கோயிலை வட்டமிட்டு பெருமானைத் தரிசித்து மகிழ்ந்தது. மூன்று நாட்கள் கழிந்தன. அம்பிகை அதற்கு அருள் புரியத் திருவுளம் கொண்டாள். பெருமானிடம் இக்கரிக்குருவி இப்படி வழிபடக் காரண மென்ன? என்றாள்.பெருமான் அதன் வரலாற்றை உரைத்தார்.பின்பு அம்பிகையின் உள்ளக் குறிப்பை உணர்ந்து அதற்கு ம்ருத்துஞ்சய மந்திரத்தை உபதேசித்தார்.

அதை ஓதி ஓதி அப்பறவை அதிக பலம் பெற்று விட்டது.அதன் அன்பும் பக்தியும் முன் னிலும் அதிகமாகி விட்டது.

கரிக்குருவிக்கு உபதேசித்தது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒரு நாள் சிவபெருமான் உமையுடன் அதற்குக் காட்சியளித்தார்.அதை எல்லா பற வைகளிலும் வலிமை மிக்கதாக மாற்றி வலியன் என்று பெயர் சூட்டினார். உனக்குவேண்டிய வரத் தைக் கேள் என்றார். அதற்கு வலியன் ஐயனே, உமதருளால் எமக்கு ஒரு குறை யுமில்லை. ஆனாலும் எனது இனத்துப் பறவைகள் மிகவும் நோஞ்சானாக உள்ளன. அவற்றையும் வலிமை மிக்கதாக மாற்ற வேண்டும் என்றது.

குருவியே! உனது எண்ணம் விசால மானது. உனது விருப்பப்படியே உமது இனம் வலிமை பெற்று வலியன் என்றே அழைக்கப் படுமென்றார். அது மகிழ்ந்து சிவபூசை செய்து கொண்டிருந்து இறுதியில் முக்தி பெற்றது.

மதுரையில் நடைபெறும் ஆவணித் திரு விழாவின் போது நான்காம் நாளின் காலையில் கரிக்குருவிக்கு உபதேசித்த வரலாறு ஐதீக விழாவாக நடத்தப்படுகிறது. உ

கருடேச்சரம்

கழுகுகளில் மேன்மை பெற்றவர்கள் கருடனும் அவனுடையகூட்டத்தினரும் ஆவர்.கருடனின் அண்ணன் அருணன்.

அருணன் சிவனை நோக்கித் தவம் செய்து சூரியனுக்குச் சாரதியானான். அவன் வழிபட்ட திருத் தலங்கள் அருணேச்சரங்கள் என்றழைக்கப்படுகின் றன.

கருடன் அனேக இடங்களில் சிவபூசை செய்து பேறு பெற்றுள்ளான். அவன் பெயரால் அமைந்த லிங்கம் கருடலிங்கம் என்றும், சிவ ஆலயங்கள் கருடேச் சரங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

தென்மாவட்டங்களில் பலர் கருடலிங்கம் என்று பெயர் சூட்டிக் கொள்கின்றனர். காஞ்சி, திருநாவலூர், குடவாயில் முதலிய தலங்கள் கருடன் வழிபட்ட தலங்க ளாகும். திருநாவலூரில் உள்ள தீர்த்தம் கருடதீர்த்தம் என்றழைக்கப்படுகிறது.

கருடன் வழிபட்டுப் பேறு பெற்ற தலங்கள் சிலவற் றைச் சிந்திக்கலாம்.

காஞ்சிநகர் கருடேசம்

காஞ்சீபுரம் காந்தி சாலையில் அமைந்துள்ள முத்தீசுவரர் ஆலயத்துள் கருடேச்சுவரம் அமைந் துள்ளது. காஞ்சிப் புராணத்தில் இதன் வரலாறு கூறப் பட்டுள்ளது.தனது தாயின் அடிமைத் தளையை நீக்கவும், பாம்புக் கூட்டத்தைத் துன்புறுத்திக் கொன்றழித்த பாவம் தீரவும் இங்கு வழிபட்டார் என்று அது கூறுகிறது.

குடவாயில் கருடேச்சரம்

சோழநாட்டுத் திருத்தலமான குடவாசல், திருவாரூர் கும்பகோணம் சாலையில் உள்ளது. இங்குக் கருடன் வழிபட்டுப் பேறு பெற்றான் என்று இத்தல புராணம் கூறுகிறது.

வஞ்சனையால் அடிமையாகிவிட்ட தனது தாயின் அடிமைத் தளையை நீக்க இந்திரலோகத்திலிருந்து அமுதகுடத்தை எடுத்துக் கொண்டு கருடன் விரைந்து வந்தான். வழியில் பயங்கரன் என்ற அரக்கன் அவனி டமிருந்து அமுதத்தைப் பறித்துண்ண கருடனை வழி மறித்தான். கருடன் அருகிலிருந்த புற்றின் மீது அமிர் தத்தை வைத்து விட்டு பயங்கரனுடன் சண்டையிட்டு இறுதியில் கொன்றான்.

அவ்வேளையில் இறைவன் ஆணையால் அமிர்த குடம் புற்றுக்குள் சென்றுவிட்டது. கருடன் புற்றைப் பிளந்தான். அதனுள் மரகதச் சோதியாகச் சிவலிங்கம் இருக்கக் கண்டான். அவரைப் போற்றிப் பலவாறு துதித்தான். அவர் அவனிடம் அமிர்தகலசத்தை அளித்து ஆசிபுரிந்தார்.

அமுதகுடத்தினை வெளிப்படுத்தியதால் அத்தலம் குடவாசல் என்று அழைக்கப்படுகிறது. இறைவன் கோணேசுவரர். இறைவி – பெரியநாயகி. தீர்த்தம் அமுத தீர்த்தம்.

ஆலய முகப்பில் கருடன் சிவபூசை செய்வது, சுதைச்சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது. உ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சேவல்



கோழி வீட்டில் வளர்க்கப்படும் பறவையினம் . ஆண்கோழிகள் சேவல், குக்குடம் என்று அழைக்கப்படுகின்றன. சேவல் வீரம் மிகுந்தது. சண்டையில் சளைக்காதது. மரணம் அடையும் வரையிலும் போரிடுவது.

புராணங்கள் இதை அக்னியின் வடிவமென்று கூறுகின்றன. அக்னி தாம்ரசூடன் என்ற கோழியைப் படைத்து முருகனுக்கு அளித்தான் என்று புராணம் கூறுகிறது. அக்கோழி முருகனின் தேர்மீது கொடியில் நின்று கூவி அசுரப்படைகளைப் பயத்தால் அலறவைத்தது என்பர்.

திருச்சியை அடுத்துள்ள தலம் உறையூர். இங்கு ஒரு யானையுடன் கோழி போரிட்டு அதை வென்றதாக வரலாறு கூறுகிறது. இவ்வூரைக் கோழியூர் என்று கூறுவர்.

காசி நகரில் நான்கு கோழிகள் வழிபட்டுப் பேறு பெற்றதாகக் காசிக் காண்டமும், காசிநகர்த் தலவரலாறும் கூறுகின்றன.காசியில் உள்ள முக்தி மண்டபத்தில் சேவல் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதையொட்டி காசி அனுமன் காட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள நயாமந்திரிலும் தூண்களில் சேவல் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

காஞ்சீபுரம் சர்வதீர்த்தக் கரையில் காசிவிசுவநாதர் ஆலயம் உள்ளது. இங்குள்ள மகாமண்டபம் காசியிலுள்ள முக்தி மண்டபத்தைப் போன்றதாகும். இதிலும் நான்கு சேவல் வடிவங்கள் புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

சித்தூர் வட்டம் புங்கனூரில் உள்ள சிவாலயம் கல்வெட்டுக்களில் திருக்கோழீச்சரம் என்றழைக்கப்படுகிறது. இதுவே குக்குடேச்சரம் என்னும் வைப்புத் தலமென்பர்.

சென்னை மயிலைக் காரணீசுவரர் கோயிலில் ஒரு சேவல் மூன்றாண்டு காலமாக இருந்து வருகிறது. எப்போதும் கோயிலையே சுற்றிக் கொண்டிருக்கும். அருகிலுள்ள வீடுகளுக்குச் சென்று அவர்கள் அளிக்கும் தானியங்களைக் கொத்தித் தின்னும் . ஆலயத்தில் நடைபெறும் தேவாரக் கச்சேரி, லலிதா சகஸ்ரநாம பாராயணம் முதலியவற்றில் சற்று நேரம் அமரும். இச்சேவல் யாருக்கும் அஞ்சுவதில்லை. இதனைத் தெய்வீகச் சேவலாகவே போற்றுகின்றனர்.

அன்னம்

அன்னம் ஞானத்தின் சின்னமாகப் போற்றப் படுகிறது. வெண்மை நிறத்துடன் திகழ்வது. சரஸ்வதியும் பிரம்மனும் அன்னவாகனத்தில் பவனி வருகின்றனர்.

திருவண்ணாமலையில் நெருப்பு மலை வடிவமாக நின்ற சிவபெருமானின் திருமுடியைக்காண பிரம்மன் அன்னவடிவுடன் சென்றான். பலவாறு முயன்றும் திருமுடியைக் காணமுடியவில்லை தோல்வியை ஒப்புக் கொள்ளாத அவன் திருமுடியைக் கண்டேன் என்று பொய் கூறினான். தனக்குத் துணையாக தாழம்பூ ஒன்றைக் காட்டி இறைவன் சிரத்தைத் தான் கண்டதாகப் பொய்சாட்சி சொல்ல வைத் தான்.

சிவபெருமான் அவன் மீது கோபம் கொண்டு சபித்தார். அவன் அஞ்சி நடுங்கி அவரை வணங்கி வழி பட்டான். அவனால் மீண்டும் தெய்வ வடிவத்தைப் பெறமுடிய வில்லை.

அன்னத்தின் வடிவுடனேயே அம்பர் எனும் தலத்திற்குச் சென்று சிவபூசை செய்தான். அங்கு அவன் அவ்வடிவுடன் உண்டாக்கிய பொய்கை அன்னமாமம் பொய்கை என்றழைக்கப்படுகிறது.

சித்திரை மாதம் நடைபெறும் திருவிழாவில் பெரிய அன்னத்தின் வடிவிற்குள் பிரம்மனை வைத்து மூடுகின் றனர். குளத்திற்குள் அந்த அன்னம் இறக்கப்பட்டு ஐதீக பூசைகள் நடைபெறும். அன்னத்தைப் பிரித்து விட்டு பிரம்மனை மேலே கொண்டு வருகின்றனர். இது சிவவழிபாட்டின் பயனாகப் பிரம்மா அன்ன வடிவு நீங்கி தேவ வடிவம் பெற்றதைக் காட்டு வதாகும்.

ஆதிகலைமகளான பராசக்தி தன்னுடன் வீற்றிருக் கச் சிவபெருமான் ஆதிப்பிரம்மனாக இருந்து உலகங் களையும் உயிர்த்தொகுதிகளையும் படைத்தார். அதைத் தொடர்ந்து படைக்கப் பிரம்மனையும், காத்து வழிநடத் தத் திருமாலையும் படைத்தார். அவ்வேளையில் அவர் அன்னத்தின் மீது பவனி வருகிறார்.அதையொட்டி சிவாலயங்களில் பெருமானை அன்னவாகனத்தில் பவனி வரச் செய்து உலா நடத்துகின்றனர்.

அம்பிகையும் முருகனும், விநாயகரும் கூட அன்ன வாகனங்களில் வீற்றிருந்து அருள் பாலிக்கின் றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கழுகுகள்

பறவைகள் இனத்தில் வலிமை படைத்தவை கழுகுகள்.அவற்றின்பெயரால் கழுக்குன்றம், கழுகு மலை முதலிய ஊர்கள் உள்ளன.இவற்றில் கழுகுகள் சிவனை வழிபட்டுப் பேறுபெற்றுள்ளன.

வேதகிரி என்று புராணங்கள் போற்றும் தலம் கழுகுகள் வழிபாடு செய்ததால், திருக்கழுக்குன்றம் என்று அழைக்கப்படுகிறது. திருப்புகழில் அருணகிரி நாதர் இதனை" கழுகு தொழு வேதகிரி" என்று போற்று கிறார்.கழுகுகள் இங்கு வழிபடுவது முள்வாய் கங்கவடிவெடுத்திருவர் நோற்கு மலையிது என்று திருவிளையாடற்புராணத்து அருச்சனைப் படலத்திலும், கூறப்பட்டுள்ளது. இனி,கழுகரசர் களில் முதன்மை பெற் றவர்களான சம்பாதி, சடாயு, கருடன் முதலியோர் பூசித் துப் பேறுபெற்றதைக் காணலாம்.

திருக்கழுக்குன்றம்

தொண்டை மண்டலத்து தேவாரத் திருத்தலமான திருக்கழுக்குன்றம் செங்கல்பட்டுக்குக் கிழக்கில் அமைந் துள்ளது.இங்கு யுகத்திற்கு இரண்டு கழுகுகள் வீதம் வழிபட்டுப் பேறுபெற்றன என்று தலபுராணம் கூறுகிறது.

சண்டன், பிரசண்டன்

கிருத யுகத்தில் சான்மலி நாட்டில் விருத்திர சிரவன் என்ற முனிவர் வாழ்ந்து வந்தார். அவருடைய குமாரர் கள் சண்டன்,பிரசண்டன்அவர்கள் முன்செய்த தீவி னை யால் கழுகுகளாயினர். அதை அறிந்த முனிவன், " குமாரர்களே! இனி நீங்கள் பறவைகளுக்கு அரசனாக இருங்கள்" என்றார்.

அவர்கள், "தந்தையே எங்களுக்கு இல்லறம், அரசுரிமை முதலான எதிலும் நாட்டமில்லை. நாங்கள் மோட்சமடையவேவிரும்புகிறோம்.அதற்கான வழியைக் கூறுங்கள் என்றனர்.

முனிவன்,"வேதங்கள் மலையாகி நிற்கும் திருக் கழுக்குன்றத் தலத்திற்குச் சென்று வழிபடுங்கள்".அங்கே எளிதில் முக்தி கிடைக்குமென்றார். அதன்படியே அவர் கள் இங்கு வந்து வேதகிரீசரை வணங்கி யுகமுடிவில் மோட்சம் பெற்றனர்.

சம்பாதி, சடாயு

திரேதாயுகத்தில் சம்பாதி, சடாயு என்பவர்கள் அருணன் என்பவனுக்குப் புத்திரர்களாகத் தோன்றி ஒரு சமயம் அவர்கள் சூரிய மண்டலத்தை நோக்கிச் சென்றனர்.

அஞ்சாது தன்னிடம் வரும் இவர்களைக் கண்டு கோபித்த சூரியன் இவர்கள் மீது கடும் வெப்பக் கதிர்க ளைப் பாய்ச்சினான்.அந்த வெப்பத்தால் அவர்களின் சிறகுகள் கருகித் தீய்ந்தன. தம்பியைக் காக்க சடாயு முன்னே சென்று பறந்து நிழல் பரப்பினான்.

அவனுடைய சிறகுகள் கருகி, தீய்ந்தன. அவன் கீழே வீழ்ந்தான்.அவனைத் தொடர்ந்து சம்பாதி பூமிக்கு வந்தான்.சடாயு வீழ்ந்த இடம் அஞ்சன முனிவரின் ஆசிர மமாகும். அவர் அவர்கள் மீது கருணை கொண்டார். "அன்பர்களே முன்யுகத்தில் உமது இனத்துப் பறவை களுக்கு அருள் செய்த பரமன் வீற்றிருக்குமிடமான வேதகிரி சென்று தொழுங்கள். உமக்கு நல்லருள் கிடைக்கு"மென்றார்.அவர்கள்அம்முனிவரிடம் சிவதீட்சை பெற்றுக் கொண்டு வேதகிரியை அடைந்து சிவபூசை செய்து வழிபட்டனர்.

சிவபெருமான் அவர்களுக்குக் காட்சியளித்தார். அவர்களுடைய சிறகுகளை முன்போல் வளரச் செய் தார்.

"பறவைக்கரசர்களே! நீங்கள்கிழக்குக் கடற்கரைக் குச் சென்று வசித்து வருக!, ராவணன் சீதையைச் சிறை யெடுத்துச் செல்லும் போது சடாயுவே! நீ அவனைத் தடுப்பாய் அவன் உனது சிறகுகளை வெட்டி வீழ்த்து வான். அதன் பின் ராம லட்சுமணர் உனக்கு மோட்சம ளிப்பர்" என்றார்.

அவர்கள் பெருமானிடம் விடைபெற்றக் கொண்டு காவிரி கடலோடு கலக்குமிடத்தில் பூவனம் வைத்துப் போற்றினர்.சம்பாதியால் அமைக்கப்பட்டதால் அது சம்பா பதி வனம் எனப்பட்டது. அவ்வனத்தால் அவ்விடம் காவிரிப் பூம்பட்டினமானது.

இருவரும் அங்கிருந்து நாள்தோறும் புள்ளிருக்கு வேளூர்சென்று வழிபட்டு வந்தனர். சடாயு சில காலத் திற்குப் பிறகு இன்றைய ராமேசுவரத்திற்கு அருகிலுள்ள ஒரு வனத்திற்குச் சென்று வாழ்ந்து வந்தார். நெடுங் காலம் தவம் செய்தார். ஒருநாள் இராவணன் சீதை யைக் கவர்ந்து செல்வதைக் கண்டார்.அவனோடு போரிட்டுத் தடுத்தார். அவன் அவரை வாளால் வெட்டி வீழ்த்தினான். அவ்வழியாக வந்த இராமர், இலட்சுமணர் அவரைக் கண்டனர். சடாயு ராமரிடம் நடந்ததைக் கூறி அவர் மடியிலேயே தளர்ந்து விழுந்தார். இராமர் அவருக்குத் தாரக மந்திரத்தை உபதேசித்து மோட்சமளித்தது டன்அவருக்குப் பித்ருக் கடன்கழித்தார். பின் னாளில் சம்பாதியை அனுமன் சந்தித்தார். அனுமனுக்குச் சீதையின் இருப்பிடத்தைஅறிந்து வந்து சம்பாதி அறி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வித்தார். சடாயுவின் மறைவைக் கேட்டு மீண்டும் வேளூருக்கு வந்து வழிபட்டு மோட்சம் பெற்றார்.

சம்புகுத்தன் மாகுத்தன்

துவாபர யுகத்தில் திருக்கழுக்குன்றத்தில் சம்புகுத்தன், மாகுத்தன் என்பவர்கள் வழிபட்டு வந்தார் கள். ஒரு சமயம் சம்புகுத்தன் சிவமே பெரிது என்றான். மாகுத்தன் சக்தியே பெரியது என்றான். வாய்ச்சண்டை முற்றி கைச்சண்டையானது. சிவபெரு மானே நேரில் தோன்றி சிவமும் சக்தியும் ஒன்றோடு ஒன்று பேதமற்றது என்று கூறினார். அவரை அலட்சியம் செய்து விட்டு அவர்கள் தமது வாதத்தைத் தொடர்ந்தனர். அவர்களின் மூர்க்கத் தனத்தைக் கண்டு கோபித்த சிவபெருமான் அவர்களைக் கழுகுகளா கும்படிச் சபித்தார்.

சிவபெருமான் அவர்களிடம், அன்பர்களே நீங் கள் இந்த மலையில் இந்த யுகம் முடியும் வரை கழுகு வடிவுடன் இருந்து பூஜை புரிந்து வாருங்கள். யுகமுடிவில் நீங்கள் மோட்சம் பெறலாம் என்றார். அதன் படியே அவர்கள் கழுகு வடிவுடன் வணங்கிப் பேறு பெற்றனர்.

பூஷா, விதாதா

கலியுகத்தில் பூஷா, விதாதா என்ற கழுகுகள் பெருமானை வணங்கி வருகின்றன. இவர்கள் இந்த யுகத்தின் தொடக்கத்தில் இம்மலைச் சாரலில் தவம் புரிந்தனர். அவர்களுக்குப் பெருமான் காட்சியளித்தார். அவர்கள் வணங்கி முக்தியளிக்குமாறு வேண்டினர். அவர்களிடம் பெருமான், நீங்கள் சிவசாருபத்துடன் சிலகாலம் இருங்கள்; பின்னர் முக்தி அடையலாம் என்றனர். அவர்கள் பெருமானை மறுத்து இப்போதே எமக்கு முக்தி அருளுக, என்று வாதிட்டனர். கோபமுற்ற பெருமான் நீங்கள் கழுகுகளாகப் பிறந்து உழல்க என்றார்.

அவர்கள் அவரைப் பணிந்து தம்மைக் காக்குமாறு வேண்டினர். நீங்கள் காசிபனின் மகனாகப் (கழுகுகளாக) பிறந்து தீக்ஷை பெற்று மீண்டும் இங்கு வந்து பூசை புரிந்து கொண்டிருங்கள். யுகமுடிவில் உமக்கு முக்தியின்பம் தருவோம் என்றார்.



அவர்கள் தமது உடலைச் சிவாக்கினியால் தகித்துக் கொண்டனர். காசிப முனிவரிடத்தில் கழுகுக ளாகப் பிறந்தனர். அவர் சம்பு, ஆதி என்று அவர்களுக் குப் பெயரிட்டு சிவதீக்ஷை செய்து வைத்தார். அவர்கள் இப்போது வேதகிரிக்கு வந்து வழிபட்டுக் கொண்டிருக் கிறார்கள்.

அவர்கள் மலை மீது அலகால் மலையைப் பிளந்து தீர்த்த முண்டாக்கினர். அதுவே சம்பாதி தீர்த்தமாகும். அதில் கங்கை பொங்கி வந்தாள். அதனால் அத்தீர்த்தம் கழுகுகங்கை என்றும் கிருத்திர கங்கை என்றும் அழைக்கப்படுகிறது. இதில் மூழ்கினால் குட்டநோய் தீருமென்று புராணம் கூறுகிறது. அவர்கள் இப்போதும் அங்கு வழிபட்டு வருகின்றனர்.

சிலகாலத்திற்கு முன்புவரை மலைமீது தினமும் உச்சிவேளையில் இரண்டு வெண்ணிறமான கழுகுகள் வந்து அலகை நீரில் சுத்தம் செய்து கொண்டு பண்டாரம் அளிக்கும் சர்க்கரைப் பொங்கலை உண்டு விட்டு சுவாமி விமானத்தில் சிறிதுநேரம் தங்கிவிட்டுச் சென்றன.அதை அனேகர் கண்டு களித்துள்ளனர்.

புள்ளிருக்கு வேளூர்

கழுகரசர்கள் வழிபட்டுப் பேறு பெற்ற சோழநாட்டுத்தலம் புள்ளிருக்கு வேளூரான வைத்தீஸ்வரன் கோயிலாகும்.மேலே குறித்த சம்பாதி – சடாயு என்னும் கழுகு அரசர்கள் கிழக்குக் கடற்கரையில் பூம்புகாருக்கு அருகில் பெரிய பூந்தோட்டத்தை அமைத்து அதிலிருந்த பூக்களைப் பறித்துக் கொண்டு ஒரு யோசனை தூரம் பறந்து வந்து இங்கே சிவவழிபாடு செய்தனர். அவர்கள் பெயரால் திருத்தலம் புள்ளிருக்கு வேளூர் என்று தேவாரத்துள் குறிக்கப்பட்டுள்ளது. அதை இந்நாளில் வைத்தீசுவரன் கோயில் என்றழைக்கின்றனர்.

சம்பாதியும் சடாயுவும் சூரிய புத்திரர்கள் என்பதையும் சடாயுவின் வீரத்தையும் அவன் வெண் மணலால் லிங்கம் அமைத்து வழிபட்டதையும் இராவணனைப் போரிட்டுத் துன்புறுத்தியதையும் திருமுறைப் பாடல்களில் குறித்துள்ளனர்.

சம்பாதி அமைத்த வனம் பூம்புகாரின் அருகில் உள்ளது. அதன் காவல் தெய்வம் சம்பாபதியம்மன் ஆவாள்.

வைத்தீசுவரன் கோயிலுள்ள வைத்தியநாதர் ஆலயத்து உட்பிரகாரத்தில் சடாயு மோட்சமடைந்தபின் இராமர் அவனைத் தீயூட்டிய சடாயுகுண்டம் என்னும் இடம் உள்ளது. அங்கு இராமர், லட்சுமணர் சம்பாதி சிற்பங்கள் உள்ளன. தேவாரத்துள் சம்பாதி சடாயு இருவரும் பூவனம் வைத்துப் போற்றியதும் புள்ளிருக்கு வேளூரில் வழிபட்டதும் குறிக்கப் பட்டுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஈக்கள் வழிபட்ட ஈங்கோய் மலை

திருச்சிக்கு மேற்கில்(முசிரியிலிருந்து5 கி.மீ தொலைவில்) ஈங்கோய் மலை அமைந்துள்ளது. இதனை மரகதாசலம் என்பர். ஒரு சமயம் இந்திரன் கௌதமரின் சாபத்தால் அருவருப்பான மேனியை அடைந்தான். அவன் மீது இரக்கம் கொண்ட அகத்தியர் அவனுக்கு மந்திர உபதேசம் செய்து மரகத மலை சென்று அங்குள்ள பெருமானை வழிபடுமாறு கூறினார். அவன் ஈ வடிவத்துடன் மரகதாசலரை வணங்கி ஆயிரங்கண்ணோன் ஆனான். அன்றுமுதல் இம்மலை ஈங்கோய் மலை எனப்படுகிறது. சுவாமி மரகதாசலர்; அம்பிகை மரகதவல்லி.

செல்

அளவால் மிகச் சிற்றுயிர்கள் செல்லும், கரையானுமாகும். இவை இரண்டும் மரம், புத்தகம் முதலியவற்றை அரித்துத் தின்றழிப்பதாகும். ஒரு சமயம் திருமால் அசுரர்களோடு கடும்போரிட்டார். அந்தக் களைப்பால் வில்லை ஊன்றி அதன்மீது முகவாயை வைத்துக் கொண்டு ஓய்வெடுத்தவர் அப்படியே உறங்கிவிட்டார்.

நீண்ட காலமாகியும் அவர் விழித்துக் கொள்ள வில்லை. பலவாறு முயன்றும் அவரை எழுப்ப முடிய வில்லை. அவர் காலடியில் கரையான், செல் சேர்ந்து புற்று உருவானது. தேவர்கள் கரையான், செல் ஆகியவற்றின் உருவாகி வில்லின் நாணைத் தின்றனர். நாண் அறுந்ததால் வில் விடுபட்டு அவர் தலையைத் துண்டித்தது.

அதன்பின் ஒரு குதிரையின் தலையை அவருக்குப் பொறுத்தி உயிர்ப்பித்தனர். திருமாலின் சிரசைச் சேதித்த பாவம் நீங்க அவர்கள் செல், கரையான் வடிவுடன் திருவாரூரிலும் சுற்றியுள்ள தலங்களிலும் பூசை செய்தனர்.

காஞ்சிபுரத்திலும் செல் வடிவுடன்தேவர்களும் இந்திரனும் வழிபட்டனர். அவ்விடம் அமரேசம் என்று அழைக்கப்படுகிறது.

எறும்பு

திருச்சிக்கு கிழக்கே 10 கி.மீ. தொலைவில் திருவெறும்பூர் உள்ளது. தேவர்கள் எறும்பு வடிவம் கொண்டு சிவபெருமானை வழிபட்டனர். சுவாமி எறும்பீசர் என்றும் அம்பிகை நறுங்குழல் நாயகி என்றும் அழைக்கப்படுகின்றனர்.

சிவகாசித் தலவரலாற்றில் எறும்புகள் வரிசை யாகச் செல்வதை வைத்தே பராக்கிரம பாண்டியன் இறைவனின் இருப்பிடத்தை அறிந்ததாகக் கூறப் பட்டுள்ளது.

தேள்

ஊர்வனவற்றில் விஷமுள்ள ஜந்து தேள். இது கருந்தேள், செந்தேள், மலைத்தேள், மரத்தேள் என பலவகைப்படும்.

தேள்கள் நெருங்கி மொய்த்துள்ள மாலையை வீரபத்திரர் அணிந்துள்ளார். இதனை விருச்சிக மாலை என அழைப்பர். பேரூர் அரசம்பலவாணர் சபையிலுள்ள வீரபத்திரர் திரு உருவத்தில் தலையில் தேள் உருவம் அமைக்கப்பட்டிருக்கிறது.

தேள் முன் கைகளை விரித்து வைத்துக் கொண்டு பின் கொடுக்கை தூக்கிக் கொண்டு ஆடுவது போல் கைகளையும் வளைத்து முன் நீட்டி வலது காலை வளைத்துதூக்கி கொடுக்கை போல் உயர்த்தி ஆடும் ஆட்டம் லதாவிருச்சிக தாண்டவம் எனப்படும். சிவபெருமான் லதாவிருச்சிக தாண்டவம் ஆடும் கோலத்தைப் பல்லவர்கள் தாங்கள் கட்டிய ஆலயங் களில் அமைத்துள்ளனர்.

சங்கு (சங்குக்கருள் நாதன்)

வலம்புரிச் சங்கில் நீர் நிரப்பி வேதமந்திரங் களால் புனிதப்படுத்தி இறைவனுக்கு நீராட்டுவது சிறந்த வழிபாடாகும். நீரில் வாழும் உயர்ந்த உயிரினமான சங்கு உறுதியான ஓடுடன் மென்மையான உடலையும் கொண்டது. அது மாண்டதும் அதன் ஓடு ஊதும் பொரு ளாகப் பயன்படுத்தப்படுகிறது. சங்குகளில் வலம்புரி, இடம்புரி என இரு வகைகள் உள்ளன. சங்குகளில் உயர்ந்தது வலம்புரிச்சங்கு,. சிறு சங்குகளைக் கோர்த்து மாலையாகவும் அணிவர். சங்கொலி உயர்ந்த நாதமாகும். போரில் வெற்றி பெற்றவர்கள் தம் வெற்றியைப் பறைசாற்ற சங்குகளை முழக்குவர்.

திருமால் பாஞ்சசன்யம் எனும் சங்கினை ஏந்து கிறார். வலம்புரம் எனும் தலத்தில் சிவபெருமா னை வழிபட்டுத் திருமால் பாஞ்ச சன்யத்தைப் பெற்றார் அங்குள்ள இறைவன் சங்கருள்நாதர். அங்குத் தனது ஓட்டினை அளித்த சங்குப் பூச்சி பெருமானை வழிபட்டு முத்தி பெற்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வண்டுகள்

வண்டுகள் இலக்கியங்களில்பலவாகச் சிறப்பிக்கப்பட்டுள்ளன. இவை காதலுக்குத் தூது செல்வதாக இலக்கியங்கள் கூறும். ஆறுகால்களைக் கொண்டிருப்பதால்,இவை அறுபதம் என்றழைக்கப்படுகின்றன. வண்டு வடிவில் அனேகர் சிவபூசை செய்து பேறு பெற்றுள்ளனர்.தேவர்கள் பலசமயங்களில் அசுரர்களுக்கு அஞ்சி வண்டு வடிவம் கொண்டு சிவவழிபாடு செய்ததாகக் கூறப்படுகிறது. வடமொழியில் வண்டைப் ப்ருங்கம் என்றழைப்பர். வண்டு வடிவம் கொண்ட முனிவர் பிருங்கி மகரிஷி என்றழைக்கப்படுகிறார்.

வண்டு வடிவம் கொண்ட பிருங்கி முனிவர்

பிருங்கி முனிவர் சிறந்த சிவபக்தர். அவர் சிவனையன்றி வேறு தெய்வங்களை வணங்காதவர். சிவபெருமான் சக்தியுடன் இணைந்த ஓர் உருவில் அர்த்தநாரியாய் நின்ற போதும் சக்தியை வணங்காது வண்டுருவம் கொண்டு திருமேனியைத் துளைத்துக் கொண்டு சிவபெருமானின் உடலை மட்டும் வலம் வந்தார். அதனால் கோபமுற்ற தேவி அவருடைய சக்தியை நீங்கும்படிச் செய்ய முனிவர் எலும்பும் தோலுமாய் நின்றார். அவர் நடக்க முடியாமல் தடுமாறிய போது, பெருமான் மூன்றாவது காலை அளித்தார். பிருங்கி பல தலங்களில் வண்டு வடிவுடனேயே வழிபட்டார். அத்தலங்களில் ஒன்று நல்லூராகும்.

நல்லூர் கும்பகோணத்திற்கு அருகில் உள்ளது. இங்குள்ள பஞ்சவர்ணேசுவரர் ஆலயத்தில் உள்ள மூலவரின் திருமேனியில் வண்டு துளைத்த அடையாளங்கள் பல உள்ளன.

மன்னார்குடிக்கு அருகிலுள்ள திருவெண்டறையும் பிருங்கி பூசித்த தலமாகும். திருவண்டு துறை என்பதே திருவெண்டறை ஆனது என்பர். கருவறையில் இப்போதும் வண்டின் ரீங்காரம் கேட்பதாகக் கூறுகின்றனர்.

வாழை இனத்தில் ஒரு வகைக்கும் வண்டு என்பது பெயராகும். இந்த வகை வாழை நிறைந்திருந்ததால், திருக்கழுக்குன்றத்திற்கு வண்டு வனம் என்பது பெயர். இங்கு வீற்றிருக்கும் தல விநாயகர் வண்டுவனப் பிள்ளையார் என்றழைக்கப்படுகின்றார்.

தேனீக்கள்

- இன்சுவை மிகுந்த தேன் உயர்ந்த மருத்துவகுணம் கொண்டது. தான் எளிதில் கெடாததைப் போலவே தன்னில் இட்டு வைக்கும் பொருட்களையும் கெடாது பாதுகாப்பது. உணவாகவும் மருந்தாகவும் பயன்படுகிறது. இறைவன் தேன் அபிஷேகத்தை விரும்பி ஏற்றுக் கொள்கிறான் .தேன் அபிஷேகம் செய்து வழிபடுபவர்களுக்கு நல்ல குரல் வளம் உண்டாகும் என்று நம்பப்படுகின்றது.

- ஈக்களில் ஒருவகை தேனீக்களாகும். இவை பூக்களிலிருந்து தேனைச் சேகரித்துத் தமது கூட்டில் சேமித்து வைக்கின்றன. நாம் அந்தத் தேன் கூட்டிலிருந்து தேனை எடுத்துக் கொள்கிறோம்.

- இனிய சொற்களைத் தேன்மொழி என்கிறோம். உயிருக்கு இதந்தரும் திருவாசகம் தேன் என்றே போற்றப்படுகிறது.திருப்பாண்டிக் கொடுமுடித் தேவாரத்தில் அம்பிகை தேனமரும் மொழி மாது என்று சிறப்பிக்கப்பட்டுள்ளாள்.

- சித்தர்கள் தேனீக்களாக வடிவம் கொண்டு பல இடங்களில் பூஜை செய்துள்ளனர். அவற்றில் குறிப்பிடத் தக்கது திருச்சிற்றேமம் (எ) சிற்றாய்மூர் ஆகும். ஆலத்தப்பாடி இருப்புப் பாதை நிலையத்திலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்குள்ள பொன் வைத்த நாதர் கோயிலில் சுவாமி சந்நிதிக்கு அருகில் தேன்கூடு உள்ளது. இங்குச் சித்தர்கள் தேனீக்களாக இருந்து பூசிப்பதாகக் கூறுகின்றனர். அந்தத் தேன் கூட்டிற்கும் பூசை நடைபெறுகிறது.

- நன்னிலத்துப் பெருங்கோயில் கந்தன்குடி முதலியவையும் தேனீக்கள் பூசித்த தலமென்று தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாதய்யர் குறித்துள்ளார்.

- தேனீக்களின் ரீங்காரம் தெய்வீக நாதத்தை ஒக்கும். அது இருக்குமிடத்தில் இறையருளும் செல்வமும் லட்சுமியின் அருளும் மலிந்திருக்கும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிலந்தி



எட்டுக் கால்களுடன் கூடிய சிற்றுயிர் சிலந்தி யாகும். தன் வாயிலிருந்து தோன்றும் பசை கொண்ட நுண்பொருளால் அகன்ற வலையைப் பின்னி அதன் நடுவில் இருக்கும். வலையில் சிக்கிக் கொள்ளும் சிறு பூச்சிகளைத் தின்னும். விஷப் பூச்சிகளான இந்த இனத் தில் நல்லறிவு பெற்ற சிலந்திகளும் இறைவன் திருவரு ளால் சிவவழிபாடு செய்து மேன்மை பெற்றுள் ளன.

திருக்காளத்தியிலும், திருஆனைக்காவிலும் சிலந் திகள் வழிபட்டது தலபுராணங்களில் கூறப்பட்டுள்ளது. திருச்சியை அடுத்த திருஆனைக்கா பஞ்சபூதத் தலங் களில் ஒன்றாகும். இத்தலத்தில் சிவபெருமான் நீர் திரண்டு அமைந்த லிங்கமாகக் காட்சியளிக்கிறார். இத் தலம் வெண்நாவல் மரத்தடியில் உள்ளது. அம்பி கை, காவிரி நீரைத் திரட்டிச் சிவலிங்கமாகச் செய்து வழி பட்டார். அங்கிருந்த ஒரு சிலந்திக்குப் பூர்வ புண் ணியத் தால் சிவனை வழிபட வேண்டுமென்ற எண்ணம் உண் டாயிற்று. லிங்கத்தின்மீது தழைகள் இலைகள் முதலி யன மேலே விழாதிருக்கத் தன் வாய் நூலால் சிவ லிங் கத்திற்குப் பந்தல்போல் வலை பின்னி வழிபட்டது.

அதே காட்டில் யானை ஒன்றும், வசித்து வந்தது. அதுவும் நல்லறிவு பெற்று ஞானத்தால் அந்த லிங்கத் தை வழிபட்டு வந்தது. அது தினமும் காவிரியில் நீராடி துதிக்கையில் நீரெடுத்து வந்து பெருமானுக்கு திருமுழுக் காட்டும், தளிர் மலர்களைப் பறித்துச் சூட்டி மகிழும். அப்படிச் செய்துவந்தபோது பெருமானுக்கு மேலே சிலந்தி வலை பின்னியிருப்பதைக் கண்டது. எச்சில் என்று அவ்வலையைப் பிய்த்தெரிந்துவிட்டுப் பூசித்தது.

சிலந்தி வந்ததும் தான் நெய்த வலையைக் காணாது வருந்தியது. தளராமல் முன்னிலும் பெரிய வலையைப் பின்னி விதானம் அமைத்து மகிழ்ச்சி யுடன் சிவபூசை செய்தது.

மறுநாள் காலை வந்த யானை வலைகளைப் பிய்த்தெரிந்துவிட்டு பூசை செய்தது. இவ்வாறு இரவில் சிலந்தி வலை பின்னுவதும் காலையில் யானை அதை அழிப்பதுமாகப் இரண்டு நாட்கள் கடந்தன. சிலந்திக்குக் கோபம் வந்தது..

இந்த யானை சிவ அபராதம் செய்கிறது. இதைக் கண்டிக்க வேண்டும் என்று உறுதி பூண்டது. மறுநாள் யானை வந்தபோது அதன் துதிக்கைக்குள் புகுந்து கடித்தது. வலி பொறுக்காத யானை வீழ்ந்து துடித்தது. உள்ளே சென்ற சிலந்தியும் யானை தன் துதிக்கையைத் தரையில் ஓங்கி அடித்துக் கொண்டதால், திரும்ப வழி தெரியாமல் சிக்கிச் சோர்ந்தது. இறுதியில் இரண்டும் இறந்தன. பெருமான் அங்கே தோன்றினார். யானைக்கு முக்தி அளித்தார்.

சிலந்தி வன்மத்துடன் யானையை அழித்ததால், அதற்கு மீண்டும் ஒரு பிறவி அளித்தார். அது சோழர்குடியில் தோன்றி, கோட்செங்கட் சோழன் என்று புகழ்பெற்றது. அவன் முற்பிறப்பின் தன்மையால் சிலந்திச் சோழன் என்றும் அழைக்கப் பட்டான்.அவன் அனேக மாடக் கோயில்களைக் கட்டி னான் என்று திவ்வியப் பிரபந்தமும், வரலாற்று நூல்களும் கூறுகின்றன.

திருவானைக்கா ஆலய வரலாற்றுச் சிற்பத்தில் அம்பிகை பூசை செய்யும் சிவலிங்கத்தின் பின்புறம் சிலந்தியும் காட்டப்பட்டுள்ளது. இவ்வாலயத்தின் பிரகா ரத்தில் தனிச் சந்நிதியில் செங்கட் சோழனின் திருவுருவச் சிலை அமைந்துள்ளது. அவனுக்குப் பின்புறம் பெரிய வலையும், நடுவில் சிலந்தியும் தீட்டப்பட்டுள்ளன.

சிலந்தி வாய் நூலால் பந்தலிட்டது. அப்புண்ணி யத்தால் சோழர் குடியில் கோட்செங்கட் சோழனாகத் தோன்றியது.அவன் எழுபது மாடக் கோயில்களைக் கட்டி வழிபட்டது முதலான செய்திகள் தேவாரத்தில் ஆங்காங் குக் கூறப்பட்டுள்ளன.

திருக்காளத்தியிலும் சிலந்தி, யானை, பாம்பு ஆகிய மூன்றும் வழிபட்டுப் பேறுபெற்றுள்ளன. காளத்தி நாதர் சிலந்தியைத் திருமேனியில் ஒடுக்கிக் கொண்டார் என்றும், அதன் அடையாளமாக மூலவரின் திருமேனி யில் சிலந்தியின் வடிவம் உள்ளது என்றும் கூறுகி ன்றனர்.

இங்கு உலாத் திருமேனிகள் வரிசையில் பாம்பு, சிலந்தி, யானை ஆகியவற்றின் உலோகத் திருமேனிகள் உள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நண்டிற்கு அருள்புரிந்த நாதன்

நண்டு நீரிலும் நிலத்திலும் வாழும் ஊர்வன இனத்தைச் சார்ந்தது. எட்டு கால்களையும் இரண்டு கொடுக்குகளையும் கொண்டது.நண்டு வழிபட்டுப் பேறு பெற்ற இரண்டு தலங்கள் தேவாரப் பாடல் பெற்ற தலங்களாக உள்ளன. இவை சோழ நாட்டுத் திருத்தலங்களான திருந்துதேவன் குடியும் (நண்டாங்கோயில்) திருநீடூரும் ஆகும். இவ்விரு தலங்களிலும் இறைவன் நண்டைத் தனது திருமேனியில் ஒடுக்கிக் கொண்டார். அப்படி உள்ளேற்றுக் கொண்டதன் அடையாளமாக சிவலிங்கத்தின் மேனியில் நண்டு வளைகள் உள்ளன.



திருந்துதேவன் குடி

மருந்து வேண்டில் மந்திரங்கள் இவை என்று தொடங்கும் திருஞானசம்பந்தரின் பாடல் பெற்ற திருத்தலம் திருந்துதேவன் குடியாகும். ஒரு சமயம் இந்திரன் மிகுந்த கவனத்துடன் சிவபூசை செய்ய விரும்பி ஓரிடத்தைத் தேர்வு செய்தான். அங்கு அகழியுடன் கோட்டை கட்டி அதனுள் சிவாலயம் அமைத்தான். அகழியில் ஆயிரம் தாமரைப் பூக்கள் மலரும் கொடிகளை நட்டான். மிகுந்த சிவபக்தியுடன் உரிய நியமங்களை ஏற்றுச் சிவ பூசை செய்து வந்தான்.

தினமும் அகழியில் நீராடித் தூய ஆடைகளைப் புனைந்தான். அகழியில் பூத்த மலர்களில் ஆயிரம் மலர்களைப் பறித்து, அன்புடன் சிவபெருமானுக்கு அர்ச்சனை புரிந்து வந்தான்.

ஒரு நாள் அர்ச்சனை செய்து கொண்டு வரும்போது ஒரு மலர் குறைந்தது. அவன் வருந்தினான். அடுத்த நாள் கவனத்துடன் எண்ணி ஆயிரம் பூக்களைப் பறித் தான். அன்றும் ஒரு மலர் குறைந்தது. இதே போல் பல நாட்கள் தொடர்ந்து நடந்தன. இந்திரன் இது என்ன மாயம்? நான் தினமும் கவனத்துடன் எண்ணி மலர் பறித்து வருகிறேன். என்றாலும் தினமும் ஒரு பூ குறைகிறது. இதைச் செய்வது யார் என்று அறிய வேண்டும் என எண்ணினான்.

அன்று பூசையின் போது பறித்துக் குவித்த மலர்கள் மீதே கவனமாக இருந்தான். ஒரு நண்டு அகழியிலி ருந்து வேகமாக வந்து ஒரு மலரை எடுத்துக் கொண்டு கருவறையை நோக்கி விரைந்து ஓடியது. அவன் அதைத் தடுக்க முயன்றான். அஞ்சிய நண்டு சிவலிங் கத்தின் மீது ஏறியது. இந்திரன் அதைத் தாக்க முற்பட்டான். சிவபெருமான் அதைத் தனது மேனியில் இழுத்துக் கொண்டார்.

சிவலிங்கத்திலிருந்து வெளிப்பட்ட சிவபெருமான் இந்திரனுக்கும் நண்டிற்கும் அருள்புரிந்தார். நண்டுக்கு அருள்புரிந்ததால் சிவபெருமான் நண்டீசர் (கர்க்கடே சுவரர்) என்றழைக்கப்படுகிறார். இங்கு இரண்டு அம்பிகை சந்நிதிகள் உள்ளன. இவர்கள் அருமருந்தம்மை, அரவிந்த நாயகி என்று அழைக்கப்படுகின்றனர்.

மகாமண்டபத் தூணில் சிவலிங்கத்தை நண்டு மலர் கொண்டு பூசிக்கும் காட்சி புடைப்புச் சிற்பமாக உள்ளது. இக்கோயிலைச் சுற்றியிருந்த ஊர் முற்றிலுமாக அழிந்து விட்டது. திருவியலூரே அருகிலுள்ள பெரிய ஊராகும். இக்கோயில் திருப்பணி செய்யப்பட்டுப் புதுப்பொலிவுடன் விளங்குகிறது.

திருநீடூர்

இது மயிலாடுதுறைக்கு மேற்கில் அமைந்த தலமாகும். இங்கும் தன்னை வழிபட்ட நண்டைத் தனது திருமேனியில் பெருமான் உள்ளிழுத்துக் கொண்டார். நண்டு உள்ளே சென்ற (தொளை) வளை பெருமான் திருமேனியில் உள்ளது. சுந்தரர் பாடிப் பரவியுள்ள இறைவன் பெயர் அருட்சோமநாதர் அம்பிகை வேயுறுதோளி. உ

சிப்பீசர்

வித்யாதரன் என்னும் ஒருவேதியன் குபேரனின் மகளான ரேகாவதி என்பவளை மணந்து காஞ்சியில் வாழ்ந்து வந்தான். அவள் தினமும் 1000 முத்துக்களால் இறைவனை அர்ச்சிக்க விரும்பி அதற்கு உதவும்படி இறைவனிடம் விண்ணப்பித்தாள். பெருமான் அங்குள்ள தீர்த்தத்தில் சிப்பிகள் தோன்றி முத்தளிக்கும் வண்ணம் அருள்புரிந்தார். முத்துக்களை அளித்த சிப்பிகள் இறைவனை வழிபட்டு முக்தி பெற்றன. அப்பெருமான் சிப்பீசர் என்ற பெயரில் கீழண்டை ராஜவீதியில் எழுந்தருளியுள்ளார். உ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மச்சேசர் (மீன் வழிபட்டது)

செல்வத்தின் குறியீடாக விளங்குவது மீன். பல தெய்வங்கள் மீன் வடிவுடன் சிவபூசை செய்துள்ளன.

ஒரு சமயம் கோமுகன் என்ற அசுரன் பிரம்மனிட மிருந்து படைப்புத் தொழிலுக்குரிய வேதங் களைக் கவர்ந்து கொண்டு கடலுக்கடியில் சென்று ஒளிந்து கொண்டான். கடலுக்கடியில் மீன் வடிவுடன் சென்ற திருமால், அவனைக் கொன்று வேதங்களை மீட்டு வந்து பிரம்மனிடம் அளித்தார்.அந்த வெற்றிக் களிப்பால் கடலைக் கலக்கி விளையாடினார். அதனால் கடல்வாழ் உயிரினங்களும் தேவதைகளும் துன்புற்றனர். சிவபெருமான் பெரிய கொக்கு வடிவுடன் தோன்றி, மீனாகத் திரிந்த திருமாலை அலகால் பற்றி எடுத்தார். திருமால் கர்வம் நீங்கிப் பெருமானை வழிபட்டுப் பேறுபெற்றார்.

திருமால் மீன் வடிவுடன் நீருக்கடியில் லிங்கம் அமைத்து வழிபட்டார். அவை மச்சேசுவரர் என்றழைக் கப்படுகின்றன.

அகந்தை நீங்கிய திருமால் பல தலங்களில் மீன் வடிவுடன் வழிபட்ட மச்சேசர் ஆலயம் காஞ்சிபுரம் கிழக்கு ராஜவீதியில் உள்ளது.

தஞ்சாவூருக்கு அருகில் கோயில் தேவராயம் பேட்டை என வழங்கும் சேலூர் என்ற தலமுள்ளது. இங்கும் மீன் வடிவில் திருமால் வழிபட்டுப் பேறுபெற் றதாக வரலாறு கூறுகிறது. இறைவன் மச்சபுரீசர். சுவாமி பீடத்தில் மச்சபுரீசர் என்று எழுதப்பட்டுள்ளது.

நாகூரிலும் மீன்கள் வழிபட்டுப் பேறுபெற்றுள் ளன.

கொல்லிமலை அறப்பள்ளீசுவரர் ஆலயத்திற்குச் சற்றுத் தொலைவில் ஆறு ஓடுகிறது. இங்கு தேவர்கள் மீன்களாகி வசிக்கின்றனர் என்று நம்புகின்றனர். அந்த மீன்களுக்கு மூக்குத்தி அணிவிப்பது, பொறிகடலை போடுதல் முதலிய நேர்த்திக் கடன்களைச் செய்கின்றனர்.

ஒரு சமயம் சிலர் இங்குள்ள மீன்களைப் பிடித்து அறுத்துச் சமைத்தனர். கொதிக்கும் வேளையில் மீன் கள் ஒன்று சேர்ந்து துள்ளியோடி ஆற்றுக்குள் குதித்தன. இந்த வரலாறு கொங்கு மண்டலச் சதகத்தில் குறிக்கப் பட்டுள்ளது.

தவளை



நீரிலும் நிலத்திலும் வாழும் தவளை; தத்தித் தத்திச் செல்வது. வடமொழியில் இதனை மண்டுகம் என்பர். காசியில் தவளை வழிபட்ட இறைவன் மண்டுகநாதர் என்ற பெயரில் எழுந் தருளியிருக்கின்றார். அவரை வழிபட்ட தவளை மறுபிறப்பில் ஒரு பெண்ணாகப் பிறந்து மீண்டும் காசியில் வழிபட்டுப் பேறு பெற்றாள் என்று காசிக் கண்டம் கூறுகிறது. தமிழகத்திலுள்ள ஊட்டத்தூர் என்ற வைப்புத் தலம் தவளை வழிபட்டுப் பேறுபெற்ற தலமாகும். இங்குள்ள மலை தேவகிரி என்றழைக்கப்படுகிறது.

முருகனின் பஞ்சாசனத்தில் தவளை இருப்பதாகக் குமாரதந்திரம் கூறுகிறது.

பெருமானுக்கு அணிவிக்கும் அணிகளில் தவளை வாய் என்பது ஓர் அணியாகும். தப்பளாம் புலியூர் என்ற தலத்திலும் தவளை வழிபட்டுப் பேறு பெற்றுள்ளது.

பெருவேளூர் என்னும் தலத்தில் தவளை வழிபட்டுப் பேறு பெற்றதாகத் தலபுராணம் கூறுகிறது.

முதலை

முதலைகள் நீரில் வாழ்பவை. நிலத்தில் கிடந்து ஓய்வெடுப்பவை. கங்கையின் வாகனமான முதலை, கங்கை சிவபூசை செய்யும் போது அவளுடன் சேர்ந்து பூசித்ததாகக் கூறுவர். அவை தண்ணீருக்கு அடியில் அமைந்த லிங்கங்களைப் பூசிக்கின்றன என்பர்.

கொங்கு நாட்டு அவிநாசியில் முதலை உண்ட பாலகனைச் சிவபெருமான் அருளால் சுந்தரர் மீட்டார். அவிநாசியப்பர் ஆலயத்தில் முதலை வாயிலிருந்து பிள்ளை வெளிவரும் கோலம் மூலத்திருமேனியாகவும் உலாத் திருமேனியாகவும் உள்ளன. இம் மண்டலத்திலுள்ள பல ஆலயங்களில் முதலைவாயிலிருந்து பிள்ளை வெளிவரும் சிற்பம் தனிச்சிறப்புடன் அமைக்கப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆமை

ஆமைகள் நீண்டகாலம் வாழ்பவை. நீரிலும் நிலத்திலும் வசிக்கும்; ஊர்வன இனத்தைச் சார்ந்தவை. சமய நூல்கள் இதை மந்திர தந்திரங்களில் குறியீடாகக் கொள்கின்றன. ஆமை ஓட்டின் மீது அல்லது ஆமை வடிவமான பலகையின் மீது அமர்ந்து செய்யப் படும் மந்திர ஜபங்கள் பலமடங்கு பலன் தருமென்று நம்புகின்றனர். சிவபெருமான் ஆமை ஓட்டை மார்பில் அணிந்துள்ளார்.

திருமால் ஆமை வடிவுடன் இரண்டு முறை சிவபூசை செய்துள்ளார்.

ஒரு காலத்தில்அமிர்தம் வேண்டி தேவர்களும், அசுரர் களும் கூடிப் பாற்கடலைக் கடைய முயன்றனர். மந்தர மலையை மத்தாக நட்டு வாசுகி என்ற பாம்பைக் கயிறாகக் கட்டிக் கடலைக் கடையத் தொடங்கினர். உறுதியான அடிப்பகுதி யில்லாததால் (தாங்குதளம்) மலை சரிந்து விழுந்து சிக்கிக் கொண்டது. அப்போது திருமால் வலிய ஆமை வடிவம் எடுத்தார். அந்த வடிவுடன் மலையைத் தாங்கும் வல்லமையைப் பெற திருக்கச்சூர் என்னும் தலத்தில் வழிபாடு செய்தார். அங்கு அவர் அமைத்த தீர்த்தம் ஆமை மடு எனும் பெயரில் உள்ளது.

பின்னர் இறைவன் அருளுடன் பாற்கடலுக்குச் சென்று மந்தர மலையைத் தாங்கினார். இதனால் பாற்கடலைக் கடைந்து அமுதம்பெறுவது எளிதாயிற்று.

திருமால் மீண்டும் அதே வடிவுடன் காஞ்சிபுரம் சென்று முருக்க (புரச)மரத்தின் கீழ் தவம் புரிந்தார். அவருக்குப் பெருமான் ஜோதி லிங்கமாகக் காட்சியளித்தார். அப்பெரு மான் (ஆமை) கச்சப வடிவம் கொண்ட கச்சுபேசுவரர் என்று அழைக்கப்படுகிறார். இது பெரிய ஆலய மாகும்.

கமடம் என்பதும் ஆமையைக் குறிக்கிறது. காளி தேவி ஆமையை ஆசனமாக வைத்து அதன் மீது சிவ லிங்கத்தை வைத்து வழிபட்டதால் அது கமடேசுவரர் என பெயர் பெற்றது. காஞ்சி ஆதிபீட காளிகாம்பாள் கோயி லில் கமடேசுவரர் எழுந்தருளியுள்ளார்.சென்னை காளி காம்பாள் ஆலயத்திலும் கமடேசுவரர் தனிச் சந்நிதியில் எழுந்தருளியுள்ளார்.

இறைவனின் பீடத்தில் ஆமையை அமைக்கா விட்டாலும் அது இருப்பதாகப் பாவித்து பூசிக்கின்றனர். அந்த பூசையைக் கூர்மாசன பூசை என அழைப்பர்.

திருவோத்தூர் வேத புரீசுவரர் ஆலயத்திலுள்ள நாக லிங்கம் கூர்மாசனத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இது போன்றே சென்னை அரண்மனைக்காரன் தெருவி லுள்ள கச்சாலீசுவரர் ஆலயத்தில் மூலத்தானத்தில் மூலவர் (பஞ்சாசனத்தில்) கூர்மாசனத்தின் மீது காட்சி யளிக்கிறார்.

திருமணம் கண்ட ஆமை

ஒரு சமயம் திருமணஞ்சேரியில் வைசிய குலத்தில் பிறந்த இரு பெண்கள் ஒரே சமயத்தில் கருவுற்றனர். அவர்கள் தமக்கு முறையே பெண்ணும் ஆணும் பிறந்தால் அவர்களுக்குத் திருமணம் முடித்துக் கொள்ளலாம் என்று உறுதி செய்து கொண்டனர்.



ஒருத்திக்கு அழகான பெண்குழந்தை பிறந்தது. மற்றவளுக்கு ஆண் ஆமை பிறந்தது. அந்த ஆமை மிகுந்த சிவபக்தியுடன் விளங்கியது. பெண் குழந்தை வளர்ந்து மணவயதை அடைந்தாள். அவள் அன்னை ஆமைக்குக் பெண் தர மறுத்து விட்டு நல்ல வரனைத் தேடத் தொடங்கினாள்.

அதை அறிந்த ஆமை மகனின் அன்னை தோழியிடம் தாம் முன்பு செய்து கொண்ட ஒப்பந்தத்தை நினைவூட்டினாள். அதைக்கேட்ட பெண்ணின் தாய் அவளை இகழ்ந்து தகாத வார்த்தைகள் பேசி அவமானப்படுத்தி அனுப்பிவிட்டாள். தனது பெண் ணிற்குத் திருமணம் நிச்சயித்தாள்.

மனம் நொந்த ஆமையின் அன்னை இறைவனிடம் முறையிட்டு அழுதாள்.

அவளுக்கு இரங்கிய சிவபெருமான், ஒரு பூதத்தை அனுப்பி மணமகளைத் தூக்கி வரச் செய்து ஆமைக்கும் அவளுக்கும் திருமணம் செய்து வைத்தார். மணமகனான ஆமை கண்ணீர் விட்டு அவர் காலடியில் வணங்கியது. அவர் அதற்குஅழகிய வாலிப வடிவுடன் கூடிய மானுட தேகம் அளித்தார்.

திருமணஞ்சேரி ராஜகோபுரத்தில் இக்காட்சி சுதைச் சிற்பமாக அமைக்கப் பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பல்லி

பல்லிகள் காடுகளிலும் வீடுகளிலும் வாழ்பவை காட்டுப் பல்லிகள் அளவால் பெரியவை. வீட்டுப்பல்லிகள் சிறியதாக இருப்பதுடன் சுவர்களிலும் கூரைகளிலும் சுற்றித் திரிந்து கொண்டிருக்கும்.

பல்லி ஒலி எழுப்புவதை நல்ல சகுனம் என்று கொள்ளும் வழக்கம் நீண்ட காலமாக இருந்து வருகிறது. பல்லி விஷத் தன்மை கொண்டது. அதன் எச்சில், சிறுநீர் ஆகியவை உடல் மீது பட்டால் அங்கு கொப்புளமும் எரிச்சலும் உண்டாகும். அதனால் அதைக் கண்டு அஞ்சுவர் என்றாலும் அதன் உருவத்தைக் கோயில்களில் செதுக்கி வைக்கும் வழக்கம் உள்ளது.

சிதம்பரத்தில் பல்லீசுவரர் என்னும் சிவலிங்கம் திரு மூலட்டனார் தெற்குப் பிரகாரத்தில் தட்சிணாமூர்த்திக்கு அருகில் உள்ளது. இவர் இங்கு எழுந்தருளி யிருப்பதை தலமான்மியம் விரிவாகக் கூறுகிறது. அதன்படி......

கோதாவரி நதிக்கரையில் சோதிடன் ஒருவன் வாழ்ந்து வந்தான். மிகுந்த பொய்பேசி ஏராளமான பொருள் சேர்த் தான். பூர்வ புண்ணியத்தால் தலயாத்திரை வரும் போது சிதம்பரத்தில் வந்து மரணமடைந்தான்.அவன் மறுபிறப் பில் பல்லியாகப் பிறந்து சிற்சபையின் கொடுங்கைகளில் வசித்து வந்தான். அங்கு வரும் பக்தர்களைத் தரிசித்து வந்த புண்ணியத்தால் நடராசப் பெருமானைச் சிந்திக்கும் பேறு பெற்றான். நாட்கள் பல கழிந்தன.

அவனுடைய பக்திக்கு மெச்சிய பரமன் அவனை நோக்கி அழகனே வருக என்றார். அவனது பல்லியுருவம் நீங்கியது. அழகிய பொன்னுடல் பெற்று அழகனாய் நின்றான். பெருமான் அவனுக்கு வலிய கதாயுதத்தை அளித்து இன்று முதல் இத்தலத்தைக் காவல் புரிந்து வருக என்றார். அவருக்கு அர்த்த சாமத்தில் தாம்பூலமும் அளித்தார். அன்று முதல் அந்த அழகன் அர்த்தசாம அழகர் என்று அழைக்கப்படுகிறார். அர்த்தசாமத்தில் அவருக்குப் பூசை நடைபெறுகிறது. கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய குஞ்சிதாங்கரி ஸ்தவம் என்னும் நூலில் இவ்வரலாறு குறிக்கப்பட்டுள்ளது.

தட்சிணாமூர்த்தி வீற்றிருக்கும் கல்லால மரத்தில் பல்லியின் உருவங்கள் உள்ளன.

சோழர்கால துவாரபாலகர் திருமேனிகளில் இடம் பெற்றுள்ள மரத்தில் பெரிய பல்லிகளைக் காணலாம்.

உடும்பு

ஊர்வனவற்றில் ஒரு விலங்கு உடும்பு. இது பிடித்த பிடியை விடாது. இதனால் உறுதியான பிடியை உடும்புப் பிடி என்பர். போர்வீரர்கள் உடும்பின் இடுப்பில் வலிய கயிற்றைக் கட்டி அதை மதிற்சுவரின் மீது வீசுவர். அது மதிலின் உச்சியில் சென்று நன்றாகப் பிடித்துக் கொள்ளும். பிறகு கயிற்றை பிடித்துக் கொண்டு மதில் மீது ஏறிப் போரிடுவர். மதில்களின் மீது உடும்புகளின் உருவத்தைச் செதுக்கி வைப்பது வழக்கம்.

சிவபெருமான் பல சமயங்களில் உடும்பு வடிவுடன் அன்பர்களுக்குக் காட்சியளித்து அருள்பாலித்துள்ளார். காஞ்சிபுரத்தை அடுத்துள்ள தலம் மாகறல் ஆகும். ஒரு சமயம் இத்தலத்தில் இறைவன் உடும்பு வடிவத்தில் காட்சியளித்த பின் அங்கிருந்த புற்றில் ஓடி ஒளிந்தார். அவருடைய வயிற்றின் பின் பகுதியும் வாலும் சுயம்பு லிங்கமாக மாறிவிட்டன. அந்த லிங்கம் மாகறலீசுவரர் என்ற பெயரில் வழிபடப்படுகிறது.

இந்த லிங்கம் பருமன் குறைவாகவும் அடிபருத்து நுனி சிறுத்து நீண்டும் உள்ளது. குவளை சாத்தியே அபி ஷேகம் செய்யப்படுகிறது. மாகறம் என்ற சொல் உடும் பைக் குறிப்பதாகும்.

தொண்டை மண்டலத்து மற்றோர் பாடல் பெற்ற தலமான அச்சிறுபாக்கத்திலும் இறைவன் உடும்பாகக் காட்சியளித்தாகச் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. ஒரு சமயம் பாண்டியன் கங்கைக்குச் சென்று இவ்வழியாக திரும்பி வந்து கொண்டிருந்தான். அவனுடைய வழியில் பெருமான் பொன்னுடல் கொண்ட உடும்பாகத் தோன்றினார். அவன் அந்த உடும்பைப் பிடிக்க முயன் றான். உடும்பு ஓடி ஒரு புற்றில் ஒளிந்தது. அந்தப் புற்றை வெட்டும் போது சுயம்புலிங்கம் வெளிப்பட்டது. அதைக் கண்டு மகிழ்ந்து இறைவனுக்குக் கோயில் அமைத்தான் என்று கூறப்படுகிறது.

உடும்போடி ஆமை தவழ்ந்த நிலம்

கோயில்களில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்களிலும், செப்பேடுகளிலும் " உடும்போடி ஆமை தவழ்ந்த நிலம் உள்ளிட்டதாக" என்ற தொடர் அடிக்கடி கையாளப்படுகிறது. இது விளைநிலங்களுக்கு அருகில் உள்ள பயன்படுத்தாத நிலங்களைக் குறிக்கிறது என்பர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பன்றி வடிவில் வந்த பரமன்

பன்றிகள் சேற்றில் புரண்டும். பூமியை அகழ்ந்து கிழங்குகளைத் தோண்டித் தின்றும் வாழ்வன. கூட்ட மாகத் திரிவன. ஆதியில் மக்கள் பன்றி வடிவம் கொண்ட கடவுளரை வணங்கி வந்தனர் என்று ஆராய்ச்சியாளர் கள் கூறுகின்றனர்.

சிவபெருமான் பன்றி வடிவில் தோன்றித் தனது ஆலயத்தைக் காட்டியதை இராசிபுரத்திலும், பெண் பன்றியாக வந்து பன்றிக் குட்டிகளுக்குப் பாலூட்டியதை மதுரைத் திருவிளையாடற் புராணத்திலும் காண்கிறோம்.

திருமால் பன்றி வடிவுடன் இரண்டு முறை சிவபூசை செய்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.



ஆலயம் காட்டிய பன்றி

கடையெழுவள்ளல்களில் ஒருவரான வல்வில் ஓரி அரசாண்ட பகுதி இந்நாளைய இராசிபுரமும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுமாகும். இங்குக் கயிலாயநாதர் ஆலயம் சிறப்புடன் திகழ்கிறது.

ஒரு சமயம் வள்ளல் ஓரி, காட்டில் வேட்டையாடச் சென்றான். அங்கு அபூர்வமான வெண்மையான பன்றி யைக் கண்டான். அதைத் துரத்திக் கொண்டு சென்றான். அது வில்வமரத்தடியில் ஒரு புற்றில் புகுந்து ஒளிந்து கொண்டது. அவன் புற்றை அகழ்ந்தபோது சிவ லிங்கம் இருக்கக் கண்டான். சிவபெருமான் அசரீரியாக நாம் உம்மை ஆட்கொள்ளவே வந்தோம். இங்கே எமக்குக் கோயில் அமைப்பாய் என்றார். அங்கு அவன் சிறப்பான ஆலயம் அமைத்தான்.

இக்கோயில் கொடிமரத்தில் பன்றி, அரசனுக்குரிய கத்தி சூரிய சந்திரர் ஆகிய வடிவங்கள் தகட்டில் பதிக்கப்பட் டுள்ளன.

ஆலயத்தில் வல்வில் ஓரியின் திருவுருவம் அமைத்து வழிபடப்படுகிறது.

பன்றிக் குட்டிகளுக்குப் பாலூட்டியது

மதுரைக்கு அருகிலிருந்த காட்டில் பெரிய பன்றிக் கூட்டம் இருந்தது. அவற்றிற்குத் தலைவனாக ஒரு பன்றி இருந்தது. அதற்கு ஆற்றல் மிக்க பெண்பன்றி மனைவி யாக வாய்த்திருந்தது. அப்பன்றிகள் மிகுந்த சிவபக்தி யுடன் திகழ்ந்தன. அவற்றிற்குப் பன்னிரண்டு குட்டிகள் இருந்தன.

ஒரு சமயம் பாண்டியன் அக்காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். அனேக விலங்குகளை வேட்டையாடிக் கொன்றான். இறுதியில் பன்றிகளையும் கொன்றான். பன்றிக் கூட்டத்தின் தலைமைப் பன்றியான பெரும் பன்றி கொன்றான். அதையடுத்து அதன் இணையான பெண் பன்றியும் போருக்கு வந்தது. நெடும் போராட்ட திற்குப் பின்னர் அதுவும் கொல்லப்பட்டது. அது இறக்கும் போது சோமசுந்தரப் பெருமானே எனது குட்டிகளுக்கு அருள் வாய் என்று கூறிக்கொண்டே மாண்டது. நெடுநேரம் தாயைக் காணாது பன்றிக் குட்டிகள் தவித்தன. பசியால் பெருங்குரலெடுத்துஅழுதன. அக்குரல் கேட்ட பெருமான் அவற்றின் தாய்ப்பன்றியாக உருவம் தாங்கிப் பாலூட் டினார்.

அவற்றிற்கு ஞானம் அளித்து மனித வடிவம் அளித் தார். அவர்கள் தமக்குப் பன்றி முகமே இருக்கட்டும் என்று கூற, அப்படியே பன்றி முகமும் மனித உடலும் கொண்டவர்களாக அவர்களை மாற்றினார். அப்பன்னி ரு வரையும் பாண்டிய மன்னனுக்கு அமைச்சர்களாக் கினார்.

இந்த வரலாற்றைத் திருவிளையாடற் புராணம் பன்றிக்கு முலையீந்த படலத்தில் விரிவாகக் காணலாம்.

இனித் திருமால் பன்றி வடிவில் வழிபட்டுப் பேறு பெற்றதைக் காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூவராகம்

ஒரு சமயம் இரண்யாட்சன் என்பவன் பூமியைப் பாய்போல் சுருட்டி எடுத்துக்கொண்டு கடலுக்கு அடியில் ஒளித்து வைத்து விட்டான். திருமால் பன்றி வடிவுடன் கடலுக்கடியில் சென்று அவனைக் கொன்று பூமியை மீட்டு வந்தார். அந்த பன்றி அவதாரம் கோலவராகம் என்று கொண்டாடப்படுகிறது. சாதாரணமாகப் பன்றிகள் கருமை நிறம் கொண்டவை. ஆனால் திருமால் வெண் பன்றியாக வடிவு கொண்டு சென்றார் என்று புராணங் கள் கூறுகின்றன. அதையொட்டி அவர் சுவேதவராகர் என்று அழைக்கப்படுகிறார்.

இரணியாட்சனை அழித்த வெற்றியால் ஏற்பட்ட அகங்காரத்தால் அவர் ஆர்ப்பரித்து அலைந்து எல்லோரையும் துன்புறுத்தினார். எல்லோரும் அஞ்சி சிவபெருமானைச் சரணடைந்தனர். பெருமான் வராகத்தினைப் பற்றி அவருடைய கோரப்பற்களைக் (கொம்பு போன்றவை) பறித்துத் தமது மார்பில் அணிந்து கொண்டார். கர்வம் ஒழிந்த திருமால் தவம்புரிய ஒரு பிலத்துள் சென்று மறைந்தார்.

அந்த இடமே தேவாரத்துள் அரதைப் பெரும்பாழி என்று போற்றப்படும் தலமாகும். அரியினால் உண்டாக்கப்பட்ட பெரும்பாழி ஆனதால், இத்தலம் தமிழில் அரதைப் பெரும்பாழி என்றும், வடமொழியில் அரித்துவார மங்கலம் என்று அழைக்கின்றனர். வடமொழிப் பெயரே இன்று வழக்கில் உள்ளது. அவர் மறைந்த இடம் ஆலயத்தில் கருவறையில் சுவாமிக்கு அருகில் வட்டமான பாறையால் மூடப்பட்டுள்ளது.

நெடு நாள் அதனுள் தவமிருந்த திருமால் சிவனருள் பெற்றுத் தன் உலகம் சென்றார். அவருக்கு அருள்புரிந்த இறைவர் பாதாளேஸ்வரர் (பாதாளவரதர்) அம்பிகை அலங்காரவல்லி.

திருமால் வெண்பன்றி வடிவுடன் சிவபெருமானை வழிபட்டுப் பேறுபெற்ற மற்றோர் தலம் சிவபுரம் ஆகும். இத்தலம் கும்பகோணத்திற்கு அருகில் உள்ளது. இறைவன் சிவபுரநாதர் (பிரம்மபுரீசுவரர்) அம்பிகை சிங்காரவல்லி.

அவர் வராக வடிவுடன் வழிபட்ட தொண்டைநாட்டுத் தலம் செங்கண்மால் ஆகும். இத்தலம் திருமால் வராக ராக எழுந்தருளியிருக்கும் 108 திவ்யதேசங்களில் ஒன்றான திருவிடந்தைக்கு அருகில் உள்ளது.

திருவடி காணாத பன்றி சென்று வழிபட்டது

உலகத்தின் தொடக்கத்தில் யார் பெரியவர் என்று திரு மாலும் பிரம்மனும் தம்முள் சண்டையிட்டுக் கொண்ட னர்.அவர்களுக்கு இடையே சிவபெருமான் நெருப்பு வடிவமாக நின்றார். அந்த நெருப்பின் முடியைத்தேடிப் பிரம் மன் அன்னமாகப் பறந்தான். அவர் அடியைக் காணத் திருமால் பன்றி அவதாரம் கொண்டு பாதா ளத் தை அகழ்ந்து கொண்டு சென்றார். திருமால் எவ்வளவு முயன்றும் சிவபெருமானின் திருவடியைக் காண முடிய வில்லை. அவர் தனது தோல்வியை ஒப்புக் கொண்டார். அவ்வடிவுடன் சிவபூஜை செய்தார். சிவபெருமான் அந்த ஜோதி மயமான நெருப்பு லிங்கத்திலிருந்து வெளிப்பட்டு அவரைத் தழுவிக் கொண்டார். இதை உணர்த்தும் வகை யில் லிங்கோற்பவர் சிற்பங்களில் லிங்கத்தின் நடுவில் சிவபெருமானும் அவரது வலப்புறம் தோளுக்கு நேராக அன்னவடிவில் பிரமதேவனும் இடப்புறம் முழங்காலுக்கு அருகில் பன்றிவடிவிலான திருமாலும் அமைக்கப்பட்டுள் னர்,

செல்வத்தின் குறியீடுகளான விலங்குகள்

சமய வாழ்வில் செல்வம், யோகம், ஞானம் ஆகியவற்றிற்கு விலங்குகளைத் தொடர்பாக அமைக்கும் வழக்கம் உள்ளது. யானை, இடபம், பன்றி, சிங்கம் ஆகியன செல்வத்தின் குறியீடுகளாகும். பன்றிக்குடிபய வராகம் என்ற சொல் பொற்காசுகளுக்குப் பெயராக வழங்குகிறது. ஒருவன் தருமவழியில் ஈட்டி தரும வழியில் செலவிடும் செல்வத்திற்கு அடையாளமாக இடபம் கொள்ளப்படும். அதுபோன்று ஆற்றலைச் செலுத்து ஆனை வழியே ஈட்டிய அரச செல்வத்திற்கு சிங்கமும், கடுமையாக உழைத்து பெருமளவு சேர்த்து பிறருக்காக செலவிடும் செல்வத்திற்கு யானையும், உழைப்பின்றி முன்னோர் சொத்தில் சுகமாக வாழ்வதற்குரிய செல்வத்திற்குப் பன்றியும் அடையாளமாகக் காட்டப்பட்டுள்ளன. இவை நான்கையும் நான்கு திசைகளையும் நோக்கி அமைக் கின்றனர். மாமல்லபுரத்தில் ஐந்து ரதங்களுக்கு அருகில் மேற்கு நோக்கி இடபமும், வடக்கு நோக்கி சிங்கமும், தெற்கு நோக்கி யானையும், கடற்கரைக் கோயிலுக்கு அருகில் கிழக்கு நோக்கி பன்றியும் அமைக்கப் பட்டிருப்பதைக் காணலாம்.

மதுரையில் சிம்மக்கல், யானைக்கல் எனுமிடங்களில் முறையே சிங்கம், யானை ஆகிய வற்றின் கல் வடிவங்கள் உள்ளன. பன்றியும். இடபமும் மலை வடிவில் உள்ளனசெல்வத்தின் குறியுடாக மீன் பல இடங் களில் அமைக்கப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூனை

பூனை வீட்டுப் பிராணி. பலர் செல்லமாகப் பூனை வளர்க்கின்றனர். இதைத் தெய்வீக விலங்காகப் போற்றும் வழக்கமில்லை. புராணங்களில் ஓரிரு இடங்களில் மட்டும் பூனை போற்றப்படுகிறது.

ஒரு சமயம் கௌதம முனிவரின் மனைவியான அகல்யா தேவியைக் கண்டு மோகித்த இந்திரன் அவளை அடையப் பலவாறு முயன்றான். இறுதியில் ஒரு சேவல் வடிவம் கொண்டு இரவில் கூவினான். விடிந்து விட்டது என்று எண்ணிய முனிவர் ஆற்றுக்கு நீராடச் சென்றார். அவ்வேளையில் இந்திரன் அம்முனிவரின் வடிவுகொண்டு அவளிடம் சென்று இன்பம் துய்த்தான்.

முனிவர் தவறு நடந்ததை உணர்ந்து உடனே ஆசிரமத்திற்குத் திரும்பினார்அவ்வேளையில் இந்திரன் பூனை வடிவுடன் ஓடினான். அவர் அவனைப் பூனையாகும்படியும் உடம்பெல்லாம் யோனியாகும் படியும் சபித்தார். அவன் பூனை வடிவுடன் வழிபட்டுத் துயர் நீங்கினான்.

மாயூர புராணத்தில் பூனை வழிபட்டு முக்தி அடைந்த வரலாறு காணப்படுகிறது.விதர்ப்ப நாட்டை ஆண்டு வந்த ப்ருகத்ரதன் என்னும் அரசன் மிகவும் கொடுங்கோலன். அவன் இறந்த பின் நரகங்களில் கிடந்து வருந்தினான். மண் ணில் புழுவாக இருந்து துன்புற்றான். பின்னர் ஒரு பூனையாகப் பிறந்து பாரத்வாஜ முனிவரின் ஆசிரமத் தின் அருகிலுள்ள காட்டில் வசித்து வந்தான்.

அவனுக்குப் புரோகிதனாக இருந்து அவன் செய்த அடாத செயல்களுக்குத் துணையாக இருந்தவனும் பலகாலம் நரகத்தில் வேதனையை அனுபவித்தான். அவன் சிறிது புண்ணியம் செய்திருந்ததால் கிளியாகப் பிறந்து பாரத்வாஜ முனிவரின் ஆசிரமத்திலுள்ள மரத்தில் வசித்து வந்தான்.

ஒரு நாள் மேற் சொன்ன பூனை கிளியைப் பிடித்துக் கொண்டது. முந்தைய ஜென்ம நினைவுகள் வரப்பெற்ற கிளி, பூனையே என்னை விட்டுவிடு என்று வேண்டியதுடன் அந்தப் பூனைக்குப் பழம்பிறப்பையும் நினைவுபடுத்தியது. இவற்றின் உரையாடலைக் கேட்ட பாரத்வாஜ முனிவர் அவற்றிற்கு ஞான உபதேசம் செய்து மாயூரம் சென்று வழிபடும்படிக் கூறினார். அவை இரண்டும் அங்குச் சென்று இடப தீர்த்தத்தில் நீராடித் தெய்வ வடிவம் பெற்றன. மாயூர நாதரை நெடுநாள் வணங்கிய அவர்கள் இறைவன் அருளால் சுவர்க்கம் புகுந்தனர்.

புனுகுப் பூனை

புனுகுப் பூனை வழிபட்ட தலமான தனியூர். (மயிலாடுதுறையை அடுத்து) கூறை நாட்டிற்கு அருகிலுள்ளது. புராணம் இத்தலத்தைப் பாரிஜாதவனமென்றும் ஆலயத்தைப் புழுகீசம் என்றும் அழைக்கிறது. இறைவன் புழுகீசர் அம்பிகை சாந்த நாயகி.ஒரு காலத்தில் சிவபெருமான் இங்குப் பாரிஜாத மரத்தின் கீழ் சுயம்புலிங்கமாகத் தோன்றினார்.

அக்காட்டில் வாழ்ந்த புழுகுப் பூனைகள் தம் பெட்டைப் பூனைகளுடனும் குட்டிப் பூனைகளுடனும் பெருமானைக் கண்டன. அவற்றிற்குப் பெருமானை வழிபட வேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று. அருகிலிருந்த மரங்களில் இருந்து மலர் தளிர்களைக் கவ்விக் கொண்டு வந்து வழிபட்டன. அதனால் மகிழ்ந்த இறைவன் அவற்றிற்கு தெய்வ வடிவு அளித்தார். அவற்றின் பெயரால்பெருமான் புனுகீசர் என்ற பெயர் பெற்றார்.

புழுகு நெய் சொக்கர்

மதுரையில் எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரப் பெருமானுக்குப் புராணங்களிலும் சிற்றிலக்கியங்களிலும் அபிஷேகச் சொக்கர் என்றும், புழுகு நெய்ச் சொக்கர் என்றும் பெயர்கள் வழங்குகின்றன.(புழுகு எண்ணெய்- புழுகு நெய்)

எலி

எலி இறையருளால் பேறு பெற்ற தலம் வேதாரண்யமாகும். இங்கு ஓர் எலி ஆலயத்திலிருந்த விளக்கில் எண்ணெயைக் குடிக்க முயன்றது. அணையும் தருவாயிலிருந்த அந்த விளக்கின் திரி எலியின் மூக்கால் தூண்டப்பட்டு பிரகாசித்தது. அந்த புண்ணியத்தால் அது மறுபிறப்பில் மகாபலிச் சக்ரவர்த்தியாகப் பிறந்தது. பின்னர் ஒரு சமயம் அந்த சக்ரவர்த்தி மாணியாக வந்த திருமாலுக்கு மூன்றடி மண்தானம் செய்தார். பிறகு திருமாலால் பாதாளத்திற்கு அழுத்தப்பட்டு அதற்கு அரசனானார். இதனை விளக்கும் காட்சிகள் திருமாணிக்குழியில் புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

மயேந்திர பள்ளியிலும் எலி வழிபட்டுப் பேறு பெற்றுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முயல்

குறுவிலங்கான முயல் புதர்களில் வாழ்வது, முயலுக்குச் சிவாலயங்களில் தனிச்சிறப்பில்லை. முயல் நிலவில் வாழ்வதாகப் புராணங்கள் கூறுகின்றன. விதானங்களில் தீட்டப்பட்டுள்ள சந்திரனின் ஓவியங்களில் நடுவில் முயல் தீட்டப்பட்டிருப்பதைக் காணலாம்.

திருப்பாதிரிப்புலியூரில் முடக்கால் முயல் ஒன்று சிவபூசை செய்து பேறு பெற்றுள்ளது. இதைக் குறிக்கும் வகையில் தலவரலாற்றுக் காட்சியில் முயல் வடிவம் இடம் பெற்றுள்ளது.

இவ்வூர்த் தலபுராணத்தில் மணங்கர் என்ற முனிவரின் சாபத்தால் முடக்கால் கொண்ட முயல்வடிவமானார் என்றும் அவ்வடிவுடன் இங்கு வழிபட்டுப் பேறுபெற்றார் என்றும் கூறப்பட்டுள்ளது.

மான்



மான் அன்பின் சின்னமாகப் போற்றப்படுகிறது. அது லட்சுமியின் வடிவமாகும். திருமகளை மானின் பெயரால் ஹரிணி என்றழைக்கின்றனர்.மான் வேதத்தின் வடிவமாகவும் தர்மத்தின் வடிவமாகவும் போற்றப்படுகிறது.

சிவபெருமான் மானைத் தனது இடது கரத்தில் ஏந்தி இருக்கிறான். அது வேதத்தின் வடிவமென்று திருமுறைகள் கூறுகின்றன.

" வேதம் மான் மறியே" " " "

எனவரும் தொடர்களால் அறியலாம்.

சோமாஸ்கந்தர், சந்திரசேகர், பிரதோஷ நாயகர், மணக்கோலநாதர் முதலிய வடிவங்களில் பெருமான் தாவும் மானைத் தமது இடது மேல் கரத்தில் ஏந்தியிருப்பதைக் காணலாம்.

இதையொட்டி அவர் மானேந்தியப்பர் என்ற ழைக்கப்படுகிறார்.சிவசொருபமாக விளங்கும் மகேஸ்வரியும் மான் மழு ஏந்தியிருக்கிறாள்.

தஞ்சாவூர் மேலராச வீதியில் உள்ள கொங்கணேசத் திருக்கோயிலில் மானும் மழுவும் தாங்கிய மகேஸ்வரி " ஞானாம்பிகை" என்ற பெயரில் மூலத்தான அம்பிகையாகக் காட்சி தருகிறாள்.

சிவபெருமான் பிட்சாடனராகச் கோலங் கொண்டு பவனி வரும் வேளையில் மான் அவரைத் தொடர்ந்து வருகின்றது. பெருமான் வலது கையிலுள்ள புல்லை மான் தாவி உண்ண முயல்கிறது.

கங்காளர் வடிவிலும் மான்துள்ளித் தொடர்ந் தோடி வருகிறது. அதற்குக் கங்காளப் பெருமான் புல் அளித்துப் புரக்கின்றார்.

தட்சிணாமூர்த்தி வடிவங்களில் அவரைச் சுற்றி மான்கள் கூட்டமாக இருப்பதைக் காணலாம். சில சமயம் அவை இரண்டு மான்களாகவும் காட்டப்பட் டிருக்கும்.

திருமகள் மான் வடிவில் சிவபெருமானை வழிபட்ட தலம் திருமாந்துறையாகும். அவள் மான் வடிவில் துள்ளித் திரிந்த இடம் வள்ளி மலையாகும். அங்கு திருமால் தவம் செய்து கொண்டிருந்தார். துள்ளித்திரிந்து கொண்டிருந்த அவளைக் காதலோடு நோக்க அவள் கருவுற்றாள்.

கரு வளர்ந்து உரிய பருவத்தில் குழந்தை பிறந்தது. அவள் அதை வள்ளிக் கிழங்கை அகழ்ந்த குழியில் இட்டுவிட்டு மறைந்தாள். அந்தக் குழந்தையை நம்பி ராசன் என்ற வேட்டுவ மன்னன் எடுத்து வளர்த்தான். மங்கைப் பருவம் அடைந்த அவளைக் கண்டு முருகன் காதல் புரிந்து மணம் செய்துகொண்டான். வள்ளியை வேடமான் என்றும் தெய்வ யானையை வேழமான் என்றும் அழைக்கின்றனர்

தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் சித்திரைப் பெருவிழாவில் விநாயகப் பெருமான் பவனி வருவதற்கென மான் வாகனம் பயன்படுகிறது.

அம்பிகை, துர்க்கையாக வரும்போது மான்மீது ஏறிப் பவனி வருகிறாள். அதனால் அவளைப் பாய் கலைப் பாவை என்று அழைக்கின்றனர்.

சென்னைக்கு அருகில் மப்பேடு என்ற ஊர் உள்ளது. இது மான்கள் வழிபட்டு அழகிய கொம்புகளைப் பெற்ற இடம். இதனால் பெருமான் ச்ருங்கேசுவரர் என்று அழைக்கப்படுகிறார். (ச்ருங்கம் – கொம்புகள்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கழுதை

மனிதனின் சுமைகளை ஏற்றிச் செல்லப் பயன்படுத்தும் விலங்கு கழுதையாகும். இப்போதும் மலையக மக்கள் சுமைகளை மலைகளின் மீது ஏற்றவும் இறக்கவும் கழுதைகளைப் பயன்படுத்தி வருகின்றனர். முன்னாளில் போர்க் காலங்களில் உணவுப் பொருட்களையும், போர்த்தளவாடங்களையும் சுமந்து செல்ல இவற்றைப் பயன்படுத்தினர். சமுதாயத்தில் கழுதைக்குப் போதிய மரியாதை கொடுக்கப்படாததால் அவை வழிபட்ட தலங்களைப் பற்றிய விவரங்களையும் அதிகம் காண முடியவில்லை. ஓரிரு தலபுராணங்களில் மட்டுமே சில செய்திகள் உள்ளன.

மாகிஷ்பதி என்ற நகரை ஆண்டு வந்த சிங்கத் துவஜன் என்ற மன்னன் ஒரு முறை காட்டுக்கு வேட்டையாடச் சென்றான். நீண்ட நேரம் வேட்டையாடிய அவன் களைத்துச் சோர்ந்தான். அருகிலிருந்த முனிவரின் ஆசிரமத்திற்குச் சென்றான்.

அந்நேரம் அவர் தவத்திலிருந்ததால் அவனுடைய வரவைக் கவனிக்கவில்லை. தன்னை எதிர்கொண்டழைக்காததால் அவன் கோபித்து அவரை எட்டி உதைத்தான். தியானம் கலைந்து கண் விழித்த முனிவர் அவனு டைய அடாத செயலைக் கண்டு கோபித்து அறிவற்ற கழுதையாகும்படி அவனைச் சபித்தார்.

காட்டில் கழுதையாகத் திரிந்து கொண்டிருந்த அவனை ஒரு வெண்கலப் பாத்திர வியாபாரி கண்டு அடிமைப் படுத்தினான். அவன் மீது பாத்திரச் சுமைகளை ஏற்றி ஊர் ஊராக ஓட்டிச் சென்றான்.

ஒரு முறை மாயூரத்திற்கு வந்தான். அம்மண்ணில் புரண்ட கழுதைக்கு நல்லறிவு வந்தது. அது இடபத் தீர்த்தத்தில் மூழ்கி எழும் பொழுது மன்னனாக எழுந்தது. தன் தவற்றுக்கு வருந்திய அவன் மயூர நாதரை வணங்கினான். சிவபெருமான் அவனுக்குத் தெய்வ வடிவு நல்கி சுவர்க்கத்திற்கு அனுப்பினார்.

இதனை மாயூர புராணத்திலுள்ள கரமும், கழுகும் முக்தி பெற்ற படலத்தால் அறியலாம்,கரம் என்ற சொல் கழுதை யைக் குறிக்கும். திருக்கரபுரம் என்ற தலத்திலும் கழுதை பூசித்துப் பேறு பெற்றுள்ளது.

பாடல் பெற்ற தலமான கரவீரத்திலும் கழுதை வழிபட்டுச் சிவபதம் அடைந்ததென்பர்

குதிரை

குதிரை செல்வத்தின் அடையாளம் . குதிரை முகம் கொண்ட திருமால் வழிபட்டுப் பேறுபெற்ற தலம் திருவாரூரும், காஞ்சி கல்கீசமும் ஆகும். மகாலட்சுமி குதிரை வடிவில் வழிபட்ட தலம் மாந்துறை

திருமங்கலக் குடியில் சூரியன் குதிரை வடிவுடன் வழிபட்டுப் பேறுபெற்றான்.அயவந்தி ஆலயம் குதிரை பூசித்துப் பேறுபெற்ற ஆலயமாகும். (ஹயம்- குதிரை) குதிரையால் வணங்கப்பட்டதால் அத்தலம் அயவந்தி ஆனதென்பர். இறைவன் அயவந்தீசர். அம்பிகை இருமலர்க் கண்ணி.

குதிரை முகம் கொண்ட அரசகுமாரி ஒருத்தி முருகனையும் சிவனையும் இலங்கையிலுள்ள கதிர்காமத்தில் வழிபட்டதன் பயனாக அழகிய முகம் பெற்றாள் என்று சுப்பிரமணிய பராக்கிரமம் என்ற நூல் கூறுகிறது.

தாமிரபரணி ஆற்றங்கரையிலுள்ள நவகயிலாயங்களில் ஒன்றான முறப்ப நாட்டுச் சிவாலயத்திலும் குதிரை முகம் கொண்ட இளவரசி வழிபட்டு அழகிய முகம் பெற்றாள் என்று தலவரலாறு கூறுகிறது

ஒட்டகம் வழிபட்ட சிவன்



நெடிய கழுத்தைக்கொண்ட பாலைவன விலங்கு ஒட்டகமாகும். இதனை நெடுங்களம்என்று நிகண்டுகள் அழைக்கின்றன. நெடுங்களம் என்ற தலத்தில் ஒட்டகம் வழிபட்டதாக திரு.உ.வே.சாமிநாதய்யர் குறித்துள்ளார். இறைவன் நெடுங்களநாதர் (எ) நித்திய சுந்தரேசுவரர். அம்பிகை ஒப்பிலா நாயகி.காஞ்சிபுரத்திலும் ஒட்டகம் வழிபட்டுப் பேறுபெற்றதென்பர்.ஒரு சமயம் சனந்தனர் சாபத்தால் ஒட்டகமானார் என்றும், அவ்வடிவில் பூசை செய்து மேன்மை பெற்றார் என்றும் சிவமகாபுராணம் கூறுகிறது.

மதுரை மீனாட்சியம்மன் ஆலயம், காஞ்சி காமாட்சியம்மன் ஆலயம் முதலியவற்றில் ஒட்டகங்கள் வளர்க்கப்படுகின்றன. வீதியுலாவில் யானைகளும் ஒட்டகங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



சிங்கம்

விலங்குகளில் மிகவும் வலிமை வாய்தது சிங்கம். இதனை ம்ருகேந்திரன் என்பர். நல்லூரில் சிங்கம் வழிபட்டுப் பேறு பெற்றதென்பர். திலதைப் பதியில் சிங்கம் வழிபட்டதை மடங்கல் வந்து வழிபாடு செய்யும். திலதை மணி முத்தமே என்று திருஞான சம்பந்தர் அருளிச் செய்துள்ளார். மதிமுத்தம் என்பது ஆலயத்தின் பெயர். இறைவர் முத்தீசர். அம்பிகை பொற்கொடியாள்.

திருவாலங்காட்டு இறைவனைத் தேவர் சிங்கம் என்று போற்றுகின்றனர்

கரடி

கரடிஇனத்தில் தோன்றிய அரசன் ஜாம்பவான். சீதையை மீட்க இராமருக்குத் துணைநின்றவன் .சிறந்த சிவ பக்தனான இவன் அனேக இடங்களில் சிவபூசை செய்துள்ளான். அவற்றில் திருஉசாத்தானம் (கோயிலூர்), திருத்தினை நகர் முதலிய தலங்கள் குறிப்பிடத் தக்கன. திருத்தினை நகரில் இவன் அமைத்த தீர்த்தம் ஜாம்பவ தீர்த்தம் என்றழைக்கப் படுகிறது. திருஉசாத்தானத்தில் ராமர் பூசை செய்த போது அவருடன் ஜாம்பவானும் பூசை செய்து மந்தி ரோபதேசம் பெற்றான். தேவாரத்தில் ராமர், இலட்சு மணர், சுக்கிரீவன், அனுமன் ஆகியோருடன் ஜாம்ப வான் வழிபட்டது குறிக்கப் பட்டுள்ளது.

சங்கர நாராயணர் கோயிலிலும் கரடி வழிபட்டுப் பேறு பெற்றதாகக் கூறுவர்.

சரபம்

இரண்டு தலைகளையும் எட்டுக் கால்களையும் கொண்ட மிகுந்த வலிய பறவை சரபமாகும். எட்டு யானைகளை எட்டு கால்களாலும், இரண்டு யானைகளை அலகுகளாலும் பற்றி எடுத்துக் கொண்டு விரைந்து பறக்கும் ஆற்றல் உள்ளது.

இதனைப் பேரண்டப் பட்சி என்பர். இரணியனை வதம் செய்த பிறகு அட்டகாசம் புரிந்த நரசிம்மரைச் சிவபெருமான் சரபப் பறவை வடிவம் தாங்கி தூக்கி எறிந்து தண்டித்து அகங்காரத்தைப் போக்கினார் என்று சில புராணங்கள் கூறுகின்றன.திரிபுவனம் கம்பஹரேஸ்வரர் (நடுக்கம் தீர்த்த நாதர்) ஆலயத்தில் பெருமான் சரப மூர்த்தியாக எழுந்த ருளியுள்ளார்.

பேரண்டப் பட்சி வடிவிலான பதக்கங்கள் பெருமானுக்கு அணிவிக்கப்படுகின்றன.சாளுக்கியர்கள் இதனை அரசுச் சின்னமாகப் பயன்படுத்தினர். இவர்கள் அமைத்த ஆலயங்களில் சரபப் பட்சியின் உருவங்களைப் புடைப்புச் சிற்பங்களாக வடித்தனர்.காலப்போக்கில் கலைஞர்கள் சரபர் வடிவங்களை பலவிதமான வடிவங்களாக அமைத்தனர். சிங்கமுகம், நாரை அலகு, புலிக்கால், பருந்து சிறகு, நரியின் வால் முதலியவற்றின் கலவையாகக் கூட சரபரைப் படைத்துள்ளனர்.

சரபப் பட்சி வாகனம்

பெண்தெய்வகளுக்குச் சரபப் பட்சிகளை வாகனமாக அமைக்கும் வழக்கம் அபூர்வமாக காணப்படுகிறது. புராணங்கள் கூறுவது போல் இரண்டு தலை எட்டு கால்களுடன் இந்தச் சரபத்தை அமைக்காமல் கருடன் அதிகார நந்தி முதலியவற்றைப் போல் மனித வடிவத்துடன் உருவாக்கியுள்ளனர். சிவாலயங்கள் சிலவற்றில் இது புடைப்புச் சிற்பமாகக் காணப்படுகிறது.

சென்னை கொத்தவால்சாவடியில் அமைந்துள்ள கன்னிகா பரமேஸ்வரி ஆலயத்தில் வெள்ளியாலான கலைநயம் மிகுந்த சரபி வாகனம் உள்ளது. இவள் ஆறு கைகளும் இரண்டு கால்களும் கொண்டவளாக விளங்குகிறாள். தோளையொட்டி விரிந்த பெரிய இரு சிறகுகள் உள்ளன. முன்கரங்களை முன்னே நீட்டித் தோளில் அமர்ந்துள்ள அம்பிகையின் பாதங்களைத் தாங்குகிறாள். பின் நான்கு கரங்களில் மேலேயுள்ள இரண்டை உயரத் தூக்கி தனது ஆற்றலைக் காட்டுகிறாள். மற்றக் கரங்களால் குளத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் யானைகளைப் பற்றித் தூக்குகிறாள். மண்டியிட்டு அமர்ந்துள்ள கோலத்தில் உள்ள இந்த வாகனத்தில் கன்னிகா பரமேஸ்வரி குண்டம் இறங்கும் விழாவின்போது பவனி வருகிறாள்.நடைமுறையில் இதனைச் சரபி வாகனம் என்றழைக்கின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கீரி (நகுலம்)

மிகுந்த கூச்சம் உள்ள விலங்கு கீரி, இதைக் கீரிப்பிள்ளை என்பர்.செல்வத்தின் குறியீடான ,இது, மகாலட்சுமியுடனும் குபேரனுடனும் காணப்படும்.முற்பிறவியின் சாபத்தால் தமது சீர் குழாத்துடன் கீரியாகிவிட்ட முனிவர் இலங்கையில் ஒரு மலையில் வசித்துவந்தார். பூர்வ புண்ணியத்தால் அவர் தமது கூட்டத்துடன் அங்கிருந்த சிவலிங்கத்தை வழிபட்டு வந்தார்.சிவபெருமான் அவர்களுக்கு அருள்புரிந்தார். அவர்கள் மோட்சமடைந்தனர். அந்த மலை கீரிமலை என்றும் அந்தச் சிவலிங்கம் நகுலேசுவரர் என்றும் அழைக்கப்படுகின்றன. இது ஈழ நாட்டின் ஐம்பெரும் சிவாலயங்களில் ஒன்றாகும்.

நரி வழிபட்ட சம்புகேசுவரர்

விலங்குகளில் விசித்திரமானது நரி. மிக வும் தந்திர புத்தியுள் ளது.எவருக்கும் அடங்கி அஞ்சி நடக்காதது. மந் தி ரதந்திரங்களுக்கும் கட்டுப்படாதது. அத னால் அபூர்வ மாகவே அதைச் சமய உலகில் காண்கிறோம். நரிகளி ன் பெயரால் நரிக்குடி, நரிமணம் சம்புபுரம் முதலிய ஊர்கள் உள்ளன.

இறைவன் மாணிக்கவாசகர் பொருட்டு நரிகளைப் பரிகளாக்கிப் பாண்டிய மன்னரிடம் அவற்றை அனுப் பினார். இரவு அவை தமது உண்மை வடிவை எடுத்து அங்கி ருந்த குதிரைகளைக் கடித்து விட்டு காட்டுக்கு ஓடிவிட்டன. இதை நினை வூட்டும் வகையில் மதுரை யில் நரியைப் பரியாக்கிய திருவிளை யாடல் பெருந்திரு விழாவின் போது நரிகளை (கூண்டில் அடைத்து) இறைவன் முன் கொண்டு நிறுத் தும் ஐதீகக் காட்சி நடத்தப் படு கிறது. இது ஆவணித் திருவிழாவில் நடைபெறுவதாகும்.



மாயூரத்தில் நரி முக்திபெற்றது

அந்தணர்களுக்குப் பொருள் தருவதாகக் கூறி வேலை வாங்கி அவர்களை ஏமாற்றிய பாவத்தால் ஒருவன் மறுபிறப்பில் சுடுகாட்டு நரியாகப் பிறந்து பிணங்களைத் தின்று வாழ்ந்து வந்தான். புண்ணிய வசத்தால் அந்த நரி காசிப முனிவரைப் பணிந்தது. அதன்மீது பரிவு கொண்ட முனிவர் அதை கௌரி மாயூ ரத் திற்கு அழைத்துச் சென்றார். அங்கு இடப தீர்த்தத்தில் மூழ்கச்செய்து மாயூரநாதனை வணங்கச் செய்தார். அவனுடைய விலங்கு வடிவம் நீங்கியது. முனிவரை வணங்கி தேவவடிவுடன் தெய்வ உலகை அடைந் தான் (மாயூர புராணம்).

அன்பின் வரகுண பாண்டியன் என்று போற்றப்பட்ட வரகுண பாண்டியர் மிகுந்த சிவபக்தர். ஒரு சமயம் அவர் ஊரை ஒட்டி இருந்த காட்டிற்குச் சென்றார். அங்கு நரிகள் கூட்டமாக ஊளையிட்டுக் கொண்டி ருந் தன. அரசருக்கு அவை ஒன்று கூடி, சிவநாமத்தை ஒலிப்பதாகத் தோன் றியது. அவற்றிற்குப் பட்டாடை அணிவித்து கழுத்தில் முத்தா ரங்களைப் பூட்டினர். திருவிடைமருதூர்ப் புராணத்தில் இது குறிக்கப்பட்டுள்ளது.

நரியை வடமொழியில் சம்பு என அழைப்பர். விதி வசத்தால் நரிவடிவம் கொண்ட ஒரு முனிவன் வழிபட்ட லிங்கம் சம்புகேசுவரர் என்று அழைக்கப்படுகிறது. இத்தகைய லிங்கமொன்று காசியில் உள்ளது.

நரி பரி வித்தை

நரி தந்திரமும், சுயநலமும் மிக்கது. இதற்கு நேர் எதிரிடையான குணத்தைக் கொண்டது. குதிரை, போர்க்களத்தில் தலைவனுக்காக தன் உயிரையும் தரும். தன் தலைவன் போர்க்களத்தில் மயங்கிவிட்டால் அவனை பத்திரமாகச் சுமந்து களத்திற்கு வெளியே வந்துவிடும். சாதாரண நிலையில் மனித மனம் நரியைப் போன்றது. பேராசையும் சுயநலமும் கொண்டது. தந்திரமான முறையில் மற்றவர்களுக்குத் துன்பம் தந்து மகிழ்வது. அந்த மனத்தைச் சிவபக்தி, அடியார் நடுவிருத்தல், முதலிய நல்ல பழக்க வழக்கங்களாலும், ஒழுக்கத்தினாலும் மேன்மைப் படுத்திவிட்டால்,மேன்மை அடைந். துவிடும் எனினும்,இது இறைவனருள் இருந்தால் மட்டுமே கைகூடும்.

தேவாரத்துள் நரியைக் குதிரை செய்வானும், நரகரைத் தேவு செய்வானும் என்று அப்பர் சுவாமிகள் குறிப்பது இதுவேயாகும். கொடிய செயல்களைச் செய்து அதன் பயனால் துன்பத்துடன் நரகத்தில் இருப்பவர்கள். புண்ணியம் பெற்று தேவகணங்களாக மாறுவது இறையருளால் மட்டுமே நிகழ்வதாகும். அதனால் அப்பர் சுவாமிகள் இவ்விரண்டையும் ஒரே வரியில் எடுத்தோதினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குரங்குகள் செய்த வழிபாடு

மனிதன் செய்யும் செயல்களைக் கூர்ந்து கவனித்து அவ்வாறே திரும்பச் செய்பவை குரங்கு கள். அவை மனிதனைப் போல் கை, கால் அமைப்புகளைப் பெற்றுள்ளன. பழக்கி வைத்தால் புரிந்து கொண்டு சொன்னதைச் செய்யும் ஆற்றல் அவைகளுக்கு அமைந்துள்ளது.

சோலைகளிலும், காடுகளிலும் வாழ்ந்த குரங்குகள் முனிவர்களும் அறவோர்களும் செய்த சிவலிங்க வழிபாடுகளைப் பார்த்து உணர்ந்து பின்தாமே திரும்பத் திரும்பச் செய்து அதன் பயனாக மேன்மை பெற்றன. குரங்குகளின் பெயரால் வடகுரங்காடுதுறை, தென்குரங்காடுதுறை, குரக்குத்தளி, குரக்குக்கா குரங்கணில் முட்டம் என்ற சிறப்புமிக்க சில தலங்கள் உள்ளன.

குரங்கு அரசர்களான வாலி, சுக்ரீவன் ஆகியோர் பெருமானை வழிபட்டுப் பேறு பெற்றுள்ளனர். தென் குரங்காடு துறையிலும், குரக்குத் தளியிலும் சுக்ரீவன் வழிபட்டான். கொங்கு நாட்டு வைப்புத் தலமான குரக்குத் தளியிலுள்ள இறைவன் சுக்ரீவனின் பெயரால் சுக்ரீவே சுவரர் என்று அழைக்கப்படுகிறார்.

அவனுடைய அண்ணன் வாலி வடகுரங்காடு துறை, குரங்கணிமுட்டம் முதலான தலங்களில் சிவவழி பாடு செய்துள்ளான். அவன் பெயரால் இறைவன் வாலீ சுவரர் என்றழைக்கப்படுகிறார்.

இவர்கள் இருவரும் கிஷ்கிந்தையின் அரசர்களாவர். இதில் சுக்ரீவனுக்கு அமைச்சனும், ராமபிரானின் சேவகனுமான அனுமனும் அனேக இடங்களில் சிவலிங்கம் அமைத்து வழிபட்டான். இவன் வழிபட்ட லிங்கங்கள் அனுமீசர் என்று அழைக்கப் படுகின்றன. இவன் சிவஅம்சமா கத் தோன்றியவன் என்று சிலர் கூறுவர். காசி, இராமேசுவரம், காஞ்சி முதலிய தலங்களில் இராமருடன் இவர் கள் சிவவழிபாடு செய்ததுடன் தத்தம் பெயர்களால் சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்துள்ளனர்.

திருமுறைகளில் வாலி, சுக்ரீவன், அனுமன், நீலன் ஆகியோர் வழிபாடு செய்தது குறிக்கப் பட்டுள்ளது.

சுக்ரீவனின் மந்திரிகளான நளன், நீலன் முதலான வானரர்களும் சிவ வழிபாட்டில் திளைத்தவர்களாவர். சுக்ரீவன் தென்குரங்காடு துறையில் சிவ பூசை செய்தபோது நீலனும் நலனும் அருகிலுள்ள திருநீலக்குடி யில் வழிபாடு செய்துள்ளார்கள் .

முற்பிறப்பில் குரங்காக இருந்து சிவராத்திரியில் வில்வ இலைகளைச் சிவபெருமான் மீது உதிர்த்த காரணத்தால் மறுபிறவியில் அரசனானவன் முசுகுந்தன். இவன் பெருமானிடம் முசு(குரங்கு) முகத்தை வேண்டிப் பெற்றனன் என்பர்.இந்திர லோகத்திலிருந்த தியாகராசரைப் பூமிக்குக் கொண்டுவந்து திருவாரூரில் எழுந்தருளச் செய்தவன் இவனே. இன்னும் அனேக குரங்குகள் சிவவழிபாடு செய்து மேன்மை பெற்றது பல தலபுராணங்களில் கூறப்பட்டுள்ளது.

நாய்

நாயைச் சமயச் சடங்குகளின் போற்றும் வழக்கமில்லை. அது விலக்கப்பட்ட விலங்கு என்று கூறுவர். என்றாலும் சிவபெருமான் வைரவ வேடத்தில் வரும்போது நாயை வாகனமாகக் கொண்டிருக்கின்றார். ஆலயங்களில் வைரவரை நாய் வாகனத்துடன் அமைத்திருக்கின்றனர்.

இறைவன் அருச்சுனனுக்கு அருள வேடனாகச் சென்றபோதும், சோமாசி மாற நாயனாரின் யாகத்திற்கு நீச வடிவம் கொண்டு சென்ற போதும், வேதங்கள் நாய் வடிவம் கொண்டு அவருடன் சென்றன என்று சமய நூல்கள் கூறுகின்றன.

தேவாரத்துள் பெருமான் வேடுவனாய் நாயுடன் சென்ற காட்சி பல பாடல்களில் குறிக்கப்பட்டுள்ளது. அவர் நாயுடன் வருவதை, ஞானசம்பந்தர், காடிடை கடிநாய் கலந்து உடன் சூழ கண்டவர் வெருஉற வேடுடைக் கோல விகிர்தர் என்று குறித்துள்ளார். பல்லவர்கள் தாங்கள் அமைத்த கங்கை அவதரண சிற்பத்தில் ஒரு நாயையும் அமைத்துள்ளனர். இராமகிரி வைரவர் ஆலயத்தில் நாய் படிமங்களைச் செய்து வைத்து பிரார்த்தனைகளை செலுத்துகின்றனர். கண்ணப்பர் சிவவழிபாடு செய்யும் காட்சிகளில் நாயும் காட்டப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புருஷாமிருகம்

புருஷாமிருகம் இடுப்பிற்குமேலே மனிதனும் இடுப்பிற்குக் கீழே புலி வடிவாகவும் இருப்பதுடன் நீண்ட சிறகுகளும் கொண்டது. வலிமை மிக்கது. ஓயாது சிவபூசை செய்து கொண்டிருப்பது. வானலோகத் திலிருந்து அது சிவலிங்கத்தைக் கொண்டு வந்து மழபாடியில் வைத்து வழிபட்டுக் கொண்டிருக்கிறது என்பர். இதை விளக்கும் புடைப்புச் சிற்பங்கள் அக்கோ யிலில் உள்ளன.

பாண்டி நாட்டிலுள்ள சிவாலய ஓட்டத் தலங்கள் பன்னிரண்டிலும் புருஷாமிருகம் சிவபூஜை செய்வ தாகப் புராணங்கள் கூறுகின்றன. மதுரை, திருநெல் வேலி முதலிய இடங்களில் பெரிய தூண் சிற்பங்களாக புருஷாமிருகத்தைக் காணலாம். இது பீமனைப் போரிட்டு வென்றது என்பர்.

பெரிய ஆலயங்களில் இறைவன் வீதியுலா வரப் புருஷாமிருக வாகனம் உள்ளது. இதில் உள்ள புருஷன் நீண்ட தாடியுடன் சடையை எடுத்துக் கட்டியுள்ளார். கைகளில் மணியும் தீபாராதனைத் தட்டும் உள்ளன. இதனை ஒத்ததாக அசுர மிருக வாகனமும் உள்ளது.

மாணிக்க வாசக சுவாமிகள் அவதரித்த திருவாத வூரில் உள்ள ஏரியின் நான்கு புறங்களிலும் பெரிய கல் திருமேனிகளாக நான்கு புருஷா மிருகங் கள் நிலைப் படுத்தப் பட்டுள்ளன. மனிதமுகமும் சிங்க உடலும் கொண்ட புருஷா மிருகச் சிற்பங்கள் இரண்டு சிதம்பரம் நடராஜர் ஆலயத்தில் உள்ளன.

எருதாகவும் - எருமையாகவும் வந்தருளிய பரமன்

அம்பிகை தவம் செய்த கேதாரத்தில் ஒருமுறை பாண்டவர்களுக்கு எருமை வடிவில் காட்சியளித்த சிவபெருமான் ஓடி பெரிய பிலத்திற்குள் புகுந்தார். பீமன் உடன் அவருடைய வாலைப் பிடித்து இழுக்க அவருடைய பின்பகுதி சுயம்பு லிங்கமாகி விட்டது. அதையே கேதாரீசுவரர் என்று வழிபட்டு வருகின்றோம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருச்சுழியலில் வணங்கிப் பயணத்தைத் தொடர்ந்தபோது, சிவபெருமான் காளை வடிவுடன் தோன்றினார். அந்தக் காளையைச் சுந்தரர் பின்தொடர்ந்தார். பெருமான் காளையார் கோயிலுக்குள் சென்று மறைந்தார். சுந்தரர் மகிழ்ந்து " தொண்டர் " என்ற பதிகத்தைப் பாடினார். அத்தலம் காளையார் கோயிலென்றும், இறைவனின் பெயர் காளை யப்பர் என்று இன்றும் வழங்கப்படுகின் றது.

வழிபடப்படும் விலங்குகளும் பறவைகளும்

இறைவன் பறவைகள் விலங்குகள் வடிவில் தோன்றி அன்பர்களுக்கு அருள்பாலித்ததையும் ஞானம் பெற்ற பறவைகளும் விலங்குகளும் இறைவனை வழிபட்டுப் பெறுபெற்றதையும் குறித்துப் போற்றும் வகையில் ஆலயங்களில் பறவைகள், விலங்குகள் ஆகியவற்றின் திருவுருவங்கள் அமைத்து வழிபடப்படுகின்றன.

மயிலாடுதுறையில் நடராசருக்கு நேர் எதிரே இறைவன் ஆண் மயிலாகவும், அம்பிகை பெண் மயிலாகவும் (உலோகத் திருமேனிகளில்) காட்சியளிக்கின்றனர். அம்பிகையின் இருபுறமும் சரஸ்வதியும் லட்சுமியும் சேடியராக மயில் வடிவில் உள்ளனர். ஐப்பசி மாதம் நடைபெறும் பெருந்திருவிழாவில் ஓர் அங்கமாக மயிலம்மை பூசை கொண்டாடப்படு கிறது. அப்போது இம்மயில்களை அலங்கரித்து பல்லக்கில் வைத்து வீதியுலா காண்கின்றனர்.

மயிலாப்பூரில் வெள்ளியாலான மயிலும் சிவலிங்கமும் உள்ளன. பங்குனி உத்திர நாளில் அம்பிகை மயில் வடிவில் சிவனைப் பூசிக்கும் ஐதீகக் காட்சியில் இவை வைக்கப்பட்டுப் பூசிக்கப்படுகின்றன. நவராத்திரியின்போதும் மயிலுக்கும் சிவலிங்கத்திற்கும் பூசை நடைபெறுகிறது. திருநாரையூரில் நாரையின் உலாத்திருமேனி உள்ளது. இதனை உலாவரச் செய்து நாரைக்கு முக்தி கொடுத்த காட்சி நடத்தப்படுகிறது.

காளத்தி ஆலயத்தில் வழிபட்டுப் பேறுபெற்ற சிலந்தி, பாம்பு, யானை ஆகியவற்றின் உலாத் திருமேனிகள் சோமாஸ்கந்தர் சந்நிதியில் உள்ளன. ஐதீகக் காட்சி விழாவில் இவை உலாவரச் செய்யப்படுகின்றன.

இப்படி சில ஆலயங்களில் விலங்கு, பறவைகளின் திருவுருவங்கள் மூலவராகவும், உலாத் திருமேனியாகவும் அமைத்து வழிபடப்படுகின்றன. சிறப்பு நாட்களில் இவை வீதியுலா காண்கின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விசித்திரப் பறவை விலங்குகள்

பறவைகளும் விலங்குகளும்கலந்து விசித்திரக் கலவையாகத் தோன்றியுள்ள அபூர்வப் பறவை விலங்குகளைப் புராணங்களில்காண்கிறோம். இவை கூரிய நகங்கள் அசாத்திய வலிமை கொண்ட விலங்கு அல்லது பறவை உடல், இறக்கைகள், தோகைஆகியவற்றுடன் விளங்குவதாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

வானுலகில்காமதேனுவும், பூவுலகில் யாளியும், பாதாளத்தில் மகரமும் விசித்திரக் கலவை விலங்குப் பறவைகளாகும்.

வானுலகில் வாழும் காமதேனு பெண்முகம், பசுவுடல், மயில் தோகை, அகன்று நீண்ட சிறகுகள் கொண்ட தெய்வீகப் பசுவாக இருக்கிறது. இது பூவுலகிற்கு வந்து பல இடங்களில் சிவபூசை செய்துள்ளது. இதன் பெயராலும், இவற்றின் கன்றுகளின் பெயராலும் இறைவன் தேனுயீசர், தேனுபுரீசர், பட்டீசர், சபளீசர், விமலீசர் முதலான பெயர்களில் விளங்குகிறார்.

பூவுலகில் கடுங்கானத்திடையில் வாழ்வதாகக் கருதப்படும் யாளி நீண்ட துதிக்கையுடன் சிங்கமுகம் புலி உடல், நீண்ட சிறகுகள் கொண்ட வலிமையான விலங்கு. இவை சிவபூசை செய்த தலங்களைப் பற்றிய விவரங்களை அறிய முடியவில்லை.

தில்லையாளி, கேதாரம் முலிய தலங்களில் யாளி பூசித்ததாகத் தமிழ்த்தாத்தா உ.வே.சா. குறித்துள்ளார்.

ஆலயங்களில் தூண் சிற்பங்களாக யாளிகளை அமைத்துள்ளனர். இவை பின்கால்களை ஊன்றி முன் கால்களைத் தூக்கி நீட்டித் தாவிப் பாயும் நிலையில் தன் துதிக்கையால் யானையைப் பற்றித் தூக்குவதாக அமைந்துள்ளன. தேர் சிற்பங்களிலும் யாளிகள் சிறப்பிடம் பெற்றுள்ளன. இவை கூட்டமாக வாழ்பவை. எனவே தூண்களிலும் தேர்களிலும் வரிசையாக இவற் றை அமைக்கின்றனர். இவை ஆற்றலையும் அழகையும் வெளிப்படுத்துபவை.பெரிய ஆலயங்கள் அனைத்திலும் அழகிய கம்பீரமான யாளி வடிவங் களைக் காணலாம். சுவாமியின் பீடங் களிலும் யாளிகளை அமைத்திருக் கின்றனர்.

பெருந்திருவிழாவில் யாளி வாகனத்தில் அமர்த்தி சுவாமியை உலாக் காண்கின்றனர். அனைத்துச் சிவாலயங்களிலும் பெரிய கம்பீரமான யாளி வாகனங்கள் உள்ளன.

பாதாளத்தில் கடலுக்கடியில் வாழ்பவை மகர மீன்களாகும். இவை நீண்ட துதிக்கையுடன் சிறகுகளும் முதலை உடலும், சிங்கமுகமும், அன்னத் தோகையுடன் இருப்பவை. இவற்றைச் செல்வத்தின் அடையாளமாகக் கூறுவர். வாயில்களில் அமைக்கப்படும் தோரணங்களில் மகர மீன்களை அமைப்பர். அவை மகர தோரணங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

சுவாமியின் பிரபைகளின் மேலே யாளி முகங்களும், வலப்புறமும் இடப்புறமும் மகரங்களையும் அமைக்கின்றனர். இவை செல்வம், அதிகாரம், ஆற்றல் ஆகியவற்றைக் குறிக்கும் அடையாளங்களாகும்.

சிவனுடைய ஆணையை மீறியதால், நந்தி தேவர் மகர மீனாகிக் கடலில் திரிந்தார் என்று திருவிளையாடற்புராணம் கூறுகிறது. கங்காதேவியும், காங்கேயன் கோலத்தில் முருகப் பெருமானும் மகர வாகனத்தில் பவனி வருகின்றனர். வருணன் செல்வச் செழிப்புமிக்க மகராலயத்தில் வாழ்கிறான் என்று புராணங்கள் கூறும்.

ஆடானை அப்பர்

பாண்டி நாட்டுப் பழம்பதிகளில் ஒன்று திரு ஆடானை. இங்கு சிவபெருமான் ஆதிரத்தினேசுவரராகவும், அம்பிகை அம்பாயியான சினேகவல்லியாகவும் வீற்றிருந்து அருள்பாலித்து வருகின்றனர்.

ஒரு சமயம் வருணனுடைய புதல்வியான வாருணி துருவாச முனிவர் சாபத்தால் ஆட்டுத்தலையும் யானை உடலும் கொண்ட விசித்திர வடிவம் பெற்றாள். அதனால் துன்புற்ற அவள் இத்தலத்தில் வழிபட்டுப் பேறு பெற்றாள். அதனால் இத்தலம் ஆடானை என்று அழைக்கப்படுகிறது. அவள் தெய்வ வடிவுபெற்று வழிபட்ட திருத்தலமும் இதுவேயாகும். ஆலய முகப்பில் ஆடானையாக அவள் சிவலிங்கத்தை வழிபடும் காட்சி சுதைச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது.

ஏகாதச உருத்திரர்களில் ஒருவர் அஜகஜேஸ்வரர் . இவரை ஏகபாதர் என்றும் கூறுவர். ஆட்டு முகமும் ஒற்றை யானைக் காலும் கொண்டவர். இவர் சிவபூசை செய்த தலமும் ஆடானை என்பர்.

அருள்மிகு இளங்கிளி அம்பிகை உடனாய பறவைப் பெருமான்
அருளினால் எல்லோரும் எல்லாமும் பெற்று இனிது வாழ்க!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

திருச்சிற்றம்பலம்

ஆனைக்கு அருள் செய்த அண்ணலே போற்றி ! ஐராவதம் தொழும் அன்பனே போற்றி போற்றி!!



ஸ்ரீஐராவதேசுவரர்

இறைவனின் படைப்பில் வலிமையும், ஆற்றலும் தெய்வீகமும் நிறைந்த மாபெரும் விலங்குகளில் முதன்மை பெற்றவை யானைகள். அனைத்து தெய்வங்களும் யானைகளை வாகனமாகக் கொண்டுள்ளன. மக்கள் பசுக்களை லட்சுமியாகப் போற்றுவதைப் போல யானைகளை விநாயகரின் வடிவமாகப் போற்றுகின்றனர்.

இறைவன் உலகையும் உயிர்த்தொகுதிகளையும் படைத்தபோது ஓங்காரத்திலிருந்து யானைகளை உண்டாக்கினார் என்பர்.

யானைகளில் உயர்ந்ததாக மதிக்கப்படுவது ஐராவதம். ஆதியில் சிவபெருமானால் படைக்கப்பட்டு இந்திரனுக்கு அளிக்கப்பட்டது. பின்னர் துருவாச முனிவரின் சாபத்தால் பாற்கடலில் வீழ்ந்து மறைந்தது. நெடுங்காலத்திற்குப் பிறகு தேவர்களும் அசுரர்களும் ஒன்றுகூடிப் பாற்கடலைக் கடைந்தபோது, காமதேனு, கற்பகவிருட்சம், மகாலட்சுமி ஆகியோருடன் மீண்டும் வெளிப்பட்டது.

தேவர்களின் தலைவனாகிய இந்திரன் அதனை வாகனமாக ஏற்றுக் கொண்டான். இதனுடன் தோன்றிய யானைகளும் இந்திரலோகத்தை அலங்கரிக்கின்றன. மிகுந்த சிவபக்தி நிறைந்த இந்த ஐராவதம் அனேக இடங்களில் சிவலிங்கம் அமைத்து வழிபட்டுப் பேறு பெற்றுள்ளது. இதனுடன் திசையானைகளும் சேர்ந்து வழிபட்டுள்ளன. தனி யாக மட்டுமின்றி அரம்பையர், இந்திரன், காமதேனு ஆகியோருடனும் இது கூடி வழிபட்டுள்ளது.

செல்வத்தின் இருப்பிடமான திருமகளோடு தோன்றிய இந்த யானையைச் சிந்திப்பதும் வழிபடுவதும் மிகுந்த புண்ணியச் செயலாகும். சிவமஞ்சரியின் இந்த ஐம்பத்தேழாவது மலரின் முதல்பகுதி ஐராவதம் மற்றும் யானைகள் சிவனை வழிபட்டுப் பேறுபெற்ற செய்திகளைத் தாங்கி மலர்கிறது. இரண்டாவது பகுதிஅதன் தலைவனான தேவேந்திரன் வழிபட்ட திருத்தலங்களையும்; மூன்றாம் பகுதி தேவர்கள் வழிபட்டுப் பேறு பெற்ற செய்திகளையும் தாங்கியுள்ளன. இவற்றை அறிந்து மகிழத் தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

முப்பத்து முக்கோடி தேவர்களும் இந்திரனும் ஐராவதமும் கூடி வழிபட அருள் தந்த மாதங்கி உடனாய ஐராவதேசுவரர் அருளால் எல்லோரும் சகலசெல்வயோகமிக்க பெரு வாழ்வைப் பெற்று வாழ அவர்தம் பொற்பாதங்களைப் போற்றிப் பணிகிறோம்.

- சிவசுந்தரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெள்ளானைக் கோட்டம்

மக்கள் தெய்வங்களை வழிபடுவதைப் போலவே அவற்றின் ஆயுதங்களையும் வாக னங்களையும் வழிபடுகின்றனர். அவற்றிற்கு ஆலயங்களை அமைத்துப் போற்றுகின்றனர். சிலப்பதிகாரத்தில் பூம்புகார்நகரில் இருந்த ஆலயங்கள் பல குறிக்கப்பட்டுள்ளன. அதில் முருகனின் ஆயுதமான வேல் நிற்கும் வேற் கோட்டமும் இந்திரனின் ஆயுதமான வஜ்ஜிரம் நிற்கும் வஜ்ஜிரக் கோட்டமும் அவனது வாகனமான ஐராவதம் நிற்கும் வெள் ளானைக் கோட்டமும் இருந்தனவாகக் கூறப் பட்டுள்ளது.

காஞ்சிபுரம்-வந்தவாசி சாலையில் பெரு நகர் என்னும் பழம்பெரும் கிராமம் உள்ளது. இதன் தென்பகுதியில் யானை நிற்கும் கோயில் ஒன்று இருந்தது. காலவெள்ளத்தில் கோயில் அழிந்து யானை மட்டும் நிற்கின்றது. இது வெள்ளானைக் கோட்டங்களில் ஒன்று என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இக்கோயிலுக்குச் சற்றுத் தொலைவில் ஐயனார் கோயில் உள்ளது. இது புராணங்கள் கூறும் சதவாகனன் கோயிலாகும். சதவாகனன் என்பதற்கு நூறு யானைகளை வாகனமாகக் கொண்டவன் என்பது பொருள். (சதம்- நூறு) இங்குள்ள முற்றத்தில் பக்கத்திற்கு ஐம்பது வீதம் இரண்டு பக்கமும் சேர்ந்து நூறு யானை கள் உள்ளன. நடுவில் கருவறையை நோக்கி யவாறு பெரிய யானை உள்ளது. இவை இரண் டும் வரலாறு கூறும் அரிய கோயில்களாகும். யானைகளைச் சிறப்பிக்கும் வகையில் அமைக் கப்பட்டுள்ள இது போன்ற ஆலயங்கள் வேறு எங்கும் காணக்கிடைக்கவில்லை. ❋

யானைகள் தாங்கும் ஸ்ரீவிமானங்கள்

இறைவன் வீற்றிருக்கும் கருவறை ஸ்ரீ விமானத்தை யானைகள் தாங்குவது போல அமைப்பர். மதுரையில் யானைகளின் உயரமும் காத்திரமும் உள்ள எட்டு யானைகள் தாங்குவது போல கருவறை அமைந்துள்ளது. இவை அட்டதிக் கஜங்கள் எனப்படும் எட்டு யானைகள் ஆகும். இவற்றிற்கு வெண்மை நிறம் தீட்டப்பட்டுள்ளது. இதே போன்ற அமைப்பு கோவை மாவட்டம் காரமடை நஞ்சுண்டேசுவரர் ஆலயத்திலும் உள்ளது.

கஜ பூஜை

முன்னாளில் பெரிய ஆலயங்களில் தினமும் காலையில் கஜபூஜை நடைபெறுவது வழக்கம். இதற்கென ஆலயங்களில் யானைகள் வளர்க்கப்பட்டன. இப்போது மதுரை மீனாட் சியம்மன், நெல்லை நெல்லையப்பர், காளை யார் கோயில் சுவர்ணகாளீச்சுவரர் முதலிய ஆலயங்களில் யானைகள் வளர்க்கப்படு கின்றன. தினமும் காலையில் யானை மீது திருமஞ்சனத் தீர்த்தம் கொண்டு வரும் வழக்கம் இருந்தது.

குடமுழுக்கு விழா முதலிய பெரிய விழாக்களில் கஜபூஜை நடத்தப்படுகிறது. பெருந்திருவிழாக்களில் திருவுலாவில் யானை யை அலங்கரித்து முன்னே வரச் செய் கின்றனர். தென் மாவட்டங்களில் பெருந்திரு விழாவிற்குப் பந்தல் இடும்போது முதல் பந்தல் காலை யானையிடம் கொடுத்து நடச் செய்கின்றனர்.

பெருந்திருவிழாவில் ஏற்றப்படும் கொடித் துணியை யானைமீது வைத்து உலாவரச் செய்த பின் ஏற்றும் வழக்கமும் உள்ளது. ❋

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆனைக்கு அருள் செய்த அண்ணல் கஜ அனுக்கிரகர்

ஆனைக்கு அருள் செய்த அப்பன் என்றதும் எல்லோருக்கும் கஜேந்திர வரதரான திருமாலே நினைவுக்கு வருகிறார். ஆதி மூலமே என்று அலறும் யானையும், அதன் காலைப் பிடித்துக் கொண்டிருக்கும் முதலையும், அதன் கழுத்தைச் சக்கரத்தை வீசிப் பிளக்கும் திருமாலின் வடிவமே அனேக இடங்களில் ஓவியங்களாகவும் சிற்பங்களாகவும் அமைந்துள்ளன.

அதுபோல் சிவபெருமான் யானைக்கு அருள்புரிந்தது சிவபராக்கிரமத்துள் "கஜாந் திகர் " என்ற பராக்கிரமமாகச் சொல்லப்பட் டுள்ளது..

சிவபெருமான் மதுரை, திருவானைக்கா முதலிய தலங்களில் தன்னை வழிபட்ட வெள்ளை யானைக்கு அருள்புரிந்தார். அதன் சாபத்தை நீக்கி தெய்வவடிவு நல்கினார். அதனைஆரத் தழுவி மகிழ்வித்தார். அந்த கோலம் கஜாந்திகர் எனப் படுகிறது.

ஒரு சமயம் சூரபத்மனும் அவனுடைய சகோதரர்களும் தேவர்களை வென்று வாகை சூடினார். சூரபத்மனின் மகனான பானு கோபன் ஐராவதத்தின் கொம்புகளை உடைத் துவிட்டான். மேலும், முந்தையசாபத்தால் அது காட்டானை ஆகிவிட்டது.

துன்பத்தால் வருந்தியஅந்தயானை பூமிக்கு வந்து திருவெண்காட்டில் சிவ வழிபாடு செய்தது. அதன் வழிபாட்டினால் மகிழ்ந்த சிவபெருமான் அதற்குப் பழைய உருவத்தை நல்கிக் கொம்புகளை வளரச் செய்தார். அதை ஆரத் தழுவி மகிழ்வித்தார். அப்படி அவர் தழுவி நின்ற கோலமே கஜாந்திகர் என்று அழைக்கப் படுகிறது

ஐராவதம் வழிபட்டபோது அதன் அன்பினால் மகிழ்ந்த இறைவன் அப்போதே அதற்கு பெருமைசேர் தேவவடிவையும் விண்ணாட்டில் இருக்கும் பெருமைகளையும் அளித்தான் என்பதைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

கோடு நான்குடைக்குஞ்சரம் குலுங்க
நலங்கொள் பாதம்
நின்றேத்தியபோதே பீடு
விண்மிசைபெருமையும்பெற்ற
பெற்றிகேட்டேன்.

என்று அருளிச் செய்துள்ளார். ✻

யானைப் பாறைகள்

பூமிக்கு வந்து யானை வடிவுடன் சிவபூசை புரிந்தவர்களில் பலர் இறுதியில் அவ்வடிவை பூமியில் போட்டு விட்டு தெய்வ வடிவுடன் திரும்பினர். அவ்வுடல்கள் பெரிய மலைகளாகி விட்டன. அவற்றை மக்கள் யானைமலை(அ) யானைக்கல் என்று அழைக்கின்றனர். மதுரையிலுள்ள யானைமலை, வள்ளி மலையிலுள்ள கணேசக்குன்று, சுசீந்திரத்திற்கு அருகிலுள்ள யானைப் பாறை முதலியவை இத்தகையதாகும். திருச்சியிலுள்ள மலை ஒரு கோணத்தில் இருந்து பார்க்கும் போது அம்பாரியுடன் கூடிய யானை படுத்திருப்பது போல் காட்சியளிக்கிறது. ✻

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யானை முகனைப் பயந்த யானைகள்

ஒருமுறை பிரணவ வனத்தில் பராசக்தி பெண் யானை வடிவு கொண்டு ஓடினாள். அவளைச் சிவ பெருமான் ஆண்யானை வடிவுடன் பின்தொடர்ந் தார். அவ்வேளையில் இருவருக்கும் இடையே யானை வடிவில் ஒரு சக்தி வெளிப்பட்டது.

சிவசக்தியர் இருவரும் தெய்வ நல்வடிவுடன் அந்தக் குழந்தையை அணைத்து மகிழ்ந்தனர். அவனைக் கணங்களின் அதிபதியாக்கி கணபதி என்று பெயர் சூட்டினார் சிவபெருமான். கணபதியைத் தன் மடி மீது அமர்த்திப் பட்டாபிஷேகம் செய்தார். அந்தக் கோலம் ஆனைமுகற்கு அருள்செய்த அண்ணல் என்று கொண்டாடப்படுகிறது. அதை கஜ அனுக்கிரகர் என்றும், விக்னேசப் பிரசாதர் எனவும் அழைப்பர்.

திருஞானசம்பந்தர் பெருமான் ஆண் யானை யாகவும்,அம்பிகை பெண் யானையாகவும் இருக்க விநாயகரான கணபதி தோன்றினார் என்பதை,

"பிடியதன் உருவுமை கொள மிகு கரியது,
வடிகொடி தனதடி வழிபடும் அடியவர்
கடிகணபதி வர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே

என்று அருளிச் செய்துள்ளார்.

ஐராவத விநாயகர்

ஐராவதம் விநாயகர் வழிபாட்டில் திளைத்து இன்பம் அடைகிறது. அது பல இடங்களில் விநாய கர் திருவுருவத்தை அமைத்து வழிபட் டுள்ளது. மதுரையில் ஐராவதம் வழிபட்ட போது, தன் பெயரால் ஒரு லிங்கம் அமைத்து தீர்த்தத்தையும் அமைத்தது.

பின் தன் பெயரால் விநாயகரையும் அமைத்து வழிபட்டது. அந்த தீர்த்தம் ஆனையூரணி எனும் பெயர் பெற்றது. அதுவும் விநாய கர் கோயிலும் உள்ள இடம் ஐராவத நல்லூர் என்று அழைக்கப்படு கிறது. அந்த விநாயகர் ஐராவத விநாயகர் ஆவார்.

திருப்பனந்தாளிலும் ஐராவதம் வழிபட்டது. அது ஐராவத விநாயகர் என்னும் விநாயகரை அமைத்து வழிபட்டதுடன் ஐராவத தீர்த்தத்தையும் அமைத்தது. திருப்பனந்தாள் இறைவனுக்கு ஐராவதேசுவரர் என்பதும் பெயராகும். இந்த விநாயகரையும் தீர்த்தத்தையும் தல புராணம் சிறப்பித்துப் போற்றுகிறது.

இந்திரனின் வாகனமாக அயிராவதம் வழிபட்டது போலவே அவனுடைய கற்பக மரம், சிந்தா மணி, காமதேனு ஆகியனவும் விநாயகரை வழிபட்டுப் பேறு பெற்றன. அவற்றின் பெயரால் விநாயகர், கற்பக விநாயகர், சிந்தாமணி விநாயகர், தேனுவிநாயகர் எனும் பெயர்களைப் பெறுகிறார்.

வந்தவாசிக்கு அருகிலுள்ள தலம் வழுவூர் ஆகும். வழுவை எனும் சொல் யானையைக் குறிக்கிறது. இத்தலத்தில் ஐராவதம் வழிபட்டுப் பேறு பெற்றுள்ளது. இத்தலத்திலுள்ள பிரம்ம புரீசுவரர் ஆலயத்துள்பெரிய சந்நிதியில் ஐராவதம் வழிபட்ட விநாயகர் ஐராவத விநாயகர் எனும் பெயரில் உள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஐராவதேச்சரங்கள்

இந்திரனின் பட்டத்து யானையாகிய ஐராவதம் பலமுறை முனிவர்களின் சாபத்தால் காட்டானையானது. அப்போதெல்லாம் அது பூமிக்கு வந்து சிவபூசை செய்தது. சிவனருளால்அது பன்மடங்கு பொலிந்து மீண்டும் இந்திர லோகத்து யானையானது. அது வழிபாடு செய்த சிவாலயங்கள் ஐராவதேச்சரங்கள் என்றழைக்கப்படுகின்றன. ஐராவதம் வழிபட்ட தலங்கள் மாவட்டம் தோறும் உள்ளன. அவற்றில் சிலவற்றை இங்குக் காணலாம்.

திருவெண்காடு

ஐராவதம் வழிபட்டுப் பேறுபெற்ற தலங் களில் முதன்மை பெற்றது திருவெண்காடாகும். இத்தலத்துத் தேவாரத்தில் ஐராதவம் வழிபட்ட செய்தி விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. இங்கு துருவாசமுனிவரின் சாபத்தால் அது காட் டானை வடிவுடன் நெடுங்காலம் பூசித்து இறையருளால் சுய வடிவம் பெற்றதை யும், அதன்பின்னரும் நீண்ட காலம் தவம் செய்த தும்கூறப்பட்டுள்ளது திருஞானசம் பந்தர்,

..... ஐராவதம் பணிய
மிக்க அதனுக்கு அருள் சுரக்கும் வெண்காடு
.... முக்கண்உடை இறையவனே என்றும்,
வெள்ளானை தவம் செய்யும் மேதகு வெண்காடு
என்றும்,
வெள்ளிய உருவத்து ஆனை
வணங்கும் வெண்காடு
என்றும் குறித்துள்ளார்.

இங்குத் தெற்குக் கருவறை வெளிச் சுவரில் ஐராவதம் வழிபடுவது இந்திரன் தேவர்களுடன் கூடி நிற்பது முதலியவை சிறிய புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட் டுள்ளது. இத்தலத்தில் வெள்ளானைக்கு இறைவன் அருள் செய்ததை விளக்கும் வகை யில் வைகாசி அமாவாசை நாளில் ஐதீக விழா கொண்டாடப்படுகிறது.

மருத்துவக்குடி

திருவிடைமருதூருக்கு நேர் கிழக்கில் மருத்துவக் குடி என்னும் ஊர் உள்ளது. இங்கு அபிராமி அம்மை உடனாய ஐராவதேசுவரர் ஆலயம் உள்ளது. ஐராவதம் இங்கு தங்கி தினமும் திருவிடை மருதூருக்கு வந்து பெரு மானை வழிபட்டது. மேலும் தன் பெயரால் இத்தலத்தில் சிவாலயம் அமைத்தது. அதுவே

❋ தாராசுரம் -ஐராவதேச்சரம்

இந்த ஐராவதேசுவரர் ஆலயமாகும்.. தென் புறச் சுவரில் ஐராவதம் சிவலிங்கத்தை வழிபடும் காட்சி புடைப்புச் சிற்பமாக அமைந்துள்ளது.

தாராசுரம்

கும்பகோணத்தின் ஒரு பகுதியாகத் தாராசுரம் விளங்குகிறது. மூன்றாம் ராஜராஜன் தனது பெயரால் இந்தப் பகுதிக்கு ராஜராஜபுரம் என்ற பெயரைச் சூட்டி இங்கிருந்த ஐராவதேசுவரர் ஆலயத்தைப் பெரிதாகக் கட்டினான். இது உலகப் புகழ்பெற்ற மாபெரும் கலைக் கோயிலாகத் திகழ்கிறது.

பெண்ணாடகம்

“கடந்தை” என்று தேவாரத்தில் குறிக்கப்படும் தலம் பெண்ணாடகம் ஆகும். இக்கோயில் தூங்கானை மாடம் என்று அழைக்கப்படுகிறது. ஐராவதம் வழிபட்ட தலம். புராணத்தில் குறிக்கப்படும் பெயர்களில் ஐராவதீசுவரர் என்பதும் ஒன்றாகும்

இத்தலத்தின் பெயர்களில் கயராசபதி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்பது முதன்மை பெற்றதாகும். கஜராஜபதி என்பதே தமிழில் கயராசபதி என வழங்குகிறது. . கடம் என்ற சொல்லும் யானையைக் குறிக்கும். பெண் (அரம்பையர்கள்), ஆ(காம தேனு), கடம் (வெள்ளை யானை) மூன்றும் பூசித்ததாலேயே இத்தலம் பெண்ணாகடம் எனப் பெயர் பெற்றது.

கோட்டாரம் (திருக்கோட்டாறு)

திருநள்ளாற்றுக்கு அருகிலுள்ளதலம் கொட்டாரம் ஆகும். இங்கு ஐராவதேசுவரர் ஆலயம் உள்ளது. இங்குள்ள இறைவன் கல்வெட்டுக்களில் வெள்ளானை விடங்கர் என்று குறிக்கப்படுகிறார். வெள்ளானை விடங்கர் என்பது இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சோமஸ்கந்தரின் பெயராக இருக்க வேண்டுமென்பது அறிஞர்களின் கருத்தாகும். இறைவன் ஐராவதேசுவரர் அம்பிகை வண்டமர் பூங்குழலம்மை.

ஐராவதத்தை வெள்ளை யானை என்பர். அது வெள்ளிக் குன்றுபோல் வெண்மையாக இருப்பதால், அப்பெயர் பெற்றது இங்கு ஐராவதம்பூசிக்கும் காட்சி சுதைச் சிற்பமாகவும் புடைப்புச் சிற்பமாகவும் அமைக்கப்பட்டுள்ளன.

இத்தலத்தில் ஐராவதம் வழிபட்டது. தேவாரத்தில் குறிக்கப்பட்டுள்ளது. ஐராவதம் வானத்தைக் குத்தி மேகங்களிலிருந்து நீரையும் மலரையும் பெற்றுச் சிவபூசை செய்ததாகத் தேவாரம் குறிக்கிறது.

நின்று மேய்ந்து நினைந்து மதகிரி நீ ரொடும்
மலர் வேண்டி வான் மழை
குன்றில் நேர்ந்து குத்திப் பணிசெய்யும் கோட்டாறு''

என்று திருஞான சம்பந்தர் அருளிச் செய்துள்ளார்.

குமரி மாவட்ட கோட்டாறு

சுசீந்திரத்திற்கு அருகில் கோட்டாறு என்ற சிற்றாறு உள்ளது. சுசீந்திரத்தில் இந்திரன் பூஜை செய்து வந்த ஐராவதத்திடம் நீர் கொண்டு வருமாறு கூறினான். அது அருகிலுள்ள மலை யைத் தனது கொம்பால் குத்தி இந்த ஆற்றை உண்டாக்கியது. கோடு (தந்தம்) குத்தி உண்டானதால் இதனைக் கோட் டாறு என அழைக்கின்றனர். மக்கள் இதனை பழவாறு என்று அழைக்கின்றனர். இது உற்பத்தியாகும் மலையை ஐராவதம் பிளந்தது. இதை இரண்டாம் வரிமலை என அழைக்கின்றனர். இங்கு யானைப் பாறை என்னும் இடம் உள்ளது இது யானை வடிவில் உள்ளது. அருகிலுள்ள ஊர் கோட்டாறு என வழங்குகிறது. (மேலே குறித்த பாடல் இத்தலத்திற்கு உரியதென்பர்.)

கோழியும் -யானையும்

கோழிக்கும் யானைக்கும் பொதுப் பெயர் வாரணம் என்பதாகும். இவை இரண்டும் போரிடும் ஆற்றல் பெற்றவை. கோழிகள் யானையை வென்றதைப் பழையவரலாறுகளில் சிலஇடங்களில் காண்கிறோம். நாட்டியத்தான் என்ற தலத்தில் கோழி ஒன்று யானையை வென்றதாகக் கூறுவர். அந்தக் கோழிக்கு மன்னன் அளித்த இடம் கோழி மேய்ந்தான் என்ற பெயரில் இருந்ததென்று (டாக்டர் உ.வே.சாமி நாதையர்) குறித்துள்ளார். இத்தலத்தில் யானை பூசித்து இறையருள் பெற்றது அதையொட்டி இறைவர் கரிநாதேசுவரர் என்றழைக்கப்படுகிறார்.

திருச்சியின் ஒரு பகுதியான உறையூரில் கோழி சோழ மன்னனின் பட்டத்து யானையை எதிர்த் துப் போரிட்டது. கோழி யானையின் மத்தகத் தைக் கொத்திப் புண்படுத்தியதால் யானை பயந்து பின் வாங்கியது. மன்னன் இந்த இடத்து மண் வீரம் மிகுந்த மண் என்று கருதி அங்குக் கோட்டை கட்டினான். அந்த இடத்திற்கு உறையூர் என்று பெயர் சூட்டினான். இத்தலத்திற்குக் கோழி என்பதும் பெயராகும். சிலப்பதிகாரத்திலும் இச்செய்தி காணப்படுகிறது. இறைவன் பஞ்சவர்ணேசுவரர். அம்பிகை காந்திமதி. இங்கு ஆலயத்துத் தூணொன்றில் கோழி யானையுடன் போரிடும் புடைப்புச் சிற்பம் உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காஞ்சிபுரத்து ஐராவதேசம்

காஞ்சிபுரம் கச்சபேசுவரர் ஆலயத்திற்கு எதிரில் உள்ளடங்கியவாறு உள்ள ஐராவதீசுவரர் ஆலயம் பல்லவர் காலத் திருக்கோயிலாகும். ஐராவதேசுவரர் பதினாறு பட்டை கொண்ட லிங்கமாகக் காட்சியளிக்கிறார். பின்னணியில் சோமாஸ்கந்தர் வடிவம் உள்ளது. காஞ்சிப் புராணத்தில் இக்கோயில் சிறப்பித்துப் பேசப்பட்டுள்ளது.

எதிர்கொள்பாடி

இந்நாளில் குத்தாலம் என வழங்கும் திருத் துருத்தி சொன்னவாறு அறிவார் ஆலயத்தில் நடை பெற்ற சிவபெருமானின் திருமண விழாவைக் காண தேவர்கள் கூடி நின்றனர். அவர்கள் தமது இந்திர லோகத்துப் பட்டத்து யானையை முன்னிருத்தி அவரை அழைத்தனர்.

அவர்கள் எதிர்கொண்டழைத்த தலம் இந்நாளில் எதிர்கொள்பாடி என வழங்குகிறது. அவர்களின் வேண்டுகோளை ஏற்ற சிவபெருமான் திருமணஞ்சேரியில் மணக்கோல நாதராகக் காட்சியளித்தார். எதிர்கொள்பாடியில் ஐராவதம் சிவலிங்கம் அமைத்து வழிபட்டது. அந்த தலத்து இறைவன் ஐராவதேசுவரர் என்றழைக்கப்படுகிறார். அம்பிகை மலர்க் குழல் நாயகி.

இன்னம்பர்

இனன் (சூரியன்) பூசித்த அம்பர் இன்னம்பர் ஆனதென்பர். கும்பகோணத் திலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ளது. சுவாமிமலை, திருப்புறம்பியம் முதலான தலங்கள் இதன் அருகில் உள்ளன. இத்தலத்திலுள்ள கருவறை மிகப் பெரிய கஜப்பிருஷ்ட அமைப்பை உடையது. ஐராவதத்தால் அமைக்கப்பட்டது என்பர். தீர்த்தம் ஐராவத தீர்த்தமாகும். ஐராவதத்திற்காகப் பெருமான் தானேவெளிப்பட்டு அருள்பாலித்ததால், தான்தோன்றீசுவரர் என்று அழைக்கப்படுகிறார்

வெள்ளிய உருவத்து ஆனை வணங்கும் திருவெண்காடு

.திருவிடை மருதூர்

திருவிடைமருதூரிலும் மகாலிங்க சுவாமியை ஐராவதம் வழிபட்டுள்ளது. மேலே குறித்த மருத்துவக் குடியில் தங்கியிருந்து தினமும் திருவிடைமருதூருக்கு வந்து வழிபட்டது. அது காவிரியில் நீராடிய துறை ஐராதவதத் துறை என்ற அழைக்கப்படுகிறது. அதற்கு முன்பு அத்துறை விநாயகர் துறை என்றழைக்கப்பட்டதாகக் கூறுவர்

காசி

காசியில் ஐராவதம் பூசித்த லிங்கம் ஐராவதேசுவரர் என்ற பெயரில் உள்ளது. இங்கு ஐராவதத்துடன் திசையானைகளும் பூசித்துப் பேறு பெற்றன என்று காசிக்கண்டம் கூறுகிறது.

பெரு வேளூர் பிரியாத நாதன்

தலையாலங்காட்டிற்குக் கிழக்கே 5 கி.மீ. தொலைவில் உள்ள தலம் பெருவேளூர் இத னைச் சுற்றிப் பன்னிரண்டு சிவாலயங்கள் அமைந்துள்ளதாகத் தலபுராணம் கூறுகிறது. இதன்படி வாயு மூலையில் ஐராவதம் உண்டாக்கிய ஐராவத தீர்த்தமும் அதன் கரையில் ஐராவதேசுவரர் ஆலயமும் உள்ளன.

கோவை மாவட்டத்திலுள்ள கண்ட மங்கலம், தஞ்சை, திருக்காட்டுப் பள்ளிக்கு அருகிலுள்ள குருமடம் முதலிய தலங்களில் ஐராவதேசுவரர் ஆலயங்கள் உள்ளன ❋

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யானைக்குக் கரி, மதங்கம் என்பனவும் பெயர்களாகும். யானைகள் பூசித்த தலங்கள் அப்பெயரால் கரிவலம் வந்த நல்லூர், மதங்கேசுவரம் என்று அழைக்கப்படுகின்றன. அவற்றில் இரண்டைக் காணலாம்.

கரிவலம் வந்த நல்லூர்

சிவனை நீக்கித் தட்சன் செய்த யாகத்தில் கலந்து கொண்ட பாவத்தால் தேவர்கள் துன்புற்றனர். அப்பாவத்தால் இந்திரன் தென் பாண்டி நாட்டில் திட்டினியம் என்ற ஊரில் வேடுவர் குலத்தில் தோன்றினான். அவனுக்குக் காரி எனப் பெயரிட்டனர். இந்திராணியும் வேட்டுவர் குலத்தில் உதித்து உரிய மண வயதில் அவனை மணந்தாள்.

சயந்தன் அவர்களுக்கு மகனாகத் தோன்றினான். மூவரும் மிகுந்த அன்புடன் அக்காட்டில் இருந்த சிவலிங்கத்தை வழிபட்டு வந்தனர். ஐராவதம் அதே காட்டில் காட்டு யானையாக மாறித் திரிந்தது. அதுவும் இரவில் அந்த சிவலிங்கத்தை வழிபட்டுவந்தது.

காரி ஒருநாள் இரவு உறவினர்களுடன் வேட்டைக்குச் சென்றான். அவர்கள் காட்டானை ஆன ஐராவதத்தின்மீது அம்பெய் துரத்தினர். அது சிவலிங்கத்தைச் சுற்றிச்சுற்றி ஓடி வீழ்ந்து மாண்டது.

அந்நிலையில்சிவபெருமான் வெளிப்பட்டு எல்லோருக்கும் அருள்புரிந்தார். இந்திரன், இந்திராணி முதலானோர் தன் நிலையை அறிந்து பெருமான் அருளுடன் தேவலோகத்திற்குத் திரும்பினர். உயிர்த்தெழுந்த ஐராவதம் நெடுநாட்கள் தங்கிப் பெருமானை வணங்கிய வண்ணம் அங்கேயே வசித்து வந்தது. பின் மீண்டும் இந்திரனை அடைந்தது.

கரி(யானை) வலம் வந்து வழிபட்டதால் இத்தலம்கரிவலம்வந்தநல்லூர் என்று அழைக்கப்படுகிறது. பெருமான் பால்வண்ண நாதர், தலமரம் களா, அம்பிகை ஒப்பனை நாயகி.

இத்தலத்து இறைவன்மீது கருவை வெண்பா அந்தாதி, திருக்கருவைக் கலித்துறை அந்தாதி என்ற நூல்கள் இப்பகுதியை ஆண்ட வரதுங்க பாண்டியரால் பாடப்பட்டுள்ளன. கருவைப் பதிற்றுப் பத்தந்தாதியைக் குட்டித் திருவாசகம்என்பர். வெள்ளையானை பூசித்ததற்கேற்பப் பெருமான் வெள்ளைநிறத்துடன் காட்சியளிக்கிறார்.

மதங்கேசுவரர்

மதங்கம் என்றால் யானை. யானைகளின் கூட்டத்தில் வாழ்ந்த முனிவர் மதங்கர் என்று அழைக்கப்படுகிறார். மதங்கர் வழிபட்ட சிவபெருமானின் ஆலயங்கள் மதங்கேசுவரங்கள் என்றுஅழைக்கப்படு கின்றன. காஞ்சிபுரத்தில் பேருந்து நிலையத்திற்கு அருகில் மதங்கேசுவரர் ஆலயம் உள்ளது. மேற்கு நோக்கிய இந்த ஆலயம் பல்லவர்கள் கண்ட கலைக்கோயில்களில் ஒன்றாகும். கருவறையில் சோமாஸ் கந்தரின் பெரிய திருவுருவம் புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது.

ஒரு சமயம் பார்வதிதேவி மதங்கமுனிவரின் மகளாகத் தோன்றி வளர்ந்தாள். அதனால் மாதங்கி என்று அழைக்கப்படுகிறாள். அப்பெயராலேயே பல தங்களில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கிறாள். சீர்காழிக்குத் தெற்கில் திருநாங்கூர் என்ற தலம் உள்ளது. இதனைப் புரசுவனம் என்றும், மதங்க வனம் என்றும், கூறுவர். இங்கே மதங்க மாமுனிவர் பூஜித்துப் பேறுபெற்ற மதங்கேசுவரர் ஆலயம் உள்ளது. இது பூம்புகார் நகரின் ஒரு பகுதி ஆதலின் இங்கே ஐராவதத்திற்கு ஆலயம் அமைந்திருக்கலாம் என்பர்.

வழுவூர் - பிரம்மபுரீசர்

வழுவை எனும் சொல் யானையைக் குறிக்கும். மருதாடு எனும் தலத்தில் இந்திரன் வழிபட்டபோது, அதன் அருகிலுள்ள புரசங்காட்டில் ஐராவதம் வழிபட்டது. அவ்விடம் வழுவூர் என்றானது. பின்னாளில் அங்கு பிரமனும் வழிபட்டான். அதனையொட்டி இந்நாளில் இறைவன் பிரம்மபுரீசுவரர் என்று அழைக்கப்படுகிறார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யானைகள் பூசித்த தலம்

யானைகள் மனிதர்கள் செய்வதைக் கவனித்துப் பழகி அதன்படியே செய்பவை. காட்டில் வாழும் யானைக் கூட்டம் தவம் நிறைந்த முனிவர்கள் செய்யும் சிவவழிபாட்டைக் கண்டு அதில் ஒன்றி தாங்களும் அப்படியே செய்து மகிழ்ந்தன. அதன் பயனாக அவை மேன்மையடைந்ததைத் தலவரலாறுகள் கூறுகின்றன.

தேவாரத்தில் காட்டு யானைகள் கூட்டமாகச் செல்வதும், பெண் யானைகள் சிவலிங்கம் அமைந் திருக்கும் முற்றத்தைப் பெருக்கிச் சுத்தம் செய்வ தும், ஆண் யானைகள் குளத்தில் மூழ்கிப் பூப்பறித்து வந்து சிவலிங்கத்திற்குச் சூட்டி மகிழ்வதும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

திருக்கானப்பேர் எனப்படும் காளையார் கோயில் தேவாரத்தில் பெண் யானைகள் பின் தொடர, ஆண் யானைகள் அதிகாலையில் குளத்தில் மூழ்கி மலர் பறித்து முறையாக வழிபட்டன என்பதை,

"பிடியெலாம் பின்செல்ல பெருங்கைமலதழீ
விடியலே தடமூழ்கி விதியினால் வழிபடும்
கடியுலாம் பூம்பொழில் கானப்பேர்அண்ணல்
என்றும்,
மானமா மடப்பிடி கையால் அலகிட
காமர் கடகரி வழிபடும் கானப்பேர்"
என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

குற்றாலத்தில் பெருமான் தல மரமான குரும்பலாவை இடமாகக் கொண்டு அருள் பாலித்து வருகிறான். அந்த மரத்தைச் சிவபெருமானின் வடிவாகவே போற்றுகின்றனர்.

குற்றாலத்திலுள்ள ஆண்யானைகள் பெண் யானைகள் தொடர, வேங்கை மலர்களைத் தலை மீது சுமந்து கொண்டு வந்து இந்தப் பலா மரங்களை வலம் வந்து வழிபடுகின்றன. இதனைத் திருஞான சம்பந்தர்,

" பூந்தண் நறுவேங்கை கொத்திருத்து
மத்தகத்திற் பொலிய ஏந்தி கூந்தற்
பிடியொடும் களிறுமுடன் வணங்கு குரும்பலாவே"
என்று அருளிச்செய்துள்ளார்.

யானைகள் கூட்டமாகக் காவிரிக் கரையில் வாழ்ந்த இடம் ஆனைக்கா. அங்குஅம்பிகை நீரைத் திரட்டி லிங்கம் அமைத்து வழிபட்டாள். அங்கிருந்த ஒரு யானைக்கு நல்லறிவு தோன்றியது. அது அங்கு அம்பிகையால் வணங்கப்பட்ட பெருமானைக் கண்டது. தினமும் காவிரியில் மூழ்கி அந்த லிங்கத்தை வழிபட்டது. அங்கு சிலந்தி ஒன்றும் பூசித்தது. சிலந்தி பெருமானுக்கு வாய் நூலால் பந்தல் அமைத்து வழிபடும். அதை யானை அழித்துவிட்டு தன் பூசையைத் தொடங்கும். இப்படி பல நாட்கள் நடந்தன. தான் விதானமாகப் பின்னிய வலைகளைத் தினமும் அழித்து வரும் யானையைக் கண்டு சிலந்தி கோபித்தது.

மறுநாள் யானை வந்தபோது அதன் துதிக்கைக்குள் நுழைந்து மண்டைக்குள் சென்று கடித்துத் துன்புறுத்தியது. வலி பொறுக்க முடியாத யானை மண்ணில் வீழ்ந்து புரண்டது. இறுதியில் இரண்டும் மடிந்தன.

பெருமான் சிலந்தியை மீண்டும் அரச குலத்தில் பிறக்கும்படிச் செய்தார். அவனே பின்னாளில் புகழ் பெற்றசோழர் குலவேந்தனான செங்கணான். ஆவான். அந்த யானைக்கு இறைவன் மோட்சம ளித்தார்.

யானை பூசித்தலால், இத்தலம் மதகிரி வனம், அத்தியாரண்யம், தார்ப்பொருப்புவனம், உரலடிவனம், கஜராண்யம், கரிவனம், தந்தி வனம், மதமாதங்க வனம் என்ற பெயர்களால் குறிக்கப்பட்டுள்ளது. இவை யாவும் யானையைக் குறிக்கும் பெயர்களாகும்.

புஷ்பதந்தன் மாலியவான் என்ற கணநாதர்களே சாபத்தால் காட்டானையாகவும் சிலந்தியாகவும் பிறந்து பூசித்துப் பேறு பெற்றார்களென்று தலபுராணம் கூறுகிறது.

காளத்தியிலும் நல்லறிவு பெற்ற காட்டு யானை வழிபட்டுப் பேறுபெற்றுள்ளது. இங்கும் அதனுடன் ஒரு சிலந்தியும் பாம்பும் வழிபட்டுப் பேறுபெற்றுள்ளன. இவற்றின்அன்பினில் கட்டுண்ட பெருமான் இவை மூன்றையும் தன் மேனியில் ஒடுக்கிக் கொண்டார். நுணுகிப் பார்ப்பவர்களுக்குச் சிவலிங்கத் திருமேனியில் அம் மூன்று வடிவங்களும் தெரியும் என்று கூறுகின்றனர்.

இன்னும் பல தலங்களில் காட்டு யானைகள் பூஜை செய்து பேறுபெற்றதைத் தலவரலாறுகள் கூறுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெரிய புராணத்துள் யானைகள் பற்றிய செய்திகள்

சிவனடியார்களின் வரலாற்றைக் கூறும் பெருங்காப்பியமான பெரிய புராணத்தில் சில துணைக் கதாபாத்திரங்களாக யானைகள் கூறப் படுகின்றன. இவை சிவபக்தியின் பெருமையை உணர்த்தும்வகையில்உள்ளன. அவற்றைத் தொகுத் துச் சிறுகுறிப்பாகக் காணலாம்.

பெரியபுராணத் தொடக்கமே சுந்தர மூர்த்தி சுவாமிகள் வெள்ளை யானை மீது அமர்ந்து திருக்கயிலை மலைக்குச் செல்வதைக் கூறுகிறது. உயர்ந்தவர்களைத் தமது மாளிகைக்கு அழைக் கும் போது பல்லக்கையும், தமது உயர்அதிகாரி களையும் அனுப்புவர். அவ்வகையில் சிவபெரு மான் தனது அயிராவணம் என்ற வெள்ளை யானையையும் தேவேந்திரன், மால் பிரமன் முதலானவர்களையும் அனுப்பிச் சுந்தரரை மண்ணுலகத்திலிருந்து கயிலைமலைக்கு அழைத்தான்.

இதனைச் சேக்கிழார், விவரித்துக் கூறும் வகையில் பெரிய புராணத்தின் இறுதிச் சருக்கத் தை அமைத்துள்ளார். இது வெள்ளானைச் சருக்கம் என்று பெயரிடப் பட்டுள்ளது. இதில் தேவர்களை நோக்கிச் சிவபெருமான் நமது ஊரனாகிய(திருவாரூர்) சுந்தரரைவெள்ளை ஆனையின் மீதேற்றி இங்குக் கொண்டு வாரும் என்று ஆணை இடுகிறார்.

சுந்தரர் தமது இறுதிப் பதிகத்தில், இந்திரன், மால், பிரமன் எழிலார்மிகு தேவ ரெல்லாம் வந்தெதிர்கொள்ள மத்த யானை அருள்புரிந்தாய் என்று குறித்துள்ளார்.

அடுத்ததாகக் கொல்ல வந்த களிறு, குணம் மாறிக் கும்பிட்டுத் தன்னை ஏவியவர் களை அழித்ததைத் திருநாவுக்கரசர் வரலாற்றில் விவரிக்கிறார்.

தருமசேனர் என் னும் பெயருடன் சமண சமயத்தில் மிக உயர்ந்த நிலையில் நெடுங்காலம் இருந்தவர் திருநாவுக்கரசு நாயனார். அவரைப் பெருமான் சூலைநோய் கொடுத்து ஆட்கொண் டருளினார். அவர் சைவ சமயத்தைச் சார்ந்து தேவாரப் பதிகங்களைப் பாடியருளினார்.

அதைக்கண்ட சமணர்கள் கோபித்தனர். அரசனிடம் கூறி அவரைக் கொல்ல வேண்டும் என்றனர். அரசன் அவர்களிடம் நீங்கள் உமக் கேற்றபடி செய்து கொள்ளுங்கள் என்றான்.

அவர்கள் அடிகளாரைச் சுண்ணாம்பு நீற்ற றையில் இட்டும், நஞ்சூட்டியும் கொல்ல முயன் றனர். அவற்றில் தோற்றபின் அவர்மீது யானையை ஏவி அவரைக் கொல்லத் திட்ட மிட்டனர். அதன்படிமதமூட்டிய பட்டத்து யானையை அவர் மீது ஏவினர். கோபா திசயம் என்ற அந்த யானை யமன் வருவதுபோல் ஆர்ப்பரித்து ஓடி வந்தது. அதைக் கண்டவர்கள் எல்லோரும் அலறியடித்து ஓடினர். அந்த பாகர் கள் யானையிடம், அடிகளாரைக் கொல்லும் படி முடுக்கினர். அப்போது நாவுக்கரசர், "அஞ்சுவதில்லை யாம் அஞ்ச ஒன்று வருவதில்லை என்று" மகுடமிட்ட பாடலைப் பாடினர்.

அதுவரை ஆர்ப்பரித்துவந்த யானை அடங் கியது. அடிகளாரை மும்முறை வலம் வந்து அவர் முன் பணிந்து வீழ்ந்து வணங்கி அவ்விடத் தை விட்டு அகன்றது. பாகர்கள் அதை வழிமறித்து அடிகளாரைக் கொல்லும்படி மீண்டும் ஏவினர். கோபமுற்ற யானை பாகர் களைக் கொன்றதுடன் அவர்களைத் தூண்டிய அமணர்களையும் கொன்றது. இது மாபெரும் அதிசயமாக இருந்தது.

+++++

அடுத்த அடியவரை ஆட்சியில் ஏற்றிய யானையைக் காணலாம். மதுரையம்பதியில் சொக்கநாதப் பெருமானுக்கு சந்தனம் அரைத்து தரும் தொண்டைச் செய்து வந்தவர் மூர்த்தி நாயனார். நெடுங்காலம் அவர் அப்பணி யைச் சிறப்புடன் செய்து வந்தார்.

அது சமயம் பாண்டி நாட்டினைக் கைப் பற்றி அரசாண்டு வந்த கர்நாடக மன்னன் இறந்து விட்டான். நாட்டையாள்வதற்கு யாரும் உரிமை மக்கள் இல்லை. அமைச்சர்கள் ஒன்றுகூடினர்.

நாட்டு வழக்கப்படிப் பட்டத்து யானையின் கண் களைக் கட்டி அதனிடம் மாலை ஒன்றைக் கொடுத்தனுப்பி அது யாருக்கு மாலையிடுகிறதோ அவரை மன்னனாக ஏற்க முடிவு செய்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

னர். அதன்படி யானையை அனுப்பினர். யானை பலதெருக்களைச் சுற்றி வந்தது. இறுதியில் ஆலவாய் அண்ணலின் ஆலயத்தின் நெடுங் கோபுர வாசலுக்கு வந்தது. அங்குச் சிவ வழிபாட்டினில் தோய்ந்த மூர்த்தியார் நின்றிருந்தார். அது அவரை வணங்கி முதுகின் மேல் ஏற்றிக் கொண்டு அரண்மனைக்கு மீண்டது. எல்லோரும் அவரை வணங்கி அரசனாக ஏற்றுக் கொண்டார்கள். அவருக்கு முறைப்படியான பட்டாபிஷேகத்தைச் செய்து ஏற்பாடுகள் செய்தனர். அடிகளார் அரசு அலுவலர்களை நோக்கி, சடைகளையே முடியாகவும், திருநீற்றையே அபிஷேகமாகவும், உருத்திராட்சங்களை அணிகலன்களாவும் கொண்டு அரசாள்வேன் என்றார். எல்லோரும் உடன்பட்டனர்.

அவர் அந்த யானையின் மீதேறிச் சென்று ஆலவாய் அண்ணலைத் தொழுதபின் நாட்டுப் பொறுப்பேற்று ஆண்டு வந்தார்..

இனி அன்பரால் வெட்டுண்டு மாய்ந்து இறையருளால் உயிர் மீண்ட யானையைக் காணலாம்.

சோழநாட்டு மூதூர் கரூர். அதனைத் தலை நகராகக் கொண்டு சோழமன்னர்கள் ஆண்டு வந்தனர். அங்கு ஆநிலை எனப்படும் சிவாலயம் இருந்தது. அக்கோயிலுக்குச் சிவகாமி ஆண்டார் எனும் அன்பர் மலர்ப் பணி செய்து வந்தார். அவர் வயது முதிர்ந்தவர்.

ஒருநாள் பூக்குடலையுடன் அவர் தெரு வழியே ஆலயத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அவ் வேளையில் பட் டத்து யானையை நடத்திக் கொண்டு பாகர்கள் அவ்வழி யே வந்தனர். அந்த யானை அன்பரின் கையிலிருந்த பூக்கூடையைப் பறித்து மலர்களைச் சிந்தி மிதித்தபடி சென் றது. பாகர்களும் அதை அடக்க வில்லை சிவகாமி யாண்டார். அந்தயானைத் தொடர்ந்தோட முயன்று கீழே வீழ்ந்தார். மிகுந்த துயரத்துடன் எழுந்து சிவதா சிவதா என்று முறையிட்டு அழுதார்.

அங்கு வந்த எறிபத்த நாயனார் அவரைத் தேற்றி இடுக்கண் செய்த யானை எவ்வழி சென்றது என்று கேட்டார். அவர் கைகாட்ட விரைந்து சென்று தன் மழுவால் அந்த யானையின் துதிக்கையை வெட்டினார். அதைத் தடுக்க வந்த பாகர்களையும் கொன்றனர்.

மன்னருக்குச் செய்திசென்றது. பட்டத்து யானையைப் பகைவர்கள் கொன்றனர் என்று எண்ணிப் படையோடு வந்தார். அங்குப் படைகளைக் காணாது தனித்து அடியவரை மட்டும் கண்டார். நிகழ்ந்ததை அறிந்தார்.

நாயனாரே நீர் கொடுத்த தண்டனை போதாது யானைக்குரிய என்னையும் கொல்க வென்று வாளை அவரிடம் அளித்தார். அதைக் கண்ட நாயனார் இத்தகைய அன்பரின் யானையை வெட்டினோமே. இந்த அன்பருக்கா தீங்கு செய்தோம் என்று கலங்கி தன்னை மாய்த்துக் கொள்ள கழுத்தில் வாளைப் பூட்டினார்.

அவ்வேளையில் சிவபெருமான் அருள் ஆணை வெளியிட்டது. யானையும் பாகர் களும் உயிர்பெற்று எழுந்தனர். சிந்திய பூக்கள் கூடைக்குள் சேர்ந்து சிவகாமியாண்டாரின் திருக்கைகளை அடைந்தது. எல்லோரும் அதைக் கண்டு அதிசயித்து மகிழ்ந்தனர்



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆனைகள் வழிபட்ட ஆலவாய் அண்ணல்



மதுரையில் ஆலவாய் அழகனாக சோம சுந்தரப் பெருமான் அங்கையற்கண்ணியாம் மீனாட்சியுடன் கோயில் கொண்டு அருள் பாலித் து வருகின்றார். அவர் இங்கு நிகழ்த்திய அருள்விளையாடல்களில் அறுபத்து நான்கைத் தொகுத்துத் திருவிளையாடற் புராணம் என்ற நூலாகப் பாடியுள்ளனர்.

இத்திருவிளையாடல்களில் மூன்று திரு விளையாடல்கள் ஆனைகளோடு தொடர்பு கொண்டுள்ளன. அவற்றை இங்கே சுருக்க மாகக் காணலாம்.

திருவிளையாடற்புராணத்தில் இரண்டா வது திருவிளையாடலாக இடம் பெற்றிருப்பது பெருமான் ஐராவதத்திற்கு அருள்புரிந்த தாகும்.

ஒரு சமயம் துருவாச முனிவர் காசியில் சிவ பூசை செய்தார். விசுவநாதப்பெருமான் அப் பூசை யால் மகிழ்ந்ததன் அடையாளமாகத்தம் திருமுடி மீது சார்த்தியிருந்த பொற்றாமரை மலர் ஒன்றை அம்முனிவனின் கரத்தில் விழுமாறு செய்தான்.

அம்முனிவர் அதை ஏந்தி கண்களில் ஒற்றிக் கொண்டார். பெருமானிடம் விடை பெற்றுக் கொண்டு விண்ணுலகம் சென்று தேவேந்திர சபையை அடைந்தார். அவ்வேளை யில் தேவேந்திரன் அசுரர்களை வென்று மிகுந்த மகிழ்ச்சியுடன் யானை மீது பவனிவந்து கொண்டிருந்தான்.

அவனைச் சந்தித்த துருவாசர் தன்னிட மிருந்த பொற்றாமரை மலரை அவனுக்கு அளித்தார். அதை அவன் இடது கரத்திலுள்ள அங்குசத்தை நீட்டி வாங்கி யானையின் மத்த கத்தில் வைத்தான். அந்த யானை அம்மலரைத் துதிக்கையால் எடுத்து பூமியில் இட்டு காலால் மிதித்து நடந்தது.

தன்னைக் கண்டு யானையை விட்டு இறங்காமல் இருந்ததுடன் அலட்சியமாக இடது கையால் அதுவும் அங்குசத்தை நீட்டி மலரை வாங்கியதாலும், அம்மலரின் தன்மை யை அறியாமல் யானை கீழே போட்டு மிதித் ததாலும் முனிவர் கோபம் கொண்டார். இந்திர னே செல்வச் செருக்கால் என்னை அவமதித்த உனது செல்வம் அழியட்டும் இந்த ஐராவத யானை காட்டானையாகட்டும் என்று சபித் தார்.

அக்கணமே கற்பகத்தரு, காமதேனு, சிந்தாமணி, முதலிய யாவும்அவனை விட்டு அகன்றன. வெள்ளி மலை போன்ற அந்த யானை கறுத்துக் காட்டானை ஆகிவிட்டது.

தேவர்கள் அனைவரும் முனிவரின் காலடி யில் வீழ்ந்து வணங்கினர். அவர் இந்திரன் கொஞ்சகாலம் எனது சாபத்தின் பயனை அனுபவிக்கட் டும் .ஐராவதம் நூறாண்டுகாலம் காட்டில் திரிந்த பின் இங்கே வரும் என்றார்.

அமரலோகத்தை விட்டு நீங்கிய யானை பல இடங்களில் இருந்த காடுகளில் சுற்றித் திரிந்து இறுதியில் பாண்டிய நாட்டிற்கு வந்தது. இங்குள்ள கடம்பவனத்தில் சுற்றித் திரிந்தது. ஒருநாள் இங்கு ஒரு குளத்தினைக் கண்டது. குளத் தில் மூழ்கி எழுந்ததும்அதன் கருநிறம் மாறி முன்னைய வெள்ளி நிறம் பெற்றதுடன் அளவற்ற ஆற்றலும் பெற்றது.

அது எழுந்தபின் கரையில் கடம்ப மரத் தின் கீழ் ஒப்பிலதாய் முளைத்த சிவலிங்கத்தைக் கண் டது. அதனுள்ளத்தில் அன்பு பொங்கியது. குளத்திலிருந்த மலர்களைப் பறித் துச் சூட்டியதுடன் நீரெடுத்து வந்து நீராட்டியது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

லிங்கத்தைப் பன்முறை வலம் வந்து பணிந்து வணங்கியது.

ஆனையின் அன்புநிறைந்த பூசையினால் மகிழ்ந்த சிவபெருமான் அதற்குக் காட்சியளித்து, யானை உமக்கு வேண்டிய வரத்தைக் கேள் என்றார். ஐயனே உம்மைக் கண்டு உமது அன்பைப் பெற்ற பிறகு வேண்டுவது எதுவுமில்லை. உமது விமானத்தைத் தாங்கும் எட்டு யானைகளோடு ஒன்பதாவது யானையாக நான் இருக்க விரும்புகிறேன். உமது திருவடியொன்றே எனக்குப் போதுமானது என்றது.

சிவபெருமான் யானையே எமது அருள் எப்போதும் உனக்கு உண்டு. நீ தேவலோகத்திற்கு உரியவன். நீ அங்குச் சென்று இந்திரனைச் சுமந்து மகிழ்ந்திருப்பாய் என்று கூறி விடை அளித்தார்.

ஐராவதம் கடம்பவனத்தின் மேற்கில் தம் பெயரால் சிவாலயத்தையும் விநாயகரையும் அமைத்து வழிபட்டது. அங்கு விசாலமான தீர்த்தமும் அமைத்தது. அது ஐராவத தீர்த்தம் என்றும் சிவபெருமான் ஐராவதேசுவரர் என்றும் விநாயகர் ஐராவத விநாயகர் என்றும் அழைக்கப்படுகின்றனர். அந்த இடம் ஐராவத நல்லூர் ஆனது. மேலும் அது இந்திரேசுவரர் எனும் லிங்கத்தையும் அமைத்து வழிபட்டது.

நடந்த வரலாற்றைக் கேள்வியுற்ற இந்திரன் ஏவலர் களை அனுப்பினான். அவர்கள் ஐராவதத்தை அழைத்துச் சென்றனர். ஐராவதம் அங்கு சென்று இந்திரன் வணங்கி அவனுக்கு வாகனமாயிற்று. தினமும் சிவபூசை செய்து கொண்டு மகிழ்ச்சியுடன் இருந்து வருகிறது.

திருவிளையாடற் புராணத்தில் இருபத்தி யோராவது படலம் கல்யானைக்குக் கரும்பருத்தியதைக் கூறுகிறது.

அபிஷேக பாண்டியன் மதுரையில் வீற்றி ருந்து அரசாண்டு வரும் நாளில் அவனுக்கு அருள்புரிய பெருமான் விரும்பினார். எல்லாம் வல்ல சித்தமூர்த்தியாக மதுரைக்கு எழுந்தருளினார். அளவற்றசித்து வேலைகளைச் செய்து அனைவரையும் அதிசயிக்க வைத்தார். (பார்க்க சிவமஞ்சரி பக்கம் 563) நகரம் எங்கும் அவரைப் பற்றிய பேச்சாகவே இருந்தது.

அரசன் அவரைப் பற்றிக் கேள்வியுற்றான். ஏவலர்களை அனுப்பி அழைத்து வருக என்றான். ஏவலர்கள் சித்தமூர்த்தியிடம் சென்று அரண்மனைக்கு வருமாறு அழைத்தனர். அவர்களிடம் ஏவலர்களே அரசானால் ஆவது எனக்கேதுமில்லை. ஆதலால் நான் அவனைச் சந்திக்க முடியாது வேண்டுமானால் அவனே வந்து என்னைச் சந்திக்கட்டும் என்று கூறிவிட்டார். ஏவலர்கள் அதை அப்படியே அரசனிடம் தெரிவித்தனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பின்னர்அவர் ஆலவாய் ஆலயத்துள் சென்று இந்திர விமானத்தின் வடமேற்கு முனையில் வீற்றிருந்தார். அன்று தைமாத முதல் நாள் என்பதால்,அரசன் ஆலயத்திற்கு வந்தான். ஏவலர்கள் எல்லோரையும் வழி விடும்படிக் கூறினர். அங்கிருந்த சித்தமூர்த்தி யிடம் எழுந்து அகலும் படிக் கூறினர்.

மன்னன் தான் தேடிச் செல்லும் சித்தர் இவர் என்பதை அறியாமல், அவரிடம் சென்று நீ யார் உமக்கு வேண்டுவது என்ன என்றான் பெருமான் நாம் எல்லாம் வல்ல சித்தன் தலயாத்திரையாக இங்கு வந்துள் ளேன். எனக்கு உம்மிடம் வேண்டுவது எதுவுமில்லை என் றார்.

அவருடைய அலட்சியமான வார்த்தைக ளைக் கேட்ட மன்னன், அவரைச் சோதிக்க விரும்பினான். அவ்வேளையில் உழவன் ஒரு வன் செழித்த கரும்பை எடுத்துவந்து அரச னிடத்தில் அளித்தான். அரசன் அதை சித்த ரிடம் காட்டி எல்லாம் வல்லவர் என்று கூறிக்கொள்ளும் நீர், இந்த விமானத்தைத் தாங்கி நிற்கும் யானையிடம் அளித்து இதை உண்ணச் செய்தால் கடவுள் நாயகன் நீரே என்றான்.

சித்தர் பெருமான் அங்கிருந்த யானையை நோக்கினார். அது கண் திறந்தது. பெருங்குரல் எடுத்துப் பிளிறியது. மன்னன் கரத்திலிருந்த கரும் பை வாங்கி உண்டது. பின்னர் அரசனின் மார்பிலிருந்த முத்து மாலையைப் பற்றி இழுத்தது. அதைக் கண்ட ஏவலர்கள் தடுக்க வந்தனர். அவர்களால் அசையக்கூட முடிய வில்லை அவர்கள் பெருமானைத் துதித்தனர்.

யானை வாயிலிருந்த முத்து மாலையை எடுத்து அரசனிடம் அளித்தது. யானை மீண்டும் கல்லாகிவிட்டது சித்தர் அம்மன்ன னுக்குப் பல வரங்களை அளித்தார்.

மதுரையை அழிக்க வந்த யானையைப் பெருமான் அழித்த வரலாற்றை இருபத்தி யிரண்டாவது திருவிளையாடல் கூறுகிறது.

ஒரு சமயம் சோழமன்னன் பலமுறை பாண்டியனை வெல்லப்படை எடுத்து வந் தான். அவனால் வெல்ல முடியவில்லை. படை எடுத்து வெல்ல முடியாது என்பதை உணர்ந்த அவன் சூட்சியினால் வெல்ல முடிவுசெய்தான்.

பாண்டியன் மீது பகை கொண்டிருந்த சமணர் களை அழைத்து அபிசார மந்திரம்ஓதி வேள்வி செய்தான். அதிலிருந்து பெரிய யானை தோன்றியது. அதைப் பாண்டியன்மீது ஏவினர். அது கொடுங்கோபத்துடன் மதுரை யை நோக்கி வந்தது.

அதன்பின்னர் எட்டுத் திசைகளிலும் ஒலித்தது. அதன் வருகை வேகத்தால் எங்கும் நடுக்கம் உண்டாயிற்று. பாண்டியன்கலங்கிச் சோம சுந்தரப்பெருமானைச் சரணடைந்தான். பெருமான் அசரீரியாக அஞ்சாதே மதுரையின் கிழக்கே அட்டாலை மண்டபத்தைக் கட்டுக என்றார். பாண்டியன் அவ்வாறே அமைத் தான்.

பெருமான் ஒரு வீரனாகத் தோன்றினார். அந்த மண்டபத்தில் ஏறி நின்றார். அவ்வே ளையில் யானையும் விரைந்து வந்தது. யானை யின் மீது பெருமான் அம்பெய்தார் அதுவீழ்ந்து மாண்டது. எல்லோரும் மகிழ்ந்தனர்.

அதன் உடல் வீழ்ந்த இடத்தில் பெரிய மலை உண்டாயிற்று. அதுவே ஆனைமலை ஆயிற் று என்பர். பார்ப்பதற்குத் தொலைவிருந்து இம் மலை யானை படுத்திருப்பதைப் போலவே உள்ளது.

மதுரையில்ஆனைக்கல் என்ற இடம் உள்ளது. அங்குக் கல்லாலான பெரிய யானை யின் உருவம் உள்ளது.

மதுரை ஐராவதேசுவரம்

வண்டியூர் தெப்பக்குளத்திற்கு மேற்கே தியாகராசர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிக்கு அருகில் ஐராவ தேசுவரர் ஆலயம் உள்ளது. திருமலை நாயக்கரின் சகோதரரான முத்து வீரப்ப நாயக்கரால் (1609-23) இக்கோயில் கட்டப்பட்டது. வண்டியூருக்கு அருகில் ஐராவத நல்லூர் என்ற ஊர் உள்ளது. இங்கும் சிவாலயம் உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



இந்திரேசுவரர்

இந்திரம் என்ற சொல்லுக்குத் தலைமை, முதன்மை பெற்றது என்பது பொருள். தேவர்களின் தலைவன் தேவேந்திரன் என்றும், முனிவர்களின் தலைவர்கள் முனீந்திரர்கள் என்றும், மிருகங்களின் தலைவனான சிம்மம் மிருகேந்திரன் என்றும் அழைக்கப்படுவது ஒப்புநோக்குக.

மேலும், அளவற்ற சுகம் என்பதும் பொருள். யாகங்களைச் செய்து மேன்மை பெற்றும் புண்ணியங் கள் செய்தும், தவங்கள் செய்து மேன்மை பெற்றும் வாழ்ந்தவர்கள் அதன் பயனாக இந்திர உலகத்தை அடைகிறார்கள். அந்த உலகத்தி ன் மக்கள் தேவர்கள் என்றும் அவர்களின் தலைவன் தேவேந்திரன் என்றும் அழைக்கப்படுகிறான்.

தேவர் உலகில் விரும்பியவற்றை வேண்டிய வாறு அளிக்கும் காமதேனு, கற்பக விருட்சம், சியமந்தகம் (எ) சிந்தா மணி முதலிய அனைத்துச் செல்வங்களும் நிறைந்துள்ளன. தங்கள் ஆடல்பாடல்களாலும் அழகா லும் மகிழ்விக்கும் எண்ணற்ற தேவமாதர்கள் உள்ள னர். அளவற்ற ஆயுதங்களும் அங்கே உள்ளன.

அந்த உலகத்தில் உள்ளவர்கள் சிவபக்தி நிரம்பி யவர்கள். தங்கள் வாழ்வு நிலைத்திருக்க சிவபூசை புரிகின்றனர். அவர்களில் அரம்பையர்கள், ஐராவதம், கற்பக விருட்சம் ஆகியோர் அவ்வப்போது பூமிக்கு வந்து சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்கின்றனர். அவர்களோடு இந்திரனும் பூமிக்கு வந்து வழிபாடுகள் செய்கிறான்.

பல சமயங்களில் இந்திரன் செல்வச் செருக்கால் பெரியோர்களை அவமதித்து அவர்களின் சாபங்களைப் பெற்றான். தனது பதவிக்குப் போட்டியாக வந்து விடுவார்கள் என்று எண்ணிக் கடுந்தவம் செய்பவர்களின் தவத்தைக் கலைத்து அவர்களால் சபிக்கப்பட்டான். அமரர் உலகத்திலுள்ள சுகங்களை அனுபவிக்க விரும்பிய அசுரர்கள் பல சமயங்களில் அவனது நாட்டைப் பற்றிக்கொண்டு அவனை அடித்துவிரட்டி நாடோடியாக்கினர். இத்தகைய இக்கட்டான சமயங்களில் எல்லாம் தேவேந்திரன் பூமிக்கு வந்து சிவவழிபாடு செய்து தன் சிவனருளால் நாடு அடைந்தான்.

சிவமஞ்சரியின் இந்த ஐம்பத்து ஏழாவது மலரின் இரண்டாம் பகுதி தேவேந்திரனின் சிறப்புக்கள், அவன் சிவ வழிபாடு செய்து பேறு பெற்ற தலங்கள், இந்திர விழாக்கள் பற்றிய செய்திகளைத் தாங்கி மலர்கிறது. இவற்றை அறிந்து மகிழத் தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

இந்திரப் பிரசாத வல்லி உடனாய இந்திரேசுவரர் அருளினால் அன்பர்கள் இந்திர போகங்களுடன் சகல செல்வ யோக மிக்க பெருவாழ்வைப் பெற்று இன்ப முடன் வாழப் பிரார்த்திக்கிறோம். வாழி நலம் சூழ!

–

—சிவசுந்தரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்திரன் – சிந்தனைத்துளிகள்

❂ உலகைப் படைக்கும் போதே வேதங்களில் சொல்லப்பட்ட யாகங்களைச் செய்து மேன்மை பெற்றவர்களும் நிலைபெற்றவர்களும் சுகமுடன் தர்மத்தில் வாழ்வதற்காக இறைவன் சுவர்க்கலோகம் என்ற இந்திர லோகத்தைப் படைத்தளித்தார். அதன் தலை நகரம் அமராவதிப் பட்டினம் .

அங்கு வாழ்பவர்கள் உழைக்கத் தேவையில்லை,ஏவலர்களும், காவலர்களும் இல்லை. வேண்டிய ஆடைகளை விரும்பும் வண்ணத்திலும், வடிவத்திலும் தரும் வஸ்திரங்கம் எனப்படும். கற்பக மரங்களும்,ஆயுதங்களைத் தரும் ஆயுதாங்கம் எனப்படும் கற்பக மரங்களும் உள்ளன. வேண்டிய உணவை விரும்பும் சுவைகளில் வேண்டியவாறு அளிக்கும் காமதேனு முதலான பசுக்கள் உள்ளன. நேரத்தை இன்பமுடன் கழிக்க ஆடல் பாடல்களில் வல்ல ஊர்வசி,ரம்பை, திருலோத்தமை, மேனகை முதலான அழகிய பெண்களும் இசைக் கலைஞர்களும் உள்ளனர்.

❂ ஈசானனைத் தவிர மற்றைய ஆறு திசையின் பாலகர்களான அக்னி, யமன், வருணன், வாயு, குபேரன், முதலியோர் அவனிடம் ஏவல் புரிகின்றனர்.

❂ இந்திரனின் பட்டத்து யானை ஐராவதம், பட்டத்துக் குதிரை உச்சை சிரவஸ், அவனது பல்லக்கு சதர்சனம், அங்கு சோம பானம், சுராபானம் முதலிய இன்பம் தரும் பானங் கள் உள்ளன.

❂ இவ்வளவு சுகங்கள் தானே கிடைப்பதால், இந்தப் பட்டினத்தைக் கைப்பற்றி இதிலுள்ள சுகங்களை அனுபவித்து இன்பமுடன் வாழ அசுரர்கள் விரும்புகின்றனர். அவர்கள் வலிமை பெறும்போது இதைக் கைப்பற்றிக் கொள்கின்றனர். அவர்களிடமிருந்து அதை மீட்கும் வலிமை தேவர்களுக்கு இல்லை. அவர்கள் சிவபூசை செய்து அவர் அருளாலேயே அதை மீண்டும் பெறுகின்றனர்.

❂ தேவர்கள் பாற்கடலைக் கடைந்து அமுதத்தைப் பெற்று அருந்தியதால் இறவாமை உடையவர்களாக இருக்கின்றனர். அவர்களின் கண்கள் இமைப்பதில்லை. அவர்களின் கால்கள் பூமியில் பதிவதில்லை. அவர்கள் சூடியுள்ள மாலைகள் வாடுவதில்லை.

❂ தேவர்களும், அரம்பையர்களும், காம தேனு, கற்பகவிருட்சம் முதலியனவும் மண் மேல் வந்து தம் சுகவாழ்வு நிலைபெற்றிருக்க சிவபூசை செய்து கொண்டிருக்கின்றனர்.இந்திர உலகின் குரு ப்ரகஸ்பதியாவார். இவர் நவக் கிரகங்களில் ஒருவராவார்

❂ இந்திரன் மலைகளின் சிறகுகளை அரிந்தவன் அதனால் மலைகள் பூமியில் நிலைபெற்றிருக்கின்றன

❂ இந்திரனின் மனைவி இந்திராணி. அவளும் ஓயாது சிவபூசை செய்கிறாள். சப்த மாதர்களில் ஒருத்தியான இந்திராணியிலிருந்து இவள் வேறானவள். இந்திராணி பூசித்த தலம் சீர்காழி.

❂ இந்திரனுக்கு ஆயிரங்கண்ணோன், கண்ணாயிரமுடையான், அமராவதி காவலன், புரந்தரன், திவஸ்பதி, தேவராஜன், சரத்கிருது (நூறு யாகங்களைச் செய்தவன்) என்ற பெயர்கள் வழங்குகின்றன. மேலும் வரை சிறகரிந்தோன் (மலைகளின சிறகுகளையும் வெட்டியவன்) புலோசமன் புரோகிதன், தழல் இடிக் கொடியினன், வேந்தன், மருத்துவன் , மேகவாகனன், துச்சவன், தருமன், இந்திரன் என்ற பெயர்களை நிகண்டுகள் கூறுகின்றன.

❂ செந்தாமரை மலர்களைக் கொண்டு திருமாலும், வெண்தாமரை மலர்களைக் கொண்டு பிரமனும், பொன் (மஞ்சள்) தாமரை மலர்களைக் கொண்டு இந்திரனும் சிவபூசை செய்கின்றனர். அவன் பொற்றாமரை மலர்களைப் பெற அமைத்த தடாகங்கள் பொற்றாமரைக்குளங்களைத் திருநெல்வேலியிலும் மதுரையிலும் காணலாம். திருநீடூர் என்னும் தலத்தில் அகழியில் தாமரை மலர்க்கொடிகளை நட்டு வளர்த்து அதில் மலர்ந்த ஓராயிரம் மலர்களைக் கொண்டு சிவபூசை செய்தான் என்று கூறப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்திரன் வழிபட்ட தலங்கள்

இந்திரன் வழிபட்ட தலங்கள் அவன் பெயரால் இந்திரேச்சரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இந்திரன் தனியாகவும் அட்ட திக்குப் பாலகர்களுடன் சேர்ந்தும், அரம்பையர், காமதேனு முதலான பல பணியாளர்களுடன் கூடியும் சிவபூசை செய்துள்ளான். அவன் தனியாக நின்று பூசித்த தலங்கள் சிலவற்றைக் காணலாம்.

திருக்கைச் சின்னம் (திருக்கச்சனம்)

திருவாருருக்குத் தெற்கிலுள்ள தலம் திருக் கச்சினம். இந்திரன் மணலால் சிவலிங்கம் அமைத்து வழிபட்ட தலம். பிறகு அந்த லிங்கத்திலைப் பற்றியெ டுக்க முயன்றான். அது முடியவில்லை அவனுடைய கைகளின் அடையாளம் அதில் பதிந்தது. கைச்சின்னம் பதிந்திருப்பதால், பெருமான் கைச்சின நாதர் என்று அழைக்கப்படுகிறார். அம்பிகை வெள்வளைநாயகி.

இந்திரன் அமைத்த இந்திர தீர்த்தமும், வச்சிர தீர்த்தமும் கோயிலுக்கு வடக்கிலும் தெற்கிலும் உள்ளன. சிவபெருமான் அவனுக்குத் தியாகராஜராகக் காட்சியளித்தார் அதையொட்டி இந்திர விழா கொண்டாடப் படுகிறது. தியாகராஜர் சந்நிதி இங்கு சிறப்புடன் உள்ளது.

திருக்கடம்பூர் (கரக் கோயில்)

ஒரு சமயம் பூமிக்கு வந்த இந்திரன் கடம்பூரில் அமிர்த கும்பத்தை சிவலிங்கமாக வைத்துப் பூசித்தான். அதற்கு மயன் தேர் போன்ற ஆலயத்தைக் காட்டினான். இந்திரன் அந்த ஆலயத்தை அப்படியே பெயர்த்தெ டுக்க எண்ணிஅகழ்ந்தான். முடியவில்லை. அந்த ஆலயம் கரக் கோயில் என்று அழைக்கப்படுகிறது.

இது பாடல் பெற்ற தலமான ஓமாம் புலியூருக்கு வடமேற்கில் உள்ளது. ஆலயம் தேர் வடிவில் உள்ளது. சக்கரங்களும் அதை இழுக்கும் குதிரைகளும் அதியற் புதமாக அமைக்கப்பட்டுள்ளன. ஸ்ரீ விமானத்தில் நிலை களின் பெயர்கள் கல்வெட்டுக்களாகப் பொறிக் கப்பட் டுள்ளன. இறைவன் அமிர்தகடேசுவரர்; அம்பிகை சோதிமின்னமை

திருச்சாய்க்காடு (சாயாவனம்)

பூம்புகாரின் ஒரு பகுதியாகத் திகழ்வது சாயா வனம். இந்திரன் பூசித்த தலம். மேலே சொன்ன தலவர லாற்றில் குறிப்பிட்டது போலவே) இக்கோயிலுடன் இறைவனையும் பெயர்த்து எடுத்துச் செல்ல இந்திரன் முயன்றதாகக் கூறுகின்றனர். இதுவும் தேர் வடிவ விமானமாகும்.



இந்திரப் பிரசாதவல்லி – மருதாடு

கிணார்

திருச்சி–சென்னை தேசிய நெடுஞ்சாலையில் மதுராந்தகத்திற்கு அருகிலுள்ள கருங்குழியிலிருந்து சற்று உள்ளடங்கியவாறு கிணார் என்ற ஊர் உள்ளது. இங்குள்ள பெருமான் வீரவன நாதர் என்ற ழைக்கப்படுகிறார். இது இந்திரனும் அரம்பையர் களும் ஐராவதமும் வழிபட்டுப் பேறுபெற்ற தலம். கருவறையில் சிவலிங்கத்திற்குப் பின்னணியில் கருவறைச் சுவர் முழுதும் சோமாஸ்கந்தர் வடிவம் இடம் பெற்றுள்ளது. அதில் அரம்பை பெருமானை வழிபடும் வடிவமும் உள்ளது.

திருவாரூரில் இருக்கும் தியாகேசப் பெருமானை அளித்தவன் இந்திரனே. தியாகேசரைப் போற்றி அவன் துதி செய்து கூறிய நூலே இந்திர சகஸ்ர நாமாவளி ஆகும். இதைக் கூறி தியாகராஜரை வழிபடுபவர்கள் இந்திர உலகிற்கு இணையான பயனைப் பெறுவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கருவறைக்கு நேர் எதிரில் நந்திக்கு அருகில் ஐராவதத்தில் தாமரை மலர் ஏந்தி அமர்ந்திருக்கும் இந்திரன் வடிவம் உள்ளது. திருக்கழுக்குன்றத்தில் இந்திரன் வழிபட்டபோது இங்குத் தங்கி இப்பெருமானையும் வழிபட்டுள்ளான். தினமும் மாலையில் அவன் இங்கு வழிபடுவதாக ஐதீகம்.

காஞ்சி

காஞ்சியின் புராதன சிவாலயம் சத்யவிரத நாதம் எனப்படும் கச்சிநெறிக் காரைக்காடு ஆகும். இது தேவாரப் பாடல் பெற்ற திருதலம். அம்பிகை ஏகாம்பர நாதரை வழிபடுவதற்கு முன்பாகவும், திருமால் கச்சப அவதாரத்துடன் வழிபடுவதற்கு முன்பாகவும் தோன்றிய திருத்தலம்.இறைவன் தர்மதேவதைக்கு அருள் புரிந்த தலம். இங்கு இந்திரன் வழிபட்டுப் பேறு பெற்றான். அவன் அமைத்த இந்திர தீர்த்தம் ஆலயத்தின் முன்புறம் பாழ்பட்டுள்ளது. இறைவன் சத்திய விரத நாதர். (போக சக்தி) அம்பிகை பிரமராம் பிகை. பிரகாரத்தில் இந்திரன் திருவுருவம் உள்ளது.

இந்திரனை அதிதேவதையாகக் கொண்ட புத தேவன் இங்கு வழிபட்டுப் பேறு பெற்றான். புதனின் திருவுருவமும் இங்கே உள்ளது. புதன் கிழமைகளில் இந்திரன், புதன் ஆகியோரைச் சத்திய விரத க்ஷேத்திரத்தில் வழிபடுபவர்கள் இந்திர உலகம் பெறுவர்

மருதிடை நின்ற இந்திரன்

இந்திரன் விருத்திராசுரனைக் கொன்றதால் வந்த பிரம்மஹத்தி தோஷத்தின் அட்டகா சத்திற்குப் பயந்து தாமிரபரணிக் கரையில் மருத மரமாகி நின்றான். அவனைப் பல இடங்களில் தேடியும் தேவர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை.

இறுதியில் சிவபெருமானைச் சரணடைந்தனர். அவர் மருதமரமாகி நிற்கும் இந்திரனிடம் சென்று சிவலிங்கமாகத் தோன்றினார். அவன் அவரை வழிபட்டான். தேவர்களும் அங்கு வந்து வழிபட்டனர்.பெருமான் லிங்கத்திலிருந்து வெளிப்பட்டு இந்திரனுக்கு அருள் புரிந்தார். அவனுடைய அச்சத்தைப் போக்கினார். மீண்டும் அமராவதியின் சிம்மாசனத்தில் அமர்த்தினார் - திருநெல்வேலிப் புராணம்

கீழ்வேளூர்

கீழ்வேளூர் என்ற தலத்தில் அவன் சித்திர கூடகிரி என்ற கட்டுமலை மீது பெருமானை அமர்த்தி வழிபட்டான் சிவபெருமான் வெளிப்பட்டு அவனது பாவங்களை நீக்கினார். தேவ குருவான பிரகஸ்பதியை அழைத்து மீண்டும் தேவகுருவாக இருந்து கடமைகளைச் செய்ய உதவ வரவேண்டுமென்று ஆணை இட்டார்.

இந்திரன் தேவகுருவைப் பணிந்து மீண்டும் ஏற்றுக் கொண்டான். இது இந்திர குருசாப விமோசனத் தலமாகும். இந்திரனும் அகத்தியரும் வழிபட்ட தலம்.

இந்திரபுவனேஸ்வரர்

சிதம்பரம் கிழக்கு ரத வீதியில் தேர்முட்டுக்கு அருகில் இந்திர புவனேசுவரர் ஆலயம் என்ற சிவாலயம் உள்ளது. இது இந்திரன் வழிபட்ட தலமாகும். சைவ சித்தாந்தம் கூறும் 294 புராணங்களில் புத்தி தத்துவத்தில் 153ஆவது புவனமாக இந்திர புவனம் உள்ளது. இதன் தலைவன் இந்திரதேவன். அவன் இங்கு வந்து வழிபட்டு இந்த லிங்கத்தை அமைத்தான் என்பர்.

பதினான்கு இந்திரர்கள்

உருத்திரர் பதினொருவர்(ஏகாதச ருத்திரர்), ஆதித்யர் பன்னிருவர், (துவாத ஆதித்யர்), லட்சுமிகள் எண்மர். (அஷ்டலட்சுமிகள்) துர்க்கைகள் ஒன்பதின்மர் (நவ துர்க்கைகள்) என்பதைப் போல இந்திரர்களைப் பதினான்கு பேர்களாகக் கூறுவர். இந்திர கணத்தில் இவர்கள் தலைவர்களாவர். இவர்களின் பெயர் முறையே அற்புதமன், விபசித்து, சுகாந்தி, சிபி, விபு, மனோகரன், புரந்தரன், மாவலி அற்புதன், சாந்தி, விருடன், இருததாமன், திவஸ்பதி,சுசி என்பனவாகும். இவர்கள் பதினால்வரும் ஒருவர் பின் ஒருவராக இந்திர உலகை ஆள்வர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்திரனுக்கு அருள்புரிந்த ஆலவாய் அண்ணல்



இந்திரன் அனேக தலங்களில் சிவவழிபாடு செய்துள்ளான். அவற்றில் முதன்மை பெற்றது மதுரை. அவன் அங்கு வழிபாடு செய்ததைத் திருவிளையாடற்புராணம் கூறுகிறது.

ஒரு சமயம் இந்திர சபைக்கு தேவர் களின் குருவான பிரகஸ்பதி வந்தார். இந்திரன் தேவ மங்கையரின் ஆடல்பாடல்களில் மூழ்கி இருந்ததால் அவர் வரவை அவன்கவனிக் கவில்லை. கோபம் கொண்ட தேவகுரு மறைந்தார். தகுந்த படி அறிவுரை கூற ஆளில்லாததால், இந்திர னும் தேவர்களும் துன்புற்றனர்.

அச்சமயம் வேள்வி ஒன்று செய்ய நிச்சயிக்கப்பட்டிருந்தது. தேவகுரு இல்லாததால் இந்திரன் துவஷ்டா என்ற அசுரனின் மகனாகிய விச்சுவனைக் குருவாக ஏற்று அந்த வேள்வியைச் செய்தான்.

விச்சுவன் வேள்வியால் தேவர்களுக்கு நன்மை உண்டாக வேண்டுமென்று வாயினால் சொல்லிக் கொண்டே வேள்வி செய்தாலும், மனதிற்குள் அசுரர்களுக்கு நன்மை யுண்டாகப் பிரார்த்தித்துக்கொண்டே நடத்தினான். அதை உணர்ந்த இந்திரன் அவனுடைய மூன்று தலைகளையும் வெட்டினான். அவை பருந்து, காகம், கழுகு, வடிவம் பெற்றுப் பறந்தன. அவனையும் தேவர்களையும் பாவம் சூழ்ந்தது. இதனால் எல்லோரும் ஒளி இழந்து கலங்கினர்.

விச்சுவ உருவனின் தந்தை இந்திரனால் தம் மகன் கொல்லப்பட்ட செய்தியை அறிந்து அவனை அழிக்க ஒரு வேள்வி இயற்றினான். அதிலிருந்து விருத்திராசுரன் என்பவன் தோன்றினான். அவன் இந்திரனை வென்றான். வஜ்ஜிராயுதத்தை தூளாக்கி விட்டான். பின்னர் கடலுக்கடியில் சென்று தவம்புரியத் தொடங்கினான்.

இந்திரன் ததீசி முனிவரிடம் சென்று அவருடைய முதுகுத்தண்டை யாசித்துப் பெற்றான், அதன்மூலம் புதிய வஜ்ஜிராயுதத்தைத் தேவர்கள் உருவாக்கினர். விருத்திரனை அழித்த பிறகே தாம் நிம்மதி பெற முடியும் என்று கருதினர். அவனைப் பல இடங்களிலும் தேடி அலைந் தனர். மண்ணிலும் விண்ணிலும் தேடியும் அவன் அகப்படவில்லை. இறுதியில் கடலுக் குள் தவம் செய்வதை அறிந்தனர்.

இந்திரன் அகத்தியரிடம் சென்று, அவனைப் பிடிக்க கடலை வற்றச் செய்து உதவிட வேண்டினான். அகத்தியர் கடல் நீரைச் சுருக்கி மூன்று உள்ளங்கை அளவாகச் செய்து குடித்தார். இந்திரன் விருத்திராசுரனைக் கண்டு பிடித்து அவனைக் கொன்றான். தேவர்களுக்கு அசுரர்களிடமிருந்த அச்சம் நீங்கியது. விருத்திரனையும், வேதத்தில் வல்ல விசுவசிரனையும் கொன்றதால் உண்டான பாவம் அவனை வருத்தியது.

எல்லா சுகங்களும் இருந்தும் எதையும் அனுபவிக்க முடியவில்லை. அரியணையில் அமர்ந்தால் கழுத்தை நெறித்துக் கீழே தள்ளுவது போல் இருந்தது. அரம்பையர்களின் ஆடல் பேய்க்கூத்து போல்தெரிந்தது. இனிய உணவுகள் யாவும் கசந்தது. எதைக் கண்டா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

லும் வெறுப்பானது .இந்திரன் அடைந்த துன்பத்திற்கு அளவே இல்லை. அது நீங்க அவன் பல தலங்களுக்குச் சென்று வழிபட்டான் இறுதியாக ஒரு குளத்தில் இருந்த தாமரைத் தண்டில் ஒளிந்திருந்தான். அவனைக் காணாது எல்லோரும் தவித்தனர். தமக்கு உரிய வழி காட்டுதல் இல்லாததால் இவ்வளவும் விளைந்தது என்று எண்ணினார். தேவகுருவான ப்ரகஸ்பதியை நோக்கி தவம் செய்தனர். அவர் அவர்களுக்கு இரங்கி வெளிப்பட்டார். அவர்கள் அவருடைய மலரடியில் வீழ்ந்து வணங்கினர்.

அவர் தன் ஞானப் பார்வையால் இந்திரன் இருக்கும் குளத்திற்கு வந்தார். அவனை வெளியே அழைத்தார் அவன் அவரை வணங்கி தன் பிழையைப் பொறுக்கும் படி வேண்டினான். குரு அவனிடம் உனக்கு நேர்ந்த துன்பம் சிவனருளால் மட்டுமே நீங்கும். காசி முதல் குமரிவரைஉள்ள தலங்களுக்குச் சென்று வழிபடு என்றார். அதன்படி அவன் பல தலங்களில் வணங்கி கடம்பவனத்தை அடைந்தான். அவன் மனதிலிருந்த கலக்கம் நீங்கியது. பெரும்பாரம் இறங்கியது போன்ற உணர்வை அடைந்தான்.

குருபகவான் இந்தக்காட்டில் மகத்து வம் மிக்க தலமும் புனிதத் தீர்த்தமும் இருக்கவேண்டும். அவற்றை நாம் காண வேண்டும். தேடுக என்றார். இந்திரன் சில தேவர்களுடன் தானும் தேடினான்.

தூதர்கள் அங்கிருந்த பொற்றாமரைக் குளத்தையும் அதன் கரையில் கடம்ப மரத்தின்கீழ் சிவலிங்கத்தையும் கண்டு அதை இந்திரனிடம் கூறினர். இந்திரன் அந்த லிங்கத்தைக் கண்டு பேருவகை அடைந்தான். அங்கு சிவபூசைகளைச் செய்ய ஏற்பாடு செய்தான். இந்திர உலகத்தில் இருக்கும் தனது ஒப்பற்ற விமானத்தைப்போன்ற ஒரு விமா னத்தை மயனைக் கொண்டு அந்த லிங்கத்திற்கு அமைத்தான். அவருக்குப் பூசை செய்ய விரும்பி மலர்களைத் தேடினான். சிவபெருமான் அங்கிருந்த குளத்தில் பொன் மய மான தாமரைப் பூக்கள் தோன்றுமாறு செய்தார். அவற்றைப் பறித்து வந்து பக்தியுடன் சிவ பூசை செய்தான்.

அவனுடைய வழிபாட்டினில் மகிழ்ந்த சிவபெருமான் லிங்கத்திலிருந்து வெளிப்பட்டார். அவனுடைய ப்ரம்மஹத்தி தோஷத் தை நீக்கி அவனை மேன்மைப்படுத்தினார். அவன் சுகம் பெற்று தன்னாடு திரும்பி னான். பெருமான் தனக்கு அருள்புரிந்த சித்ரா பௌர்ணமியன்று ஆண்டுதோறும் இங்கு வழிபாடு செய்கின்றான் என்பர். இங்கு அட்டதிக்குப் பாலகர்களுடன் இந்திரன் திருவுருவம் உள்ளது.

இந்திரனின் மேகங்கள் வழிபட்ட மேகநாதர்

இந்திரன் மழைக்குக் கடவுள் உழவுக்கு ஆதாரமான நீரை மழையாகப் பொழியும் மேகங்களை உடையவன். அதனால் மேகவாகனன் என்று அழைக்கப்படுகிறான். அவனை மருத நிலத்தின் கடவுளாகப் போற்றுகின்றனர். அவனிடம் புஷ்பகம், ஆவணி, புஷ்பக தரணி, சல நிதி ,சலா நிதி , நீலம், சலவாரிணி என்னும் ஏழு மேகங்கள் உள்ளன. இவை கடல்நீரை ஆவியாக முகந்து சென்று மழையாகப் பொழிகின்றன. இந்த மேகங்கள் மோதி மழை பெய்யும் போது இடியும் மின்னலும் தோன்றுகின்றன.

மேகநாதனான இந்திரனும் மேகங்களுக்குரிய தேவர்களும் வழிபட்ட இடம் திருமீயச்சூர் பெருமான் மேகநாதர் அம்பிகை சௌந்தர நாயகி.

முருகன் பாண்டிய நாட்டில் உக்கிரப் பெருவழுதியாகத் தோன்றி அரசாண்டு வந்த காலத்தில் மேகங்களைச் சிறைப்படுத்தி இந்திரனின் கர்வத்தை அழித்துத் திருவிளையாடல் புரிந்துள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்திர கர்வ பங்க மூர்த்தி

இந்திர கர்வ பங்க மூர்த்தி–
காஞ்சிபுரம் கயிலாயநாதர் ஆலயம்

இந்திரன் தன்னை மக்கள் முறையாக வணங்காத போது அவர்களை அச்சுறுத்தி தண்டிப்பான். யாதவர்கள் மேகத்துக்கு அதிபதியான இந்திரனை வழிபட்டு வந்தனர். ஒரு சமயம் கண்ணபிரான் யாதவர்களிடம் இனி இந்திரனை வணங்க வேண்டாம். நமது கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலமாக விளங்கும் கோவர்த்தன கிரியை வணங்கினால் போதும் என்றார். யாதவர்களும் கோவர்த்தன மலைக்கு வழிபாடு செய்து ஆடிப்பாடி மகிழ்ந்தனர்.

தன்னை வழிபடாது மலையை வழிபடும் கோகுலவாசிகளைக் கண்டு இந்திரன் கோபித்தான். மேகங்களைக் கூட்டி கடும் மழை பொழிவித்தான். கிருஷ்ணன் கோவர்த்தன கிரியைச் சுண்டு விரலால் தூக்கி குடையாகப் பிடித்தான். யாதவர்கள் அதன்கீழ் தங்கி இருந்தனர். ஏழு நாட்கள் கடும் மழை பொழிவித்தும் அவர்களைத் துன்புறுத்த முடியாது தோற்ற இந்திரன் கண்ணபிரானைச் சரணடைந்தான்.

இதுபோன்று இந்திரன் கர்வம் கொண்டு சிவனடியார்களையும், சிவத்தலங்களையும் அழிக்க முற்பட்ட போது சிவபெருமான் வெளிப்பட்டு அவனுடைய கர்வத்தை அடக்கி அருள்பாலித்ததைக் காண்கிறோம்.

ஒரு சமயம் இந்திரன் மிகுந்த அகங்காரத்துடன், கயிலை மலைக்குச் சென்று சிவபெருமானை வெற்றி கொண்டு அவரை அடக்கி வைக்க எண்ணினான். அதை யறிந்த சிவபெருமான் அவன் வரும் வழியில் ஒரு தடாகத்தில் தாமரை மலர் மீது சிறிய யட்ச வடிவுடன் வீற்றிருந்தார்.

அவ்வழியே இந்திரன் கடந்து செல்லும் போது, இந்திரா கடுங்கோபத்துடன் எங்கே செல்கிறாய் என்றார். அவன் சிவபெருமானை வென்றடக்கச் செல்வதாகக் கூறினான்.

அதற்கு யக்ஷன், நீ சிவனை வென்றடக்குவது இருக்கட்டும். நான் வைக்கும் இத்துரும்பை அசைத்து விட்டுச் செல் என்றான். இந்திரன் அலட்சியமாக அதை எடுக்க முயன்றான். அவனால் முடிய வில்லை. யமனை விட்டுப் பெயர்க்கும்படி கூறினான்.அவன் முயன்று தோற்றான். வாயு முயன்று தோற்றான். அக்கினி அதை எரிப்பதாக ஆர்ப்பரித்து வந்து அடங்கி நின்றான்.

அவர்களுடைய ஆற்றாமையைக் கண்டு யக்ஷன் அட்டகாசமாகச் சிரித்தான். அதைக் கண்ட கோபித்த இந்திரன் அவன் மீது தனது வஜ்ராயுதத்தை ஏவினான். யக்ஷன் அதை எளிதாகப் பற்றிக் கீழே வீசி அலட்சியமாகப் பார்த்துச் சிரித்தான்.

இந்திரன் மிகுந்த கோபத்துடன் யக்ஷன் மீது பாய்ந்தான். பிரமன் அவனைத் தடுத்து நல்லறிவு புகட்டினான். இந்திரன் தன் தவற்றை உணர்ந்தான். யக்ஷனைப் பணிந்தான். யக்ஷ வடிவத்தை நீக்கிச் சிவ பெருமான் காட்சியளித்தார்.

இந்திரன் பணிந்து வேண்டினான். இந்திரனின் கர்வத்தை அடக்கிய இந்த திருவிளையாடல் இந்திர கர்வபங்கம் என்றும், இந்திரனுக்கு அருள் செய்த மூர்த்தி இந்திர கர்வபங்க மூர்த்தி என்றுஅழைக்கப் படுகிறார்.

காஞ்சிபுரம் கயிலாயநாதர் ஆலயத்தின் பிரகா ரத்தில் இந்திர கர்வ பங்க மூர்த்தியின் வரலாற்றுக் காட்சி புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது.

மயிலாடுதுறையை அடுத்த கருப்பறியலூர் என்ற தலத்தில் இவ்வரலாறு நிகழ்ந்ததாகக் கூறுவர். இத்தலம் இந்நாளில் தலை ஞாயிறு என்று அழைக்கப்படுகிறது. மேலைக்காழி என்று அன்பர்கள் கூறுவர். இறைவன் இந்திரனுடைய குற்றங்களைப் பொறுத்ததால், குற்றம் பொறுத்தருளிய நாதர் என்றழைக்கப் படுகிறார். அம்பிகை கோல் வளை நாயகி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்திரனின் பல்வேறு பெயர்களில் அமைந்த சிவாலயங்கள்

இந்திரனுக்கு அவனுடைய சிறப்புக்களை ஒட்டி பல்வேறு பெயர்கள் அமைந்துள்ளன. அவற்றில் ஆயிரங்கண்ணோன் - கருங்குயில்நாதன், புரந்தரன், மகேந்திரன் முதலியவை சிறப்புப் பெற்றவைகளாகும். அவன் அமைத்து வழிபட்ட லிங்கங்கள் அவனுடைய சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகின்றன. அவற்றில் சிலவற்றைக் காணலாம்.



மருதாடு புரந்தரேசர்

மேல்மருவத்தூர்–வந்தவாசி சாலையில் அமைந்துள்ள ஊர் மருதாடு. மருதங்காடு என்பதே மருவி மருதாடு என்று அழைக்கப்படுகிறது.மருத வனத்தில் இந்திரன் சிவலிங்கம் அமைத்து வழிபட்டான்.அந்த லிங்கம் இந்திரனின் வேறுபெயரான புரந்தரன் எனும் பெயரால் புரந்தரேசுவரர் என்றழைக்கப்படுகிறது. இங்குள்ள அம்பிகை இறைவனிடம் பரிந்து பேசி இந்திரனுக்கு அருள்புரியச் செய்த தால் இந்திரப் பிரசாத வல்லி என்று அழைக்கப் படுகிறாள்.

கர்ணாபேட்டை என வழங்கும்

கருங்குயில் நாதன்பேட்டை

மயிலாடுதுறையிலுள்ள துலாக்கட்டத்திற்கு 1.5 கி.மீ. தொலைவில் உள்ளது இந்திரன் குயில் வடிவுடன் பூசித்த தலம் என்பர். தக்கன் யாகத்திற் கலந்து கொண்ட வர்களை அழிக்க வந்த வீரபத்திரரைக் கண்டு இந்திரன் அஞ்சி குயில் வடிவுடன் பறந்தான். அவ்வடிவுடனேயே இங்கு வந்து வழிபட்டான். இங்குள்ள தீர்த்தம் கருணை தீர்த்தம்.

குறுமாணக்குடி கண்ணாயிரநாதர்

வைத்தீசுவரன் கோயிலுக்குத் தென் கிழக்கில் 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள தலம் தேவாரத்துள் திருக்கண்ணார் கோயிலென்றும் நடைமுறையில் குருமாணக்குடி என்றும் வழங்குகிறது.

கௌதம முனிவரின் சாபத்தால் உடலெங்கும் பெண்குறிகளாகிவிட்ட இந்திரன் அந்தக் கோலத்தால் அவமானமடைந்தான். வெளியில் நடமாட அஞ்சி காட்டில் ஒளிந் தான். இந்திராணி அவனைக் கண்டு இத்தலத்திற்கு அழைத்து வந்தாள். கொன்றை வனத்தில் எழுந்தருளியிருந்த பெருமானை வழிபடும் படிச் செய்தால் பெருமான் அந்த லிங்கத்திலிருந்து வெளிப்பட்டு அவன் மேனியில் உண்டான குறிகள் மறைந்து கண்கள் தோன்று படிச் செய்தார். ஆயிரம் கண்ணனாகி நின்ற இந்திரன் வழிபட்டதால் பெருமான் ஆயிரங்கண் ணர் என்றும் கண்ணாயிரநாதர் என்றும் பெயர் பெற்றார். அம்பிகை முருகு வளர் கோதை. தீர்த்தம் இந்திர தீர்த்தம்.

மகேந்தரபள்ளி மகேந்திர நாதர்

சிதம்பரம் மயிலாடுதுறை சாலையில் கொள்ளிடம் என்றஊர் உள்ளது. இங்கிருந்து கிழக்கே ஏறத் தாழ 15 கி.மீ. தொலைவில் மகேந்திர பள்ளி உள்ளது. மகேந்திரன் என்னும் இந்திரன் வழிபட்டதலம். இந்திராணி பூசித்த தலம். இந்திரன் மனைவியுடன் வசித்து வந்த இடம் கோயிலடிப் பாளையம் என வழங்குகிறது. இறைவன் மகேந்திர நாதர் என்னும் திருமேனியழகர் அம்பிகை வடிவாம்பிகை இங்கு எலி வழிபட்டு பேறு பெற்றது

ஆங்காடு இந்திரேசுவரர்

சென்னையை அடுத்த பொன்னேரிக்கு அருகில் ஆங்காடு எனும் ஊர் உள்ளது. இங்கு இந்திரன் அமைத்து வழிபட்ட சிவலிங்கம் இந்திரேசுவரர் எனும் பெயரிலுள்ளது.

ஆகண்டலன் என்பது இந்திரனுக்குரிய பெயராகும். பகைவர்களுக்கு அஞ்சி அவன் ஒளிந்திருந்து சிவபெருமானை வழிபட்ட வனம் அவன் பெயரால் ஆகண்டலன் காடு எனப் பட்டது. அது மருவி ஆங்காடு என வழங்குகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுசீந்திரம் தாணுமாலயன்

இந்திரன், தான் மேன்மை அடைவ தற்காக மும்மூர்த்திகளும் ஒரே மூர்த்தியாக காட்சியளிக்கும் இடமான கொன்றை வனத்தில் வழிபாடு செய்தான். அது அவனுக் குத் தூய்மை அளித்த இடமாதலின் (சுசி + இந்திரம்) சுசீந்திரம் எனப் பட்டது.

ஒரு சமயம் கௌதம முனிவரின் மனைவி யான அகல்யாதேவியின் பேரழகில் இந்திரன் மயங்கி அளவற்ற மோகத்தால் அவளிடம் இன்பம் துய்க்க விரும்பினான். முனிவர் அதி காலையில் எழுந்து ஆற்றிற்குச் சென்று நீராடி ஜெப தபங்கள் செய்வதை அறிந்தான். ஒரு நாள் அவன் நள்ளிரவில் சேவல் வடிவுடன் ஆசிர மத் திற்குச் சென்று கூவினான். அது கேட்ட முனிவர் பொழுது புலர்ந்ததென்று ஆற்றிற்கு விரைந் தார். அவ்வேளையில் இந்திரன் கௌதமர் போல் உருவம் கொண்டு அகலிகையை அடைந் து இன்பம் நுகர்ந்தான்.



ஆற்றை அடைந்த முனிவர் விடிவதற்கு இன்னும் நேரமிருக் கிறது என்பதை உணர்ந்து ஆசி ரமத்திற்கு மீண்டார். அவர்வரவை உணர்ந்த இந்திரன் பூனை வடிவுடன் அகன்றான். நடந் ததை உணர்ந்த கௌதமர், யோனி மீது மோகம் கொண்ட அவன் உடல் முழுதும் யோனியாகட் டும் என்று சபித்தார். அவன் உடலெங்கும் பெண் குறிகளாயின. அவன் மிகுந்த அவமானமடைந் தான். வெளியில் வந்து உலவ முடியாத நிலை யில் தவித்தான்.

ஒரு குளத்தில் இருந்த தாமரைத் தண்டில் ஒளிந்து கொண்டான். அவனது இருப்பிடம் தெரியாமல் இந்திராணியும் தேவர்களும் கலங் கினர். நாரதர் பல இடங்களில் தேடிவ அவனைக் கண்டு பிடித்தார். அவனுடைய உடல் நிலை யைக் கண்டு அனைவரும் துன்பமடைந்தனர்.

நாரதர் அவனிடம் மும்மூர்த்திகளும் உறை யும் அத்திரி முனிவரின் ஆசிரமத்திற்குச் சென்று மும்மூர்த்திகளை வழிபடும்படி அறிவுரைகூறினார். அதன்படி அவன் கொன்றை வனம் வந்தா ன். நந்தி தேவர் அவனை முதலில் குலகுருவான பிரகஸ்பதியின் அருள்பெற்று வருமாறு கூறினார்.

இந்திரன் எதிரிலுள்ள மருந்து வாழ்மலை என்னும் மலைக்குச் சென்று ஒரு குகையில் தவம் செய்தான். அந்த இடம் இப்போது இந்திர பொத்தை என்றழைக்கப்படுகிறது. அதனருகில் இந்திரன் உண்டாக்கிய சுனை இந்திர சுனை எனும் பெயரில் உள்ளது.

அவனுடையதவத்திற்குமகிழ்ந்த பிரகஸ்பதி அங்கு தோன்றினார். அவனிடம் இந்திரனே கொதிக்கும் நெய்யில் நூற்றெட்டு முறை மூழ்கி பஞ்சாட்சர ஜெபம் செய்தால் சிவ பெருமான் தோன்றி அருள்புரிவார் என்றான்.

அதன்படியே அவன் கொன்றை வனம் வந்தான். தேவர்கள் நெய் கொப்பரையைத் தயாரித்தனர். அவன் கொதிக்கும் நெய்யில் மூழ்கி எழுந் தான். மும்மூர்த்திகளும் அவன் முன்னே தோன்றினர். அவன் அவர்களைப் போற்றித் துதித் தான். சிவபெருமான்மூவரும் ஒன்றாகி நிற்கும் தாணுமாலயனாக அவனுக்குக் காட்சி யளித்தார்.

அவனுடைய உடம்பைத் தடவினார். அவனுடலிலுள்ள பெண்குறிகள் யாவும் அழகி ய கண்களாகும்படிச் செய்தார். அதுமுதல் அவனுக்கு ஆயிரங்கண்ணன் (சகஸ்ராட்சன்) என்னும் பெயர் உண்டானது.

அன்றுமுதல் அர்த்தசாமத்தில் அவன் தாணுமாலயனைப் பூசித்து வருகிறான். இந்திரனுக்குத் தூய்மை அளித்ததால் அத் தலம் சுசீந்திரம் என வழங்குகிறது. இங்குள்ள விநாயகர் இந்திர விநாயகர் என்று அழைக் கப்படுகிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்திரப் பெயர் பெற்றவை...

இந்திரத் துவஜம்

இந்திரன் கொடியை அடையாளமாகக் கொண்டிருக்கிறான். ஏழு வண்ணம்கலந்து பொன் வண்ணத்துடன் மின்னும் பட்டில் யானையும் அதன் மீது வஜ்ரமும் எழுதிய இந்திரக்கொடி வணக்கத்திற்குரியதாகும்.

புரட்டாசி மாத பௌர்ணமியன்று இந்திரன் தேவர் கூட்டத்துடன் பூமிக்கு வந்து அனைத்து ஆலயங்களின் கோபுரங்களிலும் விமானங்களிலும்அந்தக் கொடிகளை ஏற்றி வைத்து அனேக உபசாரங்களுடன் தெய்வங்களை வழிபடுகிறான் என்பர்.இந்நாளில் விமானங்களிலும் கோபுரங்களிலும் கொடியேற்றுவதற்குப் பதிலாக ஆலயத்தின் எட்டுத் திசைகளிலும் கொடிகள் ஏற்றப்படுகின்றன.இது அஷ்ட கொடி உற்சவம் என்று அழைக்கப்படுகிறது.

இது இந்திரத் துவஜ பூஜை என்றும், இந்திர பூசையென்றும் அழைக்கப்படுகிறது. திருவாரூரில் இந்திரன் கொண்டாடி மகிழும் விழா பங்குனி உத்திரப் பெருந்திருவிழாவாகும். இதில் இந்திரனின் பட்டத்து யானையான ஐராவதம் எழுதிய கொடியேற்றப்படுகிறது. இடியும் இந்திரனின் கொடியாகும். இடியுடன் கூடிய மின்னலைக் கொடியாகக் கொண்டவன் என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

இந்திரவில் (இந்திர தனுசு)

ஏழு வண்ணங்களைக் கொண்ட வான வில்லுக்கு இந்திரத் தனுசு என்று பெயர்.இயற்கை வடிவெய்தியுள்ள இறைவன் இந்திரத் தனுசை ஏந்துகிறான் என்று புராணங்கள் கூறுகின்றன.

இந்திர கோகிலம்

அசுரர்களுக்குப் பயந்த இந்திரன் குயிலாக உருவம் கொண்டு பலகாலம் வசித்து வந்தான். அவன் நீலநிறம் கலந்த கருமை நிறத்துடன் விளங்கினான். அந்த வகைக் குயில்கள் இந்திர நீலக் குயில்கள் என்றும், இந்திர கோகிலங்கள் என்றும் அழைக்கப் படுகின்றன. தட்சனின் யாகத்தை வீரபத்திரர் அழித்தபோது அவரிடமிருந்து தப்பிக்க இந்திரன் குயில் வடிவங்கொண்டு ஓடினான். அவர் அவனைப் பற்றி சிறகுகளை முறித்து வீசியெறிந்தார். அது இந்திர கோகில பட்ச சேதன பராக்கிரமம் என்று சிவ பராக்கிரமத்தள் கூறப்பட்டுள்ளது.

நீலமயில் என்கிற இந்திர மயில்

மயில் இந்திரனோடு தொடர்புடையது. இந்திரனுக்குரிய பொன் வண்ண நீல நிறமானது. மேலும் அவன் உடலெங்கும் கண்களைப் பெற்று ஆயிரங் கண்ணோன் என்று அழைக்கப்படுவது போலவே மயிலும் ஆயிரங்கண்களைத் தோகையில் கொண்டுள்ளது. அதற்கும் ஆயிரங்கண்ணோன் என்பது பெயர்.

பல சமயங்களில் இந்திரன் நீல மயில் வடிவம் கொண்டுள்ளான். அவன் மயில் வடிவம் தாங்கி முருகனைத் தாங்கினான்அந்த மயில் இந்திர மயில் என்றழைக்கப்படுகிறதுசிவபெருமானையும் ஒருமுறை மயில் வடிவம் கொண்டு தாங்கினான் என்று புராணம் கூறுகிறது.

இந்திர நீல பருப்பதம்

நீலம் பொன்வண்ணத்துடன் சேர்ந்து உண்டாகும் பொன்னொளி கலந்த நீலம் இந்திர நீலம் எனப்படும்.

இமயமலையின் மடியிலுள்ள ஒரு சிகரம் இந்திர நீல பருப்பதம் என்று அழைக்கப்படுகிறது. இது தேவாரப் பாடல் பெற்ற திருத்தலமாகும். இங்கு ஆலயம் இல்லை. பெரிய கல்லைச் சிவலிங்கமாகப் போற்றி வழிபடுகின்றனர். இந்த லிங்கத்திற்கு எதிரில் நந்தி போன்ற கல் உள்ளது. சற்று தள்ளியுள்ள நெடிய பாறையை இந்திரன் என்கின்றனர்.

இறைவர் இந்திராசல நாதர். அம்பிகை நீலாம்பிகை. தட்சயாகத்தில் குயிலாகிப் பறந்த இந்திர னின் சிறகுகளை முறித்த பின் வீரபத்திரர் அவனைத் தூக்கி வீசினார். அவன் வீழ்ந்த இடமே இந்திர நீல பருப்பதம் ஆனதென்பர். இந்திரன் வழிபட்டு மேன்மை பெற்ற தலம். கடல் மட்டத்திலிருந்து 18,000 அடி உய ரத்தில் உள்ளது. இங்கு நீல் கங்கா என்ற ஆறு ஓடுகிறது.

இந்திர நீல லிங்கம்

இந்திரம் என்ற சொல்லே அடர் நீலத்தைக் குறிப்பதாகும்.இந்திர லிங்கம் என்பது அடர்நீலக் கல்லால் ஆனது.இந்திரன் நீலக் கல்லால் செய்த லிங்கத்தை வழிபடுகிறான். இந்திரன் தான் தனித்திருந்து வழிபடத் தோந்தெடுத்த கீழ்வேளூர் ஆலயத்தில் அவன் தியாகராஜரையும் நீல விடங்கரான சிவலிங்கத்தையும் அமைத்து வழிபட்டான். இந்த நீலக்கல் லிங்கத்தைக் கீழ்வேளூர் உலா சிறப்பித்துப் பேசுகிறது. சப்தவிடங்கத் தலங்களில் ஒன்றான திருவாய்மூரிலும் நீலக்கல் லிங்கத்தை அமைத்து வழிபட்டான் என்பர். அங்குள்ள விடங்கர் நீல விடங்கர் என்று அழைக்கப்படுகிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிற்ப ஓவியங்களில் இந்திரன்

இந்திரன் அனைத்து சமய வழிபாடு களிலும் சிறந்த இடத்தைப் பெற்றுள்ளான் என்றாலும், அவனுடைய உருவத்தைத் தனியாக வழிபடுவது வழக்கத்தில் இல்லை.

தியாகராஜர் ஓவியங்களில் இந்திரன் ஏறக்குறைய உடலெங்கும் கண்களைக் கொண் டவனாகத் தீட்டப்பட்டுள்ளான். அவன் அவரை மலர் தூவி பூசிப்பதாக வரையப்பட் டுள்ளது. இக்காட்சியைத் திருவாரூர், ஆவுடை யார் கோயில், சிதம்பரம் முதலிய ஓவியங் க ளில் காண்கிறோம். அவனுடன் இந்திராணியும் தீட்டப்பட்டுள்ளாள்.

மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் இந்தி ரனின் உலாத்திருமேனி உள்ளது. இவன் உருவுடன் மற்றஏழுதிசைபாலகர்களின் உருவங் களும் உள்ளன. சித்திரைப் பெருவிழாவின் போது இந்திரன் திருவுருவம் பல்லக்கில் வீதியுலா எடுத்துச் செல்லப்படுவதுடன் அவனுக்குப் பெருமான் காட்சியளித்து அருள் புரியும் ஐதீகக் காட்சியும் நடைபெறுகிறது.

காஞ்சிபுரம் மாவட்டம் கிணார் எனும் தலத்தில் வீரவனநாதர் ஆலயம் உள்ளது. வீரைவனம் என்பது கள்ளிக்காடு ஆகும். பெரு மான் கள்ளிக்காட்டில் தவம் புரிந்த இந்திர னுக்கு அருள்புரிந்து ஐராவதத்தை அருளினார். இங்கு க்கருவறைக்கு நேர் எதிரில் ஐராவதத்தில் அமர்ந்தவாறுள்ள இந்திரனின் கற்திருமேனி அமைக்கப்பட்டுள்ளது.

காஞ்சி ஜ்வரஹரேசுவரர் ஆலயத்தில் மூலத் தானத்தில் லிங்கத்திற்குப் பின்புறம் நின்ற வண்ணம் இந்திரனின் திருவுருவம் உள்ளது. இதுபோன்று இந்திரன் கருவறைக்குள் அமைந் திருப்பதை வேறெங்கும் காண முடியவில்லை. இது தேவர்களுக்கு ஏற்பட்ட ஜ்வரத்தை நீக்க இந்திரன் வழிபட்ட தலமாகும்.

கோபுரங்களிலும் ஸ்ரீ விமானங்களிலும் அட்ட திக்குப் பாலகர்களின் வடிவங்கள் எட்டுத் திசையிலும் இடம் பெற்றுள்ளன. அவற்றி லொன்றாக கிழக்குப் பகுதியில் தென்புறம் யானை மீது வஜ்ரப் படையுடன் விளங்கும் இந்திரனை அமைத்துள்ளனர்.

பெரிய ஆலயங்களில் மகா மண்டபத்தின் விதானத்தில் நடுவில் பெரிய தாமரைப் பூவை யும் அதைச் சுற்றி அமைந்த எட்டுக் கட்டங் களில் அட்டதிக்குப் பாலகர்களும் அமைந்துள் ள னர். அதில் கிழக்குக் கட்டத்தில் யானைமீது தனியாகவோதேவியுடனோ இந்திரன் அமைக் கப் பட்டுள்ளான்.

இந்திரன் மேற்கரங்களில் வஜ்ரங்களை ஏந்தியுள்ளான். முன்கரங்களில் தாமரை மலரை யும் வரதமுத்திரையையும் தாங்கியுள் ளான்.

மதுரையின் வரலாற்றை விளக்கும் காட்சி களில் இந்திரன் சிவபூசை செய்து குறிக்கப் பட்டுள்ளது. சென்னை மயிலாப்பூர் கபாலீசுவ ரர் ராஜகோபுரத்தில் இந்திரன் கடம்ப மரத் தின் கீழ் லிங்கம் அமைத்து வழிபடுவதைக் காண லாம்.

கீழ்வேளூர் அட்சயநாதசுவாமி ஆலயத் தில் அகத்தியப் பெருமானுக்கு வலது பாத தரிசனம் தரும் நடராசர் திருக்கோலம் உள் ளது. இதில் திருமால் மத்தளம் கொட்ட கலைமகள் வீணை மீட்ட இந்திரன் புல்லாங்குழல் இசைக்கிறான்.

திருவலஞ்சுழியில் சுவேத விநாயகரை நிலைப்படுத்தியவன் இந்திரன். அங்கு முகப் பில் வாணி கமலா எனும் தேவியர்களுடன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விநாயகர் வீற்றிருக்க, இந்திரனும் திருமா லும் அவர்களைத் துதிக்கும் காட்சி சுதைச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இக்கோயிலில் இந்திரன் உலாத் திருமேனியும் உள்ளது. விநாய கப் பெருமான் அவனுக்குக் காட்சியளிக்கும் ஐதீக விழாவில் அவன் திருவுருவமும் திருஉலா காண்கிறது

முருகன் தெய்வயானைத் திருமணக் காட்சி யில் முருகனுக்கு இந்திரன் தாரை வார்த்துத் திரு மணம் செய்து கொடுக்கும் கோலத்தில் உள்ளான். பல இடங்களில் அவனுடன் இந்திராணியும் இடம் பெற்றுள்ளாள்..

இந்திரன் திருவுருவங்களைக் காண்பது குறைவாக இருந்தாலும், அவை அவனுடைய சிறப்பைப் புலப்படுத்துவதாக உள்ளது.

நிறைமணி என்னும் இந்திர பூஜை

இந்திரன் ஆண்டுதோறும் புரட்டாசி மாதப் பௌர்ணமியன்று தேவர்களுடன் பூமிக்குவந்து சிவாலயங்களில் அனைத்துவிதமான தானியக் கதிர்கள் காய், கனிகளால் அலங்காரம் செய்து வழிபடுகிறான் என்று புராணங்கள் கூறுகின்றன. அதையொட்டி ஆலயங்களில் அம்பிகை, சுவாமி, சோமாஸ்கந்தர் சந்நிதிகளில் தானியக்கதிர்கள் வாழைக்குலைகள், பழங்கள், இன்சுவை திண்பண்டங்கள் ஆகியவற்றைக் கோர்த்து தோரணங்களாகக் கட்டி அழகுபடுத்துகின்றனர். பலவிதமான அன்னங்களையும், பலகாரங்களையும் செய்து படைப்பர். இது நிறைமணி (அ) நிறைமணிக்காட்சி என்று அழைக்கப்படும். இது இந்திரவிழா என்றும் அழைக்கப்படும்.சில தலங்களில் இது புரட்டாசி அமாவாசையன்றும் நடைபெறுகிறது.

போகிப் பண்டிகை

பழையனவற்றைக் கழிந்து புதியனவற்றை ஏற்றலே போகிப் பண்டிகையாகும். மார்கழி மாதத்தின் இறுதி நாளில் இந்திர பூசையாக போகிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. இவ்விழா புதுப்பொலிவை வரவேற்கும் நாளாகும். போகங்களின் அதிபதியாக விளங்குபவன் இந்திரன். அவனே போகி எனப்பட்டான். அவனைப்போற்றும் விழா போகி ஆனதென்பர்.

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இந்திர விழாவை தீவக சாந்தி என்று அழைக்கின்றன. ஜம்புத் த்வீபம் எனப்படும் நாவலந்திவு முழுமைக்கும் சிறப்பு உண்டாகவும் வலிமை உண்டாகவும் இந்த விழா 28 நாட்கள் கொண்டாடப்பட்டது.இப்போது மார்கழியின் இறுதி நாளில் மட்டும் போகி என்ற பெயரில் கொண்டாடப்படுகிறது.

இந்திரனின் இடிபூஜை

இந்திரன் மேகங்களின் தலைவன். மேகங்கள் மோதிக் கொண்டு புரியும் கர்ச்சனையே இடி முழக்கமாகவும் மின்ன வெட்டாகவும் தோன்றுகின்றன என்று புராணங்கள் கூறுகின்றன. இந்திரன் இடியைத் தனது ஆயுதமாகக் கொண்டிருக்கிறான். அவன் இடியை மலர்களாகப் பொழிந்து இறைவனைத் திருக்கழுக்குன்றத்தில் வழிபடுகிறான். அதற்கு இடிபூஜை என்பது பெயர்.

இவ்வூர் ஆலய விமானத்தில் தக்கைக் கல் வைக்கப்பட்டுள்ளது. இந்திரன் வழிபடும் வேளையில் இங்கு கடும் மழை பொழியும் இடியும் மின்னலும் தோன்றும். இடிகள் விமானத்தின் மீது விழுந்து தக்கைக் கல்லின் வழியாக சுவாமியின் தலைமீது இறங்கி அவரை மும்முறை சுற்றிக் கொண்டு பூமியில் இறங்கி விடும்.

பின்னர் சிறப்பு செய்து வழிபடுவர். தக்கைக் கல்லைப் பழையபடி பொருத்துகின்றனர். தலபுராணத்திலும், சிற்றிலக்கியங்களிலும் இந்திரன் இடிவழிபாடு செய்வது குறிக்கப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்திர விழா



பாரத தேசத்தின் பழைமையான வழிபாடுகளில் தலையானது இந்திர வழிபாடாகும். வேதங்களில் பற்பல யாகங்களைச்செய்து மேன்மை பெற்றவர்கள் இந்திரப் பதவியை அடைகிறார்கள் என்று கூறப்பட்டுள்ளது. வேதங்களின் தலைவன் இந்திரனே யாவான்.

மகாபாரதத்தில் யாதவர்கள் இந்திரனுக்குப் பூஜை செய்வது குறிக்கப்பட்டுள்ளது.

பழந்தமிழ்க் காப்பியங்களான சிலப்பதிகாரத் திலும் மணிமேகலையிலும் இந்திரவிழா கொண்டா டப்பட்ட செய்தி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. 28 நாட்கள் நடைபெற்ற அந்த விழாவின் போது நகரமே விழாக் கோலம் பூண்டது. பூம்புகாரில் இந்திரனின் ஆயுதமான வஜ்ரம்; மரமான கற்பக மரம், வாகனமான ஐராவதம் ஆகியவற்றிற்கான தனி ஆலயங்கள் இருந்தன என்றும் வஜ்ராயுதக் கோயிலில் இருந்த முரசை யானையின் பிடர்த்தலையேற்றி விழா அறைவோன் விழாவை அறிவித்தான் என்று கூறப்படுகிறது. அவ்வேளையில் சிவபெருமான் கோயில் தொடங்கிச் சதுக்கப் பூதம் ஈறாக உள்ள அனைத்து ஆலயங்களும் விழாக்கோலம் பூண்டது. விழாவில் பட்டிமன்றம் ஆடல் பாடல் முதலா ன அனேக கலைநிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட்டன.

இந்திர விழாவைக் கொண்டாட மறந்ததால் கடல் பொங்கி பூம்புகாரை அழிக்கும் என்ற நம்பிக்கை இருந் தது. பின்னாளின் மாவன் கிள்ளி என்னும் மன்னன் விழா நடத்த மறந்ததால் பூம்புகாரைக் கடல் கொண்ட தாகக் கூறுவர்.

தமிழர்தம் ஐவகை நிலப் பாகுபாட்டில் குறிஞ்சிக்கு முருகனும் முல்லைக்குத் திருமாலும் மருதத்திற்கு நெய்த லுக்கு வருணனும் பாலைக்குக் கொற்றவையும் தெய்வங்களாகக் கூறப்பட்டுள்ளன. இவ்வகையில் மருதநிலத்தின் கடவுளாக இந்திரன் போற்றப் படுகிறான்.தீம்புனல் உலகமாகிய மருதநிலக் கடவுள் என்பதை தமிழ் இலக்கியங்கள் வேந்தன் மேய தீம்புனல் உலகம் என்று குறிக்கின்றன.

ஆதியில் விழாக்களின் நாயகனாக விளங்கிய இந்திரன் படிப்படியாக செல்வாக்கிழந்தான். அவன் பிற தெய்வங்களின் வழிபாட்டை நடத்தி வைப்பவன் ஆனான். திருவாரூரில் நடைபெறும் பங்குனி உத்திர விழா இந்திர வழிபாட்டின் மறுவடிவமேயாகும். இதை இந்திரனே நடத்தி வைக்கிறான் என்பதும் அது இருபத்தெட்டு நாட்கள் நடைபெறுவதும் இங்கு சிந்திக்கத் தக்கதாகும்.

மதுரையில் நடைபெறும் சித்திரைப் பெரு விழா வை நடத்தி வைப்பவனும் இந்திரனே யாவான். விழா வின் இறுதிநாளில் இந்திரனுக்கு அருள்பாலிக்கும் ஐதீகக் காட்சி நடைபெறுகிறது. இந்திர னின் திருமேனி பல்லக்கில் சுவாமியுடன் எடுத்துச் செல்லப்படுகிறது.

சமண பௌத்த சமயங்களிலும் இந்திரன் செல் வாக்கு மிக்க கடவுளாக விளங்குகிறான். தீர்த்தங்கரர்கள் பூமியில் தோன்றும்போது அவர்களுக்கு கர்வாவதரண, கேவல, ஞான, மோட்சம் ஜென்மாபிஷேக, தீட்சா வைபவம் ஆகிய ஐந்து கல்யாண வைபவங்களைநடத்தி வைப்பவன் அவனே. அவன் அட்டதிக்குப் பாலகர் களு டன் வந்து இவற்றை நடத்துகிறான் என்று மகா புராணம் முதலான ஜைன நூல்கள் கூறுகின்றன. தீர்த்தங்கரர் களின் உபதேச மண்டபமான ஸ்ரீ சமவ சரண மண்டபத் தை அமைப் பதுடன் அவர்களின் உபதேச மொழிகளை நூலாக்கக் கணதரர்களை அவன் நியமித்து ஜினாகமங் களைப் பெற வைக்கிறான். கன்னடத்திலுள்ள ஜைன ஆலயங்களில் இந்திரன் மத்தளம் கொட்டிக் கொண்டு நடனமாடும் கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளான்.

ஜைன ஆலயங்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள் இந்திரனின் வழிவந்தவர்களாகப் போற்றப்படுகின்றனர்

இந்திரனும் - அகத்தியரும்

சிவபெருமானின் அம்சமாகத் தோன்றிய மாமுனிவர் அகத்தியர். இந்திரன் அவர் அருள்பெற்றவன். அவருக்குச் சீடனாக இருந்து பலகாலும் பணிபுரிந்தான்.அகத்தியர் தமிழ்ச் சங்கத்தில் வீற்றிருந்த போது இந்திரன் மாணவனாக வீற்றிருந்தான். அவன் செய்த இலக்கண நூல் ஐந்திரம் என்பதாகும். தொடிதோட் செம்பியன் என்னும் சோழமன்னனிடம் அவனுடைய நாடு வளம் பெற இந்திரனுக்கு விழா நடத்தும்படிக் கூறியவர் அகத்தியர். இதனைச் சிலப்பதிகாரம், விரிவாகக் கூறுகிறது. அதன்படி அவனால் தொடங்கப்பட்டு இனிது நடந்தது. இது தீவகசாந்தி எனப்பட்டது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்திராணி

இந்திரனின்மனைவி இந்திராணி. இன்பங்களின் வடிவிலிருந்து இவளைப் படைத்துச் சிவபெருமான் இந்திரனுக்கு அளித்தார். பின் ஒரு சாபத்தால் இந்திர னிடமிருந்து பிரிந்து சென்று பாற்கடலில் மறைந்தாள். பின்னர் பாற் கடலின் மகளாகத் தோன்றி இந்திரனை அடைந் தாள். இந்திரன் துன்புற்ற போதெல்லாம் இவள் சிவ பூசை செய்து அதை நீக்கினாள். சூரபத்மனால் விரட்டப்பட்ட இந்திரன் சீர்காழிக்குச் சென்று மூங்கில் காட்டில் மூங்கில் வடிவுடன் ஒளிந்திந்தான். இது தெரிந்த அங்கு இந்திராணி அங்கே சிவபூசை செய்து வந்தாள். அவளுக்குக் காவலாக சாத்தனும் மகாகாள னும் நியமிக்கப் பட்டனர்.

சிவபெருமானை இந்திரனுடன் இந்திராணியும் சேர்ந்தே பூசிக்கிறாள். தியாகராஜர் ஓவியங்களில் இந்தி ரனும் இந்திராணியும் அவரை வழிபடும் கோலத்தில் உள்ளனர். சில ஆலயங்களில் அமைக்கப்பட்டுள்ள விதான திக்பாலகர் சிற்பங்களில் இந்திர னும் இந்திராணியும் வெள்ளையானை மீது அமர்ந்திருப்பதாகத் தீட்டியுள்ளனர்.

இந்திராணி மண்மேல் வந்து துருபதன் மகளாகத் தோன்றினாள். இந்திரன் ஐந்து சக்திகளில் கலந்து பஞ்சபாண்டவராகத் தோன்றினான். அந்த ஐவரையும் திரௌபதி மணந்தாள். இந்த வரலாறே மகாபாரத மாகும். திரௌபதியாகத் தோன்றிய இந்தி ராணி பல தலங்களில் பூஜை செய்தாள். அவற்றில் குறிப்பிடத் தக்கவை காஞ்சிபுரம், மண்ணிப்படிக்கரை, திருவிடை மருதூர் முதலியனவாகும்.

திண்டுக்கல்லில் திரௌபதி அமைத்த தீர்த்தம் திரௌபதி தீர்த்தம் என்ற பெயரில் உள்ளது. இந்திராணி பேரழகியாக இருந்த தால் அசுரர்கள் தேவேந்திரனிடமிருந்து அவளைப் பிரித்து அனுபவிக்க விரும்பினர்.

நிகண்டுகள் இந்திராணிக்கு சசிதேவி, புலோசமை இந்திராணி, ஐராணி, சுந்தரி, இந்திர தேவி, ஐந்தருச் செல்வி (ஐந்து கற்பக மரங்களை உடையவள்) என்ற பெயர்களைக் கூறுகின்றன.

சப்த மாதர்களில் ஒருத்தியாக விளங்கும் இந்திராணி, தேவேந்திரனின்தேவியான இந்தி ராணியிடமிருந்து வேறானவள். அம்பிகை யின் பஞ்சாவரணத்தில் நான்காம் ஆவர ணத்தில் திசை பாலகர்களின் தேவியர்கள் இந்திராணியுடன் வீற்றிருக்கின்றனர். அங்கு இவள் சசி என்ற பெயரால் அர்ச்சிக்கப் படுகிறாள் ★

ஜயந்தன் - ஜயந்தி

இந்திரனின் மகன் ஜயந்தன். அவன் சிறந்த சிவபக்தன். அவனைச் சூரபத்மன் ஒரு முறை சிறை செய்தான். முருகப் பெருமான் அவனைச் சிறை வீடு செய்தார். அவன் வழிபட்டதால் திருச்செந் தூருக்கு ஜயந்தி என்ற பெயர் உண்டாயிற்று என்பர். அவன் திருப்புத்தூரில் பைரவ மூர்த்தியை வழிபட்டுப் பேறு பெற்றான். ஒவ்வோராண்டும் அவன் பூசிப்பது ஜயந்தன் விழா என்று போற்றப்படுகிறது. அவன் இந்திரனைப் போவே குயில் வடிவுடன் வழிபட்ட தலம் கோழம்பம் ஆகும். இவன் சீதையுடன் இராமர் வனவாசம் செய்து கொண்டிருந்தபோது சீதையின் அழகைக் கண்டு மோகித்தான். காற்றில் அவளது மேலாடை விலகியிருந்தபோது காக்கை வடிவம் கொண்டு மார்பில் கொத்தினான். இராமர் தர்ப்பையை மந்திரித்து அனுப்ப அது அவன் கண்ணைக் குத்திக் குருடாக்கியது. அப்பழியும் துன்பமும் தீர சிவபூசை செய்து மேன்மை பெற்றான். இவனுடைய தங்கை ஜயந்தி, அவள் சுக்கிரனுக்குப் பணிவிடைகள் செய்து அவன் அன்பைப் பெற்று அவனோடு வாழ்ந்தவள். ★

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்திரனும்- மூங்கிலும்

மூங்கில், இந்திரனுடன் தொடர்புடையதாகும். அசுரர்களுக்கு அஞ்சிய இந்திரனும் தேவர் களும் மூங்கில் வடிவுடன் பல தலங்களில் இருந்து சிவனை வழிபட்டுள்ளனர். அவை வேணுவனங்கள் என்று அழைக்கப்படுகின்றன. சீர்காழியும், திருநெல்வேலியும் வேணுவனம் என்று புராணங்களில் சிறப்பிக்கப்பட்டுள்ளன. இவை இந்திரன் வழிபட்ட தலங்களாகும்.சிவபெருமான் நடனமாடும் போது திருமால் மத்தளம் கொட்ட இந்திரன் வேணுகானம் (புல் லாங்குழல்) இசைக்கிறான். இக்காட்சியைக் கீழ்வேளூர் நடராசக் காட்சியில் காணலாம்.

இந்திரனின் மகனான சயந்தன். ஒரு சமயம் ஊர்வசியைக் கண்டு மோகித்து தகாதவாறு நடந்தான். அதைக் கண்ட அகத்தியர் அவனை மூங்கிலாகும்படிச் சபித்தார். அதன்படி விந்திய வனத்தில் மூங்கிலாக அவன் இருந்தான் என்றும், அந்த மூங்கிலிலிருந்து தலைக்கோல் என்னும் கோல் ஒன்று செய்யப்பட்டதாகக் கூறுவர். ஆடல் பாடல் களில் வல்ல பெண்களுக்குத் தலைக்கோலி என்ற பட்டம் வழங்கப்பட்டு அதன் அடையாளமாக இக்கோல் அளிக்கப் பட்டது.பூமியில் அரம்பை யர்களே ஆடல் பாடல் வல்ல பெண்களாகத் தோன்றுகின்றனர் என்று புராணங்கள் கூறுகின்றன.

தமிழக மக்களின் திருமணச் சடங்கில் மேடையில் அரசாணிக்கால் என்ற பெயரில் அரசங் கிளையுடன் கூடிய மூங்கில் ஒன்றை நட்டு வழிபடுகின்றனர். மஞ்சளில் பிள்ளையாரைப் பிடித்து வழிபடுவது போலவே மூங்கிலை இந்திரன் வடிவமாகப் போற்றி வழிபடுகின்றனர் என்பர். அது அளவற்ற சுகங்களை வாழ்வில் தரும் என்று நம்புகி ன்றனர். இதற்குப் பால், தயிர் ஆகியவற்றால் அபிஷேகம் செய்து காப்பு கட்டுகின்றனர். திருவீழிமிழலையில் பெருமான் திருமணக் கோலத்தில் காட்சியளித்துக்கொண்டிருக்கின்றார். அங்கு இந்திரன் அரசாணிக்கால் என்னும் தூணாக நின்று அவரை வழிபட்டுக் கொண்டிருக்கிறான். ★

இந்திர விமானம்.

நினைத்த இடத்திற்கு எளிதாகச் செல்லும் சுகமான விமானம் இந்திர விமானம். கந்தர்வர்கள், இயக்கர் களால் இயக்கப்படுவது. அப்சரஸ்களால் சூழப்பட்டது. எட்டு திசை யானைகள், அட்டமா பாம்புகள், எண்பெரும் மலைகள், எட்டு பூதங்களால் தாங்கப்படுவது மதுரையில் கடம்ப வனத்தில் இந்திரன் வழிபாடு செய்தபோது சோம சுந்தரப் பெருமானுக்குத் தனது விமானத்திற்கு ஒப்பான விமானத்தை அவருக்கு அமைத்தான். அது எட்டு யானை கள், 32 சிங்கங்கள், 64 நான்கு பூதங்களால் தாங்கப்படுகிறது.

ஆலயங்களில் சிவ பெருமானை இந்திர விமானத்தில் அமர்த்தி வீதியுலா காண்கின்றனர். வெள்ளியால் செய்யப்பட்ட இந்திர விமானங்கள் பல தலங்களில் உள்ளன. திருவண்ணாமலையில் கலை நுணுக்கதுடன் செய்யப் பட்ட பெரிய இந்திர விமானம் உள்ளது. இதில் பெருந்திருவிழாவில் பெருமான் பவனி வருகின்றார்.

தாராசுரம் ஆலயத்திற்கும் இந்திர விமானம் என்பது பெயர். ஐராவதம் இங்கு வழிபட்ட போது, அதைத் தேடி வந்து இந்திரன் பெருமானைக் கண்டு மகிழ்ந்து இந்திர விமானத்தை அமைத்தான் என்பர். இங்குள்ள முகமண்டபத்தினை வளர்த்திக் கட்டி இதன் பக்கவாட்டில் குதிரைகள், சக்கரங்கள் ஆகியவற்றுடன் நாட்டிய மாடும் பெண்கள் சிங்கம், யாளிகள் ஆகியவற்றை அமைத்துள்ளனர். இதனை ஓட்டும் சாரதியையும் காண் கிறோம்.

இந்திர விநாயகர்

இந்திரன் சிவவழிபாட்டில் திளைத்தது போல வே விநாயகர் வழிபாட்டிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவன். பல தலங்களில் அவன் விநாயகர் வழி பாடு செய்துள்ளான், அவனுடைய வழிபாட்டில் மகிழ்ந்த விநாயகர் அவன் அமைத்த வடிவங்களில் தோன்றி அருள்பாலித்துள்ளார். அவன் பெயரால் இந்திர விநாயகர் என்ற பெயரையும் தாங்கியுள்ளார்.

திருப்பெருந்துறையில் சிவவழிபாடு செய்த இந்திரன்தன் பெயரால் ஒரு தீர்த்தம் அமைத் தான்.அந்த தீர்த்தம் இந்திர தீர்த்தம் என்று அழைக் கப்படு கிறது.அதன் கரையில் இந்திரனுக்கு அருள் செய்த விநாயகர் ஆகண்டல (ஆகண்டலன் - இந்திரன்) விநாயகர் என்ற பெயரில் உள்ளார். திருத்தணிகை மலையில் (திருத்தணி) படியேறும் வழியில் இந்திர நீல தீர்த்தமும் அதன் கரையில் இந்திர விநாயக ரையும் அமைத்திருக்கின்றனர்.

திருவலஞ்சுழியில் விநாயகரை அமைத்து ஆலயம் அமைத்தவன் இந்திரன். இங்கு அவடைய உலாத் திருமேனி உள்ளது..அவன் பூஜை செய்தை நினைவு கூரும் வகையில் இந்திரபூஜை என்ற சிறப்பு விழா கொண்டாடப்படுகிறது.

அச்சிறுபாக்கம் ஆட்சீசுவரர் கோயிலுக்குச் சற்று வடகிழக்கில் இந்திர தீர்த்தம் என்ற தீர்த்தக் கிணறும் அதன் கரையில் இந்திர நீல விநாயகர் ஆலயமும் உள்ளன. இந் நாளில் இவரை அச்சு முறி விநாயகர் என்று அழைக்கின் றனர். இங்கு ஆதியில் இந்திரன் நீலக்கல்லால் விநாயகரை அமைத்து வழிபட்டான்என்றுகூறுவர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்திரத் தேர் எனும் பிரான்

இந்திரன், தேரில் பவனி வருபவன். அவனுடைய வண்ண மயமான தேர் இந்திரத் தேர் என்று அழைக் கப்படுகிறது.அவன் இறைவனைத் தேரில் அமர்த்தி வழிபடுவதில் விருப்பமுடையவனாக இருக்கிறான்.

இந்திரன் புண்ணியம் பெற விரும்பிப் பூமிக்கு வந்து அனேக இடங்களில் சிவபூசை செய்தான். பல இடங்களில் தானே விரும்பி லிங்கங்களை அமைத்து வழிபட்டான். தான் அமைத்த அந்த லிங்கங் களைத் தன்னுடன் பெயர்த் துத் தேரில் எடுத்துச் செல்ல முயன்றான். ஆனால், பெருமான் பூமியிலேயே இருக்க விரும்பியதால் பெயர்க்க முடியவில்லை. இறைவன் உள்ளக் கருத்தை அறிந்து அங்கேயே ஆலயம் அமைத்து விட்டுச் சென்றான். அப்படிப்பட்ட தலங்கள் அனேகம் உள்ளன. அவற்றுள் மூன்று பாடல் பெற்ற திருத் தலங்களாகும். அவை திருக்கச் சினம், கடம்பூர், சாயாவானம் என்பன வாகும்.

இவற்றில் முதலாவதான திருக்கைச் சின்னத்தில் இந்திரன் பெருமானைப் பெயர்க்க முயன்றதால் உண்டான கைவிரல்கள் பதிந்த அடையாளங்கள் சிவலிங்கத்தின் மீது உள்ளன. மற்றைய இரண்டு தலங்களிலும் அவன் தேரில் பெருமானை அமர்த்தியதும் தேர் ஓட வில்லை என்பதை அறிகிறோம். அதைக் குறிக்கும் வகையில் இவ்விரண்டு தலங்களிலுள்ள கருவறைகளும் தேர் வடிவில் செய்யப்பட்டுள்ளன.

கடம்பூர் இந்நாளில் மேலைக் கடம்பூர் என வழங்குகிறது. இறைவன் அமிர்தகடேசுவரர்.கருவறை தேர் வடிவில் செய்யப்பட்டுள்ளது. சக்கரங்கள் தேரை இழுக்கும் குதிரைகள் யாவும் நுணுக் கமான கலைப் படைப்பாகத் திகழ்கின்றன. மேலே கபோதவரியில் நாட்டிய மகளிரின் அற்புதமான சிற்பங்கள் பொருத்தப் பட்டுள்ளன. இடையி டையே பூதங்கள் யாளிகள் சிங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.தேர் வடிவான கோயில் களைக் கரக்கோயில் என்பர். தேவாரத்துள் இது கரக்கோயில் என்று குறிக்கப்பட்டுள்ளது. சோழ மன்னர்களின் அற்புதமான கலைப்படைப்பு களில் இதுவும் ஒன்றாகும்.

பூம்புகாரின் ஒருபகுதியாக இருப்பது சாயா வனம்.இங்குள்ள ஆலயம் உயரமான மேடை மீது கட்டப்பட்டுள்ளது. பக்கவாட்டில் குதிரைகளும் சக்கரங்களும் உள்ளன.

மேலும் முசுகுந்தன் விருப்பப்படி இந்திரன் தான் வழிபட்ட தியாகராஜரை அளித்த போது தேரில் வைத்து அளித்தான்.இந்திரன் ஒரே தேரில் ஏழு தியாகராஜரையும் வைத்து அனுப்பு வது பெரிய ஓவியமாக ஆயிரக்கால் மண்டபத் தில் தீட்டப்பட்டுள்ளது.தேர்இந்திரன் ஆணைப் படி வருணனால் செய்யப்பட்டது. எனவே இது ஆழித்தேர் என அழைக்கப்படுகிறது.

இந்திர ஞாலத்தேர்

சிவபெருமானால் சூரபத்மனுக்கு அளிக்கப்பட்ட தேர் இந்திர ஞாலத் தேராகும். இது மாயம் வல்லது. நினைத்தபடி இயங்குவது. போரில் அவுணர்களை உயிர்ப்பிக்க அமுத சீத மந்திர மலையைக் கொண்டு வந்து உயிரூட் டியது. முருகன் இத்தேரைக் கைப்பற்றி ஏற்றுக் கொண்டார்.

ஆனைமேல் அழகிய சோமாஸ்கந்தர்

சோமாஸ்கந்தர் திருவுருவங்களை சோழர்கள் விடங்கர் என்று அழைத்தனர். அவற்றிற்குச் சிறப்புப் பெயர் களை இட்டும் அழைத்தனர். இராஜராஜன் தஞ்சாவூரில் எழுந்தருளுவித்த மூர்த்தி 'தட்சிணமேரு' எனப்படும் கோயிலின் பெயரால் தட்சிணமேரு விடங்கர் என்றும், அவன் உலகாபுரம் ஆலயத்தில் அமைத்த மூர்த்தி ராஜராஜவிடங்கர் என்றும், உலகமாதேவி திருவையாற்றில் எழுந்தருளுவித்த மூர்த்தி உலோகவிடங்கர் என்றும் அழைக்கப்படுகின்றனர். அவ்வகையில் ஐராவதமாகிய வெள்ளையானை வழிபட்ட சோமாஸ்கந்தர் வெள்ளானை விடங்கர் என்று அழைக்கப்படுகிறார்.

மாதவிச்சரம்

இந்திரனின் தேரோட்டியான மாதலி சிறந்த சிவபக்தன். இராமபிரான் இராவணன் மீது போர் தொடுத்துச் சென்றபோது, இந்திரன் தனது தேரை அவருக்கு அளித்ததுடன் மாதலியையும் அனுப்பி வைத்தான். அப்போரில் கலந்து கொண்டு அசுரர்களை வென்ற பாவம் நீங்க காஞ்சிபுரத்தில் சிவலிங்கம் அமைத்துப் பூசித்தான். அந்த லிங்கம் மாதலீசர் என்று அழைக்கப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அமரேச்சுவரங்கள்

பாரதம் போற்றும் சமயங்கள் அனைத்திலும்தேவர்கள் முதன்மை பெற்றுள்ளனர். இவர்கள் தெய்வீக ஆற்றல் பெற்றவர்கள். நினைத்த வடிவம் எடுப்பவர்கள். புண்ணிய பலம் மிக்கவர்கள். இவர்களை 33 கோடி பேர்கள் என்பர். நாட்டுப்புறக் கதைகள் முப்பத்து முக்கோடி தேவர்கள் என்று இவர்களைச் சிறப்பிக்கின்றன. இவர்களை அமரர்கள் என்பர்.

இவர்களின் தலைவன் தேவேந்திரன். இவர்கள் தேவ உலகில் வாழ்கின்றனர். இவர்கள் பாற்கடலைக் கடைந்து அதிலிருந்து கிடைத்த அமுதத்தை அருந்தியவர்கள். அதனால் யுகம் முடியுமட்டும்அழிவற்றவர்கள். இவர் களுடைய புரோகிதன் பிரகஸ்பதி எனப்படும் குரு. இவர்களுக்குப் பணி செய்ய 60,000 தேவ மாதர்கள் உள்ளனர். இவர்களை அரம்பையர் என்று அழைக்கின்றனர்.

இவர்கள் உலகம் பொன்னுலகம். இங்கு மாட மாளிகை கூட கோபுரங்கள் நிறைந் துள்ளன. இதன் தலைமைத் தானம் அமராவதியாகும்.

அவர்கள் அன்பினாலும் அசுரர்கள் மீதுள்ள அச்சத்தினாலும் ஓயாது சிவபூசை செய்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் வடிவமைத்து வழிபட்ட சிவலிங்கம் அமரேசுவரங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

அமரர்களான, தேவர்கள், கூடி வழிபட்ட தலங்கள் சிலவற்றைப் பற்றிச் சிந்திக்கலாம்.

அமரம்பேடு

சென்னை- குன்றத்தூருக்கு அருகில் அமரம்பேடு உள்ளது. பல்லவர் கால சிவலிங்கம் அமைந்த ஆலயம். பல்லவர் அமைத்த ஆலயம் அழிந்து விட்ட தால், எளிய ஆலயம் அமைத்துள்ளனர். எதிரில் தேவ தீர்த்தம் உள்ளது. இது பெரிய தாமரைக் குளமாகும். சூரியனின் கதிர்கள் வருடத்தின் சில நாட்கள் இக்குளத்தில் பட்டுத் தெரித்து இறைவனை பிரகாசப்படுத்தும் என்று கூறு கின்றனர்.

அமரேச்சுவரம்

காஞ்சி நகரில் கச்சபேசுவரர் கோயிலுக்கு அருகில் தேவர்கள் ஒன்றுகூடி வழிபட்ட அமரேச்சுவரம் என்னும் சிவாலயம் உள்ளது. இது பல்லவர்கால கலைக் கோயிலாகும். காஞ்சிப் புராணம் இதனைச் சிறப்புடன் போற்றுகின்றது.

கொடுங்குன்றம்

கொடுங்குன்றம் என்று தேவாரம் போற்றும் பிரான்மலையில் சுவர்க்காலயம் எனப்படும் மலை மீதுள்ள உமா மகேசர் சந்நிதியில் பெரிய முகமண்டபம் உள்ளது. இதற்குத் தேவர் தொழுமன்றம் என்பது பெயர்.

உமா மகேசுவரரின் திருமணத்தைக் காண வந்த தேவர்கள் கூடி நின்ற இடமே இம் மண்டபம் என்பர். இதன் விதானத்தின் பலவகை யான் தேவர்கள் தத்தம் தேவியருடன் சிறுசிறு கட்டத்துள் செதுக்கப்பட்டுள்ளனர்சின்ன சேலத்தை அடுத்துள்ள குகையுள் சுவர்ண புரீசுவரர் ஆலய முகமண்டபத்திலும் தேவியரு டன் தேவர்களைக் காணலாம்.

தேவாசிரிய மண்டபம்

திருவாரூரில் தினமும் மாலை வேளையில் இந்திரன் தேவர்களுடன் வந்து தியாகராசப் பெரு மானைப் பூசிக்கிறான். அவர்கள் பூசைக் கு முன்னும் பின்னும் கூடியிருக்கும் இடம் ஆயிரங்கால் மண்டபமாகும். இதனைத் "தேவாசிரிய மண்டபமென்று புராணங்கள் கூறுகின்றன.

ரிஷிவந்தியத்து அர்த்தநாரீசர்

தென்னாற்காடு மாவட்டத்தில் ரிஷிவந்தியம் என்னும் தலம் உள்ளது. இங்கு இந்திரன் தேவர்களோடு கூடிவழிபட்டான். அவனுக்குப் பெருமான் அர்த்தநாரீசுவராகக் காட்சியளித்தார். இப்போதும் லிங்கத்திற்குத் தன் அபிஷேகம் செய்யும் போது, அம்பிகையின் வடிவம் தோன்றுகிறது. அம்பிகைக்கு எதிரிலுள்ள மண்டபத்தின்மீது இந்திரனின் சுதைச் சிற்பம் உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவர்களை எரித்து மீண்டும் எழுப்பிய தலங்கள்

பிரம்மன் உள்ளிட்ட எல்லா தேவர்களையும் ஒரு கற்பத்தின் முடிவில் சிவபெருமான் எரித்தார். அச்சாம்பலில் இருந்த மீண்டும் முன்போலவே அவர்களைப் படைத்தார்.அத்தலம் திருக்கடவூருக்கு கிழக்கில் அமைந்துள்ள கடவூர் மயானமாகும்.அங்கு பிரமன் பூசித்தான். அதையொட்டி இறைவன் பிரம்ம புரீசுவரர் என்று அழைக்கப்படுகிறார்.

ஒரு சமயம் பண்டாசுரன் என்ற மாயாவி அரக்கன் இருந்தான்.அவன் பல கூறாகப் பிரிந்து தேவர்கள் உடலில் தங்கி அவர்களின் சக்தியைக் கவர்ந்து, சக்தியை இழக்கச் செய்தான். எல்லோரும் அவனைக் கண்டு பிடிக்க முடியாமல் தவித்தனர். பெருமானைத் தேவர்கள் அனை வரையும் ஒரு சேரக் கட்டி எரித்தார். அப்போது அசுரனும் எரிந்து போனான்.மீண்டும் தேவர்களைப் பெருமான் உயிர்ப்பித்து எழுப்பினார்.அந்த இடம் காஞ்சிபுரத்தில் கச்சிமயானமாகத் திகழ்கிறது.இது வைப்புத் தலமாகும்.

ஒருமுறை தேவர்களைக் கடுஞ்சுரம் பீடித்தது. தேவ வைத்தியர்கள் எவ்வளவு முயன்றும் குணமாகவில்லை.இந்திரன் சிவலிங்கம் அமைத்து வழிபட்டான். சுவாமி மூன்று முகங்களும், மூன்று கரங்களும் கொண்ட ஜ்வரஹரேசுவரராகத் தோன்றி தேவர்களின் ஜ்வரத்தை நீக்கினார். அவ்விடம் காஞ்சியில் ஜ்வரஹரேசம் எனும் பெயரில் உள்ளது ☆

33 கோடி தேவர்கள் பூசித்த லிங்கங்கள்

முப்பத்து முக்கோடி தேவர்களும் காசியிலும்கேதாரத்திலும் சிவபூசை செய்து கொண்டி ருக்கின்றனர். உஜ்ஜயினியில் மகாகாளேஸ்வர லிங்கத்தை நள்ளிரவில் தேவர்கள் பூசை செய்கின்றனர்.முன்னாளில் நள்ளி ரவில் அங்கு யாரும் தங்குவதில்லை.தூரத்திலிருந்து வழிபடுபவகளுக்கு அவர்கள் இசைக்கும் சங்கு, சேகண்டி,பேரிகைகளின் ஓசை கேட்குமென்று கூறுகின்றனர்.

33 கோடி தேவர்களில் பதினோரு கோடிப்பேர் ஆகாயத்தில் தாரகேசுவரம் முதலிய பதினோரு கோடி லிங்கங் களையும் அடுத்த பதினோரு கோடிப் பேர்கள் பூமியில் காசி விசுவநாதர் முதலியன பதினோரு கோடி லிங்கங்களையும் எஞ்சிய பதினோரு கோடி பேர்கள் பாதாளத்தில் ஆடகேசுவரர் போன்ற பதினோரு கோடி லிங்கங்களையும் அமைத்துப் பூசித்தனர். அவை சிவனருளால் கண்ணுக் குப் புலப்படாமல் மறைந் துள்ளன. ☆

இந்திர கோபம்

இது கருஞ்சிவப்பு நிறமான பூச்சி. மழைக்காலம் முடிந்ததும் அதிகமாகக் காணப்படும். இலக்கியங்கள் இதைச் சிறப்புடன்பேசுகின்றன. தம்பலப்பூச்சி, மேகவிந்து, வெல்வெட்டுப்பூச்சி என்ற பெயர்களும் கொண்டது. இதன் மூலம் தயாரிக்கப்படும் மருந்துகள் மேகநோய், முதலான பல சரும நோய்களை நீக்குவதாகும். மருத்துவம் போற்றும் பூச்சிகளில் இது ஒன்றாகும். ☆

அருள்மிகு இந்திரப்பிரசாதவல்லி உடனாய புரந்தரேசப்பெருமான் அருளினால் எல்லோரும் எல்லாமும் பெற்று இனிது வாழ்க!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாலுக்குச் சக்கரம் அருளினாய் போற்றி !
மன்னுசதுர்முக பிரம்மற்கு வாள் அருளினை போற்றி போற்றி!!

ஸ்ரீ சிவாயுதங்கள்

அமைதியான வாழ்வுக்குப் பாதுகாப்பு தேவை. பாதுகாப்பை மேற்கொள்ளும் வீரர்கள் பகைவர்களையும் தீயசக்திகளையும் வென்றடக்க ஆயுதங்களை ஏந்துகின்றனர். அவை வெட்டுதல், குத்துதல், பிளத்தல், காயப்படுத்துதல் அச்சுறுத்தல் என்ற பல வகைப் பணிகளைச் செய்கின்றன. அவற்றை வெற்றிதரும் படைக்கலங்கள் என்பர்.

அதுபோல். பயிர்த்தொழில், வேட்டையாடுதல், உணவு சமைத்தல், வீடு கட்டுதல் முதலிய ஆக்கவேலைகளுக்கும் படைக்கலங்கள் தேவைப்படுகின்றன. இவை கடின உழைப்புகள் தடுக்கப்படவும், பணிகளை விரைவாகவும் எளிதாகவும் செய்ய உபயோகப்படுகின்றன.

எனவே, மனித வாழ்வில் படைக்கலங்கள் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளன. ஆதியில் இறைவன் படைக்கலங்களை உருவாக்கினான். பின்னர். அவற்றை மக்களுக்கு அளித்ததுடன் அவற்றைப் பயன்படுத்தும் முறைகளையும் விரிவாக வகுத்தளித்தான். அவையே அஸ்திர சஸ்திர நூல்களாக விளக்கம் பெற்றன. முருகன், திருமால், பரசுராமர், முதலியோர்சிவபெருமானிடமிருந்தே ஆயுதங்களைப் பெற்றதுடன், அதைப் பயன் படுத்தும் வித்தைகளையும் கற்றனர் என்பதை அறிகிறோம்.

சிவமஞ்சரியின் இந்த ஐம்பத்தெட்டாவது மலர் சிவபெருமான் ஏந்தும் ஆயுதங்களில் சிலவற்றின் பெருமைகளைப் பேசுவதுடன், அவரிடமிருந்து ஆயுதங்களைப் பெற்றுப் பெருமை பெற்றவர்களையும், பூஜா நூல்களில் சொல்லப்பட்டுள்ள ஆயுதங்களின் மேன்மைகளையும் இயன்றவரை எடுத்துரைப்பதாக மலர்கிறது. இவற்றை அறிந்து மகிழத் தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

அன்பர்கள் அனைவருக்கும் சகல செல்வ யோக மிக்க பெருவாழ்வை அளித்து அருள் பாலிக்க வேண்டுமென்று, அஸ்திரவல்லி உடனாய சூலபாணி அருள்புரிய வேண்டுமென்று அவர்தம் பொற்பாதங்களைப் பணிந்து வேண்டுகிறேன்

- சிவசுந்தரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

படைக்கலங்கள் - சிந்தனைத் துளிகள்

❂ படைக்கலங்கள் அத்திரம், சஸ்திரம் என்று இருவகைப்படும். சஸ்திரம் என்பது கைகளில் பற்றிக் கொண்டு சண்டையிட உதவும் வாள், குத்துவாள், சங்கிலி, கத்தி முதலிய ஆயுதங்கள். இவை கைகளால் ஆளப்படும் ஆயுதங்களாகும்.

❂ மாறாக தூரத்திலிருந்தவாறே எதிரிக ளின் மீது செலுத்தி அவர்களை அழிக்க உதவும் ஆயுதங்கள் அஸ்திரம் எனப்படும். அம்பு, சூலம், எறியீட்டி, வேல் முதலியன அத்திரங்களாகும்.

❂ ஆயுதங்களில் பெண்ணாயுதம் ஆணாயுதம் என்று இருவகைப்படும். சூலாயுதம், சக்ராயுதம் முதலானவை ஆணாயுதங்களாகும். பத்மம், கதை, சக்தி முதலியவை பெண் ஆயுதங் களாகும்.

❂ ஆயுதங்களுக்குள் உக்ர சக்தி ஒன்று உள் நின்றுள்ளது என்றும் அதுவே தாக்கும் போது செயல்பட்டுப் பகைவரை அழிக்கிறதென்றும் கூறப்படுகிறது. இவள் அஸ்திர சக்தி எனப்படுகிறாள். சங்க இலக் கியங்களில் ஈட்டி, வாள் முதலியவற்றில் தெய்வங்கள் உறைவதாகக் கூறப்பட்டுள்ளது.

❂ அஸ்திர, சஸ்திரங்களை இயக்கும் முறைகளையும் அதற்கு வலிவூட்டி திறம்படச் செயலாற்ற வைப்பதற்கும் ஆன விளக்க நூல்கள் உள்ளன. இவற்றை அனந்த சக்தியுடன் செயல்பட வைக்கும் மந்திரங்களும் உள்ளன.

❂ சில ஆயுதங்கள் இணைஇணையாகவே இருந்து செயல்படும் எடுத்துக்காட்டாக வஜ்ரம் சக்தி இவை இரண்டும் முருகன் கரத்தில் இருப்பது. இதுபோன்றே அங்குசம் -பாசம் இணையானதாகும். சூலமும் கபாலமும், கத்தி கபாலமும், கத்தி கேடயமும் இணைஆயுதங்களாகும். அம்பிகை விநாயகர் முதலியோர் பாசம், அங்குசம் ஏந்தியிருக்கின்றனர். சமண சமய தெய்வங்கள் பெரும்பாலும் பாசாங்குசத்தை ஏந்தியுள்ளன. வீரபத்திரர் பத்ரகாளியர் கத்தி கேடயம் ஏந்துகின்றனர்.

ஓம்

அஸ்திர தேவர்

படைக்கலங்களில் இறைவனின் சக்தி நீக்கமற நிறைந்திருக்கின்றது. எனவே, தெய்வத்திற்குரிய படைக்கலங்களை தெய்வ மாகவே போற்றி வழிபடும் வழக்கம் உள்ளது. இறைவன் வீதி உலாவரும்போது ஊர்வலத்திற்கு முன்பாகப் படைக்கலத்தை எடுத்துச் செல்வர். இதற்குப் படை சாய்த்தல் என்பது பெயர்.

பெருந்தெய்வ ஆலயங்களில் அத்தெய் வங்களுக்குரிய படைக்கலத்தை உலோகத் தால் செய்து பீடத்தில் பொருத்தி வைத்து ள்ளனர். சிவாலயங்களில் திரிசூலத்தையும், திருமால், ஜைன ஆலயங்களில் சக்கரத்தை யும் விநாயகர் ஆலயங்களில் அங்குசத்தை யும், முருகன் ஆலயங்களில் சக்தி ஆயுதத் தையும், கிராமிய தெய்வ ஆலயங்களில் திரிசூலத்தையும் அஸ்திர தேவதையாக வைத்துள்ளனர்.

பெருந்திருவிழாவில் அஸ்திர தேவர் வழிபாடு தனிச்சிறப்புடன் நடைபெறுகிறது. விழாவின் தொடக்கத்தில் கொடியேற்றிய பின்னர் அஸ்திர யாகம் எனப்படும் படைக்கல வேள்வி செய்யப்படும். பின்னர், அஸ்திர மூர்த்திக்கு அபிஷேகம் செய்து அதில் சகல தேவதா ஆவாகனம் எனப்படும் தேவர்களை நிலைப் படுத்தும் நிகழ்ச்சி நடைபெறும். பெருந் திருவிழாவின்போது காலையிலும் மாலையிலும் சுவாமி புறப்பாட்டிற்கு முன்பாக சூலம் (அஸ்திர தேவர்) எடுத்துச் செல்லப்படும். அப்போது ஒவ்வொரு திசையிலும் பலிபீடத்தை வைத்து திக்பாலகர்களுக்குச் சோற்றுண்டைகளால் பலி அளிக்கப்படும். இதனை நவசந்தி உற்சவம் என்பர்.

பெருவிழாவின் இறுதியில் நடைபெறும் தீர்த்தவாரி விழாவில் அத்திர தேவருக்குப் பூசை செய்து அருச்சகர் அவரைச் எடுத்துச் சென்று நீரில் மூழ்க வைத்துத் தானும் மூழ்குவார். அவ்வேளை யில் பக்தர்களும் தீர்த்தத்தில் மூழ்கு கின்றனர்.

ஆலயங்களில் அத்திரங்களின் உருவங்களை உரிமைக் குறியீடாகவும், முத்திரைகளாகவும் இடும் வழக்கம் உள்ளது. பெருமாள் ஆலயங் களில் சக்கரத்தையும், சிவன் ஆலயங்களில் சூலத் தையும் முத்திரையாக பயன்படுத்துகின் றனர்.

ஓம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபெருமான் அளித்த ஆயுதங்கள்

முருகன் உக்ரகுமாரராகத் தோன்றி பாண்டிய நாட்டை அரசாண்டு கொண்டிருந்த போது வேல், வளை, செண்டு ஆகிய மூன்று ஆயுதங்களை அளித்தல்

சிவபெருமான் மகாவீரன். அவன் தனது ஆற்றலால் எண்ணிலிகோடி படைக்கலங்களை உருவாக்கினான். அவற்றை வேண்டியவர்களுக்கு விரும்பியவாறு அளித்தான். அவனிடத்திலுள்ள ஆயுதங்கள் ஆற்றல் மிகுந்தவை. அவன் தன் ஆயுதங்களில் இருந்து அவற்றை யொத்த அநேக ஆயுதங்களைப் படைத்து அன்பர் களுக்கு அளித்தான். உலகைப் படைக்கும் போதும், தேவர்களைப் படைத்தபோதும் அவர்கள் தொழிற்பட ஆயுதங்களை அளித்தான். அவை எதிரிகளை வென்றடக்கத் துணை நின்றதுடன் ஆக்கல் தொழிலுக்கும் பயனாயின. அவற்றிலிருந்து வேட்டையாடவும் பயிர்த் தொழில் புரியவும் மீன்பிடிக்கவும் ஆயுதங்கள் தோற் றுவிக்கப்பட்டன. அந்த ஆயுதங்கள் மக்களின் கடின உழைப்பைக் குறைத்து வாழ்வை எளியதாகவும் இனிமையான தாகவும் மாற்றின.

காலம் செல்லச்செல்ல அரிய தவங்களாலும், மந்திரசக்திகளாலும் வலிமையூட்டப்பட்டு,பெருஞ்சக்தி படைத்த ஆயுதங்கள் படைக்கப்பட்டன. ஒவ்வொரு அஸ்திர, சஸ்திரமும் அளவிட முடியாத ஆற்றல் களைப் பெற்றிருந்தன. அவை யாவும் அதிஉன்னத வீரனான பரமேசுவரனிடத்தில் ஒடுங்கி இருக்கின்றன.

அஸ்திர, சத்திரங்களைப் பெற விரும்பியவர்கள் சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்தனர். அவர்களுடைய தவத்தால் மகிழ்ந்த சிவபெருமான் அவர்கள் விரும்பியவாறு ஒப்பற்ற ஆயுதங்களை அளித்தார்.

சிவபெருமான் பிரம்மனுக்கும் இராவணனுக்கும் ஒப்பற்ற வாளாயுதத்தை அளித்தார். இராவணனுடைய வாளுக்குச் சந்திரஹாசம் என்பது பெயர்.

தன்னைநோக்கித் தவம் செய்த பரசுராமனுக்கு அவர், பரசு என்ற கோடரியை அளித்தார். அதனால் அவன் பரசுராமன் என்றழைக்கப்படுகிறான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முருகனுக்குப் பதினோரு உருத்திரர்களின் அம்சத்திலிருந்து தோமரம், கொடி, வாள், குலிசம், அம்பு, அங்குசம், மணி, தாமரை, தண்டம், வில், மழு என்ற பதினோரு ஆயுதங் களை உருவாக்கி அளித்தார். பின்னர் சக்தியின் அம்சமான சுடர்வடி வேலாயுதத்தையும் அளித்தார்.

பின்னாளில் மதுரையில் முருகன் உக்ரகுமாரராகத் தோன்றி பாண்டிய நாட்டை அரசாண்டு கொண்டிருந்த போது வேல், வளை, செண்டு ஆகிய மூன்று ஆயுதங்களையும் அளித்தார் என்று திருவிளையாடற்புராணம் கூறுகிறது.

இன்னோரு சமயம் முருகனுக்கு உருத்திர பாசுபதம் என்ற ஒப்பற்ற பாசுபதாஸ்திரத் தையும் அளித்தார்.

திருமால் தன்னை நோக்கித் தவம் செய்தபோது ஆயிரம் பற்களை உடைய சுதர்சனம் என்னும் சக்ராயுதத்தை அளித்தார். இதனைத் திருவீழிமிழலை, திருமால்பூர் முதலான தலங்களின் புராணங்கள் கூறு கின்றன.

இந்திரனுக்கு வஜ்ராயுதத்தை அளித்தார். இந்திரனின் அம்சமாகத் தோன்றிய அருச்சுன னுக்கு அவர் பாசுபதாஸ்திரம் அளித்த நிகழ்ச்சி மகாபாரதத்தில் தனிச்சிறப்புடன் குறிக்கப்பட் டுள்ளது, இவற்றையொட்டித் தென்னக ஆலயங்களில் பெரிய ஐதீக விழாக்கள் நடைபெறுகின்றன.

உலகினைக் காத்துவரும் அஷ்டதிக்குப் பாலகர்களுக்கு அவர்களுக்குரிய ஆயுதங்களை அளித்தவரும் சிவபெருமானே ஆவார். அவரே வைரவர், காளி, முதலான தெய்வங்களுக்குச் சூலத்துடன் கபாலத்தையும் அளித்து அருள் புரிந்தார்.

சிவபெருமான் உக்ர ஆயுதங்களை உரு வாக்குபவர். அவரே ஆயுதங்களாகவும் விளங்கு கிறார். ஆயுதங்களை ஏந்துபவர்கள் அவர் அருளாலேயே வெற்றிகளைக் குவிக்கின்றனர். வெற்றியைத் தரும் ஆயுதங்களும் வீரமுமே சிவமாகும்.

மந்திர ஆயுதங்கள்

வாள், கத்தி, சூலம், வில் போன்றவை வெட்டுதல், குத்துதல் போன்ற செயல்களைச் செய்யும் நேரிடையான ஆயுதங்களாம். இறைவன் ஏந்தும் தாமரை, சங்கு, சேவல், மயிற்பீலி, அக்கமாலை, கெண்டி, சாமரம், ச்ருக், ச்ருவம், வீணை, கொடி போன்றவை நேரிடையாக ஆயுதங்களாக இல்லாவிட் டாலும் அழிவையோ ஆக்கத்தையோ தரும் அபூர்வ சக்தி கொண்டவைகளாகும்.

தாமரை என்பது பூவாக இருந்த போதிலும் அஞ்ஞானத்தை அகற்றுவது, ஞானத்தை மலரச்செய்வது. அதுபோல் செல்வங்களைத் தருவதாகும். அதுபோல் நீலோற்பல மலர் யோகிகளுக்கு மன ஒடுக்கத்தைத் தருகிறது.

மயிற்பீலி என்பது வெற்றியைத் தருவ தாகும். மந்திர சக்திகளை மயிற்பீலி மூலம் மற்றவர்கள் மேல் செலுத்தலாம். கங்காளர் வடிவில் பெருமான் மயிற்பீலியை ஏந்து கின்றனர். இதை அறிவாயுதம் என்பர். எழுத்தாணியின் தலையில் மயிற்பீலி யைக் கட்டிவைப்பர்.

சங்கு, போர் தொடங்குவதைக் குறிப்ப தற்கும், போரில் வெற்றி பெற்ற பின்னர் வெற்றி யைக் குறிக்கவும் முழக்கப் படுவதாகும். இதன் ஒலியால் பகைவர்கள் கலக்கமடைந்து மயங்கி விடுகிறார்கள்.

சேவல் அக்னியின் அடையாளமாகவும் போரின் அடையாளமாகவும் விளங்குகிறது. சேவலைக் கடுங்குரல் சேவல் என்பர். அதன் கடுங்குரலால் பகைவர்கள் பயமடைகின்றனர் என்று கந்த புராணம் கூறுகிறது.

கமண்டலத்து நீரால் மந்திரங்களைப் பகைவர் மீது செலுத்துகின்றனர். போரில் செய்யப்படும் கொலையால் வரும் பாவம் நீங்கிப் புனிதம் பெற கமண்டல நீர் அவசிய மாகும். ஜலந்தர. சம்ஹார வடிவில் சிவன் கமண்டலம், அட்ச மாலையுடன் விளங்கு கிறார். ஞான மயமான சரஸ்வதி, யோக பார் வதி, பிரம்மன் முதலியோர் அட்சமாலை, கெண்டியை ஏந்துகின்றனர். இதுபோன்று வடிவால் வேறுபட்ட ஆயுதங்கள் பலவாக உள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திரிசூலம்

தெய்வங்கள் யாவும் தமது வீரதீர பராக்கிர மங்களை விளக்கும் வகையில் அனேகவித ஆயுதங்களைத் தாங்கி யுள்ளனர் என்றாலும், ஒவ்வொரு தெய்வத்திற்கும் உரிய சிறப்பான ஆயுதங்கள். உள்ளன எடுத்துக்காட்டாக சிவபெருமானுக்குச் சூலமும், முருகனுக்கு வேலும், ராமனுக்கு வில்லும், பரசுராமனுக்கு மழுவும் உரிய ஆயுதங்களாகும். இவற்றின் பெயரால் அவர்கள் முறையே சூலபாணி, வெற்றிவேலன், கோதண்டராமன், பரசுராமன் என்று அழைக்கப்படுகின்றனர். சிவபெருமானின் சூலம் அதியுன்னத படைக்கலமாகும். அது ஞான வடிவானது. உயிர்களின் பாசத்தையும் பாவத்தையும் போக்கி முக்தி தர வல்லது. அதனை ஏந்தியிருப்பதால், சிவபெருமான் சூலபாணி என்று அழைக்கப்படுகிறான். இதற்கு மூவிலை வேல், வசி, திரிசிகை எனப் பல பெயர்கள் உண்டு.

பல்லவர் காலச் சோமாஸ்கந்தர் வடிவங்களில் சிவபெருமான் நீண்ட சூலத்தையும், கபாலத்தையும் தாங்கியவராகச் சித்தரிக்கப்பட்டுள்ளார்.

கங்காளராக வரும் சிவபெருமான், ஏந்திவரும் சூலத்தின் இலைப் பகுதியில் அந்தகாசுரனின் வற்றிய உடலைக் காணலாம். அவனை அடக்கப் பெருமானார் அவனைச் சூலத்தில் குத்தித் தூக்கிப் பிடித்தார். அவன் உடலிலுள்ள இரத்தமெல்லாம் வெளியேறியது. அவன் வற்றிப் பிசாசு போலானான். அவனுக்குத் தெளிவுபிறந்தது. அவனைப் பெருமான் சூலத்திலிருந்து விடுவித்துக் கணங்களின் தலைவனாக்கினார்.

இன்னுமோர் சமயம் விசுவக்சேனனைச் சூலத்தால் குத்திக் குடைபோல் சுழற்றிப் பிடித்தார். அவன் அகந்தை நீங்கித் தொழுதபோது கீழே விடுத்து, திருமாலுக்கு அணுக்கத் தொண்டனாக்கினார்.

பிட்சாடனர் வடிவிலும் வயிரவர் வடிவிலும் சிவ பெருமான் நீண்ட சூலத்துடன் விளங்குகிறார். சிவபெரு மானை வணங்குவதைப் போலவே அவருடைய சூலா யுதத்தையும் வழிபடுகின்றனர். அனைத்துப் பெரிய ஆலயங்களிலும் திரிசூலத்திற்குச் சிறப்பான உலாத் திருமேனி உள்ளது. .இதில் அழகிய பீடத்தில் திரிசூலத் தின் முனை மட்டும் எழுந்தருளி வைக்கப்பட்டிருக்கும். சோழ நாட்டில் நீண்ட தண்டுடன் கூடிய சூலத்தைக் காண்கிறோம்.

அஸ்திரதேவரான திரிசூலமும் அதன் நடுவில் ரிஷபத்துடன் கூடிய சந்திரசேகரரும்

சில தலங்களில் சூலத்தின் நடுவே இடபத்துடன் நிற்கும் பார்வதி பரமேசுவரர்களை அமைத்துள்ளனர்.. இந்நிலை வளர்ந்து சந்திரசேகரர், அர்த்தநாரி, முதலிய மகேசுவர வடிவங்களும் சூலத்தின் நடுவில் அமைக்கப்பட்டுள்ளதைக் காண்கி றோம்..

சூல தேவர்

தெய்வங்களை உலாவரச் செய்யுமுன் அவர்களுடைய படைக்கலங்களை முன்னே எடுத்துச் செல்வது வழக்கம். பெருந்திருவிழா வின்போது சிவாலயங்களில் திரிசூலத்தைச் சுவாமிக்கு முன்பாக எடுத்துச் செல்கின்றனர். இந்தச் சூலத்தை அத்திரதேவர் என்று அழைக்கின்றனர். இதில் திரிசூலத்தின் நடு இலையில் உருத்திரன், வலது இலையில் பிரமன் இடது இலையில் விஷ்ணுவும், பாலிகையில் பார்வதியும் உள்ளனர். கும்பத்தில் ஷண்முகர், கும்ப முகத்தில் விநாயகர், தண்ட

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நுனியில் சாஸ்தா தண்ட மத்தியில் ஆதித்தியர்கள், தண்டின் அடியில் சிவசண்டீசர் இது போன்று லட்சுமி, சப்தமாதர்கள், ஜேஷ்டா, துர்க்கை, உருத்திரர், சூரியர், வசுக்கள், அசுவினித் தேவர்கள், பதினெண் கணங்கள் ஆகியோரை முறைப்படி தியான சுலோகங்களைக் கூறி நிலைப்படுத்திப் பூசிக்கின்றனர். இப்படி அநேக தேவர்களை அங்கமாகக் கொண்டிருப்பதால் திரிசூலத்தை அஸ்திரராஜம் என்று அழைக்கின்றனர். அதன்மூலம் இது சகல தேவர்களுக்கும் இருப்பிடமாக இருப்பதை அறிகிறோம். இதற்குச் செய்யப்படும் பூசைகள் யாவும் அனைத்து தேவர்களையும் அடைகிறது.

விழாவின் இறுதியில் நடைபெறும் தீர்த்தவாரியின் போது இந்தச் சூலத்திற்குச் சிறப்பு வழிபாடுகள் செய்து தண்ணீரில் மூழ்கவைக்கின்றனர். அப்போது எல்லோரும் அந்தத் தீர்த்தத்தில் நீராடுவர். இது சிவபெருமானுக்குரிய உயர்ந்த அடையாளக் குறியாகும்.

ஃ

சூலக் குறியும் இடபக் குறியும்

சமயவாதிகள் தம்மைச் சமய வாழ்க்கையில் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டதன் அடையாள மாகச் சமயச் சின்னங்களைத் தோளில் குறியிட்டுக் கொள்வர்.இது முத்திரை போட்டுக் கொள்ளுதல் எனப் படும்.செம்பில் செய்து பழுகக்காச்சிய சமயச் சின்னங் களைத் தோளில் ஒற்றிக் கொள்வர். அது புண்ணாகித் தீராத வடுவாகி நிலைத்துவிடும். சைவ சமயிகள் சூலத் தையும் இடபத்தையும் குறியாக இட்டுக் கொள்ளும் வழக்கம். அங்கொன்றும் இங்கொன்று மாக இருந்து வந்துள்ளது.

திருநாவுக்கரசர் இறைவனிடம், " ஐயனே நான் சமண சமயத்தில் நீண்ட காலம் நிலை பெற்றிருந் ததால் எனது சைவம் தழுவிய வாழ்வு சந்தேகத்திற்கு இடமாக இருக்கிறது. அப்படி மற்றவர் சந்தேகத்தோடு பார்ப்பது எனக்குக் கவலையளிக்கிறது. அதனால் நான் உயிர் துறக்க நேரிடலாம்.என் ஆவியைக் காப்ப தற்கு உமக்கு விருப்பம் இருக்குமாயின், எனக்கு உனது முத்திரைகளைப் பதிப்பாய் என வேண்டுகிறார். அந்த வேண்டுகோளை ஏற்றுப் பெருமான் ஒரு பூதத்தை அனுப்பினார். அது யாரும் அறியாமல் அவர் தோள்களில் சூலக் குறியையும் இடபக் குறியையும் பதித்தது.அதைக் கண்டு அனைவரும் அதிசயித்தனர்.

சைவ அன்பர்கள் வெள்ளியால் செய்த இடபம், சூலம் உருவங்களைப் பூசையின் போது தோளில் அணிந்து கொள்கின்றனர்.

அப்பருக்குச் சிவபெருமன் சூல, இடபச் சின்னங்களை பொறித்தது போல் அருணகிரி நாதருக்கு முருகப் பெருமான் சேவல், மயில் சின்னங்களைப் பொறித்தார் என்று திருப்புகழ் கூறுகிறது.

முன்னாளில் ஆலயத்தின் மாடுகளுக்கும் இடபக் குறி இடப்பட்டது.சிவாலயங்களுக்கு அளிக்கப்படும் நிலங்களின் நான்கு எல்லைகளிலும் எல்லைக்கல் நாட்டுவது வழக்கம். அந்தக் கல்லில் சூலத்தைச் செதுக்கி அமைக் கின்றனர். இது சூலக்கல் எனப்படும். (வைணவ ஆலயங்களுக்குச் சக்கரம் பொறித்த ஆழிக்கல்லும், ஜைன ஆலயங்களுக்கு முக்குடைக் கல்லும், ஜைன மடங்களுக்குக் குண்டிகைக் கல்லும் எல்லைக் கற்களாக அமைக்கப்படுகின்றன.

ஃ

சூலதரன் ஆடல்

வீரர்கள் தமது ஆயுதங்களை ஏந்தி வெற்றிக் களிப்புடன் நடனமாடுவர். இது வாளோர் ஆடும் அமலை, சிலம்பாட்டம், வேலன் ஆடல் எனப் பலவாறு அழைக்கப்படும். சிவபெருமான் தனது சூலத்தைச் சுழற்றி ஆடுகிறான். அதுவே சந்தியா தாண்டவமாகும். பெருமான் சூலத்தைச் சுழற்றி நடனமாடுதல் திருமுறைகளில் அனேக இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது. யம சங்கார மூர்த்தி சூலம் சுழற்றி ஆடும் கோலத்தில் விளங்குகிறார்.

சூலத்தை இரும்பால் (எஃகு) செய்தால்தான் உறுதியாக இருக்கும். சிவபெருமானின் சூலம் எஃகால் ஆனதென்பதை இரும்பார்ந்த சூலத்தன் என்று நாவுக்கரசர் குறிப்பிடுகிறார்.

ஃ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரம்ம கபாலம்

ஆயுத உருவத்தில் இல்லாவிட்டாலும் மிகுந்த ஆற்றல் கொண்டது பிரம்ம கபாலம் எனப்படும் உண்கலம் ஆகும். சிவபெருமான் இந்தக் கலத்தை ஏந்தியுள்ளார். அளவில் சிறியதாக இருப்பினும், ஆற்றலால் பெரியது என்பதால் பிரம்ம கபாலம் என்று அழைக்கப்படுகிறது. பிரம்மம் என்பதற்கு ஆற்றல் மிக்கது பெரியது, உயர்ந்தது என்பன பொருட்களாகும்.

பிட்சாடனர், வைரவர், வடுகர் முதலிய கோலங்களில் சிவபெருமான் பிரம்ம கபாலத்தை ஏந்துகிறார். இது ஓடு, மண்டையோடு என்றும் பெயர் பெறும். பல்லவர்கால சோமாஸ் கந்தர் வடிவில் கூட பெருமான் கபாலத்துடன் காட்சியளிக்கிறார். சிவயோகி வடிவுடன் வந்த சிவபெருமான் இந்த ஓட்டைக் கொடுத்து நீலகண்டர் என்னும் அடியவரை ஆட்கொண்டார் என்று பெரிய புராணம் கூறுகிறது. அப்புராணத்தில் சேக்கி ழார் இந்த ஓட்டின் பெருமைகளை இது தனக்கு ஒப்பில்லாதது: தன்னுள் இட்ட எதையும் தூய்மை செய்வது பொன், மணி இவற்றைவிட மேலாகப் போற்றிக் காக்க வேண்டியது அவசியம் என்று சிவபெருமானே கூறுவதாக விவரித் துள்ளார்.



சிவபெருமான் காளிக்கு இந்த ஓட்டின்று தோற்றுவிக்கப்பட்ட ஓர் ஓட்டை அளித்தார். அது அசுரர்களின் இரத்தத்தைக் குடித்து அவர்களை வேரோடு களைவதாயும் பிரளயத்தை தன்னுள் ஏற்றுக் கொள்ளும் ஆற்றல் பெற்றதாயும் விளங்குகிறது.

ஓடாகிய கபாலத்தைத் தாங்கி நிற்பதால் மயிலாப்பூரில் வீற்றிருக்கும் சிவபெருமான் கபாலீசர் என்று அழைக்கப்படுகிறார். ஈரமான ஓட்டை ஏந்தியுள்ள காரணத்தால் ஈரோடிலுள்ள பெருமான் ஆர்த்தர கபாலீசர் என்று அழைக்கப்படுகின்றார்.

திருச்செங்காட்டங்குடியில் சிறுத்தொண்டரிடம் பிள்ளைக் கறி அமுது கேட்டு வந்து அருள் செய்த போது, பெருமான் இடது கையில் ஓட்டையும், தோளில் சூலத்தையும் தாங்கி வலக்கையால் உடுக்கையை ஒலித்துக் கொண்டு வந்தான் என்று பெரியபுராணம் கூறுகிறது.

திருச்செங்காட்டில் இந்த வைரவருக்கு அளிக்கப்பட்ட நிலத்திற்குத் திருஓட்டுக் கட்டளை எனப் பெயர் வழங்கியதைக் கல்வெட்டு கூறுகின்றது. இவருக்குப் பொன்னாலான திருவோடு சாத்தப்படுகிறது.

சிவபெருமானேயன்றி, மாரியம்மன், காளி, பிடாரி முதலான தெய்வங்களும் சூலம், கபாலம் ஆகியவற்றைத் தாங்கியுள்ளன.

அங்காளம்மன் ஆலயங்களில் பிரம்ம கபாலம் என்னும் பாத்திரம் உள்ளது. இதில் திருநீற்றை நிறைத்து வைத்திருப்பர். இதன் நான்கு பக்கங்களிலும் சடையுடன் கூடிய தலைகள் புடைப்பாக அமைக்கப்பட்டுள்ளன. இதன் விளிம்பில் நான்கு சிவலிங்கங்களும் நான்கு நந்திகளும் அமைக்கப்பட்டுள்ளன.

பிரம்மனுடைய ஐந்தாவது தலையையே சிவபெருமான் திருஓடாக ஏந்தியிருக்கிறார் என்று திருமுறைகள் திரும்பத் திரும்பக் கூறுகின்றன. ௐ

சிவபெருமானின் கையில் பிட்சா பாத்திரம் இருப்பது போல, அம்பிகையின் கையில் அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரம் இருக்கிறது. முருகன், விநாயகர் ஆகியோரின் சில அவதாரத் திருவுருவங்களில் அமிர்த கலசம் ஏந்தியவாறு அவர்கள் காட்சியளிக்கின்றனர். ௐ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உடுக்கை



உடுக்கை தோலாலான இசைக் கருவியாகும். இடையில் சிறுத்தும் இருபுறமும் பருத்து வாயகன்ற உருளை வடிவத்தில் உள்ளது. இதன் இருபுறமும் தோலால் மூடி இழுத்துக் கட்டி இருப்பர். மணி கட்டிய நீண்ட கயிற்றை நடுவில் கட்டியிருப்பர். உடுக்கையை முன்பின்னாக இயக்கும் போது கயிற்றில் கட்டியுள்ள மணி அதன் இரண்டு பக்கங்களிலும் அடித்து ஒலி எழுப்பும். இது பல அளவுகளில் உள்ளது. சிறிய உடுக்கை துடி என்றும் பெரிய உடுக்கை டக்கம் எனவும் அழைக்கப் படும்.

சிவபெருமான் நடராசர், தட்சிணாமூர்த்தி வடிவங்களில் உடுக்கையை வலது மேற்கரத்தில் ஏந்துகிறார். பிட்சாடணனாக (உத்ராபதியாராக) சிறுத்தொண்டரிடம் உணவு கேட்டு வரும் வேளையில் சிவபெருமான் உடுக்கையை வலதுகையில் ஏந்தி ஒலித்துக் கொண்டே வந்தார் என்று பெரியபுராணம் கூறுகிறது.

உடுக்கையின் ஒலியால் உலகம் படைக்கப்படுகிறது என்று சித்தாந்த நூல்கள் கூறுகின்றன. "தோற்றம் துடியதனில்' என்று உண்மை விளக்கம் கூறுகிறது. நல்லூரில் பெருமான் படைப்புத் தொழிலை நிகழ்த்தும் தாண்டவம் ஆடுகிறார். இதில் காதோரம் உடுக்கையை வைத்து வேகமாக அடிக்கும் கோலத்தில் உள்ளார். (உடுக்கையை வேகமாக அடிப்பவர். தோளுக்கு அருகில் காதோரமாக வைத்து முழக்குவர். அதுவே இக்கோலம்.)

சூலத்தில் உடுக்கையைக் கட்டி வைப்பது வழக்கம். சூலத்தையும் உடுக்கையையும் சேர்த்து சூல டக்கம் என்பர். காசியில் சூல டங்கேசுவரர் என்னும் பெயரில் சிவபெருமான் சிவலிங்க மூர்த்தியாக விளங்குகிறார். காசிக்கண்டம் இவரைச் சிறப்புடன் போற்றுகிறது.

சிவபெருமான் ஒருகையால் சூலத்தைச் சுழற்றியவாறு மறுகையால் உடுக்கையை ஒலித்துக் கொண்டே ஆடுகிறான். அது துடியாடல் எனப்படும்.

பின்னாளில் உடுக்கையை அமைத்தவர்கள் அதில் பாம்பு ஒன்று சுற்றிப் படம் எடுத்தாடிக் கொண்டிருப்பதுபோல் அமைத்துள்ளனர். அந்தப் பாம்பை தெய்வங்கள் பற்றிக் கொண்டிருக்கின்றன. இறைவனால் படைக்கப்பட்ட உலகம் மாயாபாசத்தில் கட்டுண்டு கிடப்பதை இது உணர்த்துகிறதென்பர்.

நடுத்தர அளவிலான உடுக்கையைக் கொடுகொட்டி என்பர். இதை நடுவில் பிடித்துக் கொண்டு சிறிய கோலால் (கொட்டி) தட்டி முழக்குவர். சிவபெருமான் சந்தியா தாண்டவ கோலத்தில் கொடுகொட்டியை முழக்கியவாறு ஆடுகிறான். இந்த ஆடலைக் கொட்டிச்சேதம் என்பர்.

கேரளாவில் இத்தகைய கருவியைப் பூசையின் போது வாசிக்கின்றனர். அதைக் கிடுக்கி என்கின்றனர். இது பூசைக்கான சிறப்பு வாத்தியமாகும்.

ஓ

துடி என்பது சிறிய அளவிலான உடுக்கையைக் குறிப்பதுடன், அதிஉக்ரத்துடன் கூடிய வேகத்தையும் குறிக்கிறது. உக்ரமயமானவரான பைரவர் மேற்கரங்களில் உடுக்கையையும் பாசத்தையும், முன்கரங்களில் சூலம், கபாலத்தையும் ஏந்துகிறார். திருவான்மியூரில் உள்ள பைரவர் வலது பின்கரத்தில் சூலத்தைத் தாங்கி, வலது முன்கையால் உடுக்கையை ஒலித்துக்கொண்டு நடப்பவராக அமைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். இது அபூர்வமான அமைப்பாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மழுவாளன்



சிவபெருமானுக்குரிய ஆயுதங்களில் சூலத்திற்கு அடுத்து மேன்மை பெற்றது மழு. இது தலைப்பக்கம் பருத்த நீண்ட தடியாகும். தலைப் பகுதியில் கோடாரி போல் அகன்ற வெட்டு வாயை உடையது.

இதனைக் கணிச்சி என்றும் கூறுவர். சங்க இலக்கியங்களில் சிவபெருமான் கணிச்சிப் படையான் என்று குறிக்கப்பட்டுள்ளான். இது கனல் கக்குவது கடலின் அடியிலுள்ள வடவாமுகாக்னி போல பெருத்த புகையுடன் நெருப்பை உமிழ்ந்து, உலகங்களை கணநேரத்தில் பொசுக்கி அழிப்பது. தேவாரத்தில் " கணிவடமுகம்" என்று போற்றப்பட்டுள்ளது.

சிவபெருமான் சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், பிரதோஷ நாயகர் முதலிய வடிவங்களில் வலது மேற்கையில் மழுவாயுதத்தை ஏந்தியுள்ளார்.

மழுவேந்தி அவர் நடனமாடுகிறார் அந்த நடம் மழு நடனம் எனப்படும்.

ஜமதக்னி முனிவரின் மகனான ராமன் தன்னை நோக்கிக் கடுந்தவம் செய்தபோது அவனுக்குப் பெருமான் தனது மழுவாயுதத்திற்கு இணையான ஒரு மழுவாயுதத்தை அளித்தார். அதைப் பெற்றபின் அவன் பரசுராமன் என்று அழைக்கப்பட்டான்.

எளிய நிலையிலான பரசு (மழு) மரங்களை வெட்ட உதவும் கோடரியாகும். இந்த இரண்டையுமே பெருமான் ஏந்துகிறார். இவற்றின் பெயரால் கனல் மழுவேந்து கையன் என்றும், பரசு பாணியர் என்றும் அழைக்கப்படுகிறார்.

ஒரு பக்தையைக் காக்க சிவபெருமான் மழுவாயுதத்தை வீசியதைக் கீழ்வேளூர்த் தல வரலாற்றில் குறிப்பிடப் பட்டுள்ளது.

கீழ்வேளூர் என்ற தலத்தில் அளவற்ற சிவபக்தி உடைய ஒரு பெண் பக்தை வாழ்ந்து வந்தாள். பணி விஷயமாக வெளியூர் சென்ற அவளது கணவன் நெடுநாட்கள் ஊர்திரும்பவில்லை. அவள் வாழ வகையின்றி வாடினாள். அவளுடைய வாட்டத்தைப் போக்க விரும்பிய சிவபெருமான் அவள் கனவில் தோன்றி," பெண்ணே நான் தினமும் ஒரு படிக்காசை பலிபீடத்தில் வைக்கிறேன். அதை எடுத்து உன் குடும்பத்தை நடத்தி வருக" என்று கூறி மறைந்தார்.

அதன்படியே கோயிலுக்குச் சென்று பொன் பெற்று வாழ்ந்து வந்தாள். சுற்றத்தினர் அவளுடைய வாழ்வைக் கண்டு பொறாமை அடைந்தனர். நீண்ட நாட்களுக்கு பிறகு அவளுடைய கணவன் ஊர் திரும்பினான். அவள் சிவனருளால்தான் தினமும் காசு பெற்று வாழ்க்கை நடத்தியதைக் கூறினாள். சுற்றத்தினரோ அவளுடைய கணவனிடம் அவன் மனைவி தகாத வழியில் சென்று பொருளீட்டினாள் என்றனர். அதைக் கேட்டு மனம் வருந்திய அப்பெண் பெருமானிடம் சென்று முறையிட்டார்.

சிவபெருமான் வலது கரத்திலிருந்த மழுவை வீசினார். அது கரகர வென்று சுழன்று பாய்ந்து சென்று தீமொழி கூறிய சுற்றத்தினரை வெட்டிச் சாய்த்தது. மழு பாய்ந்து சென்றபோது நடுவிலிருந்த நதியம்பெருமான் சற்று ஒதுங்கினார். அந்த நிகழ்ச்சியை நினைவூட்ட என்றுமே விலகியிருப்பாய் என்று கூறினார் என்பர். இன்றும் கீழ்வேளூரில் நந்தி விலகியிருப்பதைக் காணலாம். ௐ

சாந்தவடிவில் விளங்கும் சிவபெருமானின் திருக்கோலங்களில் அவர் பின்கரங்களில் மழுவுடன் மான் ஏந்தியவராக அமைக்கப்பட்டுள்ளார். சோமாஸ்கந்தர், சந்திரசேகரர் முதலிய வடிவங்களில் பெருமானை மான் மழுவுடன் காண்கிறோம். தேவாரத்துள் பல இடங்களில் இவ்விரு வடிவங்களும் சேர்த்தே கூறப்பட்டுள்ளன. பண்டைய கிரேக்க வழிபாட்டில் மானும் மழுவும் வழிபடப்பட்டதைத் தொல்லியல் ஆய்வாளர்கள் குறித்துள்ளனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரசுராமீச்சரங்கள்

இராமன் என்ற சொல் அழகன் என்ற பெருளைத் தருகிறது. அழகின் அழகனான சிவபெருமான் அபிராமன் என்றும் அவனுடைய சக்தி அபிராமி என்றும் அழைக்கப்படுகின்றனர். சிவபெருமான் பரசு ஏந்தி அழக னாக இருக்கும் கோலம் பரசுராமன் என்று அழைக்கப்படுகிறது. அக்கோலத்தில் பெருமான் காட்சி தந்த தலங்கள் பரசுராமீச்சரங்கள் என்று அழைக்கப் படுகின்றனர்.

ஆனாய நாயனார் அவதரித்துப் பேறு பெற்ற தலமான திருமங்கலத்தில் வீற்றிருக்கும் பெருமான் சாமவேதீசுவரர் என்றும், பரசுராமீசர் என்றும் அழைக்கப் படுகிறார். கல்வெட்டுகள் இக்கோயில் பரசுராமீசுவரம் என்று குறிக்கின்றன. தமிழில் மழுவுடை நாயனார் என்று அழைக்கப்படுகிறார்.

சிவபெருமான் தன்னைப் பணிந்து வேண்டிய ஜமதக்னி மகனான ராமனுக்கு பரசு அளித்தார் என்றும், அதுமுதல் அவன் பரசுராமன் ஆனான் என்பர். இந்த ஆலயத்தில் பரசுராமன் மூலவராகவும் உலாத் திருமேனியாகவும் எழுந்தருளியுள்ளார். பரசுராமீசுவரம் என்ற பெயரில் காஞ்சிபுரத்திலும், காசியிலும், சிவாலயங்கள் உள்ளன. இவை பரசுராமன் வழிபட்ட தலங்களாகும்.

திருமழபாடியில் சிவ பெருமான் மழுவேந்தி நடனமாடுகிறார். அத்தலத்தைத் தலபுராணம் மழுவாடி என்றும் பரசு நர்த்தனபுரம் என்றும் அழைக்கின்றது.

குந்தாலி



கோடரியைப்போலவேஉள்ள ஆயுதம் குந்தாலி. இதன் முனை பட்டையாக இல்லாமல் கூராக இருக்கும். இது நிலத்தைப் பிளக்கவும் தோண்டவும் உதவும் கருவியாகும். இது தேவாரத்துள் கொந்தளகம் எனக் குறிக்கப்பட்டுள்ளதென்பர். ஒரே பாய்ச்சில் ஆழமாகப் பூமியைத் துளைத்து நீர் வரும்படிச் செய்வதால் நீர் வரு கொந்தளகம் என்று குறிக்கப்பட்டுள்ளது.

மழு–பரசு ஏந்தும் அடியவர்கள்

அறுபத்துமூன்று நாயன்மார்களில் சண்டேசுவரர் மழுவாயுதத்தை ஏந்தியவராகக் காட்சியளிக்கின்றார். இவர் சிவபூசைக்கு ஊறுவிளைவித்த தனது தந்தையின் கால்களை வெட்டியவர். அதை நினைவூட்டும் வகையில் மழுவாயுதத்தை ஏந்தியுள்ளார். கருவறைக்கு வடபுறம் கோமுகத்திற்கு அருகில் வலக்கையில் மழுவை ஏந்தி இடக்கரத்தைத் தொடை மீது வைத்துக்கொண்டு அமர்ந்திருப்பவராக அவரை அமைத்துள்ளனர்.

மழுவென்னும் பரசுவை ஏந்தி நிற்கும் மற்றொரு அடியவர் எறிபத்த நாயனார். புகழ்ச் சோழரின் பட்டத்து யானை சிவகாமி ஆண்டார் என்னும் சிவபக்தரின் பூக்குடலைகளை இழுத்துச் சிதற வைத்ததால், கோபங்கொண்டு அதனையும் அதனை நடத்தி வந்த பாகர்களையும் இவர் வெட்டிக் கொன்றார். இறைவன் அருள்புரிந்து யானையையும் பாகர்களையும் உயிர்ப்பித்தார். அறுபத்துமூவர் வரிசையில் மழுவாயுதத்துடன் கூப்பிய கரங்களுடன் அவர் நின்றிருக்கக் காணலாம். ஜ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாசுபதாஸ்திரம்

சிவபெருமான் ஏந்தும் படைகளில் அதிஉன்னதமான ஆயுதம் பாசுபதாஸ்திரம். அது இந்தப் பேரண்டத்தை ஒரு நொடியில் அழிக்க வல்லது. இதை ஏந்தியிருப்பதால் சிவபெருமான் பாசுபதன் என்றும், பாசுபத மூர்த்தி என்றும் அழைக்கப்படுகிறான்.

இந்த ஆயுதம் பார்ப்பதற்குத் திரிசூலம் போலவே இருக்கும். அதனுள் உள்ள இயங்கு சக்தி அளவிலாத ஆற்றல் படைத்தது. அதனுள் உறையும் தெய்வசக்தியின் வடிவத்தை மகா பாரதம், சைவ தந்திர நூல் முதலியவை விளக்க மாகக் கூறுகின்றன.

அதன்படி இது ஐந்து முகங்கள், பத்து காதுகள், பதினைந்து கண்கள், அதி பயங்கர மான பத்துக்கைகள் கொண்டது. மகாபலமும் கோரைப்பற்கள் கொண்ட திருவாய்களிலிருந்து மகத்தான தொனியை எழுப்பும். ஜெயிக்க முடியாதது. நாவால் அடியுதட்டை நக்கிக் கொண்டி ருப்பது அக்னி, வேதாளம், சூலம், சக்தி, அங்குசம் ஆகியவற்றை வலது கைகளி லும் சர்ப்பம், குந்தம், சக்ரம், கட்கம், முத்தரம் ஆகியவற்றை இடது கரங்களிலும் கொண்டது. சத்ருக்களைச் சங்கரிப்பது. கொடிய ரோகங் களைப் போக்கடிப்பது.

இந்த ஒப்பற்ற ஆயுதத்திலிருந்து இதற்கு இணையாக பல பாசுபதாஸ்திரங்களைச் சிவபெருமான் உண்டாக்கினார். அதில் ஒன்றை முருகனுக்கு அளித்தான். அதற்கு உருத்திர பாசுபதம் என்பது பெயர்.

சிவபெருமான் ஏந்தும் இந்தப் பாசுபதாஸ் திரத்தை மகாபாரதம் அனுசாசன பர்வத்தில், சூரியனைப் போல் பிரகாசிப்பது அனைத்து தேவர்களின் சக்தியையும் தன் சாரமாகக் கொண்டிருப்பது. ஆயிரம் கரங்களும், ஆயிரம் முகங்களும் ஆயிரம் நாக்குகளும் கொண்டது. சர்ப்ப வடிவானது. கைகளில் எண்ணற்ற அஸ்திரங்களைப் பெற்றிருப்பது எல்லாப் பிராணிகளுக்கும் பார்க்கும்போதே அச்சத் தைத் தருவது என்று விவரிக்கப்பட்டுள்ளது.

தன்னை நோக்கித் தவம் செய்த அருச்சுனனுக்குச் சிவபெருமான் பாசுபதாஸ் திரத்தை அளித்ததை மகா பாரதம் விரிவாகக் கூறுகிறது.

தாங்குவதற்கு அரிய இந்தப் படைக் கலத்தைப் பெறும்படி கண்ணன் அருச்சுன னுக் குக் கூறினான். அருச்சுனன் இந்திரகீல பர்வதத் திற்குச் சென்று சிவபெருமானை நோக்கிக் கடும் தவம் புரிந்தான். அவனுக்கு அருளவும், மூகா சூரனை அழிக்கவும், சிவபெருமான் வேட வடிவுடன் தோன்றினார். அருச்சுனனுடன் போரிட்டு அவனுடைய வீரத்தை வெளிப்படுத் தியபின் அவனுக்கு பாசுபதாஸ்திரத்தை இந்த பாசுபதாஸ்திரத்தை அளித்தார்.

அருச்சுனனுக்குப் பாசுபதம் அருளிய மூர்த்தி யைச் சிவபராக்கிரமம் கிராதமூர்த்தி என்றும், பாசுபத அனுக்கிரக மூர்த்தி என்றும் போற்றுகிறது. (எனினும், அதை உபயோகப் படுத்தக் கூடாது என்ற கட்டளையையும் விதித்தார்.) திருவேட்களம் என்னும் தலத்தில் அர்ச்சுன னுக்குப் பெருமான் பாசுபதம் வழங்கிய தாகத் தலபுராணம் கூறுகிறது. சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் உள்ளே இத்தலமுள்ளது. இறைவன் பாசுபதநாதர். அம்பிகை பெண்ணின் நல்லாள்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தலவிருட்சம் மூங்கில். வில்லேந்திய வேட னாக நிற்கும் சிவபெருமானும், அவரைத் தொழுது கொண்டிருக்கும் அர்ச்சுனனும் உலாத் திருமேனிகளாக உள்ளனர். மூலவராக விளங்கும் சிவலிங் கத்தின் மீது அருச்சுனன் அடித்த தழும்புகள் உள்ளது என்கின்றனர்.

காரைக்காலுக்கு அருகிலுள்ள திருவேட்டக் குடி எனும் தலத்திலும் அர்ச்சுனனுக்குப் பாசு பதாஸ்திரம் அருளிய சிவபெருமான் எழுந்தரு ளியுள்ளார். இங்குள்ள பெருமான் திருமேனி அழகர் என்றும், அம்பிகை சாந்த நாயகி என்றும் அழைக்கப்படுகின்றனர். ஓ

அருச்சுனன் பாசுபதம் பெறுதல்

இந்திரநீல பர்வதத்தில் அருச்சுனனுக்குப் பாசுபதம் அளித்துச் சிவபெருமான் நிகழ்த்திய திருவிளையாடல் வீரகாவி யமாக பல கோணங்களில் மக்களிடம் வழங்கி வருகிறது. அது வட மொழியில் கிராதார்ஜனீயம் என்னும் காவியமாகவும், தமிழில் அர்ச்சுனன் தபஸ் என்னும் கதைப் பாடல்களாகவும் வழங்குகின்றது. அனேக இடங்களில் இது பற்றிய சிற்பங்களும் ஓவியங்களும் படைக்கப்பட்டிருக் கின்றன.

தமிழ்நாட்டில் அர்ச்சுனன் தபஸ் தனி நாடக மாகவும், பாரத தெருக்கூத்தின் ஓர் அங்கமாகவும் நடிக்கப்படுகிறது. இதனைக் கம்பம் ஏறல் என்றும் கூறுவர். நெடிய பனை மரத்தை வெட்டி வந்து நாடக அரங்கின் நடுவில் நிறுத்தி,அதன் உச்சியில் பலகை அமைப்பர். அந்தப் பலகையை அடைய நூல் ஏணி அல்லது பக்கவாட்டில் முளைகள் அடிப்பர். இதுவே தபஸ்கம்பம் எனப்படும்.

அருச்சுனன் வேடமிட்டவர் சிவபெரு மானைக் குறித்த பாடல்களைப் பாடிப் பரவிய பிறகு தபஸ் கம்பமாகிய தூணில் ஏறத் தொடங் குவார். கொஞ்சம் படி ஏறுதல் உலக நலன் வேண்டித் துதித்தல் கொஞ்சம் படி ஏறுதல், மீண்டும் சிவனைத் துதித்து உலக நலன் வேண்டுதல் இவ்வாறு படிப்படியாக அவர் உச்சியை அடைய ஏறத்தாழ இரண்டு மணி நேரம் செலவிடுவர்.

உச்சியினை அடைந்து பலகையில் அமர்ந்து சிவபெருமானைப் போற்றிப் பாடி தீபாராதனை செய்து எலுமிச்சம், வாழைப் பழங் களை வீசுவார். அவற்றை மக்கள் மடியேந்திப் பிடிப்பர். குழந்தைப் பேறு இல்லாதவர்களும் திருமணத்தடை உள்ள வர்களும் இக்கனி களை உண்டால் நல்ல குழந்தைகள் பிறக்கு மென்றும் விரும்பிய நல்ல கணவனை அடைவார் கள் என்பதும் நம்பிக்கை யாகும்.

அதன்பிறகு அருச்சுனனுக்கு அருளச் சிவ பெருமான் தோன்றும் காட்சி நடைபெறும். சிலதலங்களில் சிவன் கோயிலில் இருந்து சுவாமி அம்பாளுடன் இடப வாகனத்தில் சென்று காட்சியளிக்கும் ஐதீகவிழா நடைபெறும். இப்படி மக்களோடு கலந்து விட்ட, இந்த காட்சி மகாபாரதத்தில் எவ்வாறு இடம் பெற்றுள்ளதென்று சுருக்கமாகக் காணலாம்.

கண்ணபிரானின் அறிவுரைப்படி பாசுபதாஸ்தி ரத்தைப் பெற, காண்டீபனான அருச்சுனன் இந்திரநீல மலையை அடைந்தான். ஒற்றைக் காலில் நின்று கைகளை உயர்த்தி வைத்துக் கொண்டு சிவபெருமானை நோக்கி அகோர தவம் புரிந்தான். அவனுடைய தவத்திற்கு மகிழ்ந்த சிவபெருமான், அருள்புரிய விரும்பி வேடனாக உருவெடுத்தார். அம்பிகை வேடுவச்சியாக உருக்கொண்டு பின்தொடர்ந்தாள்.

அவர்கள் இந்திரகீல மலையை அடைந்தனர். சிவபெருமான் அப்போது துரியோதனனால் ஏவப்பட்டு அருச்சு னனைக்கொல்ல ப் பன்றி வடிவில் பதுங்கித் திரிந்த மூகாசுரனைத் துரத்தி கணை விடுத்தார். அவன் அருச்சுனன் தவம் செய்யும் இடத்திற்கு வந்து பெருங் குரலெடுத்துக் கத்தினான். அருச்சுனனின் தவம் கலைந்தது. அவன் காண்டீப வில்லை வளைத்து அம்பு விடுத்தான். ஒரே நேரத்தில் சிவன் தொடுத்த அம்பும், அருச்சுனன் தொடுத்த அம்பும் மூகாசுரனின் உடலில் பாய்ந்ததால் அவன் வீழ்ந்து மடிந்தான்.

வேடனாக வந்த சிவபெருமான் பன்றியை எடுக்க முயல, அருச்சுனன் தொடாதே நான் வீழ்த்திய பன்றி என்றான். சிவபெருமான் நான் வீழ்த்தியது என்றார். இருவருக்கும் இடையே தோன்றிய வாய்ச்சண்டை கைச் சண்டையானது. அருச்சுனன் வில்லால் அடித்தான். சிவபெருமான் அவனது வில்லை பிடுங்கி வீசினார். இருவரும் மல்யுத்தம் புரிந்தனர். பெருமான் அருச்சுன னைத் தலைக்குமேல் தூக்கிச் சுழற்றினார்.

அவரிடம் தோற்ற அருச்சுனன் செய்வது அறியாது திகைத்தான். சிவபெருமான் அவனை ஆரத் தழுவினார். அவன் விரும்பியபடி பாசுபதா யுதத்தை அளித்தார்.

நாய்கள் பின்தொடர உமையுடன் வேடு வனாகிக் காட்டில் திரிந்து பன்றி வடிவில் இருந்த அசுரனைக் கொன்று அருச்சுனனுக்குப் பாசுபதம் அளித்தது தேவாரத் தில் பல இடங்களில்சிறப்புடன் குறிக்கப் பட்டுள்ளது. ஆ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாளாயுதம்

சிவபெருமான் உலகிலுள்ள உயர்ந்த வீரர்க ளில் அதியுன்னதமான மகாவீரர். அவர் வீரனுக்குரிய அடையாளமான நெடிய வாளாயுதத்தைத் தாங்குகின்றார். அவரு டைய வீரவாளுக்கு வீரவெண்டயம் (கால காலம்) என்பது பெயராகும்.

அவர் வீரபத்திரர், சத்யோஜாதர், மகாருத்திரர் முதலிய மகேஸ்வர வடிவங்களில் நெடிய வாளாயுதத்தை ஏந்தியுள்ளார். கீழ் வேளூர், மதுரை, திருப்புத்தூர் முதலிய தலங்களில் உள்ள நடராசர்கள் வாளும் கேடயமும் ஏந்தியுள்ளனர். சிவபெருமானு டைய வாள் அசுரர்களை வீழ்த்தும் வீர வாளாகும். அதுவே ஞானிகளின் அஞ்ஞா னத்தை அகற்றும் ஞானவாளாகவும் இருக் கின்றது.

திருவாரூரில் தியாகேசப் பெருமான் முன்பாக இரண்டு நீண்ட வாள்கள் வைக்கப் பட்டுள்ளன. இவை வீரகட்கம் என்றும், வீரவெண்டையம் என்றும் அழைக்கப் படுகின்றன. சுவாமி தேருக்குச் செல்வ தற்கு முன்பாக நல்ல வேளையில் இந்த வாட்கள் தேரில் ஏற்றி வைக்கப்படுகின்றன.

கோயிலூர் என்னும் தலத்தில் வீற்றி ருக்கும் பெருமானுக்குக் கொற்ற வாளீசுவரர் என்பது பெயராகும். இவர் வடமொழியில் கட்க பரமேஸ்வரர் என்று அழைக்கப் படுகின்றார்.

திருவாளொளி புத்தூர் என்பது மயிலாடுதுறைக்கு அருகிலுள் தலமாகும் இங்குள்ள இறைவன் மாணிக்கநாதர் என்ற ழைக்கப்படுகிறார். இவர் தீர்த்த யாத்திரை யாக இங்குவந்த அருச்சுனனின் வாளைப் புற்றில் ஒளித்து வைத்து திருவிளையாடல் புரிந்தார். அதனால் இவ்வூர் வாள்ஒளிபுத்தூர் என்றழைக்கப்படுகிறது.

வீரர்கள் நீண்ட வாளைத் தாங்குகின்றனர். இது நெடுவாள் என்று அழைக்கப்படுகின்றது. இதற்கு மாறாக ஓங்கிக் குத்துவதற்கு வசதியாக

ரிஷபத்தின் மீது வாள்வீசி நின்றாடும் பிரான்
மேலைக் கடம்பூர்

அளவில் சிறியதாகவும், இரண்டு மூன்று வளைவுகளைக் கொண்டதாகவும் இருப்பது குத்துவாள் ஆகும். சிவபெருமான் சதாசிவ மூர்த்தியாக இருக்கும்போது குத்து வாளைத் தாங்குகிறார்.

சிவபெருமான் தன்னை நோக்கித் தவம் செய்த பிரம்மதேவனுக்கு வாளாயுதத்தை அளித்தார் என்று திருமூலர் கூறுகின்றார்.

ஆழிவலம் கொண்டயன் மால் இருவருக்கும்
ஊழி வலம் செய்ய ஒண்சுடர் ஆதியும்
ஆழிகொடுத்தனன் அச்சுதற் கவ்வழி
வாழி பிரமற்கு வாள் கொடுத்தானே

எனவரும் திருமந்திரத்தால் இதை அறியலாம்.

பிரம்மனுக்கு வாள் அளித்ததைப் போல வே இராவணனுக்கும் பெருமான் வாளா யுதத்தை அளித்தார். அதற்கு சந்திரகாசம் என்பது பெயராகும். தேவாரத்துள் இராவ ணனுக்குவாள் அளித்தது பல இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவீழிமிழலையில் எழுந்தருளியிருக்கும் பெருமானுக்கு " காலகாலன்" என்னும் பெயரில் வாளாயுதம் ஒன்று அளிக்கப் பட்டதை அவ்வூர் கல்வெட்டால் அறிகிறோம்.

கோயிலூர் கொற்றவாளீசுவரர்

காரைக்குடியிலிருந்து பிள்ளையார் பட்டி குன்றக்குடி செல்லும் சாலையில் உள்ள தலம் கோயிலூர். முன்னாளில் இது கழனி வாசல் என்று அழைக்கப்பட்டது. வன்னிக் காடாக இருந்த இவ்விடத்தில் பெருமான் சுயம்புமூர்த்தியாகத் தோன்றினார் என்பது வரலாறாகும்.

பாண்டி நாட்டிலுள்ள கானப்பேர் எனப் படும் காளையார் கோயிலைத் தலைநகராகக் கொண்டு வீரபாண்டியன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவன் அத்தலத்தில் வீற்றிருக்கும் சுவர்ணகாளீசர் மீது பக்தி பூண்டிருந்தான். அப்பெருமான் அவனுடைய பக்திக்கு மகிழ்ந்து நெடிய வாளாயுதத்தை அளித்தார். அவ் வெற்றிவாளின் உதவியால் பகைவர்களை எளிதில் அடக்கிச் சுகமாக வாழ்ந்து வந்தான்.

அவன் வேட்டையாடும் பொருட்டு நகருக்கு வடக்கே வெகுதூரம் பரவியிருந்த காட்டிற்குள் சென்றான். அவன் கண்ணில் மான் ஒன்று தெரிந்தது. அதைப் பிடிக்க விரும்பிய மன்னன் துரத்திக் கொண்டு ஓடினான். அது பாய்ந்து ஓடியது. மன்னனும் விடாது தொடர்ந்தோடித் துரத்தினான்.

அது இங்குள்ள சமி வனத்திற்கு வந்து மறைந்து விட்டது. மன்னன் போகட்டும் என்று விட்டுவிட்டு அங்கு கிடைத்த பழங்களைப் பறித்து உண்டான். அருகில் இருந்த பொய்கையில் நீர் அருந்திவிட்டு ஒரு மரத்தடியில் ஓய்வெடுத்தான் நெடுந்தூரம் ஓடிவந்த களைப்பால் உறங்கிவிட்டான்.

அவ்வேளையில் அங்கு வனத்தில் சுயம்பு லிங்கமாக வீற்றிருந்த சிவபெருமான் ஒரு திருவிளையாடல் புரிய விரும்பினார். அவனுடைய வாளை மறைத்தார். ஒரு மறையவனையும் அவனைத் துரத்தும் மாயப் புலியையும் தோற்றுவித்தார்.

மறையவன் புலியால் துரத்தப்பட்டு அஞ்சிக் களைத்து அரசனிடம் வந்து அவனை எழுப்பி அபயம் அபயம் என்றான். துயில் நீங்கிய அரசன் மறையவனின் கைகளைக் பற்றிக்கொண்டு அஞ்சாதீர் உனக்கு அபயம் தந்தேன் என்றான். அப்போது புலி அங்கே வந்தது அதைக் கொல்ல மன்னன் வாளைத் தேடினான் அது காணாமல் போய் இருந்தது.

அதனைத் தேடுவதை விட்டுவிட்டு மறையவனை காக்கத் துணிந்தான் புலி, அவனை நோக்கி அரசே நான்நெடுநேரம் வருந்தித் துரத்தி வந்த உணவு இவன். இவனை என்னிடம் அளிப்பாய். நான் மிகுந்த பசியுடன் இருக்கிறேன். இவனை உண்டால் அது தீரும் தாம தியாதே, பசியாலும் களைப்பாலும் நான் ஒரு வேளை சாகக்கூடும் என்றது.

அரசன், விலங்கே இவனுக்கு நான் அபயம் அளித்துள்ளேன். மேலும், இவன் எலும்பும் தோலுமாய் இருக்கிறான். இவனை உண்டு நீ பசியாறுதல் கடினம். நான் மிகவும் கொழுத்திருக்கிறேன் என்னை உணவாக்கிக் கொள்" என்று கூறி முன்வந்தான்.

புலி, " அரசே! நீ பலரைக் காக்க வேண்டிய பொறுப்பில் உள்ளவன். உன்னை நம்பிப் பலர் இருக்கின்றனர்இந்த மறையவனோ யாருமற்றவன். இவனை உண்பதால் யாருக்கும் குறைவு வராது. நீ விலகு எனக்கு அவனை உணவாக்குக என்றது.

அரசன், புலியே நீ என்னை அரச தருமத்தினின்று விலகச் சொல்கிறாய். எனது க்ஷத்திரிய தருமத்தின்படி உன்னை என் வாளால் வென்று இவனைக் காப்போம் என்றால் நான் வாளைத் தொலைத்து விட்டு நிராயுதபாணியாக நிற்கிறேன் என்றாலும் சத்தியம் என்ற படையைத் தாங்கியுள்ளேன். என்னை உணவாக்கிக் கொள். எனது சத்தியத்தைக் காப்பாற்ற உதவு என்று கூறிக் கொண்டே புலியின் வாய்க்குள் தன் தலையை நுழைத்தான்.

அந்தக் கணத்தில் மாயப்புலியும் மறையவனும் மறைந்தனர். அரசன் அதுகண்டு வியப்படைந்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அரசனைத் தேடிக் கொண்டு அவனுடைய சேவகர்கள் அங்கு வந்து சேர்ந்தனர். அவன் அவர்களிடம் இப்பகுதியில் ஏதோ அதிசயம் உள்ளது. அதைத் தேடிக் கண்டு பிடியுங்கள் என்றான்.

வீரர்கள் தேடித் திரிந்தனர். அங்கிருந்த வன்னி மரத்தடியில் சுயம்பு லிங்கமும் அதனருகில் அரசனின் வாளும் இருக்கக் கண்டனர். அதற்கு அருகில் பெரிய குளமும் இருந்தது. அரசனிடம் அதைத் தெரிவித்தனர்.

அரசன் அங்குவந்து சிவலிங்கத்தை வணங்கி மகிழ்ந்து தொழுதான். அப்போது சிவபெருமான் இடப வாகனத்தில் உமையுடன் காட்சி கொடுத்தார். அன்பனே, உனது பெரு மையை நிலைநாட்டவும் எம்மை வெளிப்படுத்திக் கொள்ளவுமே இத்திருவிளை யாடலைப் புரிந்தோம். புலியும் மறைய வனும் நாம் உண்டாக்கிய மாயத் தோற்றங் களே, உனது தரும சிந்தனை போற்றத் தக்கது. உனது வாளை நாமே மறைத்தோம். அந்த வாளைப் பெற்றுக் கொள் என்று கூறி, ஆசிகள் வழங்கிய இறைவன் லிங்கத்துள் மறைந்தான்.

அரசன் அங்குப் பெரிய கோயிலைக் கட்டினான். வன்னி மரத்தடியில் தோன்றியதால் வன்னீசர் என்றும், அரசனுடைய வாளாயுதத்தைக் கவர்ந்து மீண்டும் அளித்ததால், கொற்ற வாளீசுவரர் என்றும் பெயரிட்டான். சிறப்பு பூஜை களையும் விழாக்களையும் நடத்தினான். இங்குள்ள தேவியின் பெயர் நெல்லை நாயகி. பின்னாளில் பெரிய மடாலயம் இங்கு தோன்றியது.

இம்மடத்தின் நிறுவனரான ஆண்டவர் என்னும் ஸ்ரீமத் முத்து ராமலிங்க தேசிகர் பல்வேறு திருப் பணிகளைச் செய்து மேன்மைப் படுத்தினார். புராணங்களில் வன்னிவனம் என்றும் நடைமுறை யில் கழனி வாசல் என்றும் அழைக்கப்பட்ட இவ்வூர் இவருக்குப் பிறகு கோயிலூர் எனப் புகழ்பெற்றது.

இக்கோயில் சிவகங்கை சமஸ்தானத் தின் ஆட்சியின்கீழ் இருந்து வருகிறது.

இதுபோன்று ஒரு மன்னனுடைய வாளைப் போக்கித் திருவிளையாடலை நிகழ்த்திய சிவபெருமான் வாட்போக்கி நாதர் என்று அழைக்கப்படுகிறார். பாடல் பெற்ற திருத்தலமான ஐயர்மலையில் பெருமானை வாட்போக்கி நாதராகக் காண்கிறோம்.

பொற் சுரிகை

சுரிகை மூன்று வளைவுகள் கொண்டு இருபுறமும் கூர்மையுடைய குத்து வாளே சுரிகை என்று அழைக்கப்படுகிறது. பொன்னால் சுரிகையைச் செய்து அதில் பெறுபவரின் பெயரையும் வீரத்தையும் சிறப்பையும் பொறித்துப் பொற்பூக்களுடன் சிறந்தவர்களுக்கு அரசன் அளிப்பான். சுந்தரமூர்த்தி சுவாமிகள் நாகைக் காரோணத்து இறைவனிடம், பொற்சுரிகை மேலூர் பொற்பூவும் பட்டிகையும் புரிந்தருள வேண்டுமென்பதை, பொறி விரவு பொற்சுரிகை மேலோர் பொற்பூவும் பட்டிகையும் புரிந்தருள வேண்டும் நற்புகர் கொள் பொற்சுரிகை மேலோர் சுந்தரேசுவரர் ஆலயத்தில் சோமாஸ்கந்தர் இடையில் என்று கேட்கிறார். மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் சோமாஸ்கந்தர் இடையில் சுரிகையுடன் காட்சி தருகின்றார்.

கேடயம்

இது தற்காத்துக் கொள்ள உதவும் கருவியாகும். வட்டமான அல்லது நீண்ட சதுர அமைப் புடன் நடுவில் பிடியுடன் கூடியது. வாளேந்திப் போரிடுபவர்கள் எதிரிகளிடமிருந்து தம்மைக் காத்துக் கொள்ள கேடயத்தை ஏந்துவர். வாளும் கேடயமும் இணைஆயுதங்களாகும்.

இலக்கியங்கள் கேடயத்தைத் தோல் என்றும் கூறும். தெய்வங்கள் வலதுபக்கக் கரங்களில் வாள் ஏந்தும்போது அதற்கு இணையான இடக்கரத்தில் கேடயத்தைத் தாங்கியுள்ளன. நடராசர் திருவுருவங்கள் சிலவற்றில் பெருமான் வாளும் கேடயமும் கொண்டுள்ளார். வீரபத்திரர் பெரிய கேடயத்தைத் தரித்திருக்கின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அங்குசம் -பாசம்

அங்குசமும் பாசமும் மிகத் தொன்மை யானதும் தெய்வீகச் சிறப்புக்களைக் கொண்டதுமான ஆயுதங்கள். அவை யானைகளை அடக்கியாளப் பயன் பட்டன. மனமான யானையை அடக்கியா ளும் ஞான, தவ ஆயுதங்களைக் குறிக்க ஞானிகள் இந்தப் பெயர்களைப் பயன் படுத்தினர்.

அங்குசம் என்பது நீண்ட இரும்பி னாலான கோல். அதன் முனையில் கூரான சிறிய வளைந்த பகுதி இருக்கும். கோலின் முனைகள் கூராக இருக்கும். யானையின் மத்தகத்தில் குத்தி அதை அடக்கிச் செலுத்த இது பயன்படுகிறது. யானை மீது பவனி வரும் வேளையில் சிவபெருமான் அங்குச தாரியாக விளங்குகிறார். அங்குசத்தைத் தோட்டி, கோணம் எனவும் அழைப்பர்.

இதனோடு இணையானது பாச மாகும். இது கட்டி வைக்கப் பயன்படுவது. சிவபெருமானின் கரத்தில் இருப்பது உக்ரநாகபாசமாகும். இது அதனின்று வேறா னது. மூன்று முடிச்சு களையும் மூன்று சுருள்களை யும் கொண்டது. இதனைக் கால பாசம் எனவும் அழைப்பர்.

விநாயகப் பெருமான் மேற்கரங்களில் அங்குச பாசங்கள் ஏந்தியுள்ளார். தொண்டை நாட்டிலுள்ள சிவாலயங்களில் அம்பிகையர் பாசாங்குசம் ஏந்தியுள்ளனர். காஞ்சி காமாட்சி புவனேசுவரி லலிதாம்பிகை முதலான வடி வங்களில் அம்பிகை பாசாங்குசதாரியாக விளங் குகிறாள்.

திருமூலர் அம்பிகையைப் பாசாங்குச சுந்தரியாகப் பல இடங்களில் போற்றுகின்ற னர். சமண பௌத்த சமய துணைத் தெய்வங் களும் பாசாங்குசம் ஏந்திக் காட்சி அளிக்கின்றனர்.

சிவபெருமான் காலசம்ஹாரராக விளங்கும் போது சூலத்தையும் பாசத்தை யும் ஏந்துகின்றார். அவர் பாசத்தை ஏந்துவதால் பாச பாணி என்றழைக்கப்படுகிறார். இவர் நமது பாசங் களைக் களைந்து ஞானத்தை அருளுகின்றார்.

அங்குசம், பாசம் இரட் டை ஆயுதங்களாகும்.

விநாயகர் ஆலயங்களில் அங்குசம், அஸ்திர தேவராக விளங்குகிறது.. சென்னை பார்க் டவுனிலுள்ள பிரசன்ன விநாயகர் ஆலயத்தில் இத்தகைய கலைச் சிறப்பு மிக்க அங்குச தேவரைக் காண்கிறோம். இதில் அழகிய பீடத்தில் அங்குசம் நிற்க, அதன் முன்புறம் அங்குச சக்தி யான கணன் காட்சி அளிக்கிறார்.

தோமரம்

தோமரம் யானையைச் செலுத் தும் துணைக் கருவி. நீண்ட குச்சியின் இரு மருங்கும் இரும்பு வளையங்களைக் கொண்டதாகும். முருகன் தோமரத்தை ஏந்தியுள் ளான், (சிலர் சாமரத்தோடு இதனைத் தொடர்புபடுத்திக் கொண்டுள் ளனர். இரண்டும் வெவ்வேறானவை.

அங்குசம் பக்கவாட்டு மற்றும் முன்புறத் தோற்றம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சக்ராயுதம்

சிவபெருமான் உலகத்தைப் படைத்த போதே சக்ராயுதத்தையும் படைத்து காக்கும் கடவுளான திருமாலுக்கு அளித்தார்.அது சுதர்சனம் எனப்படும். திருமால் சக்கரத்தை ஏந்தியிருப்பதால், சக்ரதாரி என்றும், சுதர்சனன் என்றும் அழைக்கப்படுகிறார்.

சிவபெருமான் பல சமயங்களில் பல சக்கரங் களைப் படைத்து பலருக்கும் அளித்துள்ளார். அதை யொட்டி அவர் சக்ரதானர் என்று போற்றப்படுகின்றார்.

ஒரு சமயம் ஜலந்தரன் என்ற அசுரன் தோன்றி சிவனருள் பெற்று உலகை ஆண்டு வந்தான். அவன் தேவர்களைத் துன்புறுத்தியதால் சிவபெருமான் அவனை அழிக்க விரும்பினார்.

தரையில் ஒரு சக்கரத்தைக் கீறி அதனை எடுக்கு மாறு அவனிடம் கூறினான். அவன் அதைப் பெயர்த் தெடுத்து தலைக்கு மேல் தூக்கினான். அப்போது அந்த மண்சக்கரம் கோடி யானைகள் பலமுள்ள வஜ்ர சக்ர மாக மாறியது. அதன் வலியைத் தாங்காத அவன் கீழே விழ, அச்சக்கரம் அவன் மீது வீழ்ந்து அவனை இரண்டாகப் பிளந்தது, பின்பு அது சிவபெருமானை அடைந்தது. அந்தச் சக்கரம் சிவபெருமானின் திருவடி யில் ரேகையாகப் பதிந்து விட்டது.

ஒரு சமயம் திருமால் ததீசி என்ற முனிவர் மீது தனது சக்ராயுதத்தை ஏவினார். அவர் வஜ்ரதேகம் படைத்தவராக இருந்ததால், திருமாலின் சக்கரம் அவரை அறுக்க முயன்று கூர் மழுங்கி ஒடுங்கிவிட்டது.

சுதர்சனத்தின் முனை மழுங்கியதால் திருமால் கவலை அடைந்தார். தேவர்கள் சிவபெருமானிடம் ஜலந்தரனை அழித்த சக்கரம் உள்ளது. அதனை நீங்கள் கேட்டுப்பெறலாம் என்றனர்.

திருமால் மிகுந்த பக்தி உடையவராகி, திருவீழி மிழலை என்னும் தலத்தினை அடைந்தார். அங்கு சுயம்பு மூர்த்தியாக விளங்கும் சிவபெருமானைக் கண்டார். விண்ணிலிருந்து அழகிய விமானத்தை வர வழைத்து ,சிவலிங்க மூர்த்திக்கு ஆலயம் அமைத்தார். ஆலயத்திற்கு மேற்கில் ஒரு பெரிய தாமரை தடாகத்தை உண்டாக்கினார்.தினமும் ஓராயிரம் மலர்களைப் பறித்து வந்து பெருமானை அர்ச்சித்தார்.

ஒருநாள் அவர் அர்ச்சனை புரியும்போது சிவ பெருமான் ஒரு தாமரைப் பூவை மறைத்தார்.



பூசையின் முடிவில் ஒரு பூ குறைவதைத் திருமால் அறிந்தார். சற்றும் தாமதியாமல் தமது மலர் போன்ற அழகிய கண்ணை இடந்து அர்ச்சனை புரிந்து பூசையை நிறைவு செய்தார். அவருடைய பக்திக்கு மகிழ்ந்த சிவபெருமான் லிங்கத்திலிருந்து வெளிப்பட்டு அவரைத் தழுவி மகிழ்ந்தார்.

அவருக்கு மலர் போன்ற கண்ணை அளித்துத் தாமரைக்கண்ணன் என்ற பெயரையும் சூட்டினார். அவர் விரும்பியபடியே தனது காலின் ரேகையாகப் படிந்திருந்த சக்கரத்தைப் பெயர்த்து அவரிடம் அளித்தார்

அந்தச் சக்கரம் எல்லையற்ற பளு படைத்ததாக இருந்தது. திருமால் அதனை இருகரங்களை நீட்டி வாங்கினார். அதன் வலிவையும், வேகத்தையும் தாங்க முடியாமல் கீழே விழுந்து மூர்ச்சையானார். அங்கு கூடியிருந்த தேவர்களும் முனிவர்களும் செய்வ தறியாது திகைத்தனர்.

சிவபெருமான் சக்கரத்தின் வெளிவட்டத்தைப் பிரித்து நான்காக உடைத்தார். அவை நான்கும் நான்கு விற்களாயின. மையப்பகுதியை எடுத்து சுதர்சனம் என்று பெயரிட்டு திருமாலிடம் அளித்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதனைத் திருமூலரின் திருமந்திரம்,

" சக்கரம் பெற்று நல்தாமோ தரன் தானும்
சக்கரம் தன்னைத் தரிக்க ஒண்ணாமையால்
மிக்கரம் தன்னை விருப்புடன் அர்ச்சிக்கத்
தக்கநல் சத்தியைத் தான் கூறு செய்ததே" ,

என்று கூறுகிறது.

அந்தச் சக்கர விளிம்புகளிலிருந்து உண்டான நான்கு விற்களையும் ஒருசேர வளைத்து அதன் மத்தியிலிருந்து திருநடனம் புரிந்தார். அதுவே சக்கரக் கூத்து ஆகும். இதனை, சாத்தனார் அருளிய ' கூத்த நூல்

வில்கோல் நாலும் வட்டணை விரிப்ப
கூத்தனும் கூத்தியும் கோத்த கூத்துருவம்'

என்று கூறுகிறது.திருமாலும் பிரமனும் தேவர்களும் அந்தத் திருக்கூத்தை மகிழ்ந்து கொண்டாடினர்.

திருமால் சக்ராயுதத்தைப் பெற தவம் செய்ததைத் சிவமகாபுராணம் முதலான மகா புராணங்களும் திருவீழிமிழலை, திருமாற்பேறு முதலிய தலபுராணங்களும், தேவாரம், திருப்புகழ் முதலிய பனுவல்களும் குறிக்கின்றன.

சிவபெருமாள் நான்கு விற்களில் நடுவில் நின்று ஆடியதைக் கூத்த நூலிலுள்ள படிம இயல் எல்லிய கூத்து என்று விவரிக்கிறது. சூத்திரம் -92

திருவிற்குடியில் பெருமான் சக்ரதான மூர்த்தியாக வீற்றிருக்கின்றார். திருமாலின் கரத்திலிருக்கும் சுதர்சனரில் இடம் பெற்றிருக்கும் சுதர்சனர் உருத்திர அம்சம் கொண்டவராவார். சூலத்தை ஏந்துதல், பாதரட்சை தரித்திருத்தல் ஜுவாலா முடியுடன் விளங்குதல், முக்கண்கள், மான் மழு ஆகியவற்றை ஏந்தியிருப்பது முதலியவை அவரை உருத்திரராகவே காட்டுகின்றன.

திருவண்ணாமலையில் பெரிய சக்கரத்தின் நடுவில் உருத்திரர் அமைக்கப்பட்டுள்ளார்.

ௐ

வளையும் வளைதடியும்

வட்டமான தகட்டின் நடுவில் துளையும் விளிம்புகள் கூர்மையான பற்களையும் கொண்டது. சக்கரமாகும். இதற்கு மாறாக, நீண்ட கம்பியை வட்டமாக வளைத்துச் செய்யப்பட்ட சக்கரமும் உள்ளது. அதன் முனைகளில் சிங்கமுகங்களும் பதிக்கப்பட்டிருக்கும். இதைத் தோளில் தோளணியாகவும் அணிவர். இதை ஆயுதமாகவும் பயன்படுத்தினர்.

சிவபெருமான் வேல், செண்டு ஆகிய இரண்டுடன் வளையையும் முருகனுக்கு அளித்தார் அதைக் கொண்டு முருகன் இந்திரனின் முடியில் அடித்தார் என்று திருவிளையாடற்புராணம் கூறுகிறது. கூறுகின்றது.

மரத்தில் குறிப்பிட்ட கோணத்தில் வளைக்கப்பட்ட தடியே வளை தடியாகும். இதனைக் குறிபார்த்து எறிந்தால் குறியைத் தாக்கிவிட்டு எறிந்தவரையே மீண்டும் வந்தடையும். ஜப்பான் நாட்டில் உள்ள பூமராங் என்பது தடி வளைதடியேயாகும்.

ௐ

மகா சதாசிவ மூர்த்தியும் அவர்தம் ஆயுதங்களும்

இருபத்தைந்து முகங்களும் ஐம்பது கரங்களும் கொண்டவராக மகா சதாசிவ மூர்த்தி விளங்குகிறார். இவருடைய சிற்பங்களை மதுரை முதலிய சில தலங்களில் மட்டுமே அதுவும் சுதை அல்லது தூண் சிற்பமாகவே காண்கிறோம்.

இவ்வடிவில் முன் கரங்களில் அபய வரத முத்திரைகளை ஏந்தியும், மற்ற கரங்களில் அவர் ஏந்தும் ஆயுதங்கள் நாற்பத்தெட்டாகும்.

அவை வலங்கரங்களில்,1) சக்கரம், 2) சூலம், 3) உளி, 4) அம்பு, 5) கதை, 6) பரசு, 7) சுத்தி, 8) தோமரம், 9) கத்தி, 10) நாராசம், 11) கோடரி, 12) பாம்பு, 13) கலப்பை, 14) அங்குசம், 15) அட்சமாலை, 16) சிறுசுத்தி, 17) கொடி,. 18) தண்டம், 19) வஜ்ஜிரம், 20) குந்தம், 21) சுவஸ்திகம், 22) ரம்பம், 23) பிண்டி, 24) கபாலம் ஆகியனவும்,

இடக்கரங்களில்,1) வில் 2) மான், 3) சங்கம், 4) கேடயம், 5) பாசம், 6) வாள், 7) முத்கரம், 8)உடுக்கை, 9) மணி, 10) சுவடி, 11) உருத்திர வீணை, 12) கபாலம், 13) முண்டம், 14) கட்வாங்கம் 15) புசுண்டி 16) பர்கம் 17) பலகை 18) பட்டசம், 19) பிரம்பு, 20) கமண்டலம், 21) தீச்சட்டி, 22) கத்தரிக்கோல் 23) உலக்கை, 24) மயில்தோகை ஆகியனவும் ஆகும்.

ௐ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வில்-பினாகம்

தொலைதூரத்திலிருப்பவரைத் தாக்கும் கருவி களில் முதன்மை பெற்றது வில். இது அனேக ஆயுதங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது. வீரர்களின் வில் தனிச் சிறப்புடன் போற்றப்படுகிறது. ஒவ்வொருவர் ஏந்தும் வில்லுக்கும் தனித்தனிபெயர்கள் உள்ளன. அந்த வில்லின் பெயரால் ஏந்துபவனுக்கும் சிறப்புப் பெயர் உண்டாகிறது.ராமர் ஏந்தும் வில்லுக்கு கோதண் டம் என்று பெயர். இதனால் ராமனைக் கோதண்ட ராமன்; கோதண்டபாணி என்று அழைக்கிறோம். திருமால் ஏந்தும் வில்லுக்கு சாரங்கம் என்பது பெயர் அதையொட்டி அவர் சாரங்கபாணி என்று அழைக்கப்படுகிறார். இந்த வில்லை அவருக்கு அளித்த சிவபெருமான் சாரங்கநாதர் என்னும் பெயரில் புகழ்பெற்ற சாரநாத்தில் சிறுகுன்றின் மீது உள்ளார்.

சிவபெருமான் தன்னிலிருந்து தோற்று வித்து ஏந்தும் வில்லுக்குப் பினாகம் என்று பெயர். அதைத் தரித்திருப்பதால் அவரைப் பினாகபாணி என்று புராணங்கள் போற்று கின்றன.

தேவர்கள் ஸ்ரீருத்திரத்தில் உருத்திரனின் வில்லுக்கும் அம்புக்கும் திரும்பத் திரும்ப நமஸ்காரத்தைத் தெரிவிப்பதைக் காண்கிறோம்.

சிவபெருமான் பினாகத்தையன்றிப் பல வேறு வில்களையும் ஏந்துகிறார். திரிபுரங் களை எரிக்கச் சென்ற காலத்தில் மேருமலையை வில்லாக ஏந்தினார். அதற்கு வாசுகி நாணாக அமைந்தது. அந்த வில்லுக்கு ஏற்ற அம்பாகத் திருமால் அமைந்தார். அம்பின் முனையில் அக்கினியும், வாலில் வாயுவும் இருந்தனர்.

திரிபுராந்தகர் என்னும் அந்தக் கோலத்தி லே சிவபெருமான் பல தலங்களில் வில்லேந்திய விகிர்தனாகக் காட்சியளிக்கின்றார். திருவதிகை வீரட்டானர் ஆலயத்தில் சபாமூர்த்தியாகத் திரிபுராந்தகரைத் தரிசிக்கலாம்.

திரிபுராந்தகன் வடிவில் குன்றத்தை வில்லாகக் கொண்டிருப்பதால் குன்றவில்லி என்றும் மலையை வில்லாகக் கொண்டிருப் பதால் மலைவில்லி எனவும், அழைக்கப் படுகின்றார். அவர் அப்பெயருடன் வீற்றிருக்கும் தலம் வில்லிபுத்தூர் ஆகும். இப்பெயரில்



திரிபுர சம்ஹாரர்-பினாகபாணி

கரும்பு வில்லை எந்தும் காமேசுவரர்

சிவபெருமான் காமேசுவரனாகவும், அம்பிகை காமேசுவரியாகவும் விளங்கும் போது இருவருமே கரும்புவில்லையும் மலர்ப் பாணங்களையும் ஏந்துகின்றனர். ஒருவர் மீது ஒருவர் மலர்ப் பாணங்களை விட்டுக் கொள்கின்றனர். அதனால்தான் உலகம் செழிக்கின்றது என சாக்தர்கள் கூறுவர். கரும்பு வில்லுடன் விளங்கும் காமனுக்குக் கரும்பு வில்லேந்திய காமேசு வரனாகக் காட்சியளித்த தலம் வில்லியனூர் ஆகும். இறைவி காமேசுவரி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இரண்டு தலங்கள் உள்ளன. ஒன்று ஸ்ரீவில்லி புத்தூர் ஆகும். இது ஆண்டாள் அவதரித்த தலம். மற்றது செருவில்லிபுத்தூர் ஆகும். இவ்விரண்டு தலங்களிலுமே சிவபெருமான் பஞ்சத்தால் வருந்திய அருச்சகருக்குப் படிக்காசு அளித்ததால் படிக்காசு வைத்த பிரான் என்று அழைக்கப்படுகிறார்.

சிவபெருமான் வில்வேந்திய வேடனாகப் பல தலங்களில் தோன்றி அருள் பாலித்துள்ளார். குடந்தையில் அவர் வேடனாக ஆதிகும்பேசுவரர் கோயிலில் எழுந்தருளியுள்ளார். அவரை வடமொழியில் கிராதன் என்பர்.

சிவபெருமான் பலவேறு சமயங்களில் அன்பர்களுக்கு வேடனாகக் காட்சியளித்த போதிலும் அருச்சனனுக்கு பாசுபதம் அளிக்க வந்தபோது கொண்ட வேடர் கோலமே தனிச் சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. (அதைத் தனியே காண்க)

வில்லை ஏந்தி நிற்பதால், சிவபெருமானுக்கு வில்லி, வில்லாளி என்ற பெயர்கள் வழங்குகின்றன.

சிவபெருமான் தன்வில்லை ஊன்றி உண்டாக்கிய தீர்த்தம் அவ்வில்லின் பெயரால் பினாகி என்று பெயர் பெற்றது. அது விரிந்து பினாகி நதியாக ஓடியது. அதைப் பெண்ணையாறு என அழைக்கின்றனர். அது வடபெண்ணை, தென்பெண்ணை என இரண்டாகப் பிரிந்து ஓடுகின்றது.

அம்பு

வில்லில் வைத்து நாணேற்றி எய்யப்படும் கூர்முனை கொண்ட கோலே அம்பு எனப்படும். சிங்கமுகம், யானை முகம், சந்திர வடிவம் முதலான அநேக வடிவங்களை அம்பின் முனையில் வடிப்பார்கள். பின்புறம் இறக்கைகள் பதிக்கப்பட்டது. இவை எய்ததும் பறந்து செல்ல உதவுவது.

அம்புகள், மந்திரங்களாலும் தந்திரங்களாலும் வலிவூட்டப்பட்டு, எதிரிகளை இமைப்பொழுதில் அழிக்கவல்லன.

இதனைப் பகழி, கணை, சரம் எனப் பல பெயர்களால் அழைக்கின்றனர்.

சிவபெருமான் திரிபுரங்களை அழித்த போது அவருடைய கணையில் அக்னி முனையாகவும், வாயு அடியாகவும் இருந்தனர். அதில் மகா உக்ரரூப நரசிம்ம வடிவுடன் திருமால் அஸ்திர மூர்த்தியாக வீற்றிருந்தார். அவர் திருவதிகையில் சரநாராயணப் பெருமாள் என்ற பெயரில் அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றார்.



பகழியை ஏந்தி நடனமாடுவதால் சிவபெருமான் பகழிக்கூத்தன் என்று அழைக்கப்படுகின்றார்.

சிவபெருமான் சில வடிவங்களில் அவர் அமுத கிரணங்களைப் பொழியும் சந்திரமுகக் கணையை ஏந்தியவராகக் காட்சியளிக்கின்றார்.

காமேசுவர வடிவங்களில் ஐம்மலர்கள் கட்டிய புஷ்பபாணத்தை ஏந்துகின்றார்.

அம்புகளை வைத்துக் கொள்ள உதவும் பெட்டி அம்பராத்தூணி எனப்படும் அம்புகள் அறாத தொட்டில் என்பது இதன்பொருள். வில்லின் நாணில் பூட்டி அம்புகள் மந்திர சக்தி உச்சரித்து எய்யப்படும் அம்பு பகைவரை வென்று அழித்தபின் மீண்டும் இந்த அம்பராத் தூளியை அடையும்.

கத்தரி

துணிகளை நேர்த்தியாக வெட்டி இணைத்து உடைகளாகத் தயாரிக்க உதவும் கருவி கத்தரியாகும். எளிய வகையில் வெட்டுவது சதாசிவ மூர்த்தி ஞானவானாக வீற்றிருந்து அன்பர்களின் பாசமாகிய போர்வை யையும், கட்டுகளையும் வெட்டிக் கிழிப்பதைக் குறிக்கும் வகையில் கத்தரியை ஏந்தியுள்ளார். மகா சதாசிவ மூர்த்தியின் கரத்தில் கத்தரி இலங்குகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோல்கள் –தண்டுகள்– தடிகள்

களத்த மூங்கில் அல்லது நெடிய மரங்களிலிருந்து கடைந்து எடுக்கப்பட்டு தண்டுகள் அளவு கருதி கோல், தண்டு, தடி என்ற பல பெயர்களைப் பெறுகின்றது. கோல்கள் பெரும்பாலும் மூங்கில் மரத்திலிருந்தே செய்யப்படுகின்றன. கோல்கள் சமுதாய அந்தஸ்தின் அடையாளத்தைக் காட்டும் சின்னமாகும்.

அரசர்கள் ஏந்திய கோல் செங்கோல், மந்திர தந்திரங்களில் வல்லவர்கள் ஏந்துவது மந்திரக்கோல், ஆடல் பாடல்களில் வல்ல மகளிருக்கு அரசனால் அளிக்கப்பட்ட கௌரவ சின்னம் தலைக்கோல் ஆகும். இக்கோலைப் பெற்றவர்கள் தலைக் கோலிகள் எனப்பட்டனர். ஆடலில் வல்ல சிவபெருமானும் நாட்டியத்தில் சிறந்து விளங்குவதைக் குறிக்கும் வகையில் தலைக்கோலை ஏந்தி நடனமாடுகிறான்.

தண்டம்

அரசனாக பவனிவரும் வேளையில் செங்கோலை ஏந்துகிறான். அக்கோலின் உச்சியில் இடபம் பொறிக்கப்பட்டுள்ளது. அதையொட்டி அது இடப தண்டம் என்று அழைக்கப்படுகிறது.

சிவபெருமான் வயோதிகனாக வடிவு கொண்டு வந்த வேளைகளில் தண்டூன்றி வந்ததைக் காண்கிறோம். ஆக்கூர் தான் தோன்றீசுவரர் ஆலயத்தில் தண்டூன்றிநிற்கும் கோலத்தில் அவரைக் காணலாம். சுந்தரரை ஆட்கொள்ள வந்த பெருமான் மூங்கில் தடியை ஏந்தி வந்ததைச் சேக்கிழார் வேணுத் தண்டொருகை கொண்டு தள்ளுநடையுடன் வந்தார் என்கின்றார்.

பிறவிக் குருடராய் தண்டு கொண்டு நடந்த நாயன்மார் ஒருவர் தண்டி அடிகள் என்று அழைக்கப்படுகிறார்.

சுந்தரர் கண் இழந்து துன்புற்ற போது இறைவன் ஊன்று கோலாகிய தண்டத்தை அளித்தார். அச் செயலால் அப்பெருமான் ஊன்றீசர் என்று அழைக்கப்படுகிறார்.

தடி (தண்டம்)



தடி என்பது உறுதியான மரத்தால் செய்யப்பட்டது. பகைவர்களை அடித்து விரட்டப் பயன்படுவது. நன்கு திரட்டி உருட்டி பிடியுடன்சேர்த்துக் கடையப் பட்ட உறுதிமிக்க தடியே தண்டம் எனப்படும். இதன் முனைப்பகுதி உருண்டு திரண்டிருக்கும். அடித்து தாக்குவதற்கு வசதியான பிடியைக் கொண்டது சிவ வடிவங்களில் அபூர்மாகவே தண்டாயுதம் இடம் பெற்றுள்ளது. இந்த தண்டம் ஏந்திய தெய்வங்களை உத்தண்டராயர் என அழைப் பர்.

தடிகளை நட்டு அவற்றையே இறை வடிவங்களாகப் போற்றுவர். அவை தண்டப் பெருமான் தண்டீசுவரர், தண்டு மாரி அம்மன் என வழங்குவதைக் காண்கிறோம்.

சிவபெருமான் யம தருமனுக்கு தண்ட.ா யுதத்தையும் நீதி தவறாத மனோ பலத்தையும் கலங்காத உள்ளத்தையும் அளித்தார். அவன் ஒரு சமயம் சென்னை யில் உள்ள திருவான் மியூருக்கு வந்து வழிபட்டான். பின்னர் அதற்குத் தெற்கில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அசுரர்களையும் திமிர்படைத்த அனைவரையும் அச்சுறுத்துபவர். அத்தகைய அகோராஸ்திர தேவரை பூசிக்கிறேன். அவர் எனது மனோரதங்களையும் விருப்பங்களை யும் அடையச் செய்கிறார்.

திருவெண்காட்டிலுள்ள அகோர மென்றே கூறுகின்றனர். இவருடைய திருமேனியில் 28 பாம்புகள் இடம் பெற்றுள்ளன பூசைகளும் உள்ளன.

ப்ரத்யங்கிரா அஸ்திரம்

அக்னியின் தேஜஸ்ஸோடு கூடிய சிங்க முகத்தையும் அதில் வளைந்த கோரைப் பல்லையும் உடைய பெண் வடிவில் தோன்றுவது. தலையில் மேல்நோக்கிய கேசங்களையும் அதில் சர்ப்பங்களையும் அணிந்தவள். கருமைநிறம் கொண்டவள். உருண்டையான சிவந்த தீயுமிழும் மூன்று கண்களைக் கொண்டவள். அக்னி மயமானவள். இடக்கரங்களில் முண்டம், பாம்பு, பல்லவம், இடக்கரங்களில் சூலம், மழு, ஏந்தி வீரட்டகாசமான சிரிப்புடன் மகிழ்வுடன் கர்ச்சித்துக் கொண்டு வருபவள். கரிய உடை உடுத்தவள். முத்தாலான மாலைகளையும் சர்வ ஆபரணங்களையும் அணிந்தவள். மான் தோலை அணிந்தவள். ரத்தம் தோய்ந்த மாமிசத்தை வாயில் உடையவள். இவளைச் சந்தனம், புஷ்பங்களால் வழிபடுகிறேன்.

காலப்போக்கில் சாக்தர்கள் இந்த அஸ்திரதேவியை அதர்வணகாளி, ப்ரத்யங்கிரா தேவி எனப் பல பெயர்களில் அழைத்து வருகின்றனர்.

பாசுபதாஸ்திரம்

பிரணவமான ஓங்காரத்தை ஆசனமாக உடையவர். யாராலும் வெல்லப்பட முடியாத சக்தியைக் கொண்ட மகாபலசாலி. ஐந்து முகங்களும் பத்துக் காதுகளும் முகம் தோறும் மூன்று கண்களும் துருத்திக் கொண்டிருக்கும் கோரைப் பற்களுடன் விளங்குபவர். பெரிய ஆரவாரமான ஓசையுடன் வருபவர். ஜெயிக்க முடியாதவர். கபால மாலைகளை அணிந்தவர். பிறைச் சந்திரனைச் சூடியவர். உருட்டி விழித்து அச்சுறுத்துபவர். பெரும் பாம்பைச் சூடியவர். நாவால் (அடியுதட்டை) நக்கிக் கொண்டு இருப்பவர். ஆயிரம் கோடி சூரியர்களைப் போல் பிரகாசிப்பவர். துன்பம் இழைப்பவர்களையும் வேள்விகளுக்கு இடையூறு செய்யும் கூட்டத்தையும் அடித்து அலற ஓட்டுபவர்.

பத்துக் கரங்களில் அதியுக்ரமான ஆயுதங் களை ஏந்தியவர். வலக்கரங்களில் கத்தி, அம்பு, பெரிய சூலம், அபய முத்திரை, பாசம் ஆகியவற்றையும் இடக்கரங் களில் கேடயம், வில், கபாலம், வரத முத்திரை (ப்ராசம்) ஆகிய ஆயுதங்களைத் தரித்தவர்.

செம்பட்டையான தாடி, தலை முடி, மீசை, புருவங்களைக் கொண்டவர். அப்படிப்பட்ட மகாபாசுபதாஸ்திர தேவரை எல்லா விருப்பங்களும் நிறைவடையும் பொருட்டு தியானிக்கிறேன்.

இப்படியான பஞ்சாஸ்திரங்களையும் வழிபடும் வழக்கம் குறைவாகவே உள்ளது. திசா ஹோமம் எனப்படும் வேள்வியில் நான்கு திசைகளிலும் நான்கு ஆயுதங்கள் பூசிக்கப் படுகின்றன.

நவகுண்டபட்ச வேள்விச் சாலைகளில் ஒன்பது குண்டங்களிலும் ஒன்பது அஸ்திரங் களுக்கான மூலமந்திர ஜபத்துடன் ஆகுதிகள் செய்யப்படுகினறது. ஒன்பது அஸ்திரங்கள் என்பது மேற்குறித்த ஐந்துடன் வியோமாஸ்திரம், சிவகாயத்திரி அஸ்திரம், சிவசாவித்திரி அஸ்திரம், க்ஷுரிகாஸ்திரம் என்ற நான்கும் சேர்ந்ததாகும். க்ஷுரிகை என்பதற்கு மூன்று வளைவுகள் கொண்டதும் இரட்டை வெட்டுப்பகுதி கொண்டதுமான குறுங்கத்தி என்று பொருள் கூறுகின்றனர். வேறுசிலர் சுரிகை என்பது பலமுனைகளையும் பற்களையும் உடையது என்பர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



கரங்களும் ஆயுதங்களும்

1) அங்குசம் 2) ஸ்வதந்தம் 3) பாசம் 4) கேடகம் 5) வாள் 6) சேவல் 7) மழு 8) & 13) திரிசூலம் 9) தோமரம் 10) & 11) வஜ்ரம் 12) அக்கினி 14) டங்கா 15) கதை 16) வில் 17) அம்பு 18)& 19) தாமரை 20) கட்வாங்கம் 21)சக்திவேல் 22) கண்ணாடி 23 & 28) டமருகம் 24) கிளி 25) மணி 26&30) அக்கமாலை 27&31) கமண்டலம் 29) ஏடு 32) பாம்பு 33)-34) கபாலம் 35) கொடி 36) மான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தசாயுதங்கள்

1. வஜ்ரம் 2. சக்தி 3, தண்டம் 4. கட்கம்

சிவபூசையில், சிவபெருமானுடன் அவரைச் சுற்றிலும் அமைந்த ஐந்து ஆவரணங்கள் வீற்றிருக்கும் பரிவாரங்களையும் பூசிக்கிறோம். முதல் ஆவரணத்தில் அவருடைய பஞ்சப்ரம்மங்களும் ஆறு அங்கங் களும் பூசிக்கப்படுகின்றன.

இரண்டாவது ஆவரணத்தில் அனந்தன் முதலானஅஷ்டவித்யேசுவரர்களும் மூன்றாவது ஆவரணத்தில் நந்தி, மகாகாளன், ப்ருங்கி, விநாயகர், ரிஷபர், ஸ்கந்தர், தேவி, சண்டேசுவரர் ஆகியோரும், நான்காவது ஆவரணத்தில் அஷ்ட திக்குப் பாலகர்களும் பிரம்மனும், திருமாலும் ஐந்தாம் ஆவரணத்தில் பத்து ஆயுதங்களும் பூசிக்கப் படுகின்றனர். இந்த பத்து ஆயுதங்கள் என்பது எட்டுத் திசைகளில் எட்டும் வானில் ஒன்றும், பாதாளத்தில் ஒன்றும் ஆக பத்து திசைகளில் இருந்தும் உலகைக் காப்பதாகும்.

இவை ஆயுத வடிவில் இருப்பதுடன் தேவ வடிவம் கொண்டும் அருள்பாலிக்கும் சிவ சந்நிதியில் அஞ்சலி செய்து கொண்டிருப் பவர்களாகவும், அன்பர்களுக்கு அருளும் போது அபய வரத முத்திரை தாங்கியவர் களாகவும் இருப்பர். நான்கு கரங்களுடன் அமைப்பதுமுண்டு. இந்த பத்து ஆயுதங்களுக் கும் தனித்தனியே சக்திஉள்ளன. ஆயுதங்க ளுடன் அந்தச் சக்திகளும் பூசிக்கப்படு கின்றனர்.

அனைத்து சிவ வேள்விச் சாலைகளிலும் இந்தப் பத்து ஆயுதங்களும் ஓவியங்களாகத் தீட்டி வைத்துப் பூசிக்கப்படுகின்றன. இனி இவற்றைப் பற்றிச் சுருக்கமாகக் காணலாம்.

1. வஜ்ரம்

இரு பருத்த வடிவு கொண்டது. பொன் போல் பிரகாசிப்பது. ஆண் வடிவானது. அதிக பலம் கொண்டது. இது கிழக்குத் திக்கில் அமைந்திருக்கின்றது. இதன் சக்தி, விலாசினி

2. சக்தி

சிவந்த நிறம் கொண்டது. அழகிய பெண் வடிவில் திகழ்வது. மூன்று முக் கோணங்கள் ஒன்றன்மீது ஒன்றாக அமைந்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆயுத சக்திகளை இருகரம் கொண்டவர்களாகவே அமைப்பது வழக்கம். நாம் பூசிக்கும் வேளையில் அவர்கள் அபயவரத முத்திரை தரித்தவர்களாகவும், சிவ சன்னதியில் இருக்கும் போது கூப்பி வணங்கும் (அஞ்சலி) கோலத்திலும் இருப்பர். இங்கு அளவில்லாத ஆற்றல் உள்ளவர்கள் என்பதைக் குறிக்க ஆறு கரங்களும் எல்லையற்ற வலிமை படைத்தவர்கள் என்பதைக் குறிக்க மண்டியிட்ட கோலத்திலும் அமைக்கப்பட்டுள்ளனர்.

5. பாசம்

7. கதை.

8. சூலம்

9. பத்மம்

10. சக்கரம்

தது. தென்கிழக்கில் இருப்பது. அளவற்ற ஆற்றல் கொண்டது. இதன் சக்தி ரூபிணி.

3, தண்டம்

அடி பருத்தும் நுனி சிறுத்தும் இருக்கும் இந்த தண்டம் கருநிறமானது. புருஷ வடிவு கொண்டது. அகன்ற விழிகளும் அடர்ந்த மீசை யும் தடித்த உதடுகளையும் கொண்டது.

பலமான தேகம் உடையது. தெற்குத் திசையில் இருப்பது, இதன் சக்தி தாரிணி

4. கட்கம்

ஆண் வடிவுடன் விளங்கும் இந்த வாளாயுதம் கோபம் மிகுந்த கண்களையும், கருத்த மேனி யையும் உடையது. தென்மேற்கு திசையில் இருப்பது. இதன் சக்தி விமுக்யா.

❀ திருவிடை மருதூர் ஆலயத்தில் இந்த பத்து ஆயுதங்களையும் பூதங்கள் தாங்குவதுபோல் அத்தி மரத்தில் செய்து வண்ணம் தீட்டிப் பொலிவுடன் வைத்துள்ளனர். ❀ திருப்புகலூர் வர்த்தமானீசுவரர் ஆலயத்தில் அண்மையில் ஒரு மண்டபம் கட்ட நிலத்தை அகழ்ந்தபோது பல பஞ்சலோக உலாத் திருமேனிகள் கிடைத்தன. அவற்றில் குறிப்பிடத் தக்கது. தசாயுதங்களின் திருவுருவங்களாகும். இவை சுமார் ஒன்றரை அடி உயரமுள்ளவை கூப்பிய கரங்களுடன் உள்ளன. இதுபோன்ற தசாயுத உலாத் திருமேனிகள் எங்கும் இல்லை என்பது சிறப்புச் செய்தியாகும். ❀ இதுபோன்று ஒவ்வொரு தெய்வத்திற்கும் தனித்தனியே தசாயுதங்கள் உள்ளன. முருகன், அம்பிகை, விநாயகர் ஆகியோரின் பஞ்சாவரண பூசையில் இவை பூசிக்கப்படும். ❀ மேலே சொன்ன பத்து ஆயுதங்களில் வஜ்ரமும் குலிசமும்(சக்தியும்) கணவன் மனைவியான தேவ தேவியர் இவை முருகன் கரத்தில் இருப்பதுமாகும். கதாயுதம் கன்னிப்பெண். மற்றவை ஆண் வடிவானவை ❀.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. பாசம்

வருண திக்கான மேற்குத் திசையில் உள்ள பாசம் ஏழு படங்களையும் ஏழு முடிச்சுகளையும் கொண்ட பாம்பு வடிவானது. இதனை வருணபாசம் எனவும்கூறுவர். ஆண் வடிவில் நீல நிறத்துடன் பிரகாசிப்பது. இதன் சக்தி நிர்மலா.

6. கொடி

மஞ்சள் நிறத்துடன் ஆண் வடிவில் விளங்குவது. வாயு திக்கான வடமேற்கு முனையில் இருப்பது. இடப முத்திரையுடன் கூடியது. திறந்த வாயையும் வலிய தேகத்தையும் உடையது. இதன் சக்தி துர்மலா.(சில நூல்களில் இந்தக் கொடிக்குப் பதிலாக அங்குசம் கூறப்பட்டுள்ளது. அங்குசம் மஞ்சள் நிறம் கொண்டது)

7. கதை.

வடக்குக் திக்கில் உள்ள ஆயுதம் கதை. பருத்து உருண்டையான தலைப் பாகத்தையும், நீண்ட கைப்பிடியையும் கொண்டதாகும். பொன் வண்ண மஞ்சளுடன் பிரகாசிக்கும் இந்த ஆயுதம் பருத்த பின்பாகங்களைக் கொண்ட பெண் வடிவானது. கன்னிப் பெண் வடிவுடன் அழகுடன் திகழ்வது. இதன் சக்தி மதிக்கிரகா.

8. சூலம்

ஈசான திக்கில் விளங்கும் சூலம் கரு நிறம் கொண்டது. ஆண் வடிவானது. விரிந்த கண்களும் தெற்றிப்பல்லும் கொண்டது. இதன் சக்தி சுமாலினி. இது ஞான வடிவானது.

9 ,பத்மம்

வான்வெளியில் இருந்து உலகைக் காப்பது. வெண்மை நிறம் கொண்டது. அழகிய விழிகளைக் கொண்டு நான்கு முகங்களுடன் திகழ்வது. இதன் சக்தி சுருதிச்யா (சுதிருச்யா) எனப் பெயர் பெற்றது.

10. சக்கரம்

பாதாளத்தில் சுழன்று காக்கும் சக்கரம் சுதர்சனம் எனப்படும். ஆயிரம் கிரகணங் களை உடையது. கருத்த ஆண் வடிவில் பிரகா சிப்பது. உக்ரமய ஆரங்களையும் சுடர்களை யும் கொண்டது. இதன் சக்தி ஹம்சமால்யா. இதனை நிருதிக்கும் மேற்கிற்கும் இடையே நிலைப்படுத்தி பூசிப்பர். ஓ

ஆயுத அடையாளங்களைக் கொண்ட லிங்கங்கள்

சிவலிங்கத்தில் தசாயுதங்களின் வடிவை அமைத்து வழிபடுகின்றனர். அவை அந்த ஆயுதங்களின் பெயரால் அழைக்கப்படு கின்றன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பயனைத் தருவதாகும். இவ்வகையில் வஜ்ர அடையாளமிட்டது சகல சித்தி களைத் த ருவதாகும். இதுபோல் சக்தி லிங்கம் எதிரிகளை அழிப்பது. சத்ருக்களை நாசம் செய்வது. தண்ட லிங்கம் ஆயுளை அதிகரிப்பதுடன் கொள்ளை நோய்களை அழிக்கிறது. கட்க லிங்கம் - எதிரிகளின் படை களைக் கொள்ளை நோயை அளித்து அழிப்பது. ராக்ஷர்களை பயங்கொள்ள வைக்கிறது. பாச லிங்கம் - பாவத்தை நீக்கி, அமைதி, வலிமை, செல்வச் செழிப்பு, அழகு நோயின்மை, சௌபாக்யத்தை அளிக்கிறது. கதை லிங்கம் - பொன்னை அளிக்கிறது. வெற்றி, ஆற்றல், செல்வத்தை அளிக்கிறது. குடை அடையாளமிட்ட சத்ர லிங்கம், பிரம்ம பதவியையும், கொடி லிங்கம் உச்சா டனம், உத்சேதகம் தருவது. சூல லிங்கம் அரசத் தன்மை அறிவு, விஞ்ஞானம், மோக்ஷம், யோகம், மங்களம், சௌக்யம், பேரரச போகம் ஆகியவற்றை அளிக்கிறது. பத்ம லிங்கம் தெய்வத்தன்மை சாம்ராஜ்ய பயன் அளிக்கிறது. சக்ர லிங்கம் பாதாள சித்தி, இரசாயன சித்தி ஆகிய. வற்றை அளக்கின்றன.

திருப்பூவனம் எனும் தலத்தில் மூலவரான சிவலிங்கத்தில் சூலம் உள்ளது. அப்பர் இப்பெருமானை வடி வேறு சூலம் தோன்றும் என்று துதிக்கின்றார்.

திருஒற்றியூரில் சுவாமியின் திருமேனி யில் பாம்பு படம் உள்ளது. இதனை வருண பாசம் எனவும் அழைப்பர். இங்குஇறைவன் கடல் அலை போல் இருப்பது சிந்திக்கத் தக்கதாகும். ஓ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உளி

நுண்மையும், அதிக வலிமையும் வாய்ந்த வேலைகளைச் செய்யும் தொழிற்கருவி உளி யாகும். இது பொருளைச் செதுக்கிச் சீர்மைப் படுத்துவதாகும். வடமொழியில் இதனை டங்கம் என்றழைப்பர். மரவேலைகள், கல்லுடைக்கும் பணிகள், உலோக வேலை கள் அனைத்திலும் உளிகள் முதன்மை யான இடத்தைப் பெற்றுள்ளன.



உலகினை நுண்மையான தொழில் நுட்பத்துடன் செதுக்கி ஆக்கும் பணியைச் செய்வதால், சிவபெருமான் விடங்கன் என்று அழைக்கப்படுகின்றான். தேவாரத்துள் அனேக இடங்களில் இறைவன் விடங்கன் என்று அழைக்கப்படுகின்றான்.

பல தலங்களில் உள்ள மூர்த்திகளுக்கு விடங்கர் என்ற பெயர் வழங்குகிறது. இதற்கு உளியால் செதுக்கப்படாத திருமேனியை உடையவர் என்று பொருள் கூறப்பட்டுள்ள தைக் காண்கிறோம். மகா சதாசிவ மூர்த்தியாக விளங்கும் சிவபெருமான் உளியையும் சுத்தி யலையும் சம்மட்டிகளையும் ஏந்திக் காட்சி அளிக்கிறார்.

காரைக்குடியை அடுத்த கோயிலூரின் காவல் தெய்வமாக இருப்பவர் ஆயுளி அம்மன், ஐயுளி என்பதற்கு மேன்மையைத் தரும் உளி என்பது பொருளாகும். (காவிரியை ஐயாறு என்றும் கொற்றவையை ஐயை என்றும் கூறுவதும் இங்கு சிந்திக்கத் தக்கதாகும்.

காரைக்குடியைச் சார்ந்தவர்கள் கல்சிற்ப வேலையிலும், மரவேலையிலும் கைதேர்ந்த உலகப் புகழ் பெற்றவர்கள் என்பது எல்லோரும் அறிந்த ஒன்றாகும். இவ்விரண்டு தொழிலுக்கும் உளி ஆதாரக் கருவியாகும். அந்த உளியுள் உறையும் தேவியாக இவள் கொண்டாடப் பட்டி ருக்க வேண்டும். புதியதாகப் பணி தொடங்கும் போது ஐந்து உளிகளை வைத்துப் பூசைசெய்யும் வழக்கம் இருப்ப தால், இவள் ஐயுளி அம்மன் என்று அழைக் கப்படுகிறாள் என்றும் கூறுவர்.

இவர் வடமொழியில் பஞ்சாட்சர நாயகி என்று அழைக்கப்படுகிறாள். இவ்வூரிலுள்ள இறைவன் கொற்றவாளீசுவரர் என்று வாளா யுதத்தின் பெயரால் அழைக்கப் படுவதும் இங்கு சிந்திக்கத்தக்கதாகும்

சிறு சுத்தியும் – பெருஞ்சுத்தியும்

சுத்தியல் என்பது அடித்துச் செல்லும் கருவியாகும். மரவேலைகள், கல்லுடைக்கும் பணிகள், உலோக வேலைகள் அனைத்திலும் உளிகள் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளன. நுண்மையான வேலைகளைச் செய்ய சிறு சுத்தியலையும் பெரிய வேலைகளைச் செய்ய பெரிய சுத்தியலையும் பயன்படுத்துகிறோம். பெரிய சுத்திக்குச் சம்மட்டி என்பது பெயர். இரண்டுமே கருமார்களுக்கு உரிய ஆ்யுதமாகும். சுத்தி ஆக்கும் கருவியாகும். சிவபெருமான் உலகினைப் படைக்கும் பெருந்தச்சனாக விளங்கும் மகா சதாசிவ கோலத்தில் வகையில் உளி, சுத்தியல்களுடன் விளங்குகிறார். இது தேவாரத்துள் சுத்தி சூலம் விளங்க வரும் பெருமான் என்றும், ‘ சுத்தி ’ தரித்துறையும் ஜோதி என்றும் குறிக்கப்பட்டுள்ளார்.

ரம்பம்

மரத்தை அறுத்து இணைத்துப் பொருத்தி கட்டில், மேசை முதலியவற்றைச் செய்ய உபயோகமாகும் கருவி ரம்பம் ஆகும். இது வரிசையான கூரான பற்களைக் கொண்டதாகும். நுண்கருவி இதை உலகத் தச்சனான மகா சதாசிவ மூர்த்தியின் கரத்தில் மட்டுமே காண் கிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆயுதங்களில் உறையும் தெய்வங்கள்

ஒவ்வொரு ஆயுதத்திற்குள்ளும் ஒவ்வொரு தெய்வம் தாமே வலிய வந்து குடிபுகுந்து கொள்ளும். அக்கருவிகளை இயக்கும் போது அவைஉள்நின்று செயல்படும். அந்த தெய்வங்களின் ஆற்றலால் எளிய கருவிகள் கூட கொலைக் கருவிகளாக மாறிவிடும். கொடிய ஆயுதங்களில் சாந்த மயமான சக்திகள் குடிபுகும்போது அவை அச்சுறுத்துவதோடு நின்றுவிடும்.

ஆயுதங்களை வணங்கும் போது அதனுள் உறையும் தெய்வங்கள் வெளிப்பட்டு அருள்பாலிக்கும் என்று நம்புகின்றனர். இதையொட்டி அந்தச் சக்திகளை ஆயுதத்தின் முகப்பில் உருவமாகப் பதிக்கும் வழக்கம் தோன்றியது. சிவாலயங்களில் உள்ள திரிசூலத்தில் மந்திர பூர்வமாக உருத்திரன், பிரமன், திருமால், சப்தமாதர், லட்சுமி, சரஸ்வதி முதலானோர் நிலைப்படுத்தி வணங்கப்படுகின்றனர் என்றாலும், சூலத்தின் முன்புறம் சந்திரசேகரர், நடராசர், இடபாந்திகர் முதலான மகேஸ்வர வடிவங்களை அமைக்கின்றனர். அவற்றிற்கும் வழிபாடுகள் நடத்தப்படுகின்றன.

பின்னாளில் காளி கோயிலிலுள்ள சூலங்களில் காளியும், அம்பிகை ஆலய சூலங்களில் பராசக்தியும் முருகன் ஆலய வஜ்ரங்களில் முருகனும், இவ்வாறே ஆலயத்திற்கேற்ப ஆயுதங்களில் தெய்வ உருவங்கள் அமைக்கப்பட்டு வழிபடப்படுகின்றன.

பாண்டி நாட்டுப் பழம்பதியான திருப்புனவாயிலில் அம்பிகை சந்நிதிக்கு எதிரிலுள்ள கோபுர வாயிலின் குடைவரையில் சூலம் நடப்பட்டுள்ளது. அதில் காளிதேவி உறைகிறாள். அவள் சந்நிதி சிறந்த பிரார்த்தனைத் தலமாக விளங்குகிறது

ஆயுதங்கள் அமைத்த தீர்த்தங்கள்

ஆயுதங்கள் அழிவை ஏற்படுத்துவதைப் போல ஆக்க வேலைகளையும் புரிகின்றன. ஆயுதங்கள் அன்பர்கள் நீராடவும் நீரில் மூழ்கி பாவங் களைத் தொலைத்து புண்ணியம் பெறவும் தீர்த்தங் களை அமைத்துள்ளன. அவை ஆயுதங்களின் பெயரால் சூலதீர்த்தம், சங்க தீர்த்தம், சக்ர தீர்த்தம் எனப் பலவாறு அழைக்கப்படுகின்றன.

வைரவர் தனது சூலத்தால் உண்டாக்கிய தீர்த்தம் வைரவன் பட்டியில் சூல தீர்த்தம் என்னும் பெயரில் உள்ளது. திருவிற்குடியில் ஆலயத்தின் முன்னும் பின்னுமாக திருமாலின் சங்கு சக்ரங்கள் வீழ்ந்தன. அந்த இடங்களில் உண்டானவை சங்கு தீர்த்தமும் சக்ர தீர்த்தமும் ஆகும்.

திருவண்ணாமலையில் அம்பிகை மகிஷா சூரனை அழித்தபின் ஒரு பாறையைக் கை வாளால் பிளந்து தீர்த்தம் உண்டாக்கினார். அது கட்க தீர்த்தம் என்ற பெயரில் திருவண்ணாமலை துர்க்கை ஆலயத்தில் உள்ளது. அதன் கரையில் பாபவிநாசர் என்றும் சிவலிங்கம் உள்ளது.

சிவபெருமான் தனது வில்லை ஊன்றி அமைத்த தீர்த்தம் வில்லூன்றி தீர்த்தம் என்றும் பினாக தீர்த்தம் என்றும் அழைக்கப்படுகிறது.

அவர் நந்தி மலையில் தனது பினாக வில்லை ஊன்றி ஒரு தீர்த்தத்தை உண்டாக்கினார். அங்கு கங்கை பொங்கி வந்தாள். அவள் இரண்டு கிளைகளாகப் பிரிந்து ஓடினாள். ஒன்று வட பெண்ணையென்றும் மற்றது தென்பெண்ணை என்றும் அழைக்கப்படுகின்றன. தென் பெண்ணை யின் கரையில் திருவெண்ணெய் நல்லூர் முதலான திருத்தலங்கள் உள்ளன. இந்த ஆறு தேவாரத்துள் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்திரனின் ஆயுதம் அமைத்த வஜ்ர தீர்த்தம், யமனின் ஆயுதம் அமைத்த தண்ட தீர்த்தம் முதலான தீர்த்தங்கள் ஆயுதங்களின் பெயரால் வழங்குகின்றன,

ரக்ஷோக்ன தேவர்

வேள்விச் சாலைகளையும், ஆலயங்களையும் பாதுகாப்பவராக இருப்பவர் ரக்ஷோக்னதேவர். இவரைப் போற்றும் வழிபாடு ரக்ஷோக்ன ஹோமம் எனப்படும். இதில் தேங்காய், கொடுவாள், பூர்ணகலசம் ஆகிய மூன்று வைக்கப்பட்டு தேங்காயில் சதாசிவரையும் பூர்ண கலசத்தில் ரக்ஷோக்ன தேவரையும், கத்தியில் கட்கேசரும் பூசிக்கப்படுகின்றனர். பூசை முடிந்ததும் மேற்சொன்ன மூன்றையும் வலமாக எடுத்துச் சென்று இவர்களை மூலஸ்தானத்தில் சேர்க்கின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செண்டலங்காரர்

செண்டாயுதம் மிகத் தொன்மையான ஆயுதமாகும். இந்த செண்டாயுதத்தை ஆயர்களுக்கே உரிய ஆயுதமாகக் கூறுவர். உச்சியில் இரண்டு கொக்கி போன்ற வளைவு களுடன் கூடிய நீண்டகழியே செண்டாகும். இரண்டு வளைவுகளில் ஒன்று பசுக்கள் ஆடுகள் ஆகியவை தழைகளைத் தின் பதற்கு உதவியாக மரக் கிளைகளை இழுத்துத் தாழ்த்திப் பிடிக்கவும், இன்னொரு வளைவு புதர்களை விலக்கவும், நீண்ட கழிபோன்ற பகுதி காட்டு விலங்கு களை அடித்து ஒட்டவும் உதவுகிறது. செண்டினை ஏந்தியிருப்பதால் பெருமான் செண்டலங்காரர் என்று அழைக்கப் படுகிறார். மன்னார்குடி இராஜகோபாலன் வடிவில் திருமால் செண்டலங்காரனாகத் திகழ்கிறார். சுந்தரமூர்த்தி சுவாமிகளும் செண்டுடன் திகழ்கிறார்.

பழந்தமிழ்க் கடவுளான சாத்தன் செண்டாயுதம் ஏந்தியுள்ளார். அவரைச் செண்டாடும் ஐயனார் என்று போற்றுகின் றனர். காஞ்சி காமகோட்டத்துப் பெருஞ் சாத்தன் கரிகால் பெருவளத்தான் என்ற சோழ மன்னனுக்கு செண்டாயுதத்தை அளித்தார். அதைக் கொண்டு இமயத்தை அடித்து சோழன் வெற்றி கொண்டான் என்று பழந் தமிழ் நூல்கள் கூறுகின்றன.

முருகன் மதுரையில் உக்ர குமாரனாகத் தோன்றி ஆட்சி புரிந்த போது, சிவபெருமான் அவருக்கு வேல், வளை ஆகியவற்றுடன் செண்டாயுதத்தையும் அளித்தார் என்றும், அதைக் கொண்டு முருகன் மேருவை அடக்கி னார் என்றும், கூறுகின்றனர்.



மாப்பிள்ளை சாமி-திருவீழிமிழலை

திருவீழிமிழலையில் மாப்பிள்ளைசாமி எனும் பெயரில் எழுந்தருளியுள்ள சிவபெரு மான் செண்டேந்தி செண்டலங்காரராக விளங்குகிறார். அவருடைய செண்டில் அழகிய சிறிய இடபமும் இடம் பெற்றுள்ளது,

இறைவடிவங்களை உலாவரச் செய்யுமும் அவர்களுடைய ஆயுதங்களை முன்னே கொண்டு செல்வது வழக்கம். திருவீழிமிழ லையில் மாப்பிள்ளை சாமி வீதியுலாவிற்காக இருப்பிடத்தை விட்டுப் புறப்படும்போது அவர் கையிலுள்ள செண்டிற்குப் பூசை செய்து அதை முன்னே கொண்டு செல்வது வழக்கம். இதனை செண்டு இறக்குதல் என்று கூறுவர்.

பின்னாளில் செண்டு அரசர்களுக்குரிய அடையாளமானது. பல அரச வடிவங்கள் ஜி

ஆயுதக் கொட்டில்கள்

அதிஉக்ர மயமான போர்களில் பயன்படுத்திய ஆயுதங்களை வீட்டிற்கு எடுத்து வருவதில்லை. அவற்றால் வெட்டுண்டு மடிந்தவர்கள் ஆவி அதனைத் தொடர்ந்து வரும் என நம்பினர். எனவே, அவற்றைக் காளி கோயில் முற்றத்திலும் வைரவர் கோயில் முற்றத்திலும் சிறுவேலியிட்டு அதனுள் நட்டுவைப்பர். அவ்விடங்கள் ஆயுதக் கொட்டில் எனப்படும்.

கொடுங்குன்றம் எனப்படும் பிரான் மலையில் பைரவர் ஆலயத்தின் முன்புறம் ஆயுதக் கொட்டிலைக் காணலாம். இதில் நீண்ட வாள் வேல் ஆகியன நடப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.இதுபோன்று பல ஆலயங்களில் ஆயுதக் கொட்டில்கள் இருந்தன. காலப்போக்கில் அவை மறைந்துவிட்டன. ஜி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சங்கிலி (வைரச் சங்கிலி வஜ்ர ச்ருங்கலம்)

உறுதியான உலோகத்தலான சிறு வளையங்களை ஒன்றோடு ஒன்று கோர்த்து நீண்ட தொடராகச் செய்யப்பட்டது சங்கிலியாகும். வீரர்கள் நீண்ட சங்கிலிகளை இரண்டு தோள்களிலும் வரும்படி மார்பின் குறுக்கே அணிந்தனர். இதற்கு வீரச் சங்கிலி என்பது பெயர். எதிரிகளை வென்று சங்கிலியால் கட்டி இழுத்து வருகின்றனர். இதைக் கொண்டு எதிரிகளை அடிப்பதும் உண்டு. வடமொழியில் சங்கிலிக்கு ச்ருங்கலம் என்பது பெயர். சங்கிலி ஏந்திய பெண்தெய்வம் வஜ்ர ச்ருங்கலா என்று அழைக்கப்படுகிறாள். சங்கிலி ஏந்தும் கிராமிய தெய்வங்கள் சங்கிலி பூதத்தார், சங்கிலி கருப்பர், சங்கிலி அம்மன் என்னும் பெயர்களில் உள்ளனர். ஓ

மணி



மணி காத்து நிற்பதன் குறியீடாகும். பூசையில் மணியைத் தவறாது ஒலிக்க வேண்டும். மணியோசையைக் கேட்கும்போது அசுரர்களும் தீயவர்களும் அஞ்சி அந்த இடத்தைவிட்டு அகல்கின்றனர். தேவர்கள் அந்த இடத்தை நோக்கி வருகின்றனர். மணியோசை தருமத்தின் ஒலியாகும்.

சிவபெருமான் உருத்திரர் வடிவில் மணியேந்துகிறார். முருகன், காளி, ஆகியோரும் மணியை ஏந்துகின்றனர். ஆலயங்களில் மணி சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. பூசகர் பூசிக்கும் போது இடக்கையில் ஏந்தியுள்ள மணியை அடித்துக் கொண்டே வலக்கையால் பூசை செய்வார். அந்த மணி கைமணி எனப்படும். அதன்பிடிமீது சிவாலய மணியானால் நந்தியம் பெருமான் வடிவம் அமையும். சக்தி ஆலய மணிகளின் பிடியில் சூலமும், விஷ்ணு ஆலய மணிகளில் சங்கு சக்கரமும் அமைக்கப்பட்டுள்ளன.

வீரபத்திரர் , பத்ரகாளி, கஜசம்ஹாரர் முதலிய மூர்த்தங்கள் மணிகள்கோர்த்து அமைக்கப்பட்ட நீண்ட மணிமாலைகளை அணிந்துள்ளனர்.

ஆலயங்களில் பூசையின்போது அடிக்கப்படும் அளவால் பெரிய மணிகள் கண்டாமணி என்று அழைக்கப்படுகின்றன. இவற்றின் ஓசை நெடுந்தொலைவு வரை கேட்கும். கோயில் மணியோசையைக் கேட்டவுடன் எழுந்து நின்று அதுவரும் திசையை நோக்கி வணங்குவது அன்பர்கள் வழக்கமாகும்.

இடபங்களின் கழுத்திலும், யானைகளின் பக்கவாட்டிலும், தேர்களின் சட்டங்களிலும் மணிகளைப் பொறுத்துவர். மணிகள் கட்டிய தேரை மணி நெடுந்தேர் என்று இலக்கியங்கள் கூறுகின்றன வேல், சூலம் போன்ற ஆயுதங்களிலும் மணிகளைக் கட்டி வைப்பர். ஓ

பரிகம்

பரிகம் என்பதற்குத் தூண்டில்முள் என்பது பெயர். அசுரர்கள் மீனாக உருவெடுத்துக் கடலுக்கடியில் சென்று ஒளிந்து கொள்வதும் சமயம் கிடைக்கும் போது வெளிவந்து மக்களுக்குத் தொல்லை கொடுப்பதும் வழக்கம். அத்தகைய அசுரர்களை மாய சக்தியால் இழுத்துச் சிறைப்படுத்தும் ஆயுதமாகத் தூண்டில்முள் விளங்குகிறது. சிவபெருமான் கானவனாக வெளிப்படும் வேளையில் மீன்பிடிக்கும் வலையையும் பரிகத்தையும் (தூண்டில் முள்ளையும்) ஏந்தியிருக்கின்றார். வலைக்கே பரிகம் என்ற பெயரும் உண்டு. ஓ

**வாள் நெடுங்கண்ணி உடனாய சூலபாணியின் அருளால்
எல்லோரும் எல்லாமும் பெற்று இனிது வாழ்க!**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

கணங்கள் சூழ்ந்து வணங்கும் கடல் மயிலைக் கபாலி போற்றி !
கற்பகநாதா போற்றி! போற்றி!!

சிவாலய பரிவாரங்கள்

சிவபெருமான் ஆதிமூல முழு முதற்கடவுளாவார். அண்டசராசரங்கள் யாவும் அவரால் படைக்கப்பட்டவைகளே. அவற்றை முறையாக வழிநடத்த அவர் தமது அம்சம் பொருந்தியவர்களான பல்வேறு தெய்வங்களைப் படைத்தார். அவர்கள் தமக்கு அளிக்கப்பட்ட பணியைச் செய்து, உலகை நடத்தி வருவதுடன், சிவபெருமானைத் துதி செய்து கொண்டு மகிழ்ச்சியுடன் இருந்து வருகின்றனர்.

சிவபெருமானை வழிபடும் போது அவரால் படைக்கப்பட்ட தெய்வங்களில் முதன்மை பெற்ற சிலரையும் சேர்த்து வழிபடுகிறோம். அவர்கள் அவரைச் சுற்றி அமைந்துள்ளனர். பரிவாரம் என்பதற்கு சுற்றியிருத்தல் என்பது பொருள். எனவே சிவபெருமானைச் சூழ்ந்து வீற்றிருக்கும் இவர்களைப் பரிவார தேவர்கள் என்று அழைக்கின்றனர்.

சிவாலயங்களில் விநாயகர், முருகன், பைரவர், துர்கை, திருமால், நந்திதேவர் முதலானோர் பரிவார தேவர்களாக விளங்கி வருகின்றனர். இவர்களுக்குத் தனித்தனியாகக் கோட்டங்கள் அமைத்து அவற்றில் இவர்களுடைய திருவுருவங்களை அமைத்து வழிபட்டு வருகிறோம்,

மேலும், அந்தந்தத் தலத்தில் தோன்றிச் சிவப்பணி செய்து மேன்மை பெற்ற அடியவர்கள், பெரியபுராணத்தில் சிறப்பித்துப் பேசப்படும் அறுபத்துமூன்று நாயன்மார்கள், சந்தான குரவர்கள் சமய குருமார்கள் ஆகியோர் திருவுருவங்களையும் பரிவார தேவர்களாக ஆலயங்களில் எழுந்தருளுவித்து வழிபடுகிறோம்.

அத்துடன் சிவபெருமானின் திவ்ய மூர்த்தங்களான சோமாஸ்கந்தர், சந்திர சேகரர், பிட்சாடணர், நடராசர், அர்த்த நாரீசுவரர் முதலிய திருவுருவங்களும் பரிவார தேவர்களாக ஆலயங்களில் வைத்து வழிபடப்படுகின்றன.

இத்தகைய பரிவார மூர்த்தங்களின் பெருமைகளை பேசுவதாகச் சிவமஞ்சரியின் இந்த ஐம்பத்தொன்பதாவது மலர் மலர்கிறது இந்நூலில் இவர்களுடைய சிறப்புகளைச் சுருக்கமாகக் காணலாம்.

சகல பரிவாரங்களுடன் இராஜ மாதங்கியான மகாதேவி மீனாட்சியுடன் அதியுன்னத மகாராஜனாக வீற்றிருக்கும் சோமசுந்தரப் பெருமான் அன்பர்கள் யாவருக்கும் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வை அளித்து, அருள்பாலிக்க வேண்டுமென்று அவர்தம் பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பணிந்து பிரார்த்திக்கின்றேன். -சிவசுந்தரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கருவறைக் கோட்டங்களிலும் பிரகாரங்களிலும் வீற்றிருக்கும் பரிவார தெய்வங்கள்

சிவாலயங்களில் இரண்டு விதமான பரிவாரங்கள் உள்ளன. முதல்வகைப் பரிவாரம் கருவறையைச் சுற்றியமைந்த கோட்டங்களில் எழுந்தருளும் பரிவார தெய்வங்கள் ஆகும். இந்தக் கோட்டங்கள் கருவறை, அதை யொட்டி அமைந்த உள் மண்டபம், இடை மண்டபம், மகா மண்டபம் ஆகியவற்றின் புறச்சுவர்களில் மாடங்களாக அமைக்கப்பட்டுள்ளன. அனைத்து ஆலயங்களிலும் குறைந்தபட்சம் ஐந்து கோட்டங்கள் அமைந்திருக்கும். இவற்றில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, அண்ணாமலையார் (அ) லிங்கோத்பவர், பிரமன், துர்க்கை எனும் ஐவர் எழுந்தருளியுள்ளனர்.

இவ்வாறு, இன்றிப் பிராகாரங்களில் தனித்தனி சிற்றாலயங்களிலும் பரிவார தெய்வங்களை அமைக்கின்றனர். முன்னாளில் எட்டு பரிவாரங்களை அமைக்கும் வழக்கம் இருந்தது. இவ்வகையில் கிழக்கில் இடபம், அக்னி திக்கில் சூரியன், தெற்கில் சப்த மாதர்கள், தென்மேற்கில் கணபதி, மேற்கில் திருமால் (அ) முருகன், வடமேற்கில் மகாலட்சுமி, வடக்கில் சண்டீசுவரர் வடகிழக்கில் பைரவர் ஆகிய எண்மருக்கான ஆலயங்கள் இருந்தன. எறும்பூர் கடம்பவனேசுவரர் ஆலயத்தில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு எட்டு பரிவாரங்கள் அமைக்கப்பட்டதை விளக்கமாகக் கூறுகிறது. இப்போதும் பல ஆலயங்களில் இம்முறையைக் காணலாம்.

பின்னாளில் கருவறையைச் சுற்றி திருமாளிகைப்பத்தி என்ற மேடையும் அதன் மீது திருமாளிகை என்ற மண்டபத்தையும் அமைத்தனர். பரிவார தெய்வங்களுக்குத் தனித்தனியே ஆலயங்கள் அமைப்பதற்குப் பதில் இந்த திருமாளிகைப்பத்தி மண்டபத்தில் உரிய இடங்களில் அறைகளைக் கட்டி அதனுள் மேடை அமைத்து இவர்களை நிலைப்படுத்தத் தொடங்கினர். அம்முறையே இப்போது பெரும்பாலான தலங்களில் உள்ளது.

பெரும்பாலும் முதல் பிரகாரத்துக்கு உள்ளேயே மேற்குறித்த பரிவாரங்கள் அமைகின்றனர். இரண்டாவது மூன்றாவது, நான்காவது ஐந்தாவது பிராகாரங்களில் திருப்பணி செய்பவர்கள் தங்கள் மனதிற்கும் விருப்பத்திற்கும் ஏற்ப தெய்வங்களை நிலைப்படுத்தியுள்ளனர்.

இந்நூலில் கோட்டங்களிலும் சுற்றாலயங்களிலும் அமைந்திருக்கும் பரிவார மூர்த்தங்களைப் பற்றிச் சுருக்கமாகத் தனித் தனியே காணலாம். ❀

❀ பல்லவர்கள் காலத்தில் மையக் கோயிலைச் சுற்றி (வாயிலைத் தவிர) ஏழு பக்கங்களிலும் வளர்த்திக் கட்டி கோட்டங்களை அமைத்தனர். அவற்றின் விமானங்கள் ஸ்ரீவிமானத்தின் அங்கமாக அதனோடு இணைந்து காட்சியளிக்கும் இந்தக் கோட்டங்கள் கருவறையுடன் சேர்த்து எட்டு அல்லது பன்னிரண்டாக அமைகின்றன.

பல்லவர்கள் முதன்முதலாகக் கட்டிய இந்த திருவதிகை வீரட்டானேசுவரர் ஆலயத்தில் கருவறையைச் சுற்றி ஏழு கோட்டங்கள் அமைந்திருக்கின்றன. இவற்றில் ஆறுமுகர், தட்சிணாமூர்த்தி, திரிபுராந்தகர் முதலியோரைக் கோட்ட தெய்வங்களை அமைத்துள்ளனர். இவை தவிர சுவர்களில் துர்க்கை, விநாயகர் முதலியோரும் உள்ளனர்.

பல்லவ மன்னன் இராஜசிம்மன் கட்டியுள்ள உலகப் புகழ்பெற்ற காஞ்சிபுரம் கயிலாயநாதர் ஆலயத்திலும் கருவறையைச் சுற்றி ஸ்ரீ விமானத்துடன் இணைந்தவாறு அமைந்துள்ள கோட்டங்களைக் காணலாம். இவற்றில் இரண்டில் சுகாசனரும், இரண்டில் நடன சிவனும் எஞ்சிய மூன்றில் பிட்சாடனர் திரிபுராந்தகர், கங்காதரர் வடிவங்களும் உள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விநாயகர்

ஶ்ரீ லமுழுமுதற்கடவுளாக அன்பர்களால் கொண்டாடப்படும் விநாயகப் பெருமான் சிவன் கோயில்களில் முதன்மைப் பரிவார தெய்வமாகப் பல இடங்களில் எழுந்தருளி யுள்ளார். எழுந்தருளியுள்ள இடங்களுக் கேற்ப அவருக்குச் சிறப்புப் பெயர்கள் வழங்குகின்றன. அவற்றை இங்கே சிந்திக் கலாம்.

கோபுரக் கணபதி

இராஜகோபுரத்தின் தென்புறம் விநாய கரையும் வடபுறம் முருகப் பெருமானையும் அமைக்கின்றனர். இவரை துவார கணபதி என்பர். கோபுரக் கணபதி எனவும் கூறுவர். ஒவ்வொரு கோபுர வாயிலிலும் கணபதியை அமைக்கும் வழக்கம் உள்ளது. இங்கு இவருக்குத் தனிச்சந்நிதி அமைக்கப்படுகிறது. அவ்வாறு இல்லாதபோது கோபுரக் கோஷ்டத்திலும் இவரை அமைப்பர். இவரை வணங்கிய பின்னரே, அன்பர்கள் ஆலய தரிசனத்தைத் தொடங்குகின்றனர்.

சில ஆலயங்களில் கோபுரக் குடைவரை எனப்படும் கோபுரத்தின் உள்புறம் அமைந்த மேடைகளிலும் விநாயகரைக் காண்கிறோம். இவரைக் குடைவரைப் பிள்ளையார் என்பர்.

ஆலங்குடி ஆபத்சகாயர் ஆலயத்தில் கோபுர குடைவரையில் கலங்காமற் காத்த விநாயகர் என்ற பெயரில் குடைவரைப் பிள்ளையார் வீற்றிருப்பதைக் காணலாம்.

எதிர்கொள் கணபதி

சில ஆலயங்களில் இறைவன் கிழக்கு நோக்கியிருக்க இராஜகோபுரம் (அல்லது) தலை வாயில் தெற்கு நோக்கி இருக்கும். இத்தகைய கோயில்களில் கோயிலுக்குள் நுழைந்ததும் வழிபடத் தக்க வகையில் உள் மதில் ஓரமாக வாயிலை நோக்கியவாறு ஒரு கணபதியைச் சிறிய சந்நிதியில் எழுந்தருளி வைத்துள்ளனர். இவரை எதிர்கொள்கணபதி என்பர். மேற்கு நோக்கியுள்ள திருமயிலைக் கபாலீசுவரர் ஆலயத்தில் கிழக்குவாயிலுக்கு

கன்னிமூலை கணபதி

நேராகவுள்ள நர்த்தன கணபதி, திருமழிசை ஒத்தாண்டேசுவரர் ஆலயத்திலுள்ள தேவராஜ கணபதி, திருமுல்லைவாயில் மாசிலாமணீ சுவரர் ஆலயத்திலுள்ள முல்லை வனகணபதி முதலான கணபதியர் எதிர்கொள் கணபதி யராக விளங்குகின்றனர்.

கம்பத்தடி கணபதி

கோயிலுக்குள் நுழைந்ததும் கொடி மரம் பலிபீடம், நந்தி மண்டபம் ஆகிய வற்றைக் காண்கிறோம். கொடிமரத்திற்கு முன்பாக பலிபீடம் அமைந்திருக்கும். அந்த பலிபீடத்திற்கு முன்பாகவோ கொடிமரத் திற்கு முன்பாகவோ, அவற்றின்பீடத்தின் அடியில் சிறிய மாடத்துள் விநாயகரை அமைக்கின்றனர். இவரைக் கொடிமரக் கணபதி என்றும், கம்பத்தடி கணபதி என்றும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கூறுவர். திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி ஆலயத்தில் கொடிமரக் கணபதியாகப்படித்துறை விநாயகர் அமைந்துள்ளார். இவர் ஆலயம் செப்போடு வேய்ந்து மூன்றுகலசங்களுடன் அழகிய சபையாக விளங்குகிறது.

தனிச் சந்நிதியாக அமைக்க முடியாத போது பலிபீடத்தின் கிழக்கு அடிப்பட்டைப் பகுதியில் சிறிய மாடம் அமைத்து அங்கு விநாயகரை அமைக்கின்றனர். இப்படி சிறிய மாடத்துள் இருந்தாலும் பெரும்புகழ் பெற்ற விநாயகரைப் பல இடங்களில் காணலாம்.

திருவலஞ்சுழியில் பலிபீடத்தின் பீடத்தில் அமைக்கப்பட்டுள்ள கணபதிக்கு முக மண்டபம் மகாமண்டபம் முதலியன அமைத்துத் தனி ஆலயமாக ஆக்கியுள்ளனர். இவருக்குக் கொடியேற்றி விழா நடத்துகின்றனர். பலிபீடத்திற்கு முன்பாக அமையும் கணபதிக்குச் சங்கல்ப கணபதி என்பதும் பெயர். முன்னாளில் இவருக்கு முன்பாக சங்கல்பம் செய்துகொண்டு, அன்றைய பஞ்சாங்கத்தைப் படித்த பின்னரே ஆலயத்தில் பூசைகளை மேற்கொள்வது வழக்கம்.

கன்னிமூலை கணபதி

பிராகாரங்களில் கன்னிமூலை எனப்படும் தென்மேற்கு முனையில் விநாயகர் சந்நிதி அமைப்பது வழக்கம். எத்தனை பிராகாரங்கள் இருந்தாலும் அத்தனையிலும் கன்னி மூலையில் கணபதி ஆலயம் அமைகிறது என்றாலும், முதல் பிராகாரத்தில் அமையும் கன்னி மூலைகணபதியே சிறப்புடன் கொண்டாடப்படுகிறார். இவரே பிரதான கணபதியாகப் போற்றப்படுகிறார். இவரைத் தல விநாயகர் என்று கொண்டாடுகின்றனர்.

துவார கணபதி

ஆலயத்தின் ஒவ்வொரு வாயிலிலும் வலப்புறம் விநாயகரும் இடப்புறம் முருகப் பெருமானும் அமைக்கப்படுகின்றனர். இவர்களை முறையே துவார கணபதி, துவார சுப்பிரமணியர் என்று அழைப்பர். தத்துவ வாதிகள் இவர்களை உலக உற்பத்திற்கு ஆதாரமான விந்து நாதங்களின் வடிவம் என்கின்றனர். விந்துவும் நாதமும் இணைந்தே இந்த உலகம் படைக்கப்படுவதாகத் தத்துவ நூல்கள் கூறுகின்றன.

மேலும், விநாயகப் பெருமான் கல்யாண கணபதி, ஸ்தம்பமுகூர்த்த (பந்தக்கால்)கணபதி, நந்தவனப் பிள்ளையார், வசந்த மண்டப கணபதி, தேரடி மண்டப கணபதி, குளக்கரை படித்துறை கணபதி என்று பல்வேறு பெயர்களில் ஆலயத்தில் பல்வேறு இடங்களில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றார்.

ஸ்ரீ விமானத்து கணபதி

ஸ்ரீ விமானத்தில் அமையும் பஞ்ச கோட்டங்களில் தென்கிழக்கு முனையில் அமைந்துள்ள கோட்டத்தில் நர்த்தன விநாயகரைக் காணலாம். இவரை கோஷ்ட கணபதி என்பர்.

சில விமானங்களில் மேற்பகுதியில் விநாயகரை அமைத்துள்ளனர். மயிலாடுதுறை மாயூரநாத சுவாமி ஆலயத்தில் ஸ்ரீவிமானத்தின் அருகில் சிறிய சந்நிதியில் ஸ்ரீவிமான கணபதி எழுந்தருளியுள்ளார். அகத்தியர் மணலைத் திரட்டி இவரது திருமேனியை அமைத்து வழிபட்டார் என்று தல புராணம் கூறுகிறது.

திருப்புறம்பயம் சாட்சிநாதர் ஆலயத்தில் பிரளயம் காத்த விநாயகர் எழுந்தருளியுள்ளார்.

விநாயகர் சிவபெருமானைப் பூசித்த தலங்களில் அவர் வடக்கு நோக்கியவாறு எழுந்தருளியுள்ளார். திருவிடைமருதூர், பிள்ளையார்பட்டி முதலிய தலங்களில் அவர் வடக்கு நோக்கியவாறு அமர்ந்து சிவபூசை செய்து கொண்டிருப்பவராகச் சந்நிதி கொண்டுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சூரியன்

சூரியன், உலக மக்களால் கண்கண்ட தெய்வமாகப் போற்றப்படுகிறான். சிவபூசையில் சூரிய பூஜை முதன்மை இடம் பெற்றுள்ளது. சிவாலயப் பூசையைக் காலையில் சூரியனிட மிருந்தே தொடங்குவது வழக்கம். சிவபூஜா துரந்தரர்கள் சிவபூஜைக்கு முன்பாகச் சிவசூரியனைப் பரிவாரங்களுடன் வழிபடுகின்றனர். சூரிய மண்டலத்தின் நடுவில் சிவபெருமான் உருத்திரனாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றார் என்றும் பூஜாபத்ததி நூல்கள் கூறுகின்றன.

சிவாலயங்களில் பெரும்பாலும் கிழக்கிற்கும் தென் கிழக்கிற்கும் நடுவில் மேற்கு நோக்கியவாறு சூரியனை நிலைப்படுத்தி வணங்குகின்றனர். பெரும்பாலும் இவர் மலர்ந்த தாமரைகளை இரண்டு கைகளிலும் ஏந்தியவாறு காட்சி யளிக்கின்றார்.

சில தலங்களில் மேற்கரங்களில் தாமரை மலர்களை ஏந்தி முன்கரங்களில் அபய, வரத முத்திரைகளைத் தாங்கியுள்ளார். சில தலங்களில் இருபுறமும் உஷா, பிரத்யுஷா என்ற தேவியர் உள்ளனர். உஷா அதி காலைக்கும் ப்ரத்யுஷா மாலை வேளைக்கும் தேவதைகளாவர். சூரியனுடைய பீடத்தில் ஏழு குதிரைகள் பூட்டிய தேரையும் அதை ஓட்டும் அருணனையும் அமைப்பதும் உண்டு.

சூரியனுக்குத் தனியான விழாக்கள் இல்லை. மாதப் பிறப்பு நாட்கள், அயனத் தொடக்கங்கள் ஆகியவற்றில் சிறப்பு அபிஷேக ஆராதனைகளைச் செய்கின்றனர். ரத சப்தமி நாளில் பெருஞ்சிறப்பு செய்கின்றனர். குடந்தை நாகநாதசுவாமி ஆலயத்தில் சூரியனுக்குத் தனியே அமைக்கப்பட்ட பெரிய சந்நிதி உள்ளது. இது புகழ் பெற்ற புராதன ஆலயமாகும்.

குடந்தைக்கு ' அருகே ஆடுதுறையை அடுத்த சூரியனார் கோயிலில் சூரியனுக்கு என அமைக்கப்பட்ட பெரிய ஆலயம் உள்ளது. இங்கு விநாயகர், தேஜஸ் சண்டர், சந்திரன்


உஷா,சூரியன், பிரத்யுஷா

முதலான எட்டுக் கிரக தேவதைகள் சுற்றிச் சூழ்ந்து பரிவாரமாக விளங்க, எதிரில் குதிரை வாகனம் உள்ளது, இத்தலத்தில் சூரியனுக் கும் பெருந்திருவிழா கொண்டாடப் படுகிறது. இறுதி நாளில் தீர்த்தவாரியும் உஷா, ப்ரத்யுஷா, சூரியன் திருமண விழாவும் நடைபெறுகின்றன..

கல்வெட்டுக்கள் இக்கோயிலைக் குலோத்துங்கச் சோழ மார்த்தாண்ட ஆலயம் என்று அழைக்கின்றன.

சந்திரன்

சில பூஜா பத்ததி நூல்கள் சந்திரனும், ரோகிணியும் பரிவாரமாகத் தனித்தனி ஆலயங்களில் அமைக்கப்பட வேண்டுமென்று கூறுகின்றன. நடைமுறையில் அவ்வழக்கம் காணப்படவில்லை. சிவாலயங்களில் பெரும் பாலும் உள் பிராகாரத்தின் கிழக்கிற்கும் வட கிழக்கிற்கும் நடுவில் சூரியனுக்கு இணையாகச் சந்திரனை அமைத்து வழிபடு கின்றனர். சந்திரன் இரண்டு கரங்கள் கொண்டவனாகவும், அவற்றில் குமுதமலர்கள் (அ)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நீலோற்பல மலர்களை ஏந்தியவனாகக் காட்சியளிக்கிறான். சில இடங்களில் மட்டும் அவனுடன் அவனது தேவியரான கிருத்திகையும் ரோகிணியும் இருபுறமும் அமைக்கப் பட்டுள்ளனர். இவனுக்கென தனிவிழாக்கள் ஏதும் இல்லை. முழுமதி நாளில் சிறப்பு வழிபாடுகளைச் செய்கின்றனர்.

திங்களூர், இந்தளூர் முதலான தலங்களில் சந்திரனின் சந்நிதி சிறப்புடன் விளங்குகிறது.

❀ சிலப்பதிகாரத்தில் பூம்புகாரில் சூரியனுக்கும் சந்திரனுக்கும் தனித்தனியே ஆலயங்கள் இருந்ததாகக் குறிக்கப்பட்டுள்ளது. இவை முறையே உச்சிக்கிழான் கோட்டம் என்றும் நிலாக்கோட்டம் என்றும் அழைக்கப்பட்டன. ❀

இடபதேவர்

சிவபெருமானைச் சுமந்து செல்லும் பேறு பெற்றவர் இடபதேவர். வெண்மையான திண்மையான கம்பீரமான வடிவுகொண்ட மாட்டின் வடிவானவர். இறைவன் சந்நிதியில் அவரை நோக்கியவாறு படுத்துக்கொண் டிருக்கிறார். (நந்தியும் இடபரும் வெவ்வேறு கணத்தைச் சேர்ந்தவர் என்றாலும், நடை முறையில் இடப தேவரையே நந்தி என்ற பெயரால் வழங்குகின்றனர்).

நந்திகணம் என்ற பெரிய கணம் உள்ளது. அதற்கு மகா நந்தியம்பெருமான் கணநாதராக விளங்குகின்றார். அவருக்குக் கீழே பல தரத்தினர் நந்தி நாதர்களாக உள்ளனர். இந்தக் கணத்தின் பெருமையை உணர்ந்திருப்பதால் பிரம்மா, விஷ்ணு, தர்மதேவதை, இந்திரன் ஆகியோர் இடப வடிவம் கொண்டு பெரு மானைத் தாங்கி மகிழ்கின்றனர். பிரம்ம நந்தியை அளவால் பெரியதாக அமைக் கின்றனர். பிரமதேவர் இடபம் கொண்டு பெருமானைத் தாங்கிய போது பிரம்ம நந்தி எனப்பட்டார். இதுபோன்று இந்திரன் இடபம் வடிவங் கொண்டபோது இந்திர நந்தி எனப்பட்டான்.

கோயிலுக்கு வெளியே இந்திர நந்தியும், பெரிய பிராகாரத்தில் பிரம்மநந்தியும், கொடிமரத்தின் கீழ் ஆத்ம நந்தியும், உள்பிரா காரத்தில் மால்விடை(எ) விஷ்ணு நந்தியும் மகாமண்டபத்தில் தருமநந்தியும் வீற்றிருக் கின்றனர். இவர்களைப் பஞ்சநந்திகள் என்று அழைப்பர். நந்திகளுக்குச் சிறிய அளவிலான மண்டபத்தையும் விமானங்களையும் அமைக் கின்றனர்.

கொடியேற்றத்தின் போது நந்தியம் பெருமானுக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்யப் படுகின்றன.

மாட்டுப் பொங்கல் நாளில் நந்தியம் பெருமானுக்குப் பெரிய அபிஷேகம் செய்து (முழுக்காப்பு) சந்தனக்காப்பு அணிவிக் கின்றனர். இனிப்புகள், தானியக்கதிர், பட்சணங்களைக் கொண்டு இவரை அலங்கரிக் கின்றனர்.

சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் ஆலயம், திருவண்ணாமலை அருணாசலேசு வரர் ஆலயம் முதலியவற்றில் நந்தியம்பெரு மானுக்கு மாட்டுப் பொங்கலன்று சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

சில தலங்களில் நந்தி கருவறையை நோக்காது வாயிலை நோக்கியவாறு படுத்திருப்பதைக் காணலாம். பெண்ணாகடம், திருமுல்லைவாயில், சோமங்கலம் முதலிய தலங்களில் இக்காட்சியைக் காணலாம். பெண்ணாகடத்தில் பொங்கி வந்த பிரளய வெள்ளத்தை தடுத்ததை நினைவூட்டவும், திருமுல்லைவாயில் இறைவன் ஆணைப்படி குறும்பர்களை அடக்க தொண்டைமான் சக்ரவர்த்திக்கு துணை சென்றதை நினைவூட்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

டவும் திரும்பியுள்ளார் என்று புராணங்கள் கூறுகின்றன.

❀ திருவாவடுதுறை நந்திக்கு லட்சக்கல் நந்தி என்பது பெயர். இது பல துண்டுக் கற்களை இணைத்துச் செய்யப்பட்ட மிகப்பெரிய நந்தியாகும்.

❀ சில தலங்களில் நந்தியம்பெருமான் சுவாமிக்கு நேராக இல்லாமல் சற்று விலகியுள்ளார். பட்டீசுவரத்தில் தாம் அளித்த முத்துப் பல்லக்கில் சம்பந்தர் பவனி வரும் அழகை இறைவன் பார்த்து மகிழவும் திருப்புன்கூரில் நந்தனார் இறைவனை கண்ணாரக் கண்டு மகிழவும் நந்தி விலகி இருப்பதாகக் கூறுகின்றனர்.

❀ கருவறைக்கு நேராக சிவலிங் கத்தை நோக்கிப் படுத்தவாறு கல் திருமேனியாகக் காட்சியளிக்கும் நந்திதேவர், தியாகராஜர் சந்நிதிகளில் உலோகத் திருமேனியில் நின்றவாறு காட்சியளிக் கின்றார். சில தலங்களில் கருவறையை நோக்கியவாறு


ஸ்ரீ நந்தி

உள்மண்டபத்தில் இருக்கும் நந்தியை உலோகத்தால் அமைத்து வழிபடுகின்றனர்.

அம்பிகை சந்நிதியில் இருக்கும் நந்தி க்குச் சோம நந்தி என்பது பெயர். ❀

பலிபீடம்



ஆலயங்களில் தெய்வங் பரிவார மூர்த்தங்களின் ஒரு கூறு நிலை பெற்றிருக்குமிடம் பலிபீடம் ஆகும். இந்த இடத்திற்கு பிரம்ம சந்தி என்பது பெயர். கருவறைக்கு நேராக அமைந்தி ருக்கும் கொடிமரம், நந்தி மண்டபத்திற்குப் பின் புறத்திலோ அல்லது அவற்றின் மையத்திலோ பலிபீடம் அமைந்திருக்கும். இந்தப் பலிபீடத்தில் தினமும் உலக உயிர்கள் நலம் பெற ஸ்ரீபலி அளிக்கப் படுகிறது.

பலிதேவர் அனைத்து தெய்வங் களையும் தன்னுள் கொண்ட மகா மூர்த்தியாவார். அவருக்கு உருவம் அமைத்து வழிபடும் வழக்கமில்லை. அவர் உருவத்தை பூஜா பத்ததி நூல்கள் சிறப்புடன் விவரிக் கின்றன. அதன்படி ஐந்து முகங்கள், பத்துக் கண்கள், பத்து தோள்களும் பத்து சூலங்களைக் கொண்ட கரங்களைக் கொண்டவராகச் செந்தீவண்ணத்தில் பிரகாசிப்பவர். சதங்கைகள், தண்டைகள் அணிந்த இரண்டு திருவடிகளை உடையவர். இவரைச் சுற்றி ஆமோதன், பிரமோதன், ப்ரமுகர், துர்முகர், அவிக் னர், விக்னஹர்த்தர் என்னும் ஆறு பூதர்கள் உள்ளனர்.

பலிபீடத்திவ் எந்த உருவமும் அமைக்கா விட்டாலும் உபாநணம் எனப்படும் பீடத்தில் எட்டு நாகங்களும், அதன்மீதுள்ள ஜகதீவட்டம் ஏழு வாயுக்களின் கூட்டமாகவும், குமுதமாவது பூதங்களின் வடிவாகவும், கண்டம் ராட்சத வடிவாயும் விரிந்த தாமரை இதழ்கள் கணேசு வரர்கள், கின்னரர்கள் கந்தர்வர்கள் வடிவாகவும் அதன்மீது விரிந்த பத்மம் சதருத்திரர்களால் சோபிக்கப் பட்டதாயும் சிந்திக்க வேண்டும்.

பலிபீடத்தில் பிரமன்,சூரியன், க்ஷேத்ரபாலன், அசுவினித் தேவர்கள், சப்த ரிஷிகள், பித்ரு தேவதைகள், அப்சரகணம், முனிகணம், அஷ்ட வசுக்கள், உருத்திரர்கள் பிசாசர், யக்ஷர், ராக்ஷர், கந்தர்வர், பூதர்கள் ஆகியோருக்கு வணக்கம் சொல்லி பலி சமர்ப்பிக்கப்படுகிறது. இவர்கள் உலகினைக் காத்து வழிநடத்தும் ஆதார சக்திகளுக்கு அதிதேவதைகளாவர். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தட்சிணாமூர்த்தி

சிவபெருமான் அன்பர்களுக்கு ஞானத்தை அளித்து அறிவை வளர்க்க குருநாதனாக எழுந்தருளி வந்து கல்லால மரத்தின்கீழ் வீற்றிருந்து உபதேசிக்கும் கோலம் தட்சிணாமூர்த்தி ஆகும். தட்சிணம் என்பதற்கு ஆற்றல், பேரறிவு தெற்கு என்பன பொருளாகும். இக்கோலத்தில் பெருமான் கல்லால மரத்தின்கீழ் இருக்கும் பாறை மீது அமர்ந்துள்ளார். தலையில் சடைமுடியை வட்டணையாக விரிந்துள்ளது. மேற்கரங்களில் பாம்பு சுற்றிய உடுக்கை,

ஸ்ரீ தட்சிணாமூர்த்தி

தீய கல் ஏந்தியுள்ளார். வலது முன்கை சின்முத்திரை காட்ட இடதுகை புத்தகத்தை ஏந்தியுள்ளது. வலது காலின்கீழ் முயலகன் உள்ளான். இடக்காலை வலது முழங்கால் மீது படுக்கையாக வைத்துள்ளார். கண்கள் பாதி மூடிய மோன நிலையில் உள்ளார். பின்னால் நிழல் பரப்பும் ஆல மரத்தின் பொந்தில் ஆந்தையும் கிளைகளில் பல்லி பறவைகளும் உள்ளன. கிளையில் சாமரம், திருநீற்றுப் பை (பொக்கணம்), நீர்க்கரகம் ஆகியன மாட்டப் பட்டுள்ளன. இவரைச் சுற்றிப் பாம்பு, மான், கரடி, முதலிய விலங்குகள் உள்ளன. இவரிடம் சனகாதியர் நால்வர் உபதேசம் பெற்றுக் கொள்கின்றனர்.

உபதேசம் செய்யும் தட்சிணாமூர்த்தி மிகவும் இளைஞனாகவும் அவரிடம் ஞானஉபதேசம் பெறுபவர்கள் நீண்ட சடை, தாடியுடன் வயது முதிர்ந்தவர்களாக இருப்பது நோக்கத் தக்கதாகும்.

இவரை இலக்கியங்கள் ஆலமர் செல்வன் ஆலநீழல்பட்டன், வடவால் மகிழும் பிரான் என்று பலவாறு போற்றுகின்றன. இவரைக் கருவறையின் தெற்குச் சுவரில் அமைந்துள்ள மாடத்தில் தெற்கு நோக்கியவாறு அமைக்கின்றனர். இவருடைய தனிச்சிறப்பைக் கருதி இவர் வீற்றிருக்கும் மாடத்தை வளர்த்தி முக மண்டபத்துடன் கூடிய தனிச் சந்நிதியாக அமைத்துள்ளனர்.

வீணாதர தட்சிணாமூர்த்தி (திருவிடை மருதூர்) , சாம்பவி தட்சிணாமூர்த்தி, யோக தட்சிணாமூர்த்தி எனப் பலவகையான கோலங்களில் அவர் காட்சியளிக்கின்றார்.

ஆலங்குடி, கோவிந்தவாடி அகரம், திருக்காளத்தி, கச்சி காயாரோகணம் முதலிய பல ஆலயங்களில் இவருடைய சந்நிதியில் விழாக்கள் சிறப்புடன் கொண்டாடப்படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சப்தமாதர்கள்

சப்தமாதர்களின் வரிசை சிவாலயப் பரிவாரங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. இத் தொகுதியில், பிராம்மி, மகேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, இந்திராணி, சாமுண்டி என்ற ஏழு பெண்தெய்வங்களும், இவர்களுக்குக் காவலராக விநாயகர், வீரபத்திரர் ஆகியோரும் வீற்றிருக்கின்றனர்.

இவர்களை ஆலயத்தின் தெற்குப் பிராகாரத்தில் வடக்கு நோக்கியவாறு நிலைப் படுத்தி வணங்குகின்றனர். ஏறத்தாழ தட்சிணா மூர்த்திக்கு நேர்எதிரில் இவர்கள் அமைக்கப்படுகின்றனர்.

புராணங்களிலும் இலக்கியங்களிலும் இவர்கள் சிறப்புடன் குறிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் தோற்றத்தைப் பல்வேறு புராணங்கள் பலவிதமாகக் கூறுகின்றன.

இவர்களை அஷ்டபைரவர்களின் தேவியர் என்று சில நூல்கள் கூறுகின்றன.. ஆனால் தமிழகத்தில் பைரவருடன் இவர்களை அமைக்கும் வழக்கம் இல்லை. வடநாட்டிலும் இல்லை என்று கூறுகின்றனர்.

நவராத்திரியில் சிறப்பு அபிஷேகமும் வழிபாடுகளும் நடைபெறுகின்றன. இவர்களுக்கென தனி விழாக்கள் இல்லை.

நீண்ட பலகைக் கல்லில் இவர்களை வரிசையாக புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கி வைத்து வழிபடும் வழக்கம் ஆதியில் இருந்தது. பின்னாளில் தனித்தனி திருவுருவங்களாகச் செய்து நிலைப்படுத்தி வழிபடுகின்றனர்.

இந்த வரிசையில் இடப்புறம் விநாயகப்பெருமான் வீற்றிருக்கின்றார். வலது கோடியில் யோக சிவன், வீரபத்திரன், சாத்தன் ஆகிய மூவரில் யாராவது ஒருவர் இடம் பெறுகின்றனர்.

சில தலங்களில் இவர்களை ஆலயத்தினுள் தெற்குப் பிராகாரத்தில் அமைப்பதற்குப் பதிலாக ஆலயத்தின் முன்புறமுள்ள முற்றத்தில் வடக்கு நோக்கிய தனிக் கோயிலில் அமைக்கும் வழக்கமும் உள்ளது. திருவக்கரையில் இப்படி அமைக்கப் பட்ட ஆலயமே வக்ர காளியம்மன் என்னும் பெயரில் புகழ்பெற்று விளங்குகிறது. திருவண்ணாமலையில் இரண்டாம் பிராகாரத்தின் வடகிழக்கு முனையில் பெரிய சப்தமாதர் ஆலயம் உள்ளது.

சிதம்பரத்திலுள்ள தில்லையம்மன் என்னும் பிடாரி ஆலயமும் சப்தமாதர் கோயிலேயாகும். இங்கே பிராமியை கரு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வறையிலும் மற்றையோரைப் பிராகாரங்களிலும் நிலைப்படுத்தியுள்ளனர். சாமுண்டியே இறைவனை ஆடல் கண்டருளிய தில்லைக் காளியாக வீற்றிருந்து அருள் பாலிக்கின்றாள். சப்தமாதர்கள் எழுவரைப் பற்றிய சிறு குறிப்புகளை இனிக்காணலாம்.

பிராம்மி : நான்கு முகங்கள் கொண்டவள். மேற்கரங்களில் அட்சய வடம்(உருத்திராட்ச மாலை), கெண்டி ஏந்தி, முன்கரங்களில் அபய வரத முத்திரை தாங்கியுள்ளாள். வெண்மை நிறம் கொண்டவள். அன்ன வாகனத்தில் பவனி வருபவள். அன்னம் தீட்டிய கொடியை உடையவள்.

மாகேசுவரி : அழகிய முகம் கொண்டவள். மேற்கரங்களில் மான், மழு ஏந்தி முன் கரங்களில் அபய வரத முத்திரைகளைத் தரித்தவள். சடையை எடுத்துக் கட்டி ஜடா மகுடமாக முடிந்திருப்பவள். அதில் பிறையும் கங்கையும் தரித்தவள்.

செந்நிற வண்ணத்தினள். இடபத்தில் பவனி வருபவள். இடபக்கொடி ஏந்தியவள். வெள்ளை நிறமான கொடியில் நீலவண்ண இடம் தீட்டப்பட்டிருக்கும்.

கௌமாரி : மேற்கரங்களில் வஜ்ரம், சக்தி தரித்து முன் கரங்களில் அபய வரத முத்திரை தரித்தவள். நீண்ட வேலாயுதத்தை ஏந்தியவள். மயில் வாகனத்தில் பவனி வருபவள். மயில் கொடியை உடையவள். சிவப்பு நிறத்தினள்.

வைஷ்ணவி : சங்கு, சக்கரம், அபய முத்திரை கதை தரித்தவள். சுடர்விடும் கிரீடம் தரித்தவள். பொன்வண்ண ஆடைகளைப் புனைந்தவள். கருடன் மீது பவனி வருபவள். கருடக் கொடியாள். நீல நிறத்தவள்.

வராகி : பன்றி முகம் கொண்டவள். மேற்கரங்களில் வலக்கை ஏர்(கலப்பை) ஏந்தி முன்கரங்களில் அபய வரத முத்திரைகளைத் தாங்கியவள். கருமை நிறமானவள். சிங்கத் தைக் கொடியாகவும் வாகனமாகவும் கொண்டவள்.

இந்திராணி : சுடர் விடும் நவரத்தினங்கள் இழைத்த கிரீடத்துடன் பொன் வண்ணத்துடன் பிரகாசிப்பவள். மேற்கரங்களில் வஜ்ஜிரங்கள் தரித்து முன் கரங்கள் அபய முத்திரை, அமுதகலசம் தாங்கியவள். ஐராவதத்தில் பவனி வருபவள். யானைக் கொடி கொண்டவள். (இந்த வரிசையில் இவள் மட்டும் இரண்டு காலையும் தொங்கவிட்டு அமர்ந்திருக்க, மற்றவர்கள் வலது காலைத் தொங்கவிட்டு இடதுகாலை மடித்து பீடத்தில் வைத்திருப்பர்.)

சாமுண்டி : இவள் விரிந்த ஜடா மண்டலம் கொண்டவள். சற்று ஒடுங்கிய முகத்துடன் திகழ்பவள். கடைவாயில் தெற்றிப்பல் துருத்திக் கொண்டிருக்கும். நீண்ட வாள், கபாலம், சூலம், கேடயம் அல்லது மணி தாங்கியிருப்பவர். அலகைக் (பேய்)கொடி கொண்டவள்.

ஆதியில் பிரம்மன், உருத்திரன், வராகர், திருமால் முருகன், இந்திரன், பைரவர் ஆகியோரின் மூலசக்திகளையே பெண் வடிவமாக வணங்கி வந்தனர் என்றும், அதுவே சப்தமாதர் வழிபாடாக வளர்ந்தது என்றும் கூறுகின்றனர். அதை உறுதிப் படுத்தும் வகையில் இவர்கள் மேலே சொன்ன தெய்வங்களின் ஆயுதங்கள் கொடி வண்ணம் ஆகியவற்றைக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சில தலங்களில் நரசிம்மி எனப்படும் சிங்க முகம் கொண்ட தேவியை உடன் வைத்து அஷ்டமாதர்களாகக் கொண்டாடும் வழக்கமும் உள்ளது.

சோழநாட்டுத் தலங்களில் ஒன்று கடம்பன்துறை. இங்கு சப்தமாதர்கள் வழிபட்டுத் தமது பிரம்மஹத்தி தோஷம் நீங்கப்பெற்றனர் என்று கூறப்படுகிறது. கருவறையில் சுவாமிக்குப் பின்புறம் சுவரில் சப்தமாதர் வடிவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. கருவறையில் சப்தமாதர் இருப்பது வேறெங்கு மில்லாத காட்சியாகும்.

திருஒற்றியூரில் வட்டப்பாறை அம்மன் என்ற பெயரில் சப்தமாதர் ஆலயம் உள்ளது. இது முதற்பிராகாரத்தின் வடக்கில் வடக்கு நோக்கியுள்ளது. எதிரே கொடிமரம், பலி பீடம் ஆகியன உள்ளன. ஆனி மாதத்தில் கொடியேற்றி விழா கொண்டாடுகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ பைரவர்

சிவாலயங்களில் காவல் அதிகாரியாகத் திகழ்பவர் வைரவர். இவரை பைரவர் எனவும் அழைப்பர். அஷ்ட பரிவாரங்களில் ஒன்றாக இருப்பவர். சிவபெருமானைப் போலவே பிறையைச் சூடியவர். கபால மாலை, மணி மாலை அணிந்தவர். சூலம், கபாலம், உடுக்கை, பாசம் ஏந்தி நாகங்களை ஆபரணமாகப் பூண்டிருப்பவர். அச்சப்படுத்தும் முகத்தைக் கொண்டவர். நாயை வாகனமாகக் கொண்டவர். ஜ்வாலா முடியுடன் விளங்குபவர். இவருடைய ஏவலர்கள் வேதாளங்களாவர். பூத பைசாசங்களைப் படையாகக் கொண்டவர்.

இவர் கோயிலைக் காக்கும் போது க்ஷேத்திர பாலர் என்றும் தீர்த்தங்களைக் காவல்புரியும் வேளையில் தீர்த்த பாலர் என்றும் அழைக்கப்படுகிறார். தீர்த்தங்களில் மூழ்குவதற்கு முன்னால் பைரவரிடம் தீர்த்தப் பலனை அளிக்கவேண்டுமென்றும், தீமைகளில் இருந்து காக்க வேண்டுமென்றும் பிரார்த்தனை செய்யப்படுகிறது.

ஆலயங்களில் பள்ளியறை பூசை முடிந்ததும் இவருக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகின்றன. வடைமாலையும், பாயசமும், சம்பாசாதமும் இவருக்குரிய சிறப்பு நிவேதனங்களாகும்.

கோயிலைப் பூட்டி இவரிடம் சாவியை வைக்கும் வழக்கம் இருந்து வந்தது. இப்போது மணியையும் தீர்த்தப் பாத்திரத்தையும் வைக்கின்றனர்.

மாமன்னர் பெரிய ஆலயங்களை அமைத்தபோது இரண்டாம் பிராகாரத்தில் இவருக்கென பெரிய சந்நிதிகளையும் விமானம் மண்டபங்களுடன்அமைத்தனர். திருவலஞ்சுழி, திருவிடைமருதூர், திருஒற்றியூர் முதலான தலங்களில் பைரவருக்குப் பெரிய சந்நிதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவரது சந்நிதியை ஈசான திக்கில் மேற்கு அல்லது தெற்கு நோக்கியவாறு அமைக்கின்றனர்.

கல்வெட்டுகளில் க்ஷேத்திரபாலப் பிள்ளையார் என்று அழைக்கப்படுகிறார். திருவலஞ்சுழியில் சோழ மன்னர்கள் இவருக்கு ஆலயம் அமைத்ததுடன் பொன்னாலான கள்ளிப் பூக்களையும் மாலைகளையும் அளித்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

திருப்புத்தூரில் சுவாமி ஆலயத்திற்கு இணையாக வடக்குப் பிராகாரத்தில் மேற்கு நோக்கியவாறு பைரவருக்குப் பெரிய தனிச்சந்நிதி அமைந்திருக்கக் காணலாம். கார்த்திகை மாத வளர்பிறை சஷ்டியில் இவருக்குச் சிறப்புவிழாநடைபெறுகின்றது. அதனை ஷெண்பக சஷ்டிஎன்பர். கார்த்திகை மாதத்து செவ்வாய்க்கிழமைகளில் இவருக்குச்சிறப்புவழிபாடுகளும் படையலும் நடைபெறுகின்றன ❀

வடுக நாதன்

சட்ட நாதர் என்னும் பெயரில் விளங்கும் வைரவரைச் சோழ நாட்டுத் தலங்கள் பெரும்பாலானவற்றில் காண்கிறோம், இவரை உயரமான இடத்தில் பிரபாமண்டலத்துள் அமைத்து வழிபடும் வழக்கம் உள்ளது. சில தலங்களில் ஸ்ரீவிமானத்தில் தெற்குக் கோட்டத்தில் இவரை அமைத்துள்ளனர், வடு என்பது எட்டு வயது பாலகனைக் குறிக்கிறது, அவ்வடிவில் காட்சியளிப்பதால் வைரவர் வடுகர், வடுகநாதர் என்று அழைக்கப்படுகின்றார். சீர்காழியில் இவருடைய சந்நிதி மிகவும் சிறப்புடன் விளங்குகிறது. ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆறுமுகப்பெருமான்

ஆறுமுகப் பெருமான் தமிழ்ப் பெருந்தெய்வமாவார். தமிழகமெங்கும் அவருக்குத் தனி ஆலயங்கள் பல உள்ளன. சிலப்பதிகாரத்தில் அறுமுகச் செவ்வேளுக்கு அணிதிகழ் கோயில் இருந்தது குறிக்கப்பட்டுள்ளது. குன்றக்குடி, பெரும்பேர் கண்டிகை, எண்கண், மந்திரமலை முதலிய பல தலங்களில் ஆறுமுகருக்குப் பெரிய ஆலயங்கள் உள்ளன.

அறுமுகப் பெருமான் சிவாலயங்களில் முதன்மை பெற்றுப் பரிவாரமாக விளங்குகிறார். இவரைப் பிராகாரத்தில் கருவறைக்கு நேர் பின்புறம் அல்லது வடமேற்கு முனையில் அமைக்கின்றனர். இவர் பெரிய திருவாசியுடன் மயில் மீது அமர்ந்தவாறு காட்சியளிக்கின்றார். இருபுறமும் வள்ளியம்மையும் தெய்வயானையும் நின்ற கோலத்தில் உள்ளனர்.

வள்ளி தெய்வயானையுடனாய ஆறுமுகப்பெருமான்

கோயிலின் வாயில்களில் வடபுறமும் இவரையும் அமைக்கின்றனர். அவ்வேளையில் இவருக்குத் துவார சண்முகர் என்பது பெயராகும். இவ்வாறு அறுமுகப் பெருமானை தனிச் சந்நிதியிலும் துவாரத்தையொட்டியும் அமைக்கப்படுவதுடன், வெளிப் பிரகாரத்தில் பெரியதாக தனிச் சந்நிதியைக் கட்டி அதில் அவருக்குரிய பரிவாரங்களுடன் எழுந்தருளு வித்து சுதந்திர மூர்த்தியாகவும் வழிபடு கின்றனர்.

சிதம்பரத்திலுள்ள பாண்டி நாயகர் கோயில் திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி சண்முகர் ஆலயம், மயிலாப்பூர் சிங்கார வேலவர் சன்னதி முதலான அநேக ஆலயங்கள் இந்த அமைப்பைக் கொண்டவை.

இப்படி அமையும் .சந்நிதிகளுக்கு முன்பாகக் கொடி மரம், பலிபீடம் ஆகியன அமைக்கப்படு கின்றன. மகா கந்த சஷ்டி, பங்குனி உத்திரம், வைகாசி விசாகம் முதலிய நாட்களை கடை நாளாகக் கொண்டு திருவிழாக்கள் கொண்டாடுகின்றனர்.

சென்னை கபாலீசுவரர் ஆலயத்தில் உள்ள அறுமுகன் ஆலயம் சிறப்பு மிக்கதாகும். இங்குக் கருவறைக்கு இணையான பெரிய சந்நிதியிலேயே முருகன் அறுமுகனாக எழுந்தருளியுள்ளார். இவருக்குச் சிங்கார வேலர் என்பது பெயர். இவர் மயில் மீது வீற்றிருக்க இருபெரும் தேவியரும் இருபுறமும் தனித்தனியே யானைகள் மீது எழுந்தருளியுள்ளனர். திண்டல், திருமெய்யம் முதலிய தலங்களில் இந்த மூவருமே தனித்தனி மயிலில் வீற்றிருப்பதைக் காணலாம்.

ஆறுமுகப்பெருமானைச் சபேசர் என்று அழைப்பதுடன்,நடராசரைப்போல் திருவாதிரை நாளில் உலா வரச் செய்து மகிழ்கின்றனர். திருச்செந்தூரில் ஆறுமுக நயினார் சிவப்புசாத்தி புறப்படும் வேளையில் பின்பக்கமுள்ள முகத்திற்குச் சாற்றுக் கைகால் களை வைத்து நடராசராக அலங்கரித்து பவனி வரச்செய்வது இங்கே சிந்திக்கத் தக்கதாகும்..

ஆறுமுகப்பெருமானைத் தனியாக அமைக்கும் வழக்கமில்லை. வள்ளி தெய்வயானையருடன் சேர்த்தே அமைத்து வழிபடுகின்றனர். காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் ஆலயத்து துவார ஷண்முகர், பெருநகர் பிரம்மபுரீசுவரர், ஷண்முகர், குடிமல்லூர் பூமிசுவரர் ஆலயத்து ஷண்முகர் வடிவங்கள் அளவால் மிகப் பெரியவை. மிகுந்த கலைநுட்பத்துடன் கூடிய வனப்பு வாய்ந்தவை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுப்பிரமணியர்

முருகப் பெருமானை முன்னாளில் சிவாலயங்களில் அறுமுகப் பெருமானாகவே அமைத்து வழிபட்டுவந்தனர். பின்னாளில் அவ்வழக்கம் குறைந்துவிட்டது. அதற்குப் பதில் ஒருமுகமும் நான்கு தோள்களும் கொண்ட சுப்பிரமணியர் என்னும் வடிவம் அமைக்கும் வழக்கம் வந்தது. பழைய ஆலயங்களில் இந்த இரண்டு முருகனின் திருவுருவங்களையும், அடுத்தடுத்த சந்நிதிகளில் அமைத்திருப்பதைக் காணலாம்.

இந்நாளில் அமைக்கப்படும் ஆலயங்களில் பெரும்பாலும் ஒரு முகம் கொண்ட சுப்பிரமணிய சுவாமியே அமைக்கப் படுகிறார். இக்கோலத்தில் முருகன் நின்றவாறு காட்சியளிக்கிறார். பின்புறம் மயில் நிற்கிறது. மேற்கரங்களில் வஜ்ஜிரமும் சக்தியும் விளங்க, முன்கரங்களில் அபய, வரத முத்திரைகளைத் தாங்கியுள்ளார். இருபுறமும் இரு பெரும் தேவியர்களான வள்ளியம்மையும் தெய்வயானையும் நின்றவாறு காட்சி அளிக்கின்றனர். இதே நிலையில் உற்சவ மூர்த்தியும் அமைக்கப்பட்டுள்ளார். பஞ்ச மூர்த்திகளில் ஒருவராக இம்முருகப் பெருமான் பவனி வருகிறார். பல தலங்களில் சண்முகநாதர் உலாத் திருமேனி இருந்த போதிலும், சஷ்டி, பங்குனி உத்திரம், வைகாசி விசாகம் முதலிய நாட்களில் மட்டுமே அவர் உலா வருவார். மற்ற அனைத்து விழாக்களிலும் வள்ளி

ஸ்ரீவள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர்



தெய்வயானை உடனாய சுப்பிரமணிய சுவாமியே உலா வந்து அருள் பாலிக்கிறார்.

சிவாலயங்கள் சிலவற்றில் சுப்பிரமணியராக விளங்கும் முருகனின் சந்நிதி தனிச் சிறப்புப் பெற்றுள்ளது. வைத்தீசுவரன் கோயிலிலுள்ள முத்துக் குமாரசுவாமி, திருச்செங்கோட்டு அர்த்தநாரீசுவரர் ஆலயத்துச் செங்கோட்டுவேலன், திருச்சிக்கல் நவனீதேசுவரர் ஆலயத்துச் சிங்கார வேலன் சந்நிதி முதலானவை உலகப்புகழ் பெற்றவைகளாகும். ❀

பாலமுருகன்

தேவியரின்றி இரண்டு கரங்களுடன் விளங்கும் முருகனை பாலமுருகன் என்று அழைக்கின்றனர். இவரது வலது கை மலர் ஏந்தியவாறு (அ) அபய முத்திரை காட்ட, இடது கையைத் தொடை மீது வைத்துக்கொண்டிருக்கிறார். பின்னணியில் மயில் நிற்கிறது. இவரைப் பெரும்பாலும் வாயிலையொட்டியே அமைக்கின்றனர். ❀

தண்டாயுதபாணி (பழனியாண்டவர்)

முருகனின் சிறப்புமிகு வடிவங்களில் "தண்டாயுதபாணி" ஒன்றாகும். பழனி மலையில் இவ்வடிவம் சிறப்புடன் இருப்பதால், இம்மூர்த்தியைப் பழனியாண்டவர் எனவும் அழைக்கின்றனர். பெரிய சிவாலயங்கள் பலவற்றில் தண்டாயுதபாணி தனிச்சந்நிதி கொண்டிருப்பதைக் காணலாம். கொங்குநாட்டுச் சிவாலயங்கள் அனைத்திலும் தண்டாயுதபாணி சிறப்புடன் எழுந்தருளியுள்ளார். இது இம்மண்டலத்திற்கே உரிய தனிச் சிறப்பாகும். தொண்டை மண்டலத்தில் பல ஆலயங்களில் தண்டாயுதபாணி சந்நிதி உள்ளது. இவருக்கென உலாத் திருமேனியும் செய்து வைத்துள்ளனர். பங்குனி உத்திரத்தில் இம்மூர்த்திக்குச் சிறப்பு விழா கொண்டாடப்படுகிறது. இவருக்குக் காவடி எடுக்கின்றனர். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மகாவிஷ்ணு-திருமால்

சிவாலயங்களில் கருவறையைச் சுற்றி அமையும் பஞ்சகோட்டங்களில் கருவறைக்கு நேர்பின்புறம் அமைந்துள்ள கோட்டத்தில் திருமால் எழுந்தருளியுள்ளார். சிலதலங்களில் இந்த இடத்தில் திருமாலுக்குப் பதிலாக அண்ணாமலையார் எனப்படும் லிங்கோற்பவரை அமைத்திருக்கக் காணலாம்.

ஆகம நூல்களில் கேசவரை(ஸ்ரீ கிருஷ்ணரை)ப் பரிவாரமாக அமைக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.. அதையொட்டித் திருவண்ணாமலையில் அண்ணாமலையார் ஆலயத்தில் கேசவரான வேணுகோபாலரை பாமா ருக்மணியுடன் அமைத்துள் ளனர். முடியனூர் என்ற தலத்தில் உள்ள அண்ணாமலையார் ஆலயத்தில் கோஷ்டத்திலேயே ஸ்ரீ கிருஷ்ணரை அமைத்திருக்கக் காண்கிறோம்.

காஞ்சிபுரத்திலுள்ள முதன்மை பெற்ற சிவாலயங்களில் திருமால் பரிவாரமாக அமைந்திருக் கிறார். ஏகாம்பரநாதர் ஆலயத்தில் நிலாத்துண்டப் பெருமாளாகவும், கச்சபேசர் ஆலயத்தில் வரதராசப் பெருமாளாகவும், குமர கோட்டத்தில் உள்ளம் உருகும் பெருமாளாகவும் இன்னும் பல பெயர்களில் அவர் விளங்குகிறார்.

திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலயப் பிராகாரத்தில் பள்ளி கொண்டவாறு சிவனைப் பூசித்துக் கொண்டிருக்கும் கோலத்தில் நெல்லை கோவிந்தராசராகவும், சிதம்பரத்தில் சயனக் கோலத்தில் தில்லைக் கோவிந்தராசராகவும் அவரைக் காணலாம்.

இந்நிலை வளர்ந்து சிவாலய வளாகத்திற்குள்ளேயே சகல பரிவாரங்களுடன் திருமால் ஆலயத்தினை அமைக்கும் வழக்கமும் வந்தது.

சிக்கல் சிங்கார வேலர் ஆலயத்து பிந்து மாதவர், திருவக்கரை வரதராஜர் கோயில், திருநாவலூர் பக்தஜனேசுவரர் ஆலயத்து வரதராஜப் பெருமாள் முதலியவை தனி ஆலயங்களாக இருப்பவையாகும்.

அண்ணாமலையார்

பல்லவர் காலத்தில் கருவறையின் புறச்சுறவரில் (நேர்பின்புறம்) அமையும் மாடத்தில் அண்ணாமலையாரை வைக்கும் வழக்கம் இருந்தது. இம்முறை சோழர்கள் காலத்திலும் தொடர்ந்தது.

இதில் நெடிய தூண் போன்ற சிவலிங்கத்தின் நடுவில் தீப்பிழம்பு போன்று அமைந்துள்ள பிளவில், மான், மழு அபய முத்திரை ஊரு முத்திரை தரித்த சிவபெருமான் நிற்கின்றார். அவர் முடியைக் காண அன்னமாகப் பறந்து செல்லும் பிரமன், பன்றி வடிவில் திருவடியைத் தேடிச் செல்லும் திருமால் ஆகியோர் உள்ளனர். அத்துடன்அவர்கள் தேவ வடிவத்துடன் வணங்கும் கோலத்திலும் உள்ளனர். மகா சிவராத்திரியன்று மூன்றாம் காலத்தில் இவருக்குச் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மகாலட்சுமி

சிவாயலத்தின் அஷ்ட பரிவார தேவதைகளில் ஒருத்தியாக மகாலட்சுமி விளங்குகிறாள். பொது நிலையில் இவளை இருபுறமும் யானைகள் நீராட்ட த் தாமரையில் அமர்ந்து காட்சியளிக்கும் கஜலட்சுமியாகவே வழிபடுகின்றனர்.

ஆலயத்தின் வடமேற்கு முனையில் கிழக்கு நோக்கியவாறு இவளை அழைப்பர். (விரிவான செய்திகளைச் சிவமஞ்சரி பக்கம் 727ல் காண்க)

ஆதியில் அஷ்டப் பரிவாரத்தில் ஆறாவது பரிவார தேவதையாக ஆதிபராசக்தியான அம்பிகையை வடமேற்கு முனையான வாயுமூலையில் வைத்து வழிபடும் வழக்கம். இருந்தது. பின்னர் அம்பிகை ஆலயம் தனியாக எழுப்பப்பட்டு காமகோட்டமாக வளர்ந்து தனிச்சிறப்பு பெற்றது. அம்பிகை இடம் பெயர்ந்ததால் அந்த இடம் வெற்றிடமானது. அந்த இடம் பெண் தெய்வத்திற்கு உரியதாதலின் அவ்விடத்தில் மகாலட்சுமியை வைத்துப் பூசிக்கும் வழக்கம் வந்தது என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

.திருக்கொள்ளம்புதூர், திருவையாறு முதலிய தலங்களில் இவளுக்குச் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. திருவையாற்றில் வெள்ளிக்கிழமைதோறும் மாலையில் மகாலட்சுமி உள்வலம் வந்து அருள் பாலிக்கின்றாள்.



தஞ்சாவூர் பிரகதீசுவரர் ஆலயத்தில் அணுக்கன் வாயிலின் இருபுறமும் பெரிய புடைப்புச் சிற்பங்களாக மகாலட்சுமியும் ஞான சரஸ்வதியும் அமைக்கப் பட்டுள்ளனர்.

இதே காட்சியைக் கங்கை கொண்ட சோழபுரத்திலும்காணலாம். ❀

துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி

சிவாலயங்களில் துர்க்கையை கோஷ்டத் திலும் லட்சுமியை வடமேற்கு முனையிலும் சரஸ்வதியை லட்சுமிக்கு அருகிலும் வைத்து வழிபடுவது முறை என்றாலும், மூவரையும் ஒருசேர ஆலயத்தில் தனிச் சந்தியில் வைத்து வழிபடும் வழக்கமும் உள்ளது.



சென்னை திருமயிலை கபாலீசுவரர், மயிலை காரணீசுவரர், வேளச்சேரி தண்டீசுவரர், அச்சிறுபாக்கம் ஆட்சீசுவரர் ஆலயம் முதலான ஆலயங்களில் ஒரே மேடையில் முப்பெரும் தேவியர் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றனர்..

சென்னை நுங்கம்பாக்கம் அருள்மிகு அகத்தீசுவரர் ஆலயத்தில் துர்காலட்சுமி சரஸ்வதிக்கு தனிச்சந்நிதி அமைந்துள்ளது. நவராத்திரியில் இவர்களுக்குச் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரம்மா

படைப்புக் கடவுளான பிரம்மதேவனைக் கருவறையின் புறச்சுவரில் வடக்கு நோக்கிய கோட்டத்தில் வடக்கு நோக்கிய வாறு அமைக்கின்றனர். இவர் நான்கு முகங்கள் கொண்டவராக மேற்கரங்களில் அட்ச மாலை, கெண்டி விளங்க முன்வலது கரத்தில் அபய முத்திரையும் இடதுகரத்தில் சுவடிகளும் கொண்டு நின்றவாறு காட்சியளிக்கின்றார். பெரும்பாலும் அபய வரத முத்திரை கொண்டவராக அமைக்கின்றனர். சிலதலங்களில் ஆகமத்தில் கூறப்பட்டுள்ளபடி இடது கையை தொடையில் வைத்தவாறும் அபூர்வமாக சில தலங்களில் தாடியுடனும் காணப்படுகிறார். இவருக்கெனத் தனி வழிபாடுகள் இல்லை. சரஸ்வதி பூஜையன்று சில இடங்களில் இவருக்குப் பூசை செய்யப்படுகிறது.

சரஸ்வதி

அஷ்டபரிவார எண்ணிக் கை யில் இல்லாவிட் டாலும் சிவாலயத்தில் சரஸ்வதியையும் பரிவாரமாக எழுந்தருளுவித்து வழிபடும் வழக்கம் உள்ளது. மகா லட்சுமிக்கு அருகில் சரஸ்வதியை அமைக்கின்றனர்.

வெண்தாமரையில் வீற்றிருந்து வீணை மீட்டிக் கொண்டிருப்பவளாக இவளை அமைக்கின்றனர். சோழ மண்டலத்திலுள்ள ஆலயங்கள் அனைத்திலும் மகா லட்சுமி சந்நிதிக்கு அருகில் சரஸ்வதியையும் வைத்து வழிபடுகின்றனர்.

வேதாரண்யத்திலுள்ள சரஸ்வதி சந்நிதி உலகப்புகழ் பெற்றதாகும். இவள் வீணையின்றிக் காட்சியளிக்கின்றாள். சிற்ப நூல்கள் இவளை ஆதி சரஸ்வதி என்று போற்றுகின் றன.

திருவாவடுதுறை, திருநீலக்குடி, வேதாரண்யம், வேளச்சேரி, திருவையாறு, முதலிய தலங்களில் சரஸ்வதியைப் பரிவார தெய்வமாகக் காணலாம்.

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் உள்ள சரஸ்வதி சந்நிதி இலக்கியப் புகழ்பெற்றதாகும். இதனை மணிமேகலைக் காப்பியம் கலைநியமம் என்று குறிக்கின்றது.(கலை-கலைமகள்; நியமம்-கோயில்) இங்குச் சுதைச் சிற்பமாகவும், கல் திருமேனியாகவும் சரஸ்வதி எழுந்தருளி யுள்ளாள். மணிமேகலையில் இவள் ஆபுரத்திரனுக்கு அட்சய பாத்திரம் வழங்கினாள் என்று கூறப்பட்டுள்ளது. அவன் அதைக் கொண்டு உலக மக்களின் பசிப் பிணியை நீக்கினான்.

கங்கை கொண்ட சோழபுரத்தில் அணுக்கன் வாயிலுக்கு இருபுறமும் லட்சுமியும், சரஸ்வதியும் உள்ளனர். இந்த சரஸ்வதி சிற்பம் உலகப் புகழ் பெற்றதாகும். இவள் ஞான சரஸ்வதி அல்லது ஆதி சரஸ்வதி எனப்படுவாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சண்டேசுவரர்

சண்டேசம் என்றசொல் பெரும் பதத்தைக் குறிக்கிறது. சிவபெருமானின் அருளை நாம் எளிதில் அடையுமாறு செய்வது இப்பதத்திலுள்ளவர்களே. இப்பதத்தில் சண்டேசராக வீற்றிருந்து பலர் மேன்மை பெற்றுள்ளனர்.

ஆதியில் வழிபடப்பட்ட சண்டேசர் நான்கு முகங்களும் நான்கு கரங்களும் கொண்டு வீராசனத்தில் அமர்ந்து காட்சியளித்துக் கொண்டிருக்கிறார். இவரை ஆதிசண்டேசர் என அழைக்கின்றனர். இவர் கரங்களில் மழு, சூலம், ஜெபமாலை, கெண்டி ஆகியவற்றைத் தாங்கியுள்ளார். புலித் தோலாடை உடுத்தியவர். சடையை எடுத்துக் கட்டி அதில் இளம்பிறை சூடியவர். இந்நாளில் சில இடங்களில் மட்டுமே இத்தகைய சண்டேசரைக் காண முடிகிறது.

பின்னாளில் சோழ நாட்டில் தோன்றிய சிறுவனைப் பெருமான் ஆட்கொண்டு அவனுக்குச் சண்டேசபதம் அளித்தார். அதுமுதல் அவரையே நாம் சண்டேசராக வழிபட்டு வருகிறோம்.



நான்முக சண்டேசர்

சோழ நாட்டில் மண்ணியாற்றங் கரையில் சேய்ஞலூரில் சிவசருமனாகத் தோன்றியவர். இப்போதைய சண்டேசர். இவர், சிறுவனாக இருந்தபோது மணலால் லிங்கம் அமைத்து வழிபட்ட போது அதைத் தடுத்த தன் தந்தையின் காலைவெட்டி வீழ்த்தினார். அவருடைய பக்தியின் திறத்தைக் கண்டு வெளிப்பட்ட சிவபெருமான் அவனுக்குச் சண்டேச பதம் அளித்தார். அவரையே சண்டேசர் என்று இப்போது நாம் கொண்டாடுகிறோம். அவர் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராகவும், பஞ்சமூர்த்திகளில் ஒருவராகவும் விளங்குகிறார். இவரைப் பக்த சண்டேசர் என்பர்.



பக்த சண்டேசர்

இந்நாளில் மேற்சொன்ன நான்முக ஆதிசண்டேசரருக்குப் பதிலாக, அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவரான சண்டேசரை கோமுகிக்கு அருகில் எழுந்தருளச் செய்து வழிபடும் வழக்கம் வந்தது.

சிதம்பரத்தில் முதற் பிராகாரத்தின் வடகிழக்கில் பரமானந்த தீர்த்தத்தின் அருகில்அமைந்துள்ள சண்டேசர் சந்நிதியில் ஆதி சண்டேசரையும், பக்த சண்டேசரையும் ஒரு சேர வைத்து வணங்குகின் றனர்.

அதிகார நந்தி: சிவாலயத்தின் தலைமை அதிகாரியாக விளங்குபவர் மகாநந்திதேவர், இவரை அதிகார நந்தியென்பர். இவர் ஆலய கோபுரக் குடைவரையில் தனது தேவியான சுயம்பிரபா தேவியுடன் நின்றவாறு காட்சியளிக்கிறார், மேற்கரங்களில் மான், மழு ஏந்தி முன்னிரு கரங்களைக் குவித்து வணங்கும் கோலத்தில் உள்ளார், பொற்பிரம்பையும், பெருமானின் ஞான வாளையும் தாங்கியுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நவக்கிரகங்கள்

பூமியை சுற்றிலும் ஏராளமான நட்சத்திரங்களும் கோள்களும் உள்ளன. அவற்றில் இருபத்தேழு நட்சத்திரக் கூட்டங்களையும், ஒன்பது கோள்களை யும் சிறப்புடன் கொண்டாடுகின்றனர். இவற்றில் ஏற்படும் மாறுதல்களுக்கு ஏற்ப உலகில் நன்மை யும் தீமையும் உண்டாகும் என நம்புகின்றனர். திருஞான சம்பந்தப் பெருமான் நாளும் கோளும் அடியவர்களை நலிவிக்க என்றும் நவக்கோள்கள் அடியவர்க்கு நன்மையைச் செய்யும் என்றும் பாடியுள்ளார்.

திருமறைக்காட்டில் அவர், அருளிய கோளறு திருப்பதிகத்தில், ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன் சுக்கிரன் (வெள்ளி) சனி பாம்பிரண்டும் (ராகு கேது) ஆகியன ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே என்று அருளிச் செய்துள்ளார்.

நவக்கிரகங்களை ஆலயங் களில் எழுந்தருளுவித்து வழிபடுகின்றனர். சூரியன் நடுவில் இருக்க மற்ற எட்டுக் கிரகங்கள் அவரைச் சுற்றி நின்று அவரை நோக்கியவாறோ அல்லது வெளி வட்டத்தை நோக்கியவாறோ இருக்கும்படி அமைக்கப் பட்டுள்ளனர். இதனை ஆகமவழி பிரதிஷ்டை என்பர்.

வேதவழிபட்ட பிரதிஷ்டையில் சூரியன் நடுவில் கிழக்கு நோக்கியும்,தெற்கில் செவ்வாய் தெற்கு நோக்கியும், மேற்கில் சனி மேற்கு நோக்கியும், வடக்கில் குரு வடக்கு நோக்கியும், கிழக்கில் வெள்ளி கிழக்கு நோக்கியும் இருக்கும். கோணத் திசைகளில் சந்திரன், மேற்கு நோக்கியும், ராகு, கேது ஆகியோர் தெற்கு நோக்கியும், புதன் கிழக்கு நோக்கியும் அமைக்கப்பட் டுள்ளனர்.

(ஆகம வழி பிரதிஷ்டைகளில் சூரியன் நடுவில் மேற்கு நோக்கியும்,வைதீகப் பிரதிஷ்டைகளில் சூரியன் கிழக்கு நோக்கியும் இருப்பது குறிப்பிடத் தக்கது.)

தியாகராஜஸ்தலங்களில் மட்டும் கோள்கள் ஒரே வரிசையிலோ அல்லது ட வடிவிலோ நிற்கின்றனர்.

நவக்கிரகங்களைப் பிராகாரத்தின் ஈசான திசையில் அமைக்க வேண்டும் என்பது கொள்கையாக இருப்பினும், மற்றுமொரு முறையில் அக்னி திசையான தென்கிழக்கிலும் நிலைப்படுத்தி வணங்குகின்றனர்.

நவகோள்களைத் தனியாக நின்றவாறு அமைப்பதே பெருவழக்கம். சில தலங்களில் அவர்களை தேவியரோடும், வாகனங்களிலும் வீற்றிருப்பவர்களாகவும் அமைத்துள்ளனர்.

நவக்கிரகங்களிலுள்ள சூரியன், சந்திரன், சனி ஆகியோரைச் சிவாலயங்களில் தனித்தனியே பரிவாரமாக அமைக்க வேண்டுமென்றும் பூஜா பத்ததி நூல்கள் கூறுகின்றன. இதை யொட்டித் தனியாக விளங்கும் சூரியன், சந்திரன், சனிபகவான் சந்நிதிகளை அமைத்துள்ளனர்.

சனீசுவரர் சந்நிதி

ஆலயங்களில் உள்ள நவக்கிரகங்களில் ஒருவராகச் சனீசுவர பகவான் எழுந்தருளி அருள் பாலித்துக்கொண்டிருக்கின்றார். மேலும், அவரைத் தனிச் சந்நிதியிலும் எழுந்தருளி வைத்தும் வழிபடுகின்றனர்.சனிக்கிழமை தோறும் இவருக்குச் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. பிராகாரத்தில் வடகிழக்கு முனையில் மேற்கு நோக்கியவாறு இவரை அமைத்துள்ளனர்.

இவர் சூரியனுடைய குமாரர், மந்தன் என்றும் அழைக்கப்படுகிறார். மாபெரும் சாம்ராஜ்யங்களை நிலைபெறச் செய்பவர் இவரே ஆவார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துர்காதேவி (பாய்கலைப்பாவை)

தன்னுள் அனைத்து தேவதேவியரின் சக்திகளையும் கொண்டவள் துர்க்காதேவி. அக்னி மண்டலத்தில் ஜ்வலிப்பவள். அதனால் அக்னி துர்க்கை என்றும் அழைக்கப் படுகிறாள். காஞ்சி கயிலாயநாதர் ஆலயத்தில் துர்க்கையை அக்னி திக்கில் வடக்கு நோக்கியவாறு அமைத்துள்ளது இங்கே எண்ணத் தக்கதாகும்.

பொதுவாக ஆலயங்களில் கருவறையைச் சுற்றி அமையும் பஞ்ச கோட்டங்களில் வடக்கு நோக்கிய கோட்டங்களில் ஈசானியத்தை ஒட்டிய கோட்டத்தில் துர்க்கையை அமைத்து வழிபடுகின்றனர். மேற் கரங்களில் சங்கு, சக்கரம் தரித்து, முன்வலது கை அபய முத்திரை காட்ட, இடது முன்கரத்தைத் தொடை மீது வைத்தவளாக எருமைத் தலையின் மீது நிற்பவளாக அமைத்துள்ளனர். சிற்சில இடங்களில் மட்டும் எட்டுக் கரங்கள் கொண்டவளாக விளங்குகிறாள். இவள் கரத்தில் கிளி அமர்ந்துள்ளது போலவும் அமைத்துள்ளனர். இவள் விஷ்ணுவும் பராசக்தியும் இணைந்த வடிவமாகும்.

இராகு காலத்தில் துர்க்கையை வழிபடுகின்றனர்.

சில தலங்களில் துர்க்கைக்குத் தனிச்சந்நிதிகள் பெரிய அளவில் அமைக்கப்பட்டுள்ளன. பட்டீச்சரம், திருமறைக்காடு (வேதாரண்யம்) முதலிய தலங்களில் பெரிய அளவிலான துர்கா தேவியின் திருவுருவங்களைக் காண்கிறோம்.

பட்டீச்சரத்தில் வடக்குக் கோபுரத் திற்கு நேராகப் பெரிய பிராகாரத்தில் பெரிய அளவி லான துர்க்கை சந்நிதி உள்ளது. இது புகழ்பெற்ற பிரார்த்தனைத் தலமாக விளங்குகிறது. இவளுக்கு நவகோடி அர்ச்சனை செய்து வழிபட் டுள்ளனர். இவள் அளவாலும், அருட் சக்தியாலும் பெரியவளாக பெரும் புகழ் பெற்றுள்ளாள். இத்தலத்தில் துர்க்கைக்கென அழகிய உலாத்திருமேனி உள்ளது. (துர்க்கைக்குப் பொதுவாக உலாத் திருமேனி அமைக்கும் வழக்கம் இல்லை.)

வேதாரண்யத்தில் வடக்குப் பிராகாரத்தில் தெற்கு நோக்கியவாறு துர்க்கை ஆலயம் அமைந்துள்ளது. இங்கு மக்களுக்குக் காப்புக் கயிறு மந்திரித்து அளிக் கின்றனர். சாய்ந்த கொண்டையுடன் எட்டுக் கரங்களுடன் இவள் பேரழகியாகக் காட்சியளிக் கின்றாள்.

சென்னை நங்கநல்லூர் அர்த்த நாரீசுவரர் ஆலயத்தில் பின்னுள்ள முற்றத்தில் எண் கரங்களுடன் திகழும் துர்க்கையின் தனி ஆலயம் உள்ளது, இது மாமல்லபுரத்திலுள்ள திரௌபதி இரதத்தை அடியொற்றி அமைக்கப்பட்ட தேர் வடிவக் கோயி லாகும்.

பொதுவாக துர்க்கையை வடக்கு நோக்கியே அமைக்க வேண்டும் என்னும் நியதி உள்ளது. என்றாலும் திருமறைக் காட்டில் தெற்கு நோக்கி யும், திருவெண் காட்டிலும், மாமல்ல புரத்திலும் மேற்கு நோக்கியும் அமைத் திருக்கின்றனர். இவை யாவும் தனிச்சிறப்புடன் புகழ்பெற்ற சந்நிதிக ளாக உள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஜேஷ்டா தேவி

பல்லவர்களும் சோழர்களும் கட்டிய ஆலயங்கள் பெரும்பாலானவற்றில் ஜேஷ்டா தேவியை அமைத்துள்ளனர். தேவர்களும் அசுரர்களும் கூடிப் பாற்கடலைக் கடைந்தபோது முதலில் விஷம் வந்தது. அதையடுத்து மீண்டும் கடைந்தபோது ஜேஷ்டா தேவி தோன்றினாள். இவள் வறுமை, துன்பம், சோம்பல் ஆகியவற்றைக் கொண்டிருந்தாள். இவளை எவரும் விரும்பவில்லை. இவள் சிவபெருமானை நோக்கித் தவம் செய்து தூக்கத்தைத் தரும் தெய்வமானாள்.

தூக்கம் எல்லோருக்கும் அவசியமானது. தூக்கம் இல்லாவிட்டால் உடலுக்குத் தேவையான ஓய்வு கிடைக்காது. மனம் தெளிவடையாது. பல தொடர் நிகழ்வுகளால் குழம்பிவிடும். போரில் வெற்றி தரும் விழுப்புண்களைப் பெற்ற வீரர்கள் நோயின் கொடுமையால் தூக்கமின்றித் தவித்தனர். அப்போது ஜேஷ்டாவின் வழிபாடு சிறப்புப் பெற்றது.

திருச்சியினை அடுத்த திருவானைக்கா ஜம்புகேசவரர் ஆலயத்தில் ஜேஷ்டா தேவிக்குத் தனிச் சிற்றாலயம் உள்ளது. தென்னாற்காடு மாவட்டம் தராசு என்னும் ஊரில் ஜேஷ்டாதேவிக்குத் தனி ஆலயம் உள்ளது. திருமயிலைக் குளக்கரையில் ஜேஷ்டா தேவியின் பெரிய திருவுருவம் உள்ளது,

ஜேஷ்டை உயர்ந்த ஆசனத்தில் இரண்டு காலையும் தொங்கவிட்டவாறு அமர்ந்துள்ளாள். அவளுடைய வலது கரம் அபயம் காட்ட, இடக்கை பணப்பெட்டியைத் தொட்டுக் கொண்டுள்ளது. அந்தப் பணப்பெட்டியை ஒரு பூதம் தாங்கிக் கொண்டுள்ளது. அவளுடைய வலப்புறம் எருமை முகம் கொண்ட மகன் பெரிய தண்டத்தைத் தாங்கியவாறு அமர்ந்துள்ளான். அவனுடைய பெயர் மந்தன். இடப்புறம் அவளுடைய பெண் அமர்ந்துள்ளாள். அவளுடைய பெயர் மிதா (மந்தன், மிதா என்பன சோம்பலைக் குறிக்கும் பெயர்களாகும்.)

பெரும்பாலும் இம்மூவரையும் பலகைக் கல்லில் புடைப்புச் சிற்பமாக அமைத்துள்ளனர். இவளை வணங்கினால் ஆழ்ந்த உறக்கம் அதனால் அமைதியும் கிடைக்கும்.

சிலர் இவளைச் சனிபகவானின் தாய் என்று கூறுவர். அது அறியாமையால் கூறுவதாகும். ❀



புவனாபதி நாச்சியார்

அம்பிகையின் அருட் திருமேனிகளில் ஒன்று புவனாபதியாகும். இவள் நான்கு கரங்கள் கொண்டவள். மேற்கரங்களில் பாசம், அங்குசம், ஏந்தி முன்கரங்களில் அபய வரதமுத்திரைகளைத் தாங்கிச் சுகாசனத்தில் அமர்ந்திருப்பவள்.

இவளைத் திருமூலர் திருமந்திரத்தில் தனிச்சிறப்புடன் போற்றுகின்றார். அபூர்வமாகச் சில தலங்களில் மட்டுமே புவனாபதியைக் காண்கிறோம். இவளைச் சாக்தர்கள் புவனேஸ்வரி என்பர். சில ஆலயங்களில புவனாபதி நாச்சியாரையும் அவளுடன் சகல புவனேசுவரர் என்ற பெயரில் சிவபெருமானையும் எழுந்தருளி வைத்து வழிபடுகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துவார பாலகர்கள்

அரண்மனைகளில் அதன் நெடிய வாயிலுக்குப் பாதுகாப்பு தரும் உயர் அதிகாரிகள் பலர் இருப்பர். அதுபோன்று அண்டங்களின் நாயகனான சிவ பெருமானின் ஆலயத்திலும் வாயில்கள்தோறும் காவலர்கள் உள்ளனர். அவர்களைத் துவார பாலகர் கள் என்று அழைக்கின்றோம். இவர்களைப் பற்றிய செய்திகளை இங்கே காணலாம்.

பெரிய ஆலயங்களுக்கு நான்குபுறமும் வாயில்கள் இருக்கும். ஒவ்வொரு வாயிலிலும் இரண்டு இரண்டு துவாரபாலகர்கள் வீதம் அமைந் திருப்பர்.

கிழக்கு வாயிலின் இரண்டு புறமும் நிற்கும் துவார பாலர்களுக்குத் திண்டி, முண்டி என்பது பெயர்.

தெற்கு வாயிலைக் காத்து நிற்கும் துவார பாலர்கள் ஆட்கொண்டார், உய்யக் கொண் டார் என்றழைக்கப்படுகின்றனர். திருவையாற்றில் இவர் கள் சிறப்புடன் போற்றப்படுகின்றனர். ஆட் கொண்டாரை காலசம்மாரராக இங்கே வழிபடு கின்றனர்.

மேற்குவாயிலைக் காப்பவர்கள் ஜயன், விஜயன்.

வடக்கு வாயிலைக் காப்பவர்கள் ப்ருங்கி, மகாகாளன்

பெரிய ஆலயங்களில் வடக்கிற்கும் கிழக்கு வாயிலுக்கும் இடையில் ஒருவாயில் இருக்கும். அதை ஈசானத்துப் பெருவாயில் என்று புராணங்கள் கூறுகின்றன. அதைப் பூதகணங்கள் காத்து நிற்கின் றனர். பெருமான் இந்தவாயிலின் வழியாகவே வெளியே செல்வதும் உள்ளே வருவதுமாக இருக் கின்றார். இதைக் கருத்திற்கொண்டே திருவாரூர், திருவண்ணாமலை, சிதம்பரம் முதலான தலங்களில் இராஜகோபுரத்தின் வழியாக இல்லாமல் பக்க வாயில் வழியாக சுவாமி உள்ளே வருவதும் வெளி யே போவதுமாக இருக்கின்றார்.

இதைத் தாண்டிச் சென்றதும் உள்ளே உள்ள இரண்டாம் கட்ட ராஜகோபுரத்திற்கு ரிஷிகோபுரம் என்பது பெயர். இங்கு ரிஷிகள் காவல் புரிகின்றனர். அகத்தியரையும் புலத்தியரையும் இங்கே அமைக்கின்றனர். (அவர் களுக்குப் பதிலாக அவர்களுடைய ஏவலர்களான இடும்பனையும் கடம் பனையும் அமைப்பர். பிருங்கி, மகா காளரை அமைப்பதும் உண்டு. இதை யடுத்திருப்பது அணுக்கன் வாயி லாகும். இதனை, மகா ராட்சசர்களான தாரகனும், வித்யுன்மாலியும் காக்கின் றனர். (இவர்கள் திரிபுராதிகளாக இருந்து இறைவனால் அழிக்கப்பட்டு இந்தப் பதவிகளை அடைந்தவர்கள் என்று புராணங் களும் திருமுறைகளும் கூறுகின்றன.)

புராணங்கள் பலவகையான துவார பாலர்களைக் கூறுவதால் மன்னர்கள் தாங்கள் அமைத்த கோயில் களில் தங்க ளுக்குப் பிடித்தமான துவாரபாலர் களை அமைத்துள்ளனர்.

பல்லவர்கள் துவார பாலகர்களை இரண்டு கைகளுடன் பருத்த உடல் கொண்ட வர்களாகவும் அமைத்தனர். அவர்கள் தலையில் கொம்புகளும் அமைக்கப்பட்டன. அவர்கள் பருத்த தண்டத்தை ஏந்திக் காட்சியளிக்கின் றனர். இவர்கள் தலையின் உச்சியில் திரிசூலம்அமைந்து உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சோழர்கள் காலத்தில் இவர்களை நாற்கரங்கள் கொண்டவர்களாகவும், மேற்கரங் களில் பாசம், டமருகம், முன்கரங்களில் சூசி முத்திரை தண்டம் தரித்தவர்களாக அமைத்தனர்.

இனி துவாரபாலகர்கள் வடிவங்கள் சிலவற்றைப் பற்றிய சிறப்புச் செய்திகளை இங்கே காணலாம்.

பல்லவர்கள், முற்காலச்சோழர்கள் காலத்து துவாரபாலகர் வடிவங்களில் சிற்பிகள் சில விநோதங்களைச் செய்துள்ளனர். வடபுறமுள்ள துவார பாலகர் வெட்டப் பட்ட மரத் தண்டில் சாய்ந்து கொண்டிருக்கின்றான். மரத்திலுள்ள பொந்திலிருந்து வெளிவரும் பாம்பு, எலி (அல்லது) தவளையைப் பற்றி விழுங்குகிறது. மரத்தில் ஒரு பல்லியும் காட்டப்பட்டுள்ளது. பின்னாளில் இம்முறை கைவிட்டுவிட்டனர்.

திருவையாற்றில் ஐயாறப்பர் ஆலயத் தின் தெற்கு வாயிலில் ஆட்கொண்டார் உய்யக் கொண்டார் என்ற துவார பாலர்கள் உள்ளனர். இதில் ஆட்கொண்டார் சுவேத கேது என்ற மறையவச் சிறுவனைப் பிடிக்க வந்த யமதர்மனை இறைவன் அருளாணைப்படி உயிர் போக உதைத்தார் என்று புராணம் கூறுகிறது. இவருக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்கின்றனர். இவருடைய சந்நிதியில் குங்குலியத்தைப் புகைக்கின்றனர். இதனால் யமபயமும் வாதனையும் நீங்கும் என்று நம்புகின்றனர். இவருக்கு அழகிய உலாத் திருமேனி உள்ளது. ஆறாம் நாளில் அவருக்கு விழா நடத்தி வீதிஉலா காண்கி ன்றனர்.

துவார பாலகர்களுக்கு செவ்வரளி மாலை அணிவித்து வடைமாலை சூட்டி சுண்டல் நிவேதனம் செய்கின்றனர்.

பெரும்பாலும் துவார பாலகர்கள் நீண்ட மழு, பாம்பு (பாசம்), தண்டம் ஆகியவற்றை ஏந்துகின்றனர். தலையில் நீண்ட ஜடா மகுடம் தரித்துள்ளனர். காஞ்சிபுரம் வட்டத்தில் தென்புறமுள்ள துவார பாலகன் மேற்கரங்களில் மழு, பாசம் ஏந்தியவராகவும், வடபுறம் உள்ளவர் மேற்கரங்களில் (முருகப்பெருமானைப் போல்) வஜ்ஜிரம், சக்தி ஏந்தியவராகவும் அமைக்கப்பட்டுள்ளனர்.

துவாரபாலகர்களைக் கருங்கல்லால் அமைப்பதே வழக்கம். சில தலங்களில் பெரியதாகவும் கனமாகவும் அமைக்க வேண்டி சுதையால் அமைத்துள்ளனர். மதுரை சோமசுந்தரர், திருவானைக்கா ஜம்புகேசுவரர் ஆலயம் முதலிய ஆலயங்களில் உலோகத்தாலான துவாரபாலகர்கள் வழிபாட்டில் உள்ளனர்.

துவாரபாலகர்கள் வடிவாலும் வனப்பாலும் பெரியவர்கள் வலிமையானவர்கள் என்பதைக் காட்ட ஒருவன் காதில் யானைகளைக் குண்டலமாகவும், மற்றவன் சிங்கங்களைக் குண்டலங்களாகவும் அணிந்திருப்பதாகக் காட்டியுள்ளனர். அச்சிறுபாக்கத்தில் அமைந்துள்ள தாரகன் யானை முகம் கொண்ட தோடுகளையும், வித்யுன்மாலி சிங்கமுகம் பதித்த தோடுகளையும் அணிந்திருப்பதாக அமைத்துள் ளனர். இவர்களுடைய திருவடியில் சிங்கம் படுத்தவாறுள்ளது.

இராஜகோபுர நிலைகளின் இருபுறமும் துவாரபாலகர் வடிவங்களை அமைந்துள்ளனர். கோபுரத்தின் கீழ்நிலையில் உள்ள வாயிலுக்கு அதிக அளவு கரங்களைக் கொண்ட துவார பாலர்களும் மேலே செல்லச் செல்ல எண்ணிக்கை குறைந்து உச்சியில் உள்ளவர் இரண்டு கரம் கொண்டவராகவும் அமைக்கப்படுகின்றனர்.

திருஒற்றியூரிலுள்ள துவாரபாலகர்களின் திருமுடிகள் தனிக் கவனத்துடன் செய்யப்பட்டுள்ளன. இவர்களின் தென் புறம் உள்ளவரின் சடையில் சடைப் பூக்களாக விநாயகர், முருகர் ஆகியோரும் வடபுறமுள் ளவர் தலைச்சடையில் துர்க்கையும் சிறிய அழகிய வடிவில் செய்யப்பட்டுள்ளனர். முன் உச்சியில் ஒருவர் சிரோமணியில் நடராசரையும் மற்றவர் கஜசம்ஹாரத்தையும் சூடியுள்ளார். இந்த அமைப்பை வேறெங்கும் காண முடியவில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வீரபத்திரர் பத்ரகாளி

சிவபெருமானின் அகோரமுகத்திலிருந்து லட்சத்தில் ஒரு பங்காக வெளிப்பட்டவர். வீரபத்திரர். தட்சனின் யாகத்தை அழித்தவர். இவரை ஆலயத்தின் அக்னி மூலையில் வடக்கு நோக்கியவராக நிற்கும் கோலத்தில் அமைத்து வழிபடுகின்றனர். இவருடன் பத்ரகாளியையும் சேர்த்தே அமைக்கின்றனர். இருவரும் மேற்கரங்களில் வில் அம்பு தாங்கி முன்கரங்களில் வாள் கேடயம் வைத்துள்ளனர். சிலர் இவர்கள் இருவரும் அண்ணன் தங்கை முறையினர் என்பர்.

ஆடி செவ்வாய், கார்த்திகை சோமவாரங்களில் இவருக்கு வழிபாடு செய்யப்படுகிறது. மகா சிவராத்திரியில் பெரிய அபிஷேக அலங்காரங்கள் செய்யப்படுகின்றன. பெரும்பாலும் இவரையும் காளியையும் தூண் சிற்பங்களாகவே அமைத்து வழிபடுகின்றனர்.

வீர சைவர்கள் அதிகமாக வாழும் சிவத் தலங்களில் சிவாலயங்களில் அவருக்கென ஒரு சந்நிதி இருப்பதுடன், வெளியே தனி ஆலயமும் அமைந்துள்ளது. மயிலாப்பூர் திருவண்ணாமலை, காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம் முதலிய தலங்களில் இம்முறை உள்ளதைக் காணலாம்.

நந்தி–ப்ருங்கி– மகாகாளன்

சிவபெருமானுடைய அணுக்கத் தொண்டர்களில் தலை சிறந்தவர்கள் பிருங்கி, நந்தி, மகாகாளர் ஆகிய மூவர் ஆவர். நந்தியைக் கோயிலுக்கு எதிரிலும், பிருங்கி; மகாகாளர்கள் வாயிலின் இருமருங்கும் இருப்பதாகக் கூறுவர்.

ப்ருங்கி சிவபெருமானையன்றி வேறு யாரையும் வணங்காதவர். அவர் பார்வதியையும் வணங்குவதில்லை. அதைக் கண்டு வருந்திய பார்வதி தவம் செய்து சிவபெருமானின் உடலில் பாதிப்பாகத்தைப் பெற்றாள். சிவபெருமான் தேவியை உடலின் பாகத்தில் ஏற்று அர்த்தநாரியாக நின்றார். அப்போதும் பிருங்கி சிவனையன்றி பார்வதியை வணங்க விரும்பவில்லை. அதனால் ஒரு வண்டு வடிவம் கொண்டு பெருமானின் உடலைத் துளைத்துச் சிவபெருமானை மட்டுமே வலம் வந்து வணங்கினார். அதனால் கோபம் கொண்ட பார்வதி அவர் உடலில் உள்ள சக்தியை நீக்கினாள். அவர் தடுமாறி விழப்போனார். சிவபெருமான் அவருக்கு மூன்றாவது காலைத் தந்து அருள்புரிந்தார்.

பராசக்தி அவருடைய சிவபக்தியின் மேன்மை யைக் கண்டு வியந்து அவருக்கு இளமை யையும் அழகையும் அளித்தார். தென்னாட்டு ஓவியங்களில் ப்ருங்கியை மூன்று கால்களுடன் ஊன்றுகோல் தாங்கிய வயோதிக வடிவு கொண்டவராக அமைத்துள்ளனர். கேரளத்தில் இளமை ததும்புவராகவும் ஜெப மாலை தண்டம் தரித்தவராகவும் அமைக்கின்றனர். மாகாளனை பூஜா பத்ததி நூல்கள் மூன்று கண்களுடன், பெருத்த கறுப்பு உடலையுடைவர், செம்பட்டை தாடி தலைமுடிகளைக் கொண்டவர், முண்டம், கத்தி கேடயம், சூலம் இவற்றைத் தரித்தவர். சிவகேணச்வரர்களில் (3வது ஆவரண தேவதைகளில்) ஒருவர் என்கின்றனர். சிலர் நாக வடிவாகவும் இவரைப் போற்றுகின்றனர்.

சுந்தரர் களையா உடலோடு கயிலாயம் சென்ற கேரளத்திலுள்ள திருஅஞ்சைக் களத்தில் ப்ருங்கி ரிஷிக்கான தனிச் சந்நிதி உள்ளது. இதில் நெடிய அழகிய வடிவம் கொண்ட ப்ருங்கி ரிஷியைக் காண்கிறோம்.

அதிகார நந்தியுடன் மகாகாளரையும் ப்ருங்கியும் கொண்ட பலகைச் சிற்பம் ஒன்று சென்னை பார்க் டவுன் பிரசன்ன விநாயகர் ஆலயத்தில் உள்ளது. இதில் நடுவில் நந்தி நிற்கின்றார். வலப்புறம் பிருங்கியும் இடப்புறம் மகாகாளரும் உள்ளனர். இதில் மகாகாளர் பாம்பு வடிவில் காட்டப்பட்டுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சாத்தன்

சாத்திரங்களில் பெருந் தேர்ச்சி பெற்றவனும் அதி உன்னத வீரனும், சிவபெருமா னின் மகன் எனக் கொண்டாடப்படுபவருமான மகாசாத்தன் சிவாலயத் துள் பரிவாரமாக விளங்குகிறார்.

காஞ்சிபுரம் கச்சபேசர் ஆலயத்துள் பஞ்ச சந்தி என்னும் இடம் உள்ளது. இங்கே விநா யகர், துர்க்கை, வைரவர், சூரியன் சாத்தன் ஆகிய ஐவரும் தனித் தனிச் சிற்றாலயங்களில் வீற்றிருந்து அருள்பாலிக்கின் றனர்.

பெண்தெய்வங்களுக்கு உற்ற காவலனாகச் சாத்தன் விளங்குகிறார். பெண் தெய்வங் கள் தனியே பெருங் கோயில் கொண்டிருப்பின் சாத்தன் அங்கே முதன்மைப் பரிவார தெய்வமாக எழுந்தருளியிருப் பதைக் காணலாம். காஞ்சி புரத்தில் அன்னை பராசக்தி காமாட்சியாகத் தனிக் கோயில் கொண்டுள்ளார். அவளுடைய முதன்மைப் பரிவார மூர்த்தியாகச் சாத்தனைக் காண்கிறோம். இவர் காம கோட்டத்துப் பெருஞ்சாத்தன் என்று சங்க இலக்கியங்களில் சிறப்பித்துப் பேசப்படுகிறார். இவர் தன்னை வணங்கிய கரிகால் பெருவளத்துச் சோழ மன்னனுக்குச் செண்டாயுதம் அளித்தார் என்றும், அதைக் கொண்டு அவன் மேருவை வெற்றி கொண்டான் என்றும் கூறுகின்றனர்.

திருநாகேசுவரத்தில் தனிப்பெருஞ் சக்தியாகப் பெருங் கோயில் கொண்டிருக்கும் கிரிகுஜாம்பிகை ஆலயத்திலும் சாத்தன் பெரிய தனிச்சந்நிதியில் வீற்றிருக்கின்றார். இவருக்கு எதிரே குதிரை, யானை முதலியவற்றின் கல்லாலான திருவுரு வங்களில் நிலைப்படுத்தப்பட்டுள்ளன.

சப்தமாதர்கள் தொகுதியில் விநாயகரும் சாத்தனும் இடம் பெற்றுள்ளனர். இந்திராணி தேவிக்குக் காவலராக மகா சாத்தன் விளங்குகிறார். இந்திராணி சீர்காழியில் வேணுவன நாதரைப் பூசிக்கும் வேளையில் சாத்தன் அவளுக்குக் காவலனாக இருந்தான் என்றும், அவளைக் கடத்திச் செல்ல வந்த சூரபத்மனின் தங்கையான அஜமுகியின் கைகளை வெட்டித் துரத்தினான் என்றும், கந்தபுராணம் கூறுகிறது.

தில்லைச் சிற்றம்பலத்துள் இரண்டாம் பிராகாரத்தில் சாத்தன், பூரணா, புஷ்கலாவோடு பரிவார தெய்வமாக வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்.

சப்தரிஷிகள்

சப்தரிஷிகளைப் பரிவார மூர்த்தமாக வைக்க வேண்டுமென்று சில நூல்களில் கூறப்பட்டுள்ளது. இவர்கள் அத்திரி, பிருகு, குத்ஸர், வசிஷ்டர், கௌதமர், காஸ்யபர், அங்கீரசர் என்னும் எழுவராவர். ஒரே வரிசையில் அமர்ந்திருப்பவர்களாக இவர்களை அமைக்கின்றனர். இவர்கள் எடுத்துக்கட்டிய சடைமுடியுடன், நீண்ட தாடியைக் கொண்டவர்கள்; பத்மாசனத்தில் அமர்ந்திருப்பவர்கள் ; நீண்ட தண்டத்தையும் நீர்க் கரகத்தையும் கொண்டவர்கள்.

கொங்குநாட்டுச் சிவாலயங்கள் சிலவற்றில் புடைப்புச் சிற்பமாக சப்த ரிஷிகளின் திருவுருவங்களை அமைத்துள்ளனர். லால்குடி சப்தரிஷீசுவரர் ஆலயத்தில் சப்தரிஷிகள் எழுந்தருளியுள்ளனர்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மகா காளி

யோகப் பிடாரியார்- யோகமாகாளி

இறைவனோடு வாதாடி ஆடற்போட்டியிட்டுத் தோற்றவளான மகாகாளி சிவபெருமானுக்குரிய பரிவார தெய்வமாக விளங்குகிறாள். சிவபெருமான் தாரகா சுரனை அழிப்பதற்காக காளியைத் தோற்றுவித்தார் என்று திருஞான சம்பந்தர் தேவாரத்துள் குறித்துள்ளார். காளிதேவி பல தலங்களில் வழிபட்டுப் பேறுபெற் றுள்ளாள். அவ்விடங்களில் அவள் உக்கிரம் தணிந்து சுந்தர மகா காளியாக வீற்றிருக்கின்றாள். மேலும், இவளை யோகத்தில் வீற்றிருப்பவளாகவும் அமைக்கின்றனர். அந்நிலையில் இவளுக்கு யோகப் பிடாரியார் என்பது பெயராகும்.

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் ஆலயத்தில் இரண்டாம் பிராகாரத்தில் பிரளய பட்சிணி எனப்படும் மகாகாளி தனிச் சந்நிதியில் பரிவார தெய்வமாக வீற்றிருக்கின்றாள். இவளைத் தலபுராணம் தனிச் சிறப்புடன் போற்றுகிறது.

அம்பர் (அம்பல்) மகாகாளநாதர், நல்லூர் கல்யாணசுந்தரர் முதலான ஆலயங்களில் வெளிப் பிராகாரத்தில் காளி தேவிக்குப் பெரிய சந்நிதிகள் உள்ளன.

கீழ்வேளூர் (கீவளூர்) அட்சயலிங்கர் ஆலயத்தில் வடக்கு வாயிலை நோக்கியவாறு பெரிய பிராகாரத்தில் எழுந்தருளியிருக்கும் காளிதேவிக்கு அஞ்சுவட்டத் தம்மை என்பது பெயர். இவளுடைய சந்நிதி பிரார்த் தனைத் தலமாக விளங்குகிறது.

திருப்புனவாயில் பழம்பதி நாதர் ஆலயத்தில் அம்பிகை சந்நிதிக்கு நேராக அமைந்த கோபுர வாசல் இடைவரையில் காளிதேவி சூல வடிவில் காட்சியளிக்கின்றாள். மக்கள் மிகுந்த வரப்பிரசாதி என்று இவளைக் கொண்டாடுகின்றனர். ❀

ஜ்வரஹரர்

ஜ்வரஹரேசுவரர்

தென்தமிழ் நாட்டிற்கு மட்டுமே உரிய பரிவார தேவதை ஜ்வரஹர மூர்த்தியாவார். மூன்றுமுகம் மூன்று கால்கள் மூன்று கரங்கள் கொண்டவர். தேவர்களின் உடலை வருத்திய ஜ்வரத்தை நீக்கும் மூர்த்தியாவார். ஜ்வரத்தை ஹரம்(போக்குவதால்) செய்வதால் ஜ்வரஹரர் என்றழைக்கப்படுகின்றார்.

பாண்டிய நாட்டுச் சிவாலயங்கள் அனைத்திலும் பரிவார மூர்த்தியாக இவரைக் காணலாம். மதுரையை அரசாண்டு வந்த கூன்பாண்டியன் சமணத்தின்பால் பற்று கொண்டிருந்ததுடன், அச்சமயவாதிகள் கூறியபடியே நடந்து வந்தான். அவனுடைய மனைவியான பாண்டியமாதேவி மங்கயர்க்கரசியாரும் மந்திரி குலச்சிறையாரும் சைவ சமயத்தைப் பாண்டிய நாட்டில் நிலைத்து தழைக்கச்செய்ய விரும்பி திருஞானசம்பந்தப் பெருமானை அழைத்து வந்தனர். அவர் மதுரைக்கு வந்து ஒரு மடத்தில் தங்கியிருந்தார். அவரை அச்சுறுத்த எண்ணிய சமணர் அவர் மடத்திற்குத் தீ வைத்தனர். திருஞான சம்பந்தர் அந்தத் தீயை பாண்டியனைச் சென்று பற்றுமாறு செய்தார். அது அவன் உடலில் வெப்புநோயாகப் புகுந்து வாட்டி வதைத்தது. பின்னர், சம்பந்தர் திருநீறு கொடுத்து அவன் நோயைப்போக்க சைவ சமயத்தைத் தழுவச் செய்து சைவம் எங்கும் பெருகச் செய்தார். அதுமுதல் பாண்டிய நாட்டிலுள்ள அனைத்து ஆலயங்களிலும் விபூதியின் வடிவமாகவும், சுரங்களை நீக்குபவராகவும் விளங்கும் ஜுர தேவரை அமைத்து வழிபடுகின்றனர். இவருக்கு மிளகுக் காப்பு நடத்தப்படுகிறது. ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்தல அடியவர்கள்

ஒரு தலத்தில் வாழ்ந்து பேறு பெற்ற அடியவர்களின் திருவுருவத்தை அவ்வூர் ஆலயத்தில் எழுந்தருளச் செய்து வழிபடுகின்றனர். அந்த அடியவரைப் பெரும்பாலும் அம்பி கையை நோக்கி எழுந்தருளச் செய்வது வழக்கம். திருமயிலை கபாலீசுவரர் ஆலயத்தில் அத்தலத்தில் வாழ்ந்து பேறுபெற்ற வாயிலார் நாயினார் சன்னதி அம்பிகை கற்பகவல்லிக்கு நேராக அமைக்கப் பட்டுள்ளது. சில தலங்களில் சந்திரசேகரர் அல்லது சோமாஸ்கந்தர்களுக்கு நேர்எதிரில் அமைக்கின்றனர்.

திருவதிகை வீரட்டேசுவரர் ஆலயத்தில் திலகவதியாருக்கும் அப்பர் சுவாமிகளுக்கும் தனி ஆலயம் உள்ளது. அம்பிகைக்கு நேர் எதிரில் அப்பர் சுவாமிகள் அமர்ந்தவாறு தனிச் சந்நிதியில் உள்ளார். திருஒற்றியூரில் சந்திரசேகரருக்கு நேர் எதிரில் தலத்தில் அவதரித்துப் பேருபெற்ற அடியவரான கலிய நாயனார் நின்று கொண்டிருக்கின்றார்.

திருவாரூரில் அத்தலத்து அடியவரான சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தியாகேசப் பெருமானுக்கு நேர்எதிரில் என்றும் நின்று தொழும் நிலையில் அமைத்துள்ளனர்.

நால்வர் பெருமக்கள்



பெரிய சிவாலயங்களிலும் சைவ அன்பர்கள் நிறைந்து வாழும் இடங்களிலும் ஆலயத்தின் பிராகாரத்தில் நால்வர் பெருமக்கள் எழுந்தருளி வைக்கப்பட்டுள் ளனர். திருஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகிய நால்வரே நால்வர் என்றும், சமயக்குரவர்கள் என்றும் கொண்டாடப்படுகின்றனர். பெரும்பாலும் இவர்கள் வடக்கு நோக்கியவாறும் குறிப்பாக, நடராசர் சந்நிதியை நோக்கியவாறும் அமைக்கப்படு கின்றனர். மூலவராக மட்டுமன்றி உற்சவ மூர்த்திகளாகவும் இவர்கள் எழுந்தருளி வைக்கப்பட்டு வணங்கப்படுகின்றனர்.

அறுபத்து மூவர்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருஆரூர்ப் பெருமானின் கட்டளைப்படி பாடி அருளிய பதிகம் திருத்தொண்டதொகை ஆகும். அதில் தில்லைவாழ் அந்தணர் எனத் தொடங்கி அடியவர்களுக்கு அடிமை கூறி, அந்த அடிமைத் திறத்தைக் கேட்டு மகிழ்பவர்கள் திருவாரூர் தியாகேசப் பெருமானுக்கு அன்பர் ஆவார்கள் என்று கூறினார். அதை விரித்துத் திருத்தொண்டர் திருவந்தாதியாக நம்பியாண்டார் நம்பிகள் பாடினார். அதையே ஆதாரமாகக் கொண்டு பெரிய நூலாகச் சேக்கிழார் பெரியபுராணம் பாடினார். அதில் அறுபத்து மூன்று தனி அடியவர்களின் வரலாறும் ஒன்பது தொகையடியார்களின் பெருமையும் விரிவாகக் கூறப் பட்டுள்ளன.

இந்த எழுபத்திரண்டு அடியவர்களின் திருவுருவங்களையும் ஒரே வரிசையில் அமைத்து வழிபடுகின்றனர். இவ்வரிசையின் தொடக்கத் தில் நம்பியாண்டார் நம்பிகளுக்கு அருள்செய்த பொள்ளாப் பிள்ளையாரையும் அவரையடுத்துத் திருத்தொண்டத் தொகை பாடிய சுந்தரமூர்த்தி சுவாமிகளையும் அமைப்பது மரபாகும். இவ்வரிசையின் இறுதியில் சேக்கிழார் பெருமானை அமைப்பர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



அறுபத்து மூவர்வரிசை

அடியவர்கள் எல்லோரும் கயிலை நாயகரைக் கண்டு பேரருள் பெற்றவர்கள். ஆதலின் கயிலையை நோக்கியவாறு (வடக்கு நோக்கி) கூப்பிய கரங்களுடன் அமைக்கப்பட்டுள்ளனர். இட வசதி கருதி இவர்களுடைய உலாத் திருமேனிகளை வடக்குப் பிராகாரத்தில் தெற்கு நோக்கியவாறும் அமைப்பர். இவ்வரிசையில் எல்லோரும் நின்ற நிலையிலும் காரைக்கால் அம்மையார் மட்டும் அமர்ந்தவாறும் காட்சியளிக்கின்றனர்.

சில தலங்களில் மட்டும் இவ்வரிசையில் உள்ள விநாயகரைச் சித்திபுத்தி தேவியருடனும், சுந்தரமூர்த்தி சுவாமிகளைச் சங்கிலி பரவையாருடனும் அமைத்துள்ளனர். ❀

சந்தானக் குரவர்கள்



சைவ சமய சாத்திர நூல்களை அருளிய மெய்கண்டார், அருள்நந்தி சிவம், மறைஞான சம்பந்தர், கொற்றவன்குடி உமாபதி சிவா சாரியார் ஆகிய நால்வரும் சந்தானக் குரவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்களை தவமுதல் வராகக் கொண்டே சைவத்திரு மடங்கள் தோன்றி அருள் அமுதத்தை அடிய வர்களுக்கு வழங்கி வருகின்றன.

சைவ சித்தாந்திகள் நிறைந்த பகுதியிலுள்ள சிவாலயங்களில் இவர்களை எழுந்தருளி வைத்துள்ளனர். ஆசாரியர்களை வடக்குப் பிராகாரத்தில் தெற்கு நோக்கியே அமைக்க வேண்டும் என்பதே முறை என்றாலும், வழக்கில் நாயன்மார்களைப் போலவே இவர்க ளையும் வடக்கு நோக்கி அமைத்துள்ளனர். ❀

ஆசாரிய பெருமக்கள்

மக்களுக்குச் சமய உண்மைகளைப் போதித்து அவர்களுக்கு சமய நூல்கள் கூறும் தீக்ஷைகள் அளித்து மேன்மை பெற வைப்பவர்கள் ஆசாரியர்கள். இவர்கள் திருமடம் அமைதது்ப் பணி செய்து வந்துள்ளனர். இவர்களில் பெருமைக்குரியவர்களின் திருவுருவங்களை ஆலயங்களில் எழுந்தருளச் செய்து வழிபடும் வழக்கம் உள்ளது. தாராசுரம் ஐராவதேசுவரர் ஆலயத்தில் 108 ஆசாரியர்களின் உருவங்கள் உள்ளன. காஞ்சிபுரத்தில் ஆகமாசாரியாரான ஸ்ரீகண்டர் திருவுருவம் உள்ளது. ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிற்பநூல் காட்டும் சிவாலயப் பரிவாரங்கள்

சிற்ப நூல்கள் சிவாலயங்களில் பரிவார தேவர்களாக அமைக்கப்பட வேண்டிய பல்வேறு மூர்த்தங்களைப் பற்றிய செய்திகளை விரிவாகக் கூறுகின்றன.

நடைமுறையில் அஷ்டபரிவாரங்கள் என்னும் எட்டுப் பரிவார தேவர்களைக் கொண்ட சிவாலயங்களே அதிகமாக உள்ளன. காலம் வளரவளர பிற சந்நிதிகளும் உண்டாயின. இப்போது பல்வேறு தெய்வங்கள் எழுந்தருளுவித்து வழிபடப்படுகின்றன.

சிற்ப நூல்கள் சிவாலயங்களில் அஷ்ட பரிவாரம் எனப்படும் எண்பரிவாரம், சோடச பரிவாரம் எனப்படும் பதினாறு பரிவாரம் 32 பரிவாரம், இவற்றில் ஏதாவது ஒன்றை அமைக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. அவற்றை நடைமுறையில் காண முடியவில்லை என்றா லும், இப்பகுதியில் சிற்ப நூல்கள் கூறும் பரிவாரங்களில் சிலவற்றைச் சிந்திக்கலாம்.

எண் பரிவாரம் (அஷ்ட பரிவாரம்)

பூஜாபத்ததி நூல்கள்சிவபெருமானைச் சுற்றி அமையும் அஷ்ட பரிவார தேவர்களாக நந்தி, சூரியன், சப்தமாதர், விநாயகர், முருகர், அம்பிகை, சண்டிகேஸ்வரர், பைரவர் ஆகிய எண்மரையே பட்டியலிட்டுக் கூறுகின்றன. இதையே வேறு வகையில், நந்தி, துர்க்கை, சப்தமாதர்கள், கணபதி, கேசவன், சுப்பிரமணியர், விஷ்ணு, சூரியன் ஆகிய எண்மராகக் கூறுகின்றனர். இதில் கேசவன் என்பது ஸ்ரீ கிருஷ்ணனைக் குறிக்கும். திருவண்ணாமலையில் வேணுகோபாலனாக கிருஷ்ணனை (கேசவனை) பரிவாரமாக அமைத்துள்ளனர். மேலும், ஈசான மூலையில் சூரியனை அமைக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. இப்போது சூரியனை ஈசான்யத்திற்கும் கிழக்கிற்கும் நடுவில் அமைக்கின்றனர்.

வேறோர் முறையில் (நந்தி, துர்க்கை,. சப்தமாதர், கணபதி, சுப்பிரமணியர், ஜேஷ்டா, காத்யாயினி, சூரியன் ஆகிய எண்மர் குறிக்கப் பட்டுள்ளனர்.

பதினாறு பரிவாரம் (சோடச பரிவாரம்)

இவ்வகையில் பரிவார தேவர்களாக 1)இந்திரன், 2)அசுவினித் தேவர்கள், 3)அக்னி, 4)பித்ருக்கள், 5)யமன், 6)ரோகிணி சந்திரன் 7)நிருதி, 8)அப்சரஸ், 9)வருணன், 10)சப்த ரிஷிகள், 11) வாயு, 12)ஏகாதச ருத்திரர்கள், 13)சோமன்(குபேரன்), 14)பைரவர், 15)ஈசானன், 16)சூரியன் ஆகிய பதினாறு தேவர்கள் குறிக்கப்பட்டுள்ளனர். இது இந்திர சபையில் இருப்பவர்களைக் குறிக்கும் பரிவாரமாகும். இவ்வரிசையில் சந்திரனும் அவன் மனைவி ரோகிணியும் இடம் பெற்றுள்ளதைக் காண்க.

இருபத்திரு பரிவாரம்

இவ்வமைப்பில் 1)கிராதார்ச்சுனர், 2)விருஷபாரூடர், 3)சக்ரதானமூர்த்தி, 4)காமாரி, 5)வைவாகிகர் (கல்யாணசுந்தரர்) 6)பிட்சாடனர், 7)கங்காளர், 8)கஜசம்ஹாரர், 9)விஷ்ணுபிரசாதர், 10)சந்திர சேகரர், 11)உமா சகித சதாசிவர், 12)ஹரிஹரர், 13)அர்த்த நாரீசர், 14)சோமாஸ்கந்தர், 15)விஷாபகரணர், 16)திரிபுர சம்ஹாரர் 17)காலசம்ஹாரர் 18)நடராஜர், 19) கங்காதரர், 20) கல்யாண சுந்தரர், 21)சரபர், 22)ஏகபாதர் என்ற 22 பரிவார மூர்த்தங்கள் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றை நான்காவது திருச்சுற்றில் வைக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. இவற்றைப் பரிவாரங்கள் என்று கூற முடியவில்லை. இவை யாவும் சிவபெருமானின் திவ்விய மூர்த்தங்களேயாகும். மகேசுவர மூர்த்தங்களான25ல் 22 இடம் பெற்றுள்ளதைக் காண்கிறோம்.

முப்பத்திருவர் பரிவாரம்

முப்பத்து இரண்டு என்பது அறத்தின் குறியீடாகும். எனவே தர்மேசுவரராக விளங்கும் சிவபெருமானைச் சுற்றி முப்பத்திரண்டு பேரைப் பரிவாரமாக வைத்து வழிபடும் வழக்கம் வந்தது என்பர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த முப்பத்திருவர் 1)அனந்தன், 2)அர்க்கன், 3)பவன், 4)மருத்து, 5)அப்சரஸ், 6)கௌரி, 7)சர்வன், 8)பிரம்மா, 9)சிவத் தோமன், 10)ப்ருகு, 11)ஈசன், 12)அகஸ்தியர், 13)கௌசிகர், 14)ஏகநேத்திரன்,15)விநாயகர், 16)சரஸ்வதி, 17)லட்சுமி,18)ஏகாட்சன், 19)ஏகருத்திரன், 20)பசுபதி,21)பர்க்கன், 22)திரிமூர்த்தி, 23)தனதன் (குபேரன்) 24) இந்திரன், 25)காலாக்னி உருத்திரன், 26)ஸ்ரீகண்டன், 27)நாகன், 28) பீமன் (உருத்தி ரர்),29) பூமிதேவி, 30)சிகண்டி, 31)உக்ரன், 32)சனி ஆகியோராவர்.இத்தகைய அமைப் புள்ள கோயில் எங்குமில்லை. பரிவாரங் களோடு சிவபெருமானை வழிபடுவது சிறந்த இல்லறத்தை நல்குவதும் உயர்ந்த அரச வாழ்வையும் இல்லத்தையும் நல்கும் என்று நம்புகின்றனர்.

இனி, மாமன்னர்களால் அமைக்கப் பட்ட இரண்டு பெரிய ஆலயங்களில் அமைந் துள்ள பரிவாரங்களைச் சிந்திக்கலாம்.

முதலாவது நாம் காண இருப்பது காஞ்சிபுரம் கயிலாயநாதர் ஆலயமாகும். இதன் பிராகாரத்தில் கருவறையைச் சுற்றி நான்கு புறங்களிலும் மதிற்சுவரோடு இணைத்துக் கட்டப்பட்ட 72 சிற்றாலயங்கள் உள்ளன. அத்துடன் கருவறையின் புறச் சுவரையும் வளர்த்திக்கட்டிச் சிற்றாலயங் கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை இரண் டிலுமே சுதையால் செய்து வண்ணம் தீட்டிய சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. (இப்போது வண்ணங்கள் அழிந்து போய் உள்ளன)

மதிற்சுவரை ஒட்டி அமைந்த சிற்றா லயங்களில் பிதுர்தேவர்களைப் போற்றும் வகையில் பல்லவ ராசனின் முன்னோர் களான பேரரசர்கள், அக்னி திக்கில், துர்க்கை, அரசகுலத்தின் பெண் தெய்வங்கள், யக்ஷிகள், இந்திரகர்வபங்கர், கிராதாச்சுனர், இரண்யன் நரசிம்மர் யுத்தம், பிரம்மன், சப்த மாதர்கள், சோமாஸ்கந்தர், லகுளீசர், ஏகாதச ருத்திரர், பைரவர், கல்யாணசுந்தரர், அகஸ்தியர், மகா லட்சுமி ஆகியோர் இடம் பெற்றுள் ளனர்.

கோஷ்ட பரிவாரமாக அண்ணா மலையார் (லிங்கோத்பவர்) தட்சிணாமூர்த்தி, பிட்சாடனர், கங்காளர், கங்காதரர், திரிபுராந் தகர், ஜலந்தரவதர், துர்க்கை, ஜேஷ்டா, லட்சுமி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இந்தப் பரிவாரங்களைப் பற்றிய செய்திகள் மிகவும் விரிவானதாகும்.

இரண்டாவதாக, ஆகமம், புராணம் காட்டும் வகையில் அமைந்த சிற்பங்களைப் பரிவாரங்களாகக் கொண்ட தாராசுரம் ஐராவதேசுவரர் ஆலயத் தைக் காணலாம்.

இந்த ஆலயத்தில் கருவறை, உள்மண் டபம், மகா மண்டபம், முக மண்டபம் ஆகிய எல்லா வற்றிலும் புறச்சுவர்களில் மாடங்கள் அமைத்து,பரிவார தெய்வங்களை அமைத்துள் ளனர். இவற்றில் பெரும்பாலான சிலைகள் இப்போது காணப்படவில்லை என்றாலும் மாடங்களின் மேல் பொறிக்கப் பட்டுள்ள பெயர்களின் மூலம் அங்கிருந்த திருவுருவங் களின் பெயர்களை அறிந்து கொள்ள முடிகிறது.

சில தலங்களில் கருவறைப் பரிவாரங் களாக குறிக்கப்படும் இந்த அனைவரையும் கோபு ரத்தில் அமைந்திருக்கும் கோட்டங்களில் எழுந்தருளி வைக்கும் வழக்கம் வந்ததென்பர். இவ்வகையில் 36 தெய்வ வடிவங்கள் இடம் பெறுகின்றன. தாராசுரம் ஐராவதேசுவரர் ஆலயத்தில் இம்முறை இருந்தது.

இதன்படி,கோபுரக் கோட்டங் களில், வடபுறம் 1) ஆதிசண்டிகேஸ்வரர், 2) கங்கா தேவி, 3) தும்புரு (நாரதர்) 4) வைச்ரவனன் (குபேரன்) 5) சந்திரன், 6)மகா சாஸ்தா,7) நாக ராஜா, 8) வாயு, மேற்கில், 9)ஹ்ரில்லேகா தேவி, 10)ருத்ரா(ணீ) 11) வைஷ்ணவி 12) பிராம்மணி 13) வருணன் 14) ஸ்ரீநந்தி (நந்திகேச்வர தேவர் 15) பெரிய தேவர் 16) சாந்த்யாதீத சக்தி 17) சாந்தி சக்தி 18) வித்யா சக்தி, 19) பிரதிஷ்டா சக்தி, 20) நிவர்த்தி சக்தி, தென்புறம் 21) தக்ஷ பிரசாபதி, 22) யமுனா தேவி 23) ரதி 24) மன்மதன் 25) அக்னி தேவர் 26) அகஸ்திய தேவர் 27) ஸ்ரீதேவி 28) துர்கா தேவி 29) தேவேந்திரன் 30) பத்மநிதி 31) சூரிய தேவர் 32)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுப்பிரமணிய தேவர் 33) க்ஷேத்திர பாலர் 34) சரஸ்வதி 35) விஸ்வகர்மா 36)ஈசான தேவர் ஆகிய வடிவங்கள் பரிவாரங்களாக அமைக்கப் பட்டுள்ளன.(இவற்றில் பெரும்பாலான சிலைகள் இப்போது இல்லை.)

இவற்றில் சதுர்முக சூரியன், கங்கை, முதலான சிற்பங்கள் கண்ணையும் கருத்தை யும் கவர் வனவாகும். இதில் ஆகமப்படியான, வேள்விச் சாலைகளில் பரிவாரமாக அமைக் கப்படும் சிவ சூரியன், பஞ்சகலைகள் ஆகிய வை இடம் பெற்றிருப்பதும் சிந்திக்கத்தக்க தாகும்.

இதை அடியொற்றித் திருவண்ணாமலை, சிதம்பரம் முதலிய தலங்களில் உள்ள கோபுரக் கோட்டங்களில் பரிவாரமாக கூறப்படும் மூர்த்தங்களை அமைத்துள்ளனர்.

காலப்போக்கில் மக்கள் தமது விருப்பத் திற்கேற்ப பரிவாரங்களை அமைத்துள்ளனர். சரபர், ஐயப்பன், முதலான தெய்வங்கள் இந்நாளில் பரிவாரங்களாக உள்ளன. ❀

பரிவார ஆலயங்களில் மகேஸ்வர மூர்த்தங்கள்

சிவபெருமானின் திவ்ய மூர்த்தங்கள் சிலவற்றையும் ஆலயங் களில் பரிவார தெய்வமாக அமைக் கின்றனர். இதில் முதன்மையானது சோமாஸ்கந்தர் வடிவமாகும். இவரைத் தெற்குப் பிராகாரத்தில் கருவறைக்கு இணையாகப் பெரிய சந்நிதியமைத்து அதில் எழுந்தருளச் செய்வது வழக்கம். இம்முறையைச் திருவாரூர், காஞ்சீபுரம், முதலிய தலங்களில் காணலாம்.

அவ்வாறு அமைக்க முடியாத போது முதற்பிரா காரத்தின் தென் மேற்கு முனையில் கன்னிமூலை கணபதிக்கு வலப்புறம் திருமாளிகைப் பத்தியில் தனியறை அமைத்து எழுந்தருளுவிக்கின்றனர். இம்முறையை திருவண்ணாமலை, பாதிரிப் புலியூர்(கடலூர்) முதலான தலங்களில் காணலாம். பெருந் திருவிழாவில் முதன்மை பெற்றுப் பவனி வருவது இந்த மூர்த்தியே ஆகும்.

அடுத்தபடியாக நடராசர் போற்றப்படுகிறார். இவரை உலோகத் திருமேனியாகவே அமைத்து வழிபடுகின்றனர்.

சுவாமி சந்நிதிக்கும் அம்மன் சந்நதிக்கும் நடுவில் சபை ஒன்று அமைத்து இவரை அதில் எழுந்தருளி வைத்துள்ளனர். திருவாதிரை அன்றும் பிரம்மோற்சவத்தில் பத்தாம் நாளில் தீர்த்தவாரி நாளிலும் இவர் எழுந்தருளுகின்றார்.

மூன்றாவது மூர்த்தம் சந்திரசேகர மூர்த்தமாகும். இதைப் பிராகாரத்தின் ஈசான மூலையில் மேற்கு அல்லது தெற்கு நோக்கியவாறு அமைக்கின்றனர். கொடியேற்றம் இல்லாமல் செய்யப்படும் அனைத்து விழாக்களிலும் இவர் பவனி வருகிறார்.

நான்காவதான மூர்த்தம் பிட்சாடன மூர்த்தமாகும். இதை இரவலர் கோலம் என்பர். இவர் பெருந்திரு விழாவின் எட்டாம் நாளில் பவனி வருகிறார்.

மேலும், காட்சி கொடுத்த நாயகர், கங்காளர், கல்யாண சுந்தரர், பிரதோஷ நாயகர், முதலான சிவமூர்த்தங்களும் பரிவார ஆலயங்களில் எழுந்தருளி வைத்து வழிபடப் படுகின்றன. பெரும்பாலும் இவை உலா மூர்த்தங்களாகவே அமைந்துள்ளன. சில தலங்களில் மட்டும் மூலவராகவும் அமைத்து வழிபடப்படுகின்றனர். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மகாலிங்கங்கள்

பிராகாரங்களில் பலவகையான லிங்கங்கள் அமைந்திருக்கக் காண்கிறோம். அந்நாளில் மாமன்னர்கள் ஆலயத்திற்கு எழுந்தருளிச் சிறப்புகளைச் செய்து வழிபட்ட போது தம் பெயரால் ஒரு லிங்கத்தை நிறுவி அதற்குப் பூசைக்கு வேண்டிய நிபந்தங்களை ஏற்படுத்தினர். அவை சேரலிங்கம், சோழ லிங்கம், பாண்டிய லிங்கம், வரகுணேசுவரர் முதலிய பெயர்களில் இருக்கக் காண்கிறோம்.

மாமுனிவர்கள் ரிஷிகள் தல யாத்திரையாக வந்த போது, பெருமானைத் தரிசித்ததுடன் தத்தம் பெயரால் லிங்கங்கள் அமைத்து வழிபட்டனர். அதற்குச் சிறப்பு கருதி மக்கள் வழிபாட்டுக்குரிய ஏற்பாடுகளைச் செய்தனர். இவ்வகையில், கௌதமேசர், விசுவாமித்ரேசர், ஜமதக்னீசுவரர், பரசுராம லிங்கேசுவரர் முதலான பெயர்களில் சிவலிங்கங்களைக் காண்கிறோம். இவற்றை ரிஷி லிங்கம், முனிவரலிங்கம் என்பர்.

தேவர்கள், யக்ஷர்கள், முதலியோர் தல வழிபாடு செய்து மேன்மை பெற்றபோது தம் பெயரால் லிங்கம் அமைத்தனர். அவை இந்திரலிங்கம் குபேரலிங்கம், கந்தர்வ லிங்கம் முதலான பெயர்களில் இருக்கக் காண்கிறோம். உருத்திர கணங்கள் வழிபட்டு அமைந்தவை அஷ்டருத்திர லிங்கம், ஏகாதச ருத்ர லிங்கம் முதலியனவாகும்.

மேலும் ஆலயம் அமைக்கும் போதே பஞ்சபிரம்மங்களைக் குறிக்கும் ஈசான, தத்புருஷ, வாமதேவ, அகோர, சத்யோஜாத லிங்கங்களும், பஞ்ச பூதங்களைக் குறிக்கும் ப்ருதிவீ, ஆகாச, வாயு, தேயு, அப்பு லிங்கங்களும் அமைக்கப்பட்டன. பஞ்ச பூத லிங்கங்களுக்கு மட்டும் தனித்தனி ஆலயம் அமைக்கப்படும் வழக்கம் ஆதிமுதலே இருந்து வந்துள்ளது.

அஷ்டருத்திரர்களையும், சதருத்திரர்களையும் குறிக்கும் (அவர்களால் நிறுவப்பட்ட 108 லிங்கங்களைப் பல தலங்களில் காணலாம். தனித்தனியாக அமைப்பதுடன் ஒரே லிங்கத்தில் 108 லிங்கங்களையும் அமைத்துள்ளனர்.

ஆயிரம் லிங்கங்களைத் தம்முள் கொண்ட சகஸ்ரலிங்கம் பல தலங்களில் அமைந்துள்ளது. இறைவன் எண்ணற்ற வடிவினனாக இருப்பதை இது உணர்த்துகிறது.

அன்பர்கள் தாம் விரும்பி வழிபடும் தலத்து இறைவனை நினைவூட்டும் வகையில் சிவ லிங்கம் அமைத்து வழிபட்டனர். எடுத்துக் காட்டாக வரகுணபாண்டியன் தாம் சென்ற இடங்களில் எல்லாம் தமது வழிபடு தெய்வமான மீனாட்சி சோமசுந்தரேசுவரரை எழுந்தருளி வைத்திருப்பதைக் காண்கிறோம். இது போன்று பல ஆலயங்களை நினைவூட்டும் வகையிலான லிங்கங்களும் ஆலயங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

அன்பர்கள் காசி யாத்திரை மேற்கொண்டதன் நினைவாக அங்கிருந்து பாண லிங்கம் எடுத்து வந்து காசி விசுவநாதர் சந்நிதிகளை அமைத்துள்ளனர்.

இந்த லிங்கங்களுக்கு உரிய தேவியரையும் அமைத்துள்ளனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அம்பிகை பராசக்தி

சிவபெருமானின் அருள் பெண் வடிவு கொண்டு அவராகவே வெளிப் பட்டது. அந்தப் பெண்ணைப் பரா சக்தி என்று கொண்டா டுகி ன்ற னர். அவள் சிவபெருமானுக்குத் தேவியாக இருக்கிறாள். அவளே அவருக்கு முதன் மைப் பரிவார தெய்வமாக விளங் குகிறாள்.

சிவாலயங்களில் பரா சக்திக் குப் பெரிய துணை ஆலயம் அமைக்கப்பட் டுள்ளது. இதில் அவள் நின்ற வாறு விளங்குகிறாள். பாண்டிய மண்டலத்தில் இரண்டு கரங்கள் கொண்டவ ளா க வும், மற்றைய பகுதிகளில் நான்கு கரங்கள் கொண்டவளாகவும் காட்சியளிக் கிறாள்.

இவளுக்கு ஒவ்வொரு தலத்தில் ஒரு சிறப்பான பெயர் வழங்குகிறது. அம்பிகைக்கு முன்புறம் கொடி மரம், பலிபீடம், இடபம் அல்லது சிங்கம் ஆகியவை அமைந்துள்ளன. வாயிலின் இருபுறமும் துவார பாலிகையர் உள்ளனர். இவர்களை ஜெயை, விஜயை என அழைக்கின்றனர். இவளுடைய சந்நிதி புறச் சுவர்க் கோட்டங் களில் விநாயகர் இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியாசக்தி, துர்க்கை ஆகியோரும் கோமுகிக்கு அருகில் யாமினி என்னும் சண்டேசுவரியும் உள்ளனர். வாயிலின் இருபுறமும் விநாயக ரையும் சுப்பிர மணி யரையும் அமைக் கின்றனர். உள்வாயிலில் கங்கை, யமுனை ஆகியோரை துவார பாலகி யர்களாக அமைக்கும் வழக்கம் பாண்டிய நாட்டில் உள்ளது.

அம்பிகைக்குத் தனியே உலாத் திருமேனி உள்ளது. இவளுக்குப் பராசக்தி என்பது பெயர். வெள்ளிக் கிழமை தோறும் பவனி வருவதால் சுக்ரவாரம்மன் என்றழைக் கின்றனர். மயிலாப் பூரின் கற்பக வல்லி யானை (சுக்ரவார அம்மன்) பராசக்தி தங்கத் தேரில் பவனி வந்து அருள் பாலிக் கிறாள்.

இவருடைய சந்நிதியில் பள்ளியறை அமைந்துள்ளது. இங்கு சுவாமியை கொண்டு வந்து வைத்து ஊஞ்சல் தீபாராதனை நடத்தி அன்றைய பூசையை நிறைவு செய்கின்றனர். மறுநாள் பூசை இங்கி ருந்தே தொடங்குகிறது. ❀

பரிவாரங்களுடன் விளங்கும் சிவபெருமான் – விதான சிற்பம்

சென்னையை அடுத்த பூந்தமல்லிக்கு அருகில் திருமணம் (சித்துக்காடு) என்னும் ஊரில் சாலையோரத்தில் அழகிய சிவாலயம் உள்ளது. இதில் கோயில் கொண்டிருக்கும் பெருமானுக்கு நெல்லி நாதர்(தாத்ரீசுவரர்) என்பது பெயராகும். இந்த ஆலயத்தின் ராஜகோபுரம் அமைந்துள்ள வாயிலின் விதானத்தில் சோடசமூர்த்தங்களுடன் பரிவாரங்கள் சூழ சிவபெருமான் புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளார். இத்தகைய புடைப்புச் சிற்பம் வேறெங்கும் இல்லை. ❀

வைராவிகள்: ஆலயங்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டு உயிர் தரத் தயாராக இருப்பவர்கள் வைராவிகள் ஆவர். இவர்களை வீர முஷ்டிகள் எனவும் அழைப்பர். சில தலங்களில் வைராவிகளுக்கான திருவுருவங்கள் அமைக்கப் பட்டுள்ளன. முன்னாளில் வைராவிகளுக்கும் நாட்பூசை நடந்து வந்தது. ❀

சூரியனாதி பரிவாரங்கள் புடைசூழ வீற்றிருக்கும்
இராஜராஜேஸ்வரர்–பார்வதிதேவியின் அருளால்
எல்லோரும் எல்லாமும் பெற்று இனிது வாழ்க! வளர்க!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

பைரவ சஹாயம்

ஸ்ரீ பைரவர்

சகல உலங்களையும், அதில் அமைந்துள்ள திருத்தலங்களையும், அங்கு அமைந்துள்ள தீர்த்தங் களையும் காவல்புரிவர் ஸ்ரீபைரவர் ஆவார். அவர் க்ஷேத்திரங்களைக் காவல் புரிவதால் க்ஷேத்ரபாலகன் என்றும்; கடல்முதலான பெரிய தண்ணீர்ப் பகுதிகள் பொங்கி பூமியை அழித்துவிடாமல் கட்டுக்குள் வைத்தி ருப்பதால் தீர்த்தபாலகன் என்றும், பல நூறுபெயர்களில் அழைக்கப்படுகின்றார்.

உலகினையும் உயிர்களையும் காக்கும் தன்மை சிவபெருமானுக்கே உரியது என்பதால் அவருடைய ஒருகூறே பைரவமூர்த்தியாக எழுந்தருளி வந்து அன்பர்களுக்கு அருள்பாலித்து வருகின்றது அது அவரைப்போலவே சந்திரபிறை அணிந்து, முத்தலைக் சூலம் ஏந்தி நிற்கின்றது. அவர் உயிர்களுக்கு ரோதனம் செய்யும் பகைவர்களுக்குப் பயங்கரமானவராக இருப்பதால் பைரவர் என்றும்; வஜ்ஜிரக்கோட்டை போல் விளங்கி தன்னை அண்டிய பக்தர்களைக் காப் பதால் வயிரவமூர்த்தி என்றும் அழைக்கப்படுகின்றார்.

பைரவர் ஞானிகளிடம் அறிவுச்சோதியை விளக்கும் ஞானபைரவராகவும், யோகிகளுக்குக் காவலாக இருப்பதுடன் தாமே பெரிய யோகியாகவும் விளங்கி யோகபைரவராகவும்; மகாவீரர்களிடம் உக்ர பைரவராகவும்; தண்ணீர், தீ, ஆகாயம், நிலம், காற்று முதலியவற்றால் உண்டாகும் சீற்றங்களில் இருந்து காக்கும் பூதபைரவராகவும் இன்னும் அனேக வடிவங் கள் தாங்கி அன்பர்களுக்கு அருள்புரிகின்றார். இவரு டைய பெருமைகள் எல்லையற்றதாகும்.

இப்படி அனேக பைரவர்கள் சிவனருளால் தோன்றி உலகத்தைக் காத்து வந்தாலும் உலகில் துன்பங் கள் அளவு கடந்து விடும்போது சிவபெருமானே வைரவனாகி மண்மேல் வந்து உயிர்களின் துன்பத்தை நீக்கி இன்பத்தைப் பெருகவைத்த நிகழ்ச்சிகளையும் புராணங்கள் தனிச்சிறப்புடன் குறிக்கின்றன.

பைரவர் உக்கிரமயமான தேவராக இருந்தாலும் பெருங்கருணைமிக்கவர், அன்பர்களுக்கு அளவற்ற செல்வங்களையும் இன்பங்களையும் அளிப்பவர். இதனால் அனைத்து சமயங்களும் பைரவரைத் தனிச் சிறப்புடன் போற்றுகின்றன.

பைரவர் வழிபாடு சிவாலயங்களில் ஒரு அங்க மாக உள்ளது. வேதவழிப்பட்ட சாத்த, கௌமார, சௌர சமயங்களும், ஜைனம், பௌத்தம் முதலான பிற சமயங்களும் வைரவரைத் தனிச்சிறப்புடன் போற்று கின்றன. வைரவர் மந்திர தந்திரங்களின் நாயகர், பூத, வேதாள, பிரேத, பிசாசுக் கூட்டங்களை அடக்கிஅதன் தலைவராக இருப்பவர். அவற்றால் உயிர்களுக்கு உண்டாகும் துன்பங்களை நீக்குபவர்.

சிவமஞ்சரியின் அறுபதாம் மலராக மலரும் இந்த மலர் பைரவமூர்த்தியின் அருட்பெருமைகளை விளக்கும் வகையில் மலர்கிறது. இதில் வைரவர் உற் பத்தி, வைரவத் தலங்கள், வழிபாட்டுச் சிறப்புச் செய்தி கள் முதலியன இடம் பெறுகின்றன. இந்த இனிய வேளையில் அன்பர்கள் அனைவரும் ஸ்ரீ பைரவி உடனாய பைரவப் பெருமானின் அருளால் சகல செல்வ யோகமிக்கப் பெருவாழ்வைப் பெற்று இன்பமுடன் வாழப் பிரார்த்திக்கின்றோம். – சிவசுந்தரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பைரவர் - வைரவர் - பெயர்விளக்கம்

பைரவர் என்பது வடமொழிச் சொல்லாகும். இது பீரு என்னும் சொல்லை அடிப்படையாகக் கொண்டது. இதற்கு அச்சம் என்பது பொருளாகும். பைரவர் என்ற சொல்லுக்கு மிகவும் பயங்கரமானவர் என்பது பொருளாகும். எதிரிகளுக்குப் பயம் தந்து தன்னை அண்டியவர்க்கு அருள்பாலிப்பதால் பெருமானுக்குப் பைரவர் என்பது பெயராயிற்று.

மேலும், ப-(பரணம்), என்பது உலகில் உயிர்களைத் தோற்றுவித்து நிரப்பும் படைப்புத் தொழில் புரிவதையும், ர-(ரமணம்) என்பது தோன்றிய உயிர்களைக் காப்பதையும் வ-(வமனம்) என்பது நெடுங்காலம் வாழ்ந்து சோர்ந்த உயிர்களை அழித்துத் தன்னுள் ஒடுக்கிக் கொள்வதையும் குறிக்கின்றன. இந்த முத்தொழிலையும் ஆற்றுவதால் இறைவன் பைரவன் என்று அழைக்கப்படுகின்றார்.

சில நூல்களில் பைரவம்-என்பதற்கு பயந்த சுபாவத்தை உடைய பெண்கள் கூட்டம் என்று பொருள் சொல்லப்பட்டுள்ளது. (பீரூணாம் ஸமூஹ: பைரவம்). தர்மத்தின்மீது பயங்கொண்டவர்களே உலகில் சிறப்பான கற்புக்கரசிகளாக விளங்குகின்றனர். அவர்களுக்குக் காவலாக இருந்து தர்மத்தைக் காப்பதால் சிவபெருமான் பைரவர் எனப்படுகின்றார்.

இனி வைரவர் என்ற சொல்லின் பொருளைக் காணலாம். பைரவர் என்பதிலிருந்து மருவிய சொல்லே வைரவர் என்று பலர்குறிக்கின்றனர். ஆனால் வைரம் போன்று திண்மையான தேகம் படைத்தவராகவும், பக்தர்களுக்கு வைரத்தாலான கோட்டை போன்று காவல் தெய்வமாக விளங்குவதாலும் சிவபெருமானின் காவல் திருக்கோலம் வைரவர் என அழைக்கப்பட்டது என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். வைரம் பாய்ந்த தன்மையைக்குறிக்கும் "காழ்" என்பதன் அடிப்படையாகத் தோன்றிய சீர்காழிவைரவரின் தலைமையிடமாகத் இருப்பதும் இங்கு எண்ணத்தக்கதாகும்.

மேலும் வைரவருக்கு வடுகன், சட்டநாதன் என்ற பெயர்களும் வழங்குகின்றன. அவற்றின் விளக்கங்களைப் புராணங்களில் கண்டு மகிழலாம்.

வைராவிச் சேவை

தென்மாவட்டங்களில் ஆலயங்களுக்கும் ஆலயத்தில் வீற்றிருக்கும் தெய்வங்களுக்கும் பாதுகாவலாகவும், வேண்டுமானால் தனது உயிரையும் கொடுக்கச் சபதம் பூண்ட பலர் இருந்தனர். இவர்களுக்கு வைராவிகள் என்பது பெயர்.

இப்படி வைராவிச் சேவை செய்யும் பாக்கியம் பெற்றவர்கள் பைரவ மூர்த்தியின் அம்சமாகவே போற்றப்பட்டனர். இவர்கள் பணியின் போது உயிர் துறந்தால் இவர்களுக்குத் தனி ஆலயம் அமைத்து வைராவிப் பெருமாள், வைராவிக் கோன் எனப் பெயரிட்டு வழிபட்டனர். இவர்களுடைய வம்சா வழியினருக்கு உதிரப்பட்டி என்ற பெயரில் நிலதானமும் செய்தனர்.

வைராவிச் சேவை செய்தவர்கள் நீண்ட கத்தியையும் அதில் நீண்ட சங்கிலியால் பிணிக்கப்பட்ட மணியையும் ஏந்தி அதை சுவாமி ஊர்வலத்திற்கு முன்பாக ஒலித்துக் கொண்டே சென்றனர். திருவிடை மருதூர், கீழ்வேளூர், திருப்பத்தூர் முதலிய அநேக தலங்களில் வைராவிகள் சேவை செய்துள்ளனர்.

கொங்குமண்டலசதகம் என்ற நூல் கொங்கு நாட்டில் அமைக்கப்பட்ட பல சிவாலயங்களுக்கு வைராவிச் சேவர்கள் நியமிக்கப்பட்டதைக் தனிச் சிறப்புடன் குறிப்பிடுகிறது.

திருப்பரங்குன்றத்தில் வைராவியாகயிருந்த குட்டியாப் பிள்ளை என்பவர் ஐரோப்பியர் படையெடுப்பிலிருந்து முருகன் ஆலயத்தைக் காக்க கோபுரத்திலிருந்து விழுந்து உயிர்நீத்தார். இந்தச் செய்தி இக்கோயில் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். இவருடைய வம்சத்தாருக்கு உதிரபட்டியாக நிலமளித்ததையும் கல்வெட்டுகள் குறிக்கின்றன.

- தென்னிந்தியாவிலுள்ள அனேக ஆலயங்களில் வைராவிச் சேவை செய்து தெய்வநிலை பெற்றவர்களின் திருவுருவங்கள் உள்ளன.
- பஞ்சபைரவத்தலமான இராமகிரியில் பைரவர் ஆலயத்தின் வாயிலின் இருபுறமும் இரண்டு வைராவிகளின் திருவுருவச் சிலைகள் நிலைப்படுத்தி வணங்கப்படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தென்னகத்தில் பைரவர் வழிபாடு

இந்தியாவிலும், இந்திய சமயங்கள் பரவியுள்ள பர்மா, தாய்லாந்து இலங்கை முதலிய நாடுகளிலும் சிவ வழிபாட்டுடன் இணைந்த நிலையில் பைரவர் வழிபாடு தனிச்சிறப்பிடம் பெற்றுள்ளதைக் காண்கிறோம். தமிழகத்திற் குள்ளேயே சோழ, பாண்டிய, தொண்டை, நடுநாட்டுப் பிரிவுகளிலும் பைரவர் வழி பாடு தனிச்சிறப்புடன் போற்றப் படுவதைக் காண்கிறோம். இந்த நாட்டுப் பகுதிகளில் வழங்கிவரும் பைரவர் வழிபாட்டுச் செய்திகளை இக்கட்டுரை விளக்குகிறது. இங்கே சுருக்கமாக உள்ள செய்திகள் தனிக் கட்டுரைகளில் விளக்கமாகவும் இடம் பெற்றுள்ளன.

தொண்டை மண்டலத்தில்...

தொண்டை மண்டலமென்பது காஞ்சீபுரம், திருவள்ளூர் மாவட்டங்களையும் ஆந்திராவின் தென் பகுதி தென்னாற்காடு மாவட்டத்தின் வடபகுதி, வடாற் காடு மாவட்டத்தின் கீழ்ப்பகுதி ஆகியவற்றை உள்ள டக்கியதாகும். ஆதிநாளில் இதன் தலைமையிடமாக காஞ்சீபுரம் திகழ்ந்தது.

காஞ்சீபுரத்தில் பிரம்மனின் சிரத்தைக் கொய்த பாவம் தீரச் சிவவழிபாடு செய்த பைரவரின் தனி ஆலயம் உள்ளது. இதற்கு அருகில் பைரவர் எட்டு உருவங்கள் தாங்கி, எட்டு லிங்கங்களை வைத்து வழிபட்ட வைரவேச்சுவரம் என்ற சிவாலயம் உள்ளது. இக்கோயிலுக்கான பைரவரின் அழகிய உலாத்திரு மேனி காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் ஆலயத்தில் உள்ளது.

காஞ்சீபுரத்திற்குத் தென்மேற்கில் அழிபடை தாங்கி என்னுமிடத்தில் பைரவருக்கான தனி ஆலயத் தைக் காண்கிறோம். காஞ்சீபுரத்திற்குத் தெற்கில் அமைந்திருப்பது பெருநகர் என்றழைக்கப்படும் பிரம்ம நகராகும். இங்கு பிரம்மதேவன் சிவலிங்கத்தை வைத்து வழிபட்டதுடன் தனது சிரத்தைக் கிள்ளிய பைரவ சிவனுக்கும் தனிச் சந்நிதி அமைத்து வழிபாடு செய்தான். அந்த திருவுருவம் தனிச்சிறப்புமிக்கதாகும்.

மேலும், இம்மண்டலத்தில் உத்திரமேரூருக்கு அருகில் உள்ள சில மலைகளிலும், திருக்கழுக் குன்றத் திற்கு அருகிலுள்ள செம்பாக்கம் மலைமீதும் பைரவ ருக்கான தனி ஆலயங்கள் உள்ளன. செம்பாக்கத்தில் மலைமீது ஏறுவது சிரமமாக உள்ளது என்பதால் ஊருக்குள்ளேயே பைரவருக்கான தனி ஆலயத்தை அமைத்துள்ளனர்.

ஆந்திர மாநிலத்தில் நாகலாபுரத்திற்கு அருகில் இருப்பது வைப்புத்தலங்களில் ஒன்றான காரிக்கரை யாகும். இது இந்நாளில் ராமகிரி என்றழைக்கப்படு

❁ அஷ்டபுஜ பைரவர்

கின்றது. இங்குள்ள வாலீசுவரர் ஆலயத்தினையொட்டி பைரவருக்கான தனி ஆலயம் உள்ளது. இது சிறந்த பிரார்த்தனைத் தலமாகும். இந்த சந்நிதியில் கல்லாலான நாய் உருவங்கள் நிறைய உள்ளன.

சென்னையை அடுத்துள்ள திருஒற்றியூர் தியாக ராஜ சுவாமி ஆலயத்தில் பைரவருக்கான தனிச் சிற்றா லயம் கருவறை உள்மண்டபம், மகா மண்டபத்துடன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உள்ளன. கருவறைமீது அழகிய ஒற்றைக் கலசம் கொண்ட விமானம் உள்ளது. இச்சந்நிதிக்கு அருகில் பைரவ தீர்த்தம் உள்ளது.

நடுநாட்டில்

நடுநாடென்பது கடலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதியாகும். இதிலுள்ள சிதம்பரம் ஸ்ரீசபாநாயகர் ஆலயத்தில் சுவர்ண ஆகர்ஷண பைரவர் திருவுருவம் உள்ளது. இது உலோகத்தால் ஆனது. தில்லை சிற்றம்பலத்தின் உள்ளேயே உள்ளது.

சிதம்பரத்திற்குக் கிழக்கில் உள்ள திருக்கழிப்பாலை என்னும் பாடல் பெற்ற திருப்பதியில் பைரவர் தனிச்சிறப்புடன் உள்ளது. மக்கள் இந்த சிவாலயத்தை பைரவன் கோயில் என்றே அழைக்கின்றனர்.

சோழமண்டலத்தில்...

சோழமண்டலம் என்பது தஞ்சை திருவாரூர் நாகை மாவட்டங்களை உள்ளடக்கிய பெரும் நிலப்பரப்பாகும். இங்கு அனேக ஆலயங்களில் பைரவர் வழிபாடு தனிச்சிறப்புடன் உள்ளது. இங்கு வழக்கமாக உள்ள பைரவருடன் பைரவரின் சிறப்பு வடிவங்களில் ஒன்றான வடுகக் கோலமும் தனிச்சிறப்புடன் போற்றப்படுகிறது. வடுகருக்கு, தண்டபாணி, சட்டநாதர் என்ற பல பெயர்கள் உள்ளன. இதில் சட்டநாதர் என்ற பெயரில் அவர் தனிச்சிறப்புடன் போற்றப்படுகின்றனர்.

குறிப்பாக, சட்டநாதர் வழிபாட்டின் தலைமையிடமாகத் திகழ்வது சீர்காழியாகும். இங்குள்ள பிரம்மபுரீசுவரர் ஆலயம் சட்டநாதசுவாமி தேவஸ்தானம் என்றே அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் அம்பர், திருவாரூர், சிதம்பரம், நாகப்பட்டினம், தகட்டூர் முதலிய அனேக ஆலயங்களில் சட்டநாதருக்கான தனிச் சந்நிதிகள் உள்ளன. அம்பர், சீர்காழி முதலிய தலங்களில் சட்டநாதருக்கு உலாத்திருமேனிகள் அமைக்கப்பட்டு தனிச்சிறப்பு விழாக்களும் கொண்டாடப்படுகின்றன.

பாண்டிய மண்டலத்தில்...

குமரி, திருநெல்வேலி, மதுரை, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் உள்ள பெரும்பகுதியே பாண்டிய மண்டலமாகும்.

இம்மண்டலத்திலுள்ள பிரான்மலை (கொடுங்குன்றம்) வடுகன்பட்டி, திருப்பத்தூர், இராமேசுவரம் முதலிய பலதலங்களில் பைரவர் வழிபாடு சிறப்புடன் போற்றப்படுகின்றது. இங்கு அட்ட வைரவத்தலங்கள் எட்டு உள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கொங்கு மண்டலத்தில்

கொங்குமண்டலத்தில் அனைத்து சிவாலயங்களிலும் பைரவர் சிறப்புடன் வழிபடப்படுகின்றார் என்றாலும் (திருப்பூரை அடுத்த) நல்லூர் முதலிய தலங்களில் வடுகமூர்த்தி வழிபாடு தனிச்சிறப்புடன் போற்றப்படுகின்றார்.

தாராபுரத்திற்கு அருகிலுள்ள தலம் குண்டடம் ஆகும். இதில் வடுக நாதருக்கு தனி ஆலயம் அமைந்துள்ளது. இம்மண்டலத்திலுள்ள அனேக தோட்டங்களில் பைரவரைக் காவல்தெய்வமாக அமைத்திருப்பதையும் காண்கிறோம்.

தென்னகமெங்கும் பரவலாக இன்னும் அனேக பைரவத் தலங்கள் சிறப்புடன் உள்ளன.

விஜய பைரவர்

பழனியில் புகழ்பெற்று விளங்குவது சாது சாமிகள் திரு மடமாகும். இங்கு தவத்திரு சாது சாமிகளால் ஏறத்தாழ ஐம்பதாண்டுகளுக்கு முன்பாக விஜயபைரவர் என்ற பைரவர் திருமேனியை அமைத்தார்கள். அம்பிகை உபாசகரான சுவாமிகள் பைரவரை பெருந்தெய்வமாகப் போற்றியவர்கள். அதற்கேற்ப எட்டடி உயரம் கொண்ட பெரியவராக இவரை அமைத்துள்ளார். இந்த வடிவம் சிவபெருமானே பைரவ வடிவம் தாங்கி வந்ததை உணர்த்துகிறது. பத்து கரங்களுடன் நெடிய வடிவில் விளங்கும் இவர் முன் கரங்களில் நெடிய வில்லையும் அம்பையும் தாங்கியுள்ளார். இப்போது தென்னகத்திலுள்ள பைரவர் வடிவங்களில் இதுவே மிகப் பெரியதாகும். சுவாமிகள், காசியிலிருந்து பெற்றுவந்த புராதனமான பைரவச் சக்கரத்தை இங்குள்ள பீடத்தில் வைத்து, அதன்மீது இவரை அமைத்துள்ளார் என்று கூறுகின்றனர். இங்கு அழகிய சிறு உலாத்திருமேனியும் உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பைரவர் உற்பத்தி

சிவபெருமான், வலிமைமிக்க ஞான மூர்த்தியாக ஸ்ரீ பைரவமூர்த்தியை உற்பத்தி செய்து அவரிடம் உலகினைக் காக்கும் பொறுப்பினை அளித்தார். அவர் உயிர்களுக்கும் அவர்களின் உடைமைகளுக்கும் பாதுகாவலாக இருப்பதுடன் அஷ்டமூர்த்தங்களில் நின்று அவற்றையும் காத்து வருகின்றார்.

அசுரர்கள் தொல்லையால் இந்த உலகம் துன்புற்ற பொழுதெல்லாம், சிவபெருமான் தனது அம்சமாகப் பைரவரைத் தோற்றுவித்து அசுரர்களை வென்று இன்பம் பெருகச் செய்கிறார் என்று புராணங்கள் குறிக்கின்றன.

மும்மூர்த்திகளில் ஒருவனான பிரம்மன் அகந்தையால் அறிவுமயங்கிச் சிவநிந்தனை செய்தபோது சிவபெருமான், பைரவரைத் தோற்றுவித்தார். பைரவர் பிரம்மதேவனின் ஐந்தாவது தலையை வெட்டியெடுத்துக் கபாலமாக்கிக் கொண்டார். அவனுக்கு அச்சமூட்டி அறிவை விளக்கம் பெறவைத்தார்.

ஒருசமயம் அந்தகாசூரன் என்பவன் தேவர்களைத் துன்புறுத்தியதுடன் அவர்களைப் பெண்வேடத்துடன் திரியும்படிச் செய்து அவமானப்படுத்தினான். தேவர்களின் முறையீட்டுக்குச் செவிசாய்த்த சிவபெருமான் மகாபைரவரை உற்பத்தி செய்து அந்தகனைக் கொன்று வரும்படி ஆணையிட்டார். பைரவர் அதி உக்கிரத்துடன் அவன்மீது போர் தொடுத்தார். அவருடைய திருமேனியிலிருந்து அஷ்ட பைரவர்கள் தோன்றினர். அந்த எட்டு பைரவர்களுக்கும் தேவர்கள் அஷ்ட மாதர்களை அளித்து இன்பம் பெறச் செய்தனர்.

மகாபைரவர் அந்தகாசூரன் மீது படையெடுத்து வென்று அவனைத் தனது சூலத்தில் குத்தித் தூக்கியவாறு மூன்று உலகங்களிலும் திரிந்தார். அவனுடைய உடலிருந்து வழிந்த ரத்தத்தைக் குடித்தார். அவன் அஞ்சிச்சோர்ந்து செய்த துதியால் மகிழ்ந்து அவனைச் சூலத்திலிருந்து விடுவித்தார்.

இதையொத்ததாக முண்டகன் முதலிய அனேக அசுரர்கள் தோன்றியபோதெல்லாம் சிவபெருமான் அனேக பைரவர்களை உற்பத்தி செய்தார். அந்த பைரவர்கள் தமது பணி முடிந்தபிறகு ஈசான பாகத்திலுள்ள பைரவ பதம் என்னுமிடத்தில் தங்கிச் சிவபூசை செய்து வருகின்றனர். மகா பைரவரை உபாசிக்கும் பக்தர்களுக்கு அவர்கள் தாமே வந்து அருள்பாலிக்கின்றனர்.

அசுரர்களை அழிக்க வந்த இந்த பைரவர்கள் உக்கிரமயமான வடிவம் கொண்டவர்கள். உருட்டும் அகன்ற விழிகளைக் கொண்டவர்கள். கோபத்தால் ஜ்வலிக்கும் முகத்தையும், தீப்பிழம்பு போல் மேல் நோக்கி விளங்கும் சடைக்கற்றையையும்; அதில் சந்திர பிறை, கங்கை, ஊமத்தை மலர்களையும் தரித்தவர்கள். வலிய சூலத்தையும் பகைவர்களின் இரத்தத்தைப் பிடித்துக் குடிக்க உதவும் பானபாத்திரத்தையும். அச்சமூட்டும் பாம்பையும், உயிரைக் கலக்கும் ஒலியெழுப்பும் டமருவையும் கொண்டவர்கள். அச்சமூட்டும் நாயை வாகனமாகக் கொண்டவர்கள்.



ஸ்ரீ பைரவர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதற்கு நேர் எதிராக உக்கிரமில்லாமல் குழந்தைப் பருவத்தைக் கடந்து அதே சமயம் வாலிபப்பருவத்தை அடையாத இடைநிலையில் இருக்கும் "வடு" பருவத்தில் இருக்கும் வைரவர்களையும் காண்கிறோம். இவர்கள் "வடுகன்" என்று அழைக்கப்படுகின்றனர்.

ஸ்ரீ கிருஷ்ணபிரான் குழந்தை வடிவில் விளங்கி அனேக அசுரர்களை அழித்தது போலவே இந்தச் சிவக்குழந்தையும் அனேக அசுரர்களை அழித்து உலகில் இன்பம் பெருக்கியது. திருமால் நரசிம்ம அவதாரம் கொண்டு இரணியனை வென்றபின் அகங்காரம் கொண்டுத் திரிந்தபோது இவர் பெரிய பறவை வடிவம் எடுத்து அவரை அடக்கி அவருடைய தோலை உரித்து போர்வையாக்கி கொண்டார். பின்னர், திருமால் வாமன அவதாரம் கொண்டு பலிச்சக்கரவர்த்தியிடம் தானம் பெற்றுத் திருவிக்கிரமனாக வளர்ந்து நின்று உயிர்களைத் துன்புறுத்திய போது அவருடைய தோலை உரித்துச் சட்டையாகப் போர்த்திக் கொண்டார். அதன் காரணமாகச் சட்டநாதர் என்றும் அழைக்கப்படுகிறார். இந்தப் பெயரிலேயே அவர் சீர்காழியில் கோயில் கொண்டுள்ளார்.

சோழநாட்டுச் சிவாலயங்களில் வழக்கம் போலவே வடகிழக்கு முனையில் பைரவர் திருமேனி அமைக்கப்பட்டிருந்தாலும், வடுகர் திருவுருவமும் எழுந்தருளி வைக்கப்பட்டுச் சிறப்புப் பூசனைகள் செய்யப்படுகின்றன.

பைரவரைத் தலைமைத் தெய்வமாகக் கொண்ட சமயம் பைரவம் எனப்பட்டது. காபாலிகர், பாசுபதர்களும் பைரவமூர்த்தியைத் தனிச்சிறப்புடன் போற்றுகின்றனர். இவர்களால் அமைக்கப்பட்ட அனேக பைரவர் ஆலயங்கள் இந்தியாவெங்கிலும் உள்ளன.

சிவமஞ்சரியின் பல்வேறு மலர்களில், சிவனருளால் பைரவர் தோன்றி, அன்பர்களுக்கு அருள் பாலித்த வரலாறுகள் குறிக்கப்பட்டுவிட்டதால் இதில் சிறப்புச் செய்திகளும் கோயில் வரலாறுகளும் மட்டுமே அளிக்கப்படுகின்றன.

பல்வகை பைரவர்கள்

சைவர்கள் உலகிலுள்ள அனைத்து இறையுருவங்களும் சிவபெருமானே என்று கூறுவர். அருள்நந்தி சிவம், "எங்கு எத்தெய்வம் கண்டீர் அங்கு அத்தெய்வமாகி மாதொரு பாகனார் தாம் வருவர்" என்று கூறுவதும் இங்கு எண்ணத்தக்கதாகும். குறிப்பாகச் சிவபெருமானே விநாயகர், அம்பிகை, குமாரன், சூரியன் முதலிய உருவங்களில் தோன்றி அருள்புரிகின்றார் என்பது சைவர்கள் கூற்றாகும். இவர்களுக்கு ஆலயம் அமைக்கும்போது பைரவரும் சேர்த்தே அமைக்கப்படுகிறார்.

சூரியனாலயத்தில் உள்ள பைரவர் மார்த்தாண்ட பைரவர் என்றும்; முருகனாலயத்திலுள்ள பைரவர் குமார பைரவர் என்றும்; விநாயகர் ஆலய பைரவர் - பிரமோத பைரவர் என்றும்; அழைக்கப்படுகின்றனர். அபூர்வமாகச் சில திருமால் தலங்களிலும் முகுந்த பைரவர் எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கின்றார்.

சிவபெருமானே பைரவனாய் வருதல்

அனேக சமயங்களில் சிவபெருமான் உலகிற்குத் தீங்கு செய்யும் தீயோரைத் தண்டிக்க காளி, வீரபத்திரர், பைரவர் முதலிய வீரர்களைப் படைத்து அனுப்புகின்றாரென்றாலும், சில சமயம் தானே சூலத்தைச் சுழற்றி, பகைவரை வெல்ல வந்ததையும் காண்கிறோம்.

எடுத்துக்காட்டாக, திருவெண்காட்டில் மருத்து வாசுரனை வெல்லத் தனது பஞ்சதேகங்களில் ஒன்றான அகோர மூர்த்தியின் வடிவம் தாங்கி வந்து அவனை அழித்ததைக் காண்கிறோம். அதற்கும் முன்பாகத் திரிபுராதிகளை வெல்ல அவரே தேரூர்ந்து வந்ததைப் புராணங்கள் குறிக்கின்றன.

இதைப் போலவே ஒரு கற்பத்தில் பிரம்மனின் அகந்தையை அடக்கத் தானே "பைரவனாகத்" தோன்றி அவனுடைய ஐந்தாவது தலையைக் கிள்ளியெடுத்தார். இத்தகைய பைரவ கோலத்தில் அவருக்குக் கபால மாலை, மணி மாலை, நாய்வாகனம் முதலியன அமைவ தில்லை. நாகங்கள் மட்டும் அணியாக உள்ளன.

இத்தகைய பைரவமூர்த்தியைப் பிரம்மன் பூசித்துப் பேறுபெற்ற தலங்களில் ஒன்றான பெருநகரில் காண்கிறோம். இவர் நாகத்தோடுகளை அணிந்துள்ளார். இடுப்பின் இரண்டு புறங்களிலும் கரங்களிலும் பாம்புகள் உள்ளன. இது அபூர்வமானதிருமேனியாகும். கார்த்திகை மாதக் கடைசி செவ்வாயன்று இவருக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகின்றன.

இத்தலம், காஞ்சீபுரம்-வந்தவாசி சாலையில் செய்யாற்றின் தென்கரையில் உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அஷ்ட பைரவர்கள்

சிவபெருமானின் வீரச் செயல்கள் எட்டாகும். அவரது வீரவெளிப்பாடாக விளங்கும் பைரவரும் எட்டு உருவங்கள் தாங்கி அன்பர்களுக்கு அருள் பாலிக்கின்றார். இவருடைய எட்டு திருமேனிகளும் முறையே 1. அஜிதாங்கன், 2. ருரு, 3. சண்டன், 4. உன்மத்தன், 5. கபாலன், 6. பீஷ்ணன், 7. க்ரோதன், 8. சம்ஹாரன் என்று அழைக்கப்படுகின்றன.

இவர்கள் சிவபெருமான் அஷ்டமூர்த்தங்களாகிய, பஞ்சபூதங்கள், சூரியன், சந்திரன், ஆன்மா என்ற எட்டிலும் நீங்காது நின்று அன்பர்களுக்கு அருள் பாலிக்கின்றனர்.

இந்த எண்மருக்கும் தேவியராகத் திகழ்பவர்கள் அஷ்ட மாதர்கள் ஆவர். இவர்களின் பெயர் முறையே பிராம்மஹி, மகேஸ்வரி, கௌமாரி வைஷ்ணவி, வாராகி, இந்திராணி, சாமுண்டி, சண்டிகை என்பதாகும். இவர்கள் அந்தகாசூர வதத்தின் பொருட்டுச் சிவபெருமானால் தேவர்களின் சக்தியிலிருந்து தோற்றுவிக்கப் பட்டவர்கள் பின்னர், அஷ்டபைரவர்களுக்குத் தேவியராக அளிக்கப்பட்டவர்கள்.

சீர்காழி, பிரம்மபுரீசுவரர் ஆலயத்தின் (தெற்கு) வெளிப் பிரகாரத்தில் வலம்புரி மண்டபம் என்ற சந்நிதியுள்ளது. இங்கு எட்டு பைரவர்களுக்கும் திருவுருவங்கள் அமைத்து வழிபடப்படுகின்றது. இந்த நிலையைப் பிற தலங்களில் காணமுடியவில்லை.

அஷ்ட பைரவர்கள் அனேக வீரச் செயல்கள் செய்தனர். அவை உலக நன்மையின் பொருட்டுச் செய்யப்பட்ட வீரச் செயல்கள் என்றாலும் அதனால் பல உயிர்கள் துன்புற்றன என்பதால் அவர்களுக்குப் பாவம் உண்டாயிற்று. அது நீங்கும் பொருட்டு அவர்கள் காஞ்சீபுரம், காசி முதலிய தலங்களில் தம்பெயரால் லிங்கம் அமைத்து வழிபட்டனர். அவை அவர்கள் பெயரால் அஷ்ட பைரவேச்சரங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

இந்த அஷ்ட பைரவர்களின் திருவுருவ வர்ணனைகளைச், சாரஸ்வதீயம், ரூபமண்டனம், தத்துவ நிதி, முதலிய நூல்கள் விளக்கமாகக் கூறுகின்றன. இவற்றின்படி பைரவர்கள், இளமையான தோற்றமுடையவர்கள். மூன்று கண்களையுடையவர்கள். பாம்புகளையும் மணிசரங்களுடன், வைர வைடூர்ய ஆபரணங்களையும் அணிந்தவர்கள். தலையில் தீமுடி (தழல்முடி) கொண்டவர்கள். மேலும்,

அஜிதாங்க பைரவர் கருநீல நிறம் கொண்டு அட்ச மாலை, கெண்டி, கமண்டலம், கத்தி ஆகிய வற்றை ஏந்திப் பிராம்மி தேவியுடன் அன்ன வாகனத்தில் வீற்றிருக்கின்றார். சில சமயம் இவர் நான்கு முகங்கள் கொண்டவராகவும் அமைக்கப்படுகின்றார். இவருடைய திசை கிழக்காகும்.

ருரு பைரவர் மான், மழு, கத்தி, கபாலம் ஆகிய வற்றை ஏந்தி இடப வாகனத்தில் மகேஸ்வரியுடன் தென்கிழக்கு திசையில் வீற்றிருக்கின்றார்.

பொன் வண்ணத்தினராய் உன்மத்த பைரவர் தண்டம், ஏர் (உழுபடை), கத்தி, கபாலம் ஆகியவற்றை ஏந்தி வாராகி தேவியுடன் குதிரை வாகனத்தில் மேற்கு திசையில் காவல் புரிகிறார்.

குரோதன பைரவர் கருப்பு வண்ணத்தினர். சங்கு. சக்கரம், பானபாத்திரம், தண்டம் ஆகியவற்றை ஏந்தி வைஷ்ணவியுடன் கருடவாகனத்தில் தென்மேற்குத் திக்கில் வீற்றிருக்கின்றார்.



சம்ஹார பைரவர் - சண்டிகா தேவி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நள்ளிரவு வழிபாடு

பைரவருக்குரிய வழிபாட்டு நேரம் நள்ளிரவாகும். இந்த காலத்தில் பராசக்தி பைரவி என்னும் பெயரில் நடமாடுகிறாள். அவளுடன் பெருமான் பைரவனாக வீற்றிருக்கின்றார். பரம ஞானிகளும் யோகிகளும் தமது தூக்கத்தை விடுத்து அந்த வேளையில் தியானத்தில் திரிபுர பைரவியையும் பைரவரையும் தியானிக்கின்றனர். அபிராமிபட்டர், "யாமம் பைரவர் ஏத்தும் பொழுது" என்று பாடுகிறார். தொடர்ந்து விழிப்புணர்வோடு வேண்டுபவருக்கு, நள்ளிரவில் திருவடி தரிசனம் தருபவள் பைரவி என்று அருளுவதும் இங்கு எண்ணத்தக்கதாகும். (யாமம்-நள்ளிரவு). சீர்காழியில் வடுகநாதருக்கு வெள்ளிக் கிழமை நள்ளிரவின் சிறப்பு வழிபாடு செய்யப்படுவது குறிக்கத்தக்கதாகும்.

பொன்நிறம் கொண்ட சண்ட பைரவர் சக்தி, குலிசம், கத்தி, கபாலம் ஏந்தியவராக மயில் வாகனத்தில் கௌமாரியுடன் தென்திசையில் எழுந்தருள்கின்றார்.

பத்மராக வண்ணத்தில் பிரகாசிக்கும், கபால பைரவர் மேற்கரங்களில் இரண்டு இடியை உணர்த்தும் வஜ்ஜிரங்களையும், இந்திர நீல கற்களாலான அணி புனைந்து ஐந்தரியுடன் ஐராவரத்தில் கிழக்குத் திக்கில் பவனி வருகிறார்.

பீஷண பைரவர் சிவப்பு நிறத்தினர். சூலம், உலக்கை, கத்தி கபாலம் தந்தி பூத வேதாளங்கள் சூழ பைரவியான சாமுண்டியுடன் சிங்கவாகனத்தில் வடதிசையில் வீற்றிருக்கின்றார்.

எட்டாவதான சம்ஹார பைரவர் வெண்மையான நிறம்கொண்டவர். சூலம், டமருகம், சங்கு, சக்கரம், கதை, கத்தி, கபாலம், குறுவாள், பாசம், அங்குசம் என்னும் பத்து ஆயுதங்களை பத்து கரங்க்ளில் ஏந்தியுள்ளார். சண்டிகா தேவியுடன் நாய்மீது வடகிழக்கில் வீற்றிருக்கின்றார்.

வருணபத்ததி என்னும் நூலில் அஷ்ட பைரவர்களைப் பற்றிய விவரங்கள் காணப்படுகின்றன. அதைத் தொடர்ந்து வரும் பட்டியலில் காணலாம்.

இந்த அஷ்ட பைரவர்கள் கடுமையான தோற்றமுடையவர்கள் என்றாலும் அன்பர்களுக்கு அளப்பரிய வரங்களை நல்கும் கிருபாமூர்த்திகள், அஷ்ட ஐஸ்வர்யங்களையும் அள்ளிவழங்கி இன்பம் தருபவர்கள்.

ஆலயங்களில் நடைபெறும் பைரவ பூஜையில் ஓர் அங்கமாக அஷ்ட பைரவ பூஜை நடத்தப்படுகிறது. பைரவரின் பஞ்சாசனத்திலும், மண்டலத்திலும் இவர்கள் பூசிக்கப்படுகின்றனர். அஷ்ட பைரவர்கள் எழுந்தருளிய தலங்கள் சிலவற்றைத் தொடர்ந்து காணலாம்.

காசிநகரத்து அஷ்ட பைரவர்கள்

காசியில் அஷ்டபைரவர்கள் எழுந்தருளியுள்ளனர். அனுமன் காட்டில் ருரு பைரவரும்; துர்கா மந்திரில் சண்டபைரவரும்; விருத்த காளேசுவரர் ஆலயத்திலுள்ள அமிர்த குண்டத்திற்கு முன்புறம், அஜிதாங்க பைரவரும், லட் பைரவர் கோயிலில் கபால பைரவரும், காமாச்சாவில் வடுகபைரவர் எனும் பெயரில் குரோதன பைரவரும் தேவரா கிராமத்தில் உன்மத்த பைரவரும்; திரிலோசன கஞ்ச் (பாட்டன் தர்வாஜாவிற்குப் பக்கத்தில்) சங்கார பைரவரும் எழுந்தருளியுள்ளனர். எட்டாவதான பீஷண பைரவர் காசிபுராவில் இருக்கின்றார். இவரைப் பூதபைரவர் என்று அழைக்கின்றனர். இவர்களைச் சென்று தொழுவது அஷ்ட பைரவ யாத்திரை என்று அழைக்கப்படுகிறது.

சீர்காழி அட்டபைரவர்

சீர்காழியில் தெற்குப் பிரகாரத்தில் வலம்புரி மண்டபம் என்ற மண்டபம் உள்ளது. யோகஸ்தானம் என்றழைக்கப்படும். இதில் எட்டு பைரவர்கள் எழுந்தருளியுள்ளனர். இவர்கள் முறையே 1. சுதந்திரர், 2. சுயேச்சர், 3. லோகர், 4. காலர், 5, உக்ரர், 6. பிரச்யர், 7. நிர்மாணர், 8. பீஷ்ணர் என்று அழைக்கப்படுகின்றனர்

குற்றாலம் அஷ்ட பைரவர்

குற்றாலம் சித்திர சபையில் அஷ்டபைரவரின் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவை கலையழகு மிக்கதாகும்.

நகரத்தார் சீமை அஷ்ட பைரவர்

நகரத்தார் சீமையிலுள்ள திருப்பத்தூர், பிள்ளையார்பட்டியை அடுத்துள்ள வைரவன்பட்டி, அழகாபுரி, பெருச்சிக் கோயில், திருமெய்ஞானபுரம் வைரவன் பட்டி, காரையூர், நெடுமரம், இலுப்பைகுடி என்ற எட்டும் அஷ்ட பைரவ தலங்களாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாருணபத்ததி கூறும் அஷ்ட பைரவர் விளக்கம்

எண்.	பெயர்	திசை	தேவி	வாகனம்	நிறம்	ஆயுதம்
1.	அஜிதாங்கர்	கிழக்கு	பிராமி	ஹம்ஸம்	வெண்மை	கத்தி, பானபாத்திரம், ருத்திராக்ஷமாலை, கமண்டலம்
2.	ருருவர்	தென்கிழக்கு	மஹேசுவரி	விருஷபம்	ஸ்படிகம்	டங்கம், கத்தி, பானபாத்திரம்,குறுவாள்
3.	சண்டர்	தெற்கு	கௌமாரி	மயில்	பொன்	வில், பாணம், கத்தி, பானபாத்திரம்
4.	குரோதனர்	தென்மேற்கு	வைஷ்ணவி	கருடன்	கறுப்பு	சங்கம், சக்கரம், கதை, பானபாத்திரம்
5.	உன்மத்தர்	மேற்கு	வாராஹி	குதிரை	பொன்நிறம்	கத்தி, உலக்கை, கேடயம், கபாலம்
6.	கபாலர்	வடமேற்கு	இந்திராணி	யானை	பத்மராககாந்தி	பரசு, வஜ்ரம், கத்தி, பானபாத்திரம்
7.	பீஷ்ணர்	வடக்கு	சாமுண்டி	சிங்கம்	சிவப்பு	சூலம், இரும்புலக்கை, கபாலம், கத்தி
8.	ஸம்ஹாரர்	வடகிழக்கு	சண்டிகை	நாய்	வெண்மை	சூலம், டமருகம், சங்கம், சக்கரம், கதை, கத்தி, கபாலம், கட்வாங்கம், பாசம், அங்குசம் முதலியன.

மேலே முதலில் உள்ள 7 பைரவர்கள் மூன்று கண்களுடன், எரிசிகையும் நான்கு கரங்களும் கொண்டவர்கள். சாந்தகுணமுடையவர்கள். வரம் தருபவர்கள். புன்சிரிப்புடன் மாறாத இளமையுடையவர்கள். நிர்வாணமாகத் திரியும் கிருபாமூர்த்திகள். 8-ஆவதாக உள்ள ஸம்ஹாரர் மூன்று கண்களுடன், பத்துகரங்களைக் கொண்டவர். பாம்புகளைப் பூணூலாகத் தரித்தவர்கள். குமாரர், திகம்பரர், கடைவாயில் உள்ள தெற்றிப் பற்களால் பயங்கர மான முகமுடையவர்கள். அஷ்ட ஐசுவரியத்தைக் கொடுப்பவர். இந்த எண்மரே எட்டெட்டாகத் தோன்றி அறு பத்துநான்கு வைரவர்களாகக் காட்சியளிக்கின்றனர். இவர்களைச் சிவாகமங்கள் தனிச்சிறப்புடன் போற்றுகின்றன.

அஷ்டவிதார்ச்சனை

சிவபெருமானுக்குப் பஞ்சமுக அர்ச்சனையும்; பராசக்திக்கு நவசக்தி அர்ச்சனையும்; முருகப் பெருமானுக்கு ஷண்முகார்ச்சனையும் செய்யப்படுவதுபோல பைரவமூர்த்திக்கு அஷ்டவிதார்ச்சனை செய்யப்படுகின்றது. அப்போது எட்டுவித மலர்கள், தளிர் இலைகளைக் கொண்டு எட்டு சிவாச்சாரியார்கள் சூழ்ந்து பைரவரை அர்ச்சனை புரிகின்றனர். பிறகு எட்டுவிதமான பட்சணங்களும், எட்டுவிதமான அன்னங்களும் நிவேதிக்கப் படுகின்றன. பிறகு எட்டு ஆரத்திகளைக் கொண்டு தீபாராதனை காட்டப்படுகின்றது. இந்த பூசையின்போது செய் யப்படும் ஹோமத்தில் எட்டுவிதமான சமித்துக்கள் பயன்படுத்தப்படுகின்றன. திருப்பத்தூர், வைரவன்பட்டி முதலிய பல தலங்களில் இந்த அர்ச்சனை சிறப்பாக நடைபெறுகிறது. இவற்றின் பட்டியலைக் கீழே காண்க.

சமித்துக்கள் : 1. அரசு, 2. ஆல், 3. புரசு, 4. நாயுருவி, 5. வன்னி, 6. உமா, 7. அருகு, 8. பலா.

பட்சணங்கள் : 1. சுயம், 2. அப்பம், 3. வெள்ளப்பம், 4. தேன்வடை, 5. பாயாசம், 6. தேன்குழல், 7. எள்ளுருண்டை, 8. அதிரசம்.

அர்ச்சனை மலரும் தளிரும் : 1. வில்வம், 2. நொச்சி, 3. மரு, 4. மல்லி, 5. மரிக்கொழுந்து, 6. சம்பங்கி, 7. பிச்சி, 8. தாமரை.

அன்னங்கள் : 1. சர்க்கரைப் பொங்கல், 2. வெண்பொங்கல், 3. பால்சாதம், 4. எலுமிச்சை சாதம், 5. புளியோதரை, 6. தேங்காய்சாதம், 7. எள்ளு சாதம், 8. சம்பா சாதம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பைரவர் ஆலயப் பரிவார தேவர்கள்

சிவகுமாரர்களான முருகன், கணபதி, வீரபத்திரர் முதலியோருக்கு உரிய பரிவாரங்களுடன், தனி ஆலயம் அமைக்கப்படுவது போலவே பைரவ மூர்த்திக்கும் தனி ஆலயம் அமைக்கவேண்டுமென்று நூல்கள் குறிக்கின்றன. இவருக்கு உரிய பரிவாரங்களைப் பற்றிய செய்திகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நிறையவே உள்ளன. அவற்றை இங்கே தொகுத்துக் காணலாம். காலப்போக்கில் பைரவ வழிபாடு தன் இயல்பிலிருந்து நழுவிவிட்டதால் இத்தகைய பரிவார தேவர்களைக் கொண்ட பைரவர் ஆலயங்களை இப்போது காண முடியவில்லை.

பைரவர் ஆலயத்தின் முற்றத்தில் அவருடைய வாகனமாக நாய் இருக்கின்றது. சம்ஹார பைரவர் ஆலயங்களில் சிங்கம் வாகனம் அமைக்கப்படுகிறது.

அதற்குப் பின்புறம் பெரிய கொடிமரம் அமைகிறது. இதில் விழாவின் போது பொதுவாக நாய் உருவமும் சிறப்பாகக் குதிரை, அல்லது சிங்க உருவங்கள் எழுதிய கொடிகள் ஏற்றப்படுகின்றன.

கருவறையின் ஐந்து வெளிக் கோட்டங்களில் பஞ்ச பைரவர்கள் எழுந்தருள்கின்றனர். சில சமயம் வடுகர், யோகினி, க்ஷேத்ரபாலகர் கணபதி சர்பூதம் என்ற ஐவரும் எழுந்தருள்கின்றனர்.

ஆலயத்தின் வாயிலில் குரோதகன் கும்பகன் என்ற வாயிற் காவலர்கள் எழுந்தருள்கின்றனர். சில சமயங்களில், துவாரபாலிகைகளாக யோகினிகளும் அமைக்கப்படுகின்றனர். ஆலயத்தைச் சுற்றி அமையும் பத்து பலிபீடங்களில் ஹேதுகர் முதலான பத்து வேதாளர்கள் பூசிக்கப்படுகின்றனர்.

பைரவரின் தேவியான திரிபுரபைரவிக்குப் பைரவர் ஆலயத்தில் தனி சந்நிதி அமைகிறது. இதில் நான்கு அல்லது இரண்டு கரங்களுடன் அவள் எழுந்தருள்கின்றாள். இவளுக்குத் தலத்திற்கேற்ப ஆனந்தவல்லி, காளிகா, சண்டிகா, கௌரிகை முதலான அனேக பெயர்கள் அமைகின்றன.

பைரவர் கோயிலில் தனிச்சிறப்பாகப் பெரிய பலிபீடம் அமைகிறது. இதில் வேதாளர் பூதர், பிரேதர் முதலியவர்களுக்கும், அறுபத்துநான்கு பைரவர்களுக்கும், அவர்களின் தேவியரான யோகினிகளுக்கும் மந்திரப் பூர்வமாகப் பூசனை செய்யப்படுகிறது.

பைரவர் ஆலயத்தின் பிரகாரத்தில் அமையும் சூரியமூர்த்தி அமைக்கப்படுகிறார். இவருக்கு மார்த்தாண்ட பைரவர் என்பது பெயராகும்.

மேலும், சிவபெருமானுக்குக் கோயில் பொறுப்பாளராகச் சண்டேசுவரர் இருப்பதைப் போலவே பைரவர் ஆலயத்திலும் ஒரு சண்டேசுவரர் உள்ளார். இவரை (பிரபஞ்ச சாரசங்கிரகம் என்ற நூல்) சண்டேச பைரவர் என்றழைக்கிறது. இவர் சடையில் இளம்பிறையை அணிந்து சூலம், அட்சமாலை குண்டிகை,மழு ஆகியவற்றை ஏந்தி செவ்வாடை புனைந்து செந்தாமரை மலரில் வீற்றிருக்கின்றார் என்று துதி செய்கிறது. இவருக்குக் கொன்றை மலர்களை சூட்டுவதுடன் கொன்றை மலர்களை நெய்யில் தோய்த்து வேள்வி செய்யவேண்டும் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

மேலும் பிரகாரங்களில் பைரவரின் அஷ்ட சேனாதிபதிகளான கும்பன், விபாண்டகன், தண்டி, சாம்பன், சக்கரன், கதாரகன், முண்டகன், பிரளயன் என்ற எண்மரும் எழுந்தருள்கின்றனர். சில இடங்களில் பைரவரை நோக்கியவாறு அஷ்ட மாதர்கள் (அ) சப்தமாதர்கள் எழுந்தருளியுள்ளதைக் காண்கிறோம்.

பைரவ அடியவர்கள்

பைரவ ஆலயத்தினர் தென்னகமெங்கும் பரவியிருந்ததுடன் சிவனடியார்களை மிகுதியாகப் போற்றினர். அறுபத்து மூன்று நாயன்மார்களில் இடம் பெற்றிருக்கும் சிறுத்தொண்டர், இயற்பகையார், மானக் கஞ்சாரர் முதலிய பல அடியார்கள் வைரவ சமயத்தைச் சேர்ந்தவர்களேயாவர். இவர்களுடைய வீரசரிதங்கள் முன்பே விளக்கப்பட்டுள்ளதால் இங்கு வெளியிடப்படவில்லை. இவர்களுக்கு அருள்பாலிக்க வந்த சிவபெருமானின் பைரவ கோலத்தில் சிறப்புக்களை அந்தந்த மலர்களில் கண்டு மகிழ்க.

பைரவரின் எட்டுவித நாமங்கள் : 1. சட்டநாதன், 2. தண்டபாணி, 3. புழுகாளி, 4. ஆபதுத்தாரணன், 5. காலவைரவன், 6. அந்தரன், 7. ஆனந்தன், 8. மகாபைரவன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுவர்ண ஆகர்ஷண பைரவர்

● சுவர்ணதா-சுவர்ண பைரவர்

பைரவர் திகம்பரராகத் திகழ்ந்த போதிலும் அன்பர்களுக்குப் பொன்னையும் பொருளையும் அள்ளித் தருபவர். பண்டை நாட்களில் அரசர்கள் பொக்கிஷ சாலைகளில் பைரவரை நிறுவிச் சிறப்புப் பூசைகள் செய்து வழிபட்டனர். அதனால் நிதிச் சாலையில் பொன் குவிந்து கொண்டேயிருக்கும் என்பது நம்பிக்கையாகும்.

அவர் பொன்னை இழுத்துத் தருபவர் என்னும் பொருள்பட "சுவர்ண ஆகர்ஷண பைரவர்" என்று அழைக்கப்படுகின்றார்.

ஸ்ரீதத்துவநிதி என்னும் நூலில் சுவர்ணாகர்ஷண பைரவரைப் பற்றிய விளக்கம் உள்ளது இதன்படி:-

இவர் (பொன்) மஞ்சள் நிறம் கொண்டவர். மஞ்சள்நிறப் பீதாம்பர ஆடைகளை அணிந்தவர். மூன்று கண்களும் நான்கு கரங்களும் கொண்டவர். மாணிக்க மணிகள் இழைத்த பொன்னாலான அட்சய பாத்திரம் ஏந்தியவர். இரும்பு ஏர், சூலம், சாமரம், தோமரம் (ஈட்டி) ஆகியவற்றைத் தரித்தவர். அனைத்து தேவர்களாலும் வணங்கப்படுபவர். எல்லையில்லா மகிழ்ச்சியில் திளைப்பவர். சகல சித்திகளையும் அருள் பவர் ஆவார்.

ஸ்ரீ மகாலட்சுமி மந்திரகோசம் என்ற நூலில் சுவர்ணாகர்ஷண பைரவருக்கான மந்திரம் யந்திரம் முதலியன விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

இதில் சுவர்ணாகர்ஷண பைரவர் தேவியைத் தனது மடிமீது அமர்த்திக் கொண்டுள்ளார். பொன் நிறமாகப் பிரகாசிக்கும் அவள் ஸ்வர்ணா என்றும் சுவர்ணபைரவி என்றும் அழைக்கப்படுகிறாள்.

இவள் சகல அணிமணிகளைப் பூண்டவளாக வும் பொன் கொட்டும் குடம், தாமரை, அபயமுத்திரை தரித்தவர்களாகவும் பைரவரைத் தழுவிக் கொண்டு இடதுபாகத்தில் வீற்றிருப்பவளாகவும் தியானிக்கப்படு கிறாள்.

சுவர்ணாகர்ஷண பைரவர்-பைரவிக்குரிய யந்திரம் "ச்ரேச்வரி" என்றழைக்கப்படுகிறது.

சிதம்பரம் சுவர்ணாகர்ஷண பைரவர்

சிதம்பரத்தில் சிவபெருமான் அந்தரத்தராக (வான் வடிவினராக) நடமிடும் பொற் கோயிலின் உள்ளே எழுந்தருளியுள்ள பைரவர், சுவர்ணாகர்ஷண பைரவர் என்று அழைக்கப்படுகின்றார்.

உலாத்திரு மேனியாக உள்ள இப்பெருமான் திகம்பர கோலத்தில் நின்றவாறு காட்சியளிக்கின்றார். மேற்கரங்களில் டமருக, பாசம் விளங்க கீழ்க்கரங்களில் சூலமும் கபாலமும் உள்ளன. தலைமீது ஜ்வாலமுடி உள்ளது. அவருடைய இடப்பக்கத்தில் அன்பர்களை நோக்கியவாறு, வாகனமான நாய் நிற்கின்றது.

இவருக்கு நெய், பால், பஞ்சாமிருதம் முதலியவற்றால் அபிஷேகம் செய்கின்றனர். உச்சிகாலத்தில் மட்டுமே அபிஷேகம் செய்யப்படுகிறது. நெய்யில் செய்யப்பட்ட வடைகளை மாலையாகக் கோர்த்து அணிவிக்கின்றனர்.

முற்காலத்தில், தில்லைவாழ் அந்தணர்களான தீட்சதர்கள், எவரிடமும் பொன்னோ பொருளோ பெறுவதில்லை அவர்கள் பூசை முடிந்ததும் செம்பினால் செய்த தாமரை மலரைப் பைரவரின் பாதத்தில் வைத்து விடுவர். மறுநாள் பெருமானைப் பணிந்து அந்த மலரை எடுத்துக் கொள்வர். அது அவர்களுடைய பணிக்கேற்ப பொன்னாக மாறியிருக்கும். அதை விற்று அவர்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டனர். காலப்போக்கில் அந்நிலை மாறிவிட்டது என்றா லும், அன்பர்களின் மனப்பூர்வமான கோரிக்கைகளை ஏற்று பைரவமூர்த்தி அன்பர்களுக்கு அருள் வழங்கி வருகின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பைரவரின் தேவியர்கள்

"வடு" என்றால் இளைஞன், பிரம்மச்சாரி என்பது பொருள் எப்போதும், குமார பருவத்தில் இளைஞனாக வும், பிரம்மச்சாரியாகவும் இருப்பதால் பைரவர் வடுகன் என்று அழைக்கப்படுகின்றார். நடைமுறையில் அனைத்து ஆலயங்களிலும் பைரவர் பிரம்மச்சாரி யாகவே எழுந்தருளியுள்ளார்.

பல சமயநூல்கள் பைரவரைக் கல்யாண கோலத் துடன் தமது தேவியருடன் வீற்றிருப்பதாகவே குறிக் கின்றன.

பைரவர் எட்டு வடிவங்களைத் தாங்கி நின்ற போது, முறையே பிராம்மி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராகி, இந்திராணி, சாமுண்டி, சண்டிகை என்ற "அஷ்ட மாதர்கள்" அவர்களுக்குத் தேவியராக விளங்குகின்றனர். இதில் எட்டாவதாக உள்ள வைரவரின் தேவியான சண்டிகா தேவியைச் சில நூல்கள் மகாலட்சுமி, லட்சுமி துர்க்கை, பைரவ லட்சுமி, துர்க்காலட்சுமி என்று பலவாறு அழைக்கின்றன. இவள் திருமாலின் மனைவியான மகாலட்சுமியினின்று வேறானவள். இவள் வலிய வில்லையும், அம்பையும் ஏந்தியுள்ளாள். பதினெட்டு கரங்களைக் கொண்டு அவற்றில் பிரகாசிக்கும் ஆயுதங்களை தரித்தவள். பல அசுரர்களை அழித்தவள். அறுபத்துநான்கு யோகி னிகளாலும் அவர்களுடைய கணங்களாலும் எப்போ தும் தொழப்படுபவள் என்று பல நூல்கள் குறிப்பிடு கின்றன.

மேலும், அஷ்ட பைரவர்களை இரண்டு தேவி யர்களைக் கொண்டவர்களாகவும் சில நூல்கள் கூறு கின்றன. இதன்படி, எண்மருக்கும் முறையே, மங்கலா, அச்சிகா, யோகேசுவரி, ஹரசித்தி, பட்டாரிகை, கிரிகில்யா, காலராத்திரி, பீஷ்ண்யா என்பவர்கள் இரண்டாவது தேவியர்களாக குறிக்கப்பட்டுள்ளனர். இவர்களது உருவ வர்ணனையைப் பிரபஞ்ச சாரசங் கிரஹம் என்ற நூல் சிறப்புடன் குறிக்கிறது.

பைரவர் அறுபத்து நான்கு கோலங்களில் விளங் கும்போது அறுபத்துநான்கு யோகினிகளின் கணவ ராகப் போற்றப்படுகின்றார். அதனைப் பின்வரும் பட்டி யலில் காண்க.

சாரஸ்வதீய சித்ர கர்மம் என்னும் நூல் பைரவர் தாத்ரிகை, கௌரிகை என்னும் இரண்டு தேவியருடன் வீற்றிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

சுவர்ணாகர்ஷண பைரவர் சுவர்ணதா என்கின்ற சுவர்ண பைரவியைத் தன் மடிமீது அமர்த்திக் கொண்டு காட்சியளிக்கின்றார்.

நடைமுறையில் ஆலயங்களில் பைரவரைத் தேவியருடன் காண முடியவில்லை. என்றாலும், பைரவர் சட்டநாதராக எழுந்தருளியிருக்கும் நாகப் பட்டினம் (சட்டநாதசுவாமி) ஆலயத்தில் அவர் தேவி யுடன் காட்சியளிக்கின்றார். இங்கு இவருடைய தேவி அமுதவல்லி என்று அழைக்கப்படுகின்றாள். ஆனந்த பைரவருக்குத் தேவியாக இருப்பதால் இப்பெயர் பெற்றாள். (இங்கு அமைந்துள்ள பைரவர், அம்பிகை திருவுருவங்கள் உலோகத்தாலானதாகும்.

இராமகிரியிலுள்ள பைரவரின் ஆலயத்தில் அவருடைய தேவியான காளிகாதேவிக்குத் தனிச் சந்நிதியுள்ளது. இங்கு அம்பிகை கருங்கல் திருமேனி யாக எழுந்தருளியுள்ளாள். முன்கரங்களில் அபய, வரத முத்திரைகளையும், மேற்கரங்களில் சுருக்,ஓலைச் சுவடிகளையும் ஏந்தியுள்ளாள். இங்குள்ள பைரவர் ஞானபைரவர் ஆவார். ஆதலின் இவருடைய தேவி வேள்விகளை வளர்க்கும் ஹோமக் கரண்டியையும், ஞானநூற்சுவடியும் ஏந்தியவளாகக் காட்சியளிக் கின்றாள். இவள் வடிவம் தந்திரசாரம் என்ற நூலில்

. In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கூறியுள்ளபடி இவளுடைய உருவம் அமைந்துள்ளதாகும். இவள் யோகிகளாலும் முனிகளாலும் தொழப்படுகின்றாளென்று சமயநூல்கள் கூறுகின்றன.

பைரவரின் தேவியர்கள் அன்பர்களுக்கு அளவற்ற செல்வத்தையும் பாதுகாப்பான வாழ்க்கையையும் தந்து அருள்புரிகின்றனர்.

அறுபத்து நான்கு பைரவர்களும் அவர்களின் தேவியாரான அறுபத்து நான்கு யோகினிகளும்

1. அசிதாங்கர் - திவ்யயோகி
2. விசாலாட்சர் - மகாயோகி
3. மார்த்தாண்டர் - சித்தயோகி
4. மோதகப்பிரியர் - கணேசுவரி
5. சுவச்சந்தர் - பிரேதாசி பிகினி
6. விக்ன சந்துஷ்டர் - காளராத்திரி
7. கேசரர் - நிசாசரி
8. ஸசராசர் - ஜங்காரி
9. குரு - ஊர்த்துவ வேதாளி
10. குரோதம்ஷ்ட்ரர் - பிசாசி
11. சடாதரர் - பூதடாமரி
12. விசுவரூபர் - ஊர்த்துவகேசி
13. விருபாட்சர் - விரூபாக்ஷி
14. நாதாரூபதரர் - சுஷ்காங்கி
15. பரர் - நரபோஜனி
16. வஜ்ரஹஸ்தர் - ராக்ஷசி
17. மகாகாயர் - கோரரக்தாட்சி
18. சண்டர் - விஸ்வரூபி
19. பிரளயாந்தகர் - பயங்கரி
20. பூமிகம்பர் - வீரகௌமாரி
21. நீலகண்டர் - கீசண்டி (நீலகண்டி)
22. விஷ்ணு - வராகி
23. குலபாலகர் - முண்டதாரிணி
24. முண்டபாலர் - பிராமரி
25. காமபாலர் - ருத்ரவேதாளி
26. குரோதர் - பீஷ்கரி
27. பிங்கலேட்சணர் - திரிபுராந்தகி
28. அப்ரரூபர் - பைரவி
29. தராபாலர் - துவம்சனி
30. குடிலர் - குரோதி
31. மந்திரநாயகர் - துர்முகி
32. ருத்ரர் - பிரேதவாகினி
33. பிதாமகர் - கட்வாங்கி
34. உன்மத்தர் - தீர்க்கலம்போஷ்டி
35. வடுகர் - மாலினி
36. சங்கரர் - மந்திரயோகினி
37. பூதவேதாளதிரிநேத்ரர் - காலாக்னி
38. திரிபுராந்தகர் - கிராமணி
39. வரதர் - சக்ரி
40. பர்வதராசர் - கங்காளி
41. கபாலர் - புவனேஸ்வரி
42. சசிபூஷணர் - பட்காரி
43. ஹஸ்திசர்மாம்பரதரர் - வீரபத்ரேசி
44. யோகீசர் - தும்ராக்ஷி
45. பிரம்மராட்சர் - கலகப்பிரியா
46. சர்வக்ஞர் - கண்டகி
47. சர்வதேவேசர் - நாடகி
48. சர்வபூதஹ்ருதிஸ்திதர் - மாரி
49. பீஷ்ணாக்யர் - யமதூதி
50. பயகரர் - கராளினி
51. சர்வக்ஞயர் - கௌசகி
52. காலாக்னி - மர்த்தனி
53. மகாரௌத்ரர் - யக்ஷி
54. தட்சிணர் - ரோமஜங்கி
55. முகரோஸ்திரர் - பிரஹாரிணி
56. சம்ஹாரர் - சகஸ்ராக்ஷி
57. அதிரிக்தர் - காமலோலா
58. அங்கர் - காகதமிஷ்டரி
59. காலாக்னி - அதோமுகி
60. பிரியங்கரர் - துர்ச்சடி
61. கோரநாதர் - விகடி
62. விசாலாட்சர் - கேசி
63. யோகீசர் - கபாலி
64. தட்சசம்ஸ்திதர் - விஷலங்கிணி

❀ வட இந்தியாவிலுள்ள பேரகாட் எனுமிடத்தில் அறுபத்தி நான்கு யோகினிகளுக்கான கோயில் உள்ளது. இதனை கௌரி சங்கர் கோயில் என அழைக்கின்றனர். இதில் சாக்த தந்திரங்களில் கூறப்பட்டுள்ள தியான சுலோகங்களை அடியொற்றி யோகினிகளின் திருவுருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தென்னிந்தியாவில் வடஆற்காடு மாவட்டம் காவேரிப் பாக்கத்தில் அறுபத்தி நான்கு யோகினிகள் ஆலயம் இருந்ததென்று கூறுகின்றனர். இது காலப்போக்கில் அழிந்து விட்டது.

❀ மைசூருக்கு அருகில் அறுபத்து நான்கு பைரவர் ஆலயம் அமைந்துள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பைரவ பஞ்சாவரண பூஜையும் - பைரவ மண்டலமும்



சைவநெறி வழிபாட்டில் அனைத்துத் தெய்வங்களையும் உரிய பரிவார தேவர்களோடு வணங்குகின்றோம். உண்மையில் பெருமானுக்கு பலநூறு பரிவார தேவர்கள் இருப்பினும் அவற்றுள் சிலரை ஐந்து ஆவரணங்களில் அமைத்து வழிபடுவது வழக்கம். இதற்குப் பஞ்சாவரண பூசை என்பது பெயர். நித்திய வழிபாட்டிலும் கும்பாபிஷேகம் முதலிய சிறப்புப் பூசைகளிலும் இந்தப் பஞ்சாவரண பூசை தனிச்சிறப்பிடம் பெறுகின்றது. இப் பகுதியில் பைரவருக்கான பஞ்சாவரணத்தைக் காணலாம்.

அழகிய பத்மத்தில் மகா பைரவர் பைரவியோடு வீற்றிருக்கின்றார். அவரைச் சுற்றி அமையும் முதல் ஆவரணத்தில் ஈசானம், தத்புருஷம், வாமதேவம், அகோரம், சத்யோஜாதம் என்னும் ஐந்து பிரம்மங்களும் ஹ்ருதயம், சிரசு, சிகை, கவசம், நேத்திரம், அஸ்திரம் என்னும் ஆறு அங்கங்களும் பூசிக்கப்படுகின்றன.

இரண்டாவது ஆவரணத்தில் அஷ்ட வித்யேசுவரர்களான வடுகர்கள் பூசிக்கப்படுகின்றனர். இவர்கள் முறையே 1. மகாமந்தானர், 2. பஞ்சவக்திரர், 3. ரவிபட்சணர், 4. ஏகாளந்தர், 5. சண்டபைரவர், 6. நபோநிர்மலர், 7. டமருபாஸ்கரர், 8. பட்காரர் என்று பெயர் பெறுகின்றனர். இவர்கள் இரண்டு கரங்கள் கொண்டு அவற்றில் கபாலமும், தண்டமும் ஏந்தியவர்கள்.

மூன்றாவது ஆவரணத்தில் அஷ்ட மாதர்களுடன் கூடிய அஷ்ட பைரவர்கள் வழிபடப்படுகின்றார். இவர்கள் 1. பிராஹ்மி-அஜிதாங்கர், 2. மகேஸ்வரி-குரு, 3. கௌமாரீ-சண்டர், 4. வைஷ்ணவி குரோதனர், 5. வாராகி-உன்மத்தர், 6. மகேந்திரி கபாலீசர், 7. சாமுண்டி-பீஷ்ணர், 8. சண்டிகை-சம்ஹாரர் எனப்படுகின்றனர்.

நான்காவது ஆவரணத்தில் பைரவரின் படைத் தலைவர்களான பத்து வேதாளர்கள் பூசிக்கப்படுகின்றனர். இவர்கள் கிழக்கிலிருந்து முறையே (கிழக்கில் ஹேதுகர், (தென்கிழக்கில்) காலாக்னி ரூபர், (தெற்கில்) ஏகபாதர், (தென்மேற்கில்) திரிபுராக்னி, (மேற்கில்) பீமரூபர், (வடமேற்கில்) வஹ்கி, (வடக்கில்) அசரர், (வடகிழக்கில்) அக்னி ஜ்ஹ்வா என்று பெயர்பெறுகின்றனர். மேலும், ஆகாயத்தில் உள்ள வேதாளர் கராளர் என்றும், பாதாளத்திலுள்ளவர் ஹாடகேசுவரர் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

ஐந்தாவது ஆவரணத்தில் கிழக்கில் தொடங்கி இந்திரன், அக்னி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், பிரம்மா, விஷ்ணு என்னும் தசதிக் பாலகர்களை பூசிக்க வேண்டும்.

இப்படிப் பஞ்சாவரணத்துடன் பைரவரை பூசிப்பவன் சகல ஐஸ்வர்யங்களை அடைவதுடன், பகைவர்களை வென்று சுகமாக வாழ்கிறான் என்று சமய நூல்கள் கூறுகின்றன.

சிவாலயங்களில் மண்டல பூசையாகவும் இதனை செய்ய வேண்டுமென்று விதிக்கப்பட்டுள்ளது. பைரவ மண்டலத்தில், நடுவில் எட்டு இதழ் தாமரை ஆசனமாக அமைகிறது. அதைத் சுற்றி முக்கோணம் உள்ளது. முக்கோணத்தைச் சுற்றி சதுரம் உள்ளது.

இதில் நடுவிலுள்ள தாமரையில் மகாபைரவர் பைரவியோடு எழுந்தருளியுள்ளார். தாமரையின் எட்டு இதழ்களிலும் அஷ்டபைரவர்கள் தத்தம் தேவியருடன் எழுந்தருளியுள்ளனர். அதையடுத்த முக்கோணத்தில் மும்மூர்த்திகள் வடிவான மூன்று பைரவர்கள் உள்ளனர். இவர்கள் வாக்தேவியுடன் கூடிய விரிஞ்சிவடுகர், ஸ்ரீதேவியுடன் கூடிய முகுந்தவடுகர் - கௌரிதேவியுடன் கூடிய உருத்திர வடுகர் எனப்படு கின்றனர். நாற்கோணத்தின் பக்கங்களில் தசதிக் பாலகர்கள் பூசிக்கப்படுகின்றனர். இந்த மண்டலத்தை வண்ணக் கோலமாக வரைந்து பூஜை செய்து பாயாசம் பலிப்பொருளாக அளிக்கப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காசி நகரும் பைரவ வழிபாடும்

சிவபெருமானின் திரிசூலத்தால் தாங்கப்படுவதும், எக்காலத்தும் அழியாதததுமான நகரம் காசியாகும். காசியில் சிவபெருமான் எப்போதும் நீங்காது வாசம்புரிகிறார். அதனால் இது சிவவாசம் என்றும் போற்றப்படுகின்றது.

காசியிலுள்ள அனைத்து சிவாலயங்களிலும் சிவபெருமானின் தலைமைக் காவலரான பைரவ மூர்த்தி அனேக பெயர்களில் எழுந்தருளியுள்ளார். இவற்றின் தலைமையிடம் காலபைரவர் சந்நிதியாகும். இது காசியில் விசுவநாதர் கோயிலுக்கு வடக்கில், பைரவநாத் என்னுமிடத்தில் அமைந்துள்ளது.

இங்குள்ள மூலவர் திருவுருவம் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டதாதலின் மிகவும் தேய்ந்து போயுள்ளது. அதன்மீது செந்தூரம் பூசியுள்ளனர். மேலே சரிகைத் துணி போர்த்தப்பட்டு முககவசம் அணிவிக்கப்பட்டுள்ளது. கருப்பு, நீல, சிவப்பு மலர்கள் சூட்டப்படுகின்றன.

கருவறைக்கு முன்புறம் பெரிய மண்டபம் உள்ளது. கருவறையையும் முன் மண்டபத்தையும் சுற்றி மண்டபத்துடன் கூடிய பிரகாரமும், திறந்தவெளிப் பிரகாரமும் உள்ளன. மண்டபத்தில் பலவகையான ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. கோயிலுக்குக் கிழக்கிலும் மேற்கிலும் வாயில்கள் உள்ளன.

இந்தப் பைரவருக்கு இனிப்புப் பண்டங்களும், மதுவும் படைக்கப்படுகின்றன. திங்கள், வெள்ளிக் கிழமைகளில் நள்ளிரவு வழிபாடு நடைபெறுகின்றது.

இந்தச் சந்நிதியில் மந்திரிக்கப்பட்ட காப்புக் கயிறு அன்பர்களுக்கு அளிக்கப்படுகின்றது. இவை கருப்பு, மஞ்சள், சிவப்பு நிறங்களில் உள்ளன. இவற்றை அன்பர்கள் கழுத்து, வலதுதோள், மணிக்கட்டு முதலிய இடங்களில் கட்டிக் கொள்கின்றனர்.

காசி விசுவநாதர் ஆலயத்தில் கருவறைக்கு நேர் எதிரில் அமைந்துள்ள சந்நிதியில் பைரவர் தண்டபாணி என்னும் பெயரில் எழுந்தருளியுள்ளதையும் காண்கிறோம்.

காசிநகரில் உத்தரவாகினியாக ஓடும் கங்கையின் கரைகளில் அறுபத்து நான்கு நீராடு துறைகள் உள்ளன. இவற்றை காட் அல்லது கட்டங்கள் என்று அழைக்கின்றனர். இந்த அறுபத்தி நான்கிலும் பஞ்சாயதன வழிபாட்டை உணர்த்தும் வகையில் சூரியன், அம்பிகை, கணபதி, திருமால், சிவலிங்கம் ஆகிய திருவுருவங்கள் அமைத்து வழிபடப்படுகின்றன.

காால பைரவர்-காசி (வாரணாசி)

இப்படி அமைந்த ஒவ்வொரு கட்டத்திலும் வீற்றிருக்கும் சிவபெருமானுக்குச் சிறப்புப் பெயர்கள் அமைந்துள்ளன. இப்படி வீற்றிருக்கும் சிவபெருமானுக்குக் காவலாகவும், இந்தத் துறைகளில் நீராடி மகிழும் அன்பர்களுக்குக் காவலாகவும் பைரவ மூர்த்தி அறுபத்துநான்கு திருவுருவம் தாங்கி எழுந்தருளியுள்ளார். இடத்திற்கு ஏற்ப இவர்களுக்குத் தனியான சிறப்புப் பெயர்கள் வழங்குகின்றன.

இதுதவிர மோகன பைரவர், ஆனந்தபைரவர், துவாரபைரவர், ஞானபைரவர் முதலிய அனேக பைரவர்கள் எழுந்தருளியுள்ள பைரவ ஸ்தானங்களுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காசியில் மகாசக்தி பீடமாக விளங்கும் அன்ன பூரணி பீடத்தில், பராசக்தி "மகா மங்களகௌரி" என்னும் பெயரில் எழுந்தருளியுள்ளாள். இவளுக்கு அன்னபூரணி என்ற பெயர் வழங்குகின்றது. இங்கு சக்திகணமான அறுபத்து நான்கு யோகினிகளும் நீங்கா திருந்து பராசக்திக்குச் சேவை புரிகின்றனர். இவர்கள் அறுபத்து நான்கு பேர்களும் அறுபத்தி நான்கு பைரவர் களுக்குத் தேவியராகத் திகழ்கின்றனர்.

காசிக்குச் செல்பவர்கள் கண்டிப்பாகக் காலபைர வரைத் தரிசனம் செய்வதுடன் அவருடைய பிரசாத மான காப்புக்கயிறையும் அணிந்து கொள்ள வேண்டும். இதனால் வாழ்க்கையில் ஏற்படும் தடைகள் நீங்குவது டன் பயம் விலகும். வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில் ஏற்படும் மரணவேதனைகளும் துன்பமும் யமபயமும் உண்டாகாது.

இவர்பேரில் காலபைரவ அஷ்டகம் பாடப்பட் டுள்ளது. இதனை, தினமும் பாராயணம் செய்துவந்தால் பகைவர்கள் தொல்லையும், இயற்கையில் ஏற்படும் துன்பங்களும் விலகும்; மனநிம்மதி உண்டாகும்.

காசிக்கண்டம் என்னும் நூலில் பைரவரின் சிறப்புக்களும் அறுபத்துநான்கு பைரவர்களின் பெயர்களும், அவருக்குத் தேவியாக விளங்கும் அறுபத்து நான்கு யோகினிகளின் பெயர்களும் பிறசெய்திகளும் சிறப்புடன் இடம் பெற்றுள்ளன.

மார்கழிமாதத்துத் தேய்பிறை அஷ்டமி நாளில் இவருக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகின்றன.

காசி நகரில் பல இடங்களில் பைரவர் எழுந்தரு ளியிருப்பதால் அவர்கள் அனைவரையும் தேடிக் கண்டுபிடித்து வணங்குதல் சாத்தியமில்லை என்பதால், எட்டு பைரவர்களை மட்டும் சிறப்புடன் வழிபடுகின்ற னர். கார்த்திகை, மார்கழி மாத தேய்பிறை, வளர்பிறை அட்டமி நாட்களில் இவர்களை வழிபடுகின்றனர். இதற்கு அஷ்ட பைரவ யாத்திரை என்பது பெயராகும்.

(இதன் விவரத்தை பக்கம் 1896-ல் காண்க)

காசி நகரில் இறப்பவரின் கணக்கைச் சித்திர குப்தர் எழுதுவதில்லை. காலபைரவரே எழுதி பலன் களையும் அளிக்கின்றார்.

இவருடைய சந்நிதியில் மிருத்யுஞ்சய மந்தி ரத்தை ஓதுபவரையும், கேட்பவரையும் கண்டு யமன் அஞ்சி நிற்கின்றான்.

காசியே பைரவரின் பிரதானமான க்ஷேத்திரமா கும். இங்கு செய்த வேள்வியில் தோன்றியவரே திருப் பத்தூர் யோகபைரவர் ஆவார். இங்கு கங்கை ஆற்றிலி ருந்து வெளிப்பட்டு ராமதேவ சித்தரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதே நாகைப்பட்டினம் சட்டநாதர் திருவுரு வமாகும். இப்படி எல்லா பைரவர்களும் காசியிலிருந்து வெளிப்பட்டு பலதலங்களில் நிலை பெற்றுள்ளனர்.

நாய் வாகனம்

பைரவர் காவல் தெய்வமாக விளங்குவதால் காவல் குறியீடான நாயை வாகனமாகக் கொண்டுள் ளார். இந்த நாய் அவருக்குப் பின்புறம் குறுக்காகவும், அவருக்கு இடதுபுறம் நேராகவும் நிற்கின்றது. சில கலைஞர்கள் இந்த நாய் பைரவரின் கரத்திலுள்ள வெட்டுண்ட தலையிலிருந்து வடியும் இரத்தத்தைச் சுவைப்பதுபோலவும் அமைத்துள்ளனர்.

அபூர்வமாகச் சிலதலங்களில் நான்கு நாய்களுட னும் பைரவர் அமைக்கப்பட்டுள்ளார்.

இராமகிரி என்னும் தலத்தில் அன்பர்கள் பிரார்த் தனை செய்துகொண்டு பைரவர் சந்நிதியில் நாய் உருவத்தைச் செய்து வைத்துள்ளனர். இதனால் இங்கு நிறைய நாய் சிலைகள் இருக்கின்றன. பிள்ளைப் பேறு வேண்டி இக்கோயிலை வலம் வரும் பெண்கள் இதி லொரு நாய்வடித்தை மடியில் கட்டிக் கொண்டு வலம் வந்தபின் அதை அங்கேயே வைத்துவிட்டு வருகின்றனர்.

மல்லாரி சிவர் என்னும் பைரவர் ஏழு நாய்கள் சூழ இருப்பதாக மல்லாரி மகாத்மியம் கூறுகிறது.

பூர்வகாரண ஆகமத்தில் ஆதியில் வேதம் காளை வடிவம் கொண்டிருந்து என்றும் கலியின் கொடுமையால் வலியிழந்து இப்போது நாயுருவில் உள்ளது என்றும், அதுவே பைரவருக்கு வாகனமாகியது என்றும் கூறுகிறது. மேலும், வானில் உலவிய அதன் கால்கள் இப்போது சுடுகாட்டில் அலைகின்றன என்றும் கூறுகிறது. பலவேறு சமய நூல்களும் வேதமே நாய்வடிவம் கொண்டு பைரவருக்கு வாகனமாக இருக்கிறது என்று குறிக்கின்றன. இதையொட்டி பைரவருக்கு நாய் கொடியாகவும் உள்ளது.

ஸ்ரீருத்ரத்தில் இறைவன் நாயாகவும், நாயின் தலைவனாகவும் கூறப்படுவது இங்கே எண்ணத்தக்க தாகும். பைரவரின் நாய்க்கு "சாரமேயன்" என்பது பெயராகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சீர்காழி சட்டைநாதர்

சிவனால் தோற்றுவிக்கப்பட்ட பைரவனைத் தலைமைக் கடவுளாகக் கொண்ட சமயம் பைரவம் ஆகும். இதனைப் பின்பற்றும் சமயவாதிகள் இந்தியா எங்கும் பரவியிருந்தனர். கௌமார சமயத்தினர், ஐமுகச் சிவனே அறுமுகனாகத் தோன்றினான் என்று கூறுவதைப் போலவே, பைரவ சமயத்தினர் சிவபெருமானே வடுகன், பைரவன் முதலிய வீரவடிவம் தாங்கி வந்து அன்பர்களுக்கு அருள்பாலிக்கின்றான் என்று நம்புகின்றனர். அத்தகைய சமயவாதிகளின் சமயக் கேந்திரங்களில் ஒன்றாகத் திகழ்ந்தது சீர்காழியாகும். பைரவ சமயம் இன்று இங்கு இல்லாவிட்டாலும் அந்தச் சமயத்தினரின் தலைமைக் கடவுளான பைரவர் அங்கு வீற்றிருந்து அருள்பாலித்து வருகின்றார்.

சைவர்களின் தலைமைத்தானமான சிதம்பரத்திற்குத் தெற்கில்-மயிலாடுதுறை, நாகப்பட்டினம் செல்லும் சாலையில் அமைந்திருப்பது சீர்காழியாகும்.

இங்குப் பிரம்மனால் பூசிக்கப்பட்ட பெரிய சிவாலயம் உள்ளது. இதிலுள்ள லிங்கம் பிரம்மபுரீசுவரர் என்று அழைக்கப்படுகின்றது. இவருக்கு மேலே அமைந்துள்ள தளத்தில் சிவபெருமான் உமாதேவியுடன் தோணியப்பராக வீற்றிருக்கின்றார். இவருக்கு மேலே அமைந்துள்ள ஸ்ரீவிமானத்தின் தெற்கு கோட்ட விமானதேவராக அமைந்திருப்பவர் வடுகநாதன் எனப்படும் சட்டநாதர் ஆவார்.

இது அத்திமரத்தால் அமைந்த திருமேனியாகும். இதற்கு அபிஷேகம் செய்யப்படுவதில்லை. புனுகு சட்டம் எனப்படும் புனுகு எண்ணை மட்டுமே பூசப்படுகிறது. தேங்காயை உடைக்காமல் முழுக்காயாகவே நிவேதனம் செய்கின்றனர். சிறப்பு நாட்களில் வடை மாலைகள் அணிவிக்கப்படுகின்றன.

இவருக்காக வேண்டிக் கொள்ளும் அபிஷேகம் யாவும் இவருக்கு எதிரில் கீழே முதல்தளத்திலும் இரண்டாம் தளத்திலும் உள்ள பலிபீடங்களுக்கே செய்யப்படுகின்றன.

இவருக்கு உரிய சிறப்பு பூஜை நேரம் வெள்ளிக் கிழமை நள்ளிரவாகும். இக்கோயிலில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் 10 மணிக்குத் தொடங்கி 12மணி வரை பலிபீடத்திற்குச் சிறப்பு அபிஷேகங்கள் செய்யப்பட்டு சட்டநாதருக்குச் சிறப்புப் பூஜையும் தீபாராதனையும் செய்யப்படுகின்றன.

❁ முத்துச்சட்டநாதர்-சீர்காழி

இக்கோயிலின் இரண்டாம் பிராகாரத்தின் வடமேற்கு முனையில் தெற்கு நோக்கியவாறு சட்டநாதர் உலாத்திருமேனியாகத் தனிச்சந்நிதியில் வீற்றிருக்கின்றார். இது கம்பீரமும், வனப்பும் வடிவழகும் உள்ள திருவுருவமாகும். இவரை முத்துசட்டை நாதர் என்று அழைக்கின்றனர்.

இக்கோயிலின் மூன்றாம் பிராகாரத்தில் வலம்புரி மண்டபம் என்ற பெரிய சந்நிதி வடக்கு நோக்கியுள்ளது. சுமார் எட்டடி உயர மேடைமீது அமைந்துள்ள இம் மண்டபத்தின் மையத்தில் கருவறையும் சுற்றி சிறுபிராகாரமும் உள்ளன. இந்த மண்டபத்திற்கு யோகஸ்தானம் என்பது பெயராகும். பிராகாரச் சுவரில் எட்டு முனைகளிலும் எட்டு மாடங்கள் அமைக்கப்பட்டு எட்டு பைரவர்கள் எழுந்தருளி வைக்கப்பட்டுள்ளனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவர்களின் பெயர்கள். 1.சுதந்திரபைரவர், 2. சுயேச்சை பைரவர், 3. லோக பைரவர், 4. கால பைரவர், 5. உக்ர பைரவர், 6. பிரச்சையா பைரவர், 7. நிர்மாண பைரவர், 8. பீஷ்ண பைரவர் என்பதாகும்.

இங்கு மையக் கருவறையில் சப்ரமஞ்சமும் பெரியஊஞ்சலும் அதில் பெரிய கண்ணாடியும் அமைந் துள்ளன. கண்ணாடிக்கு முன்புறம் இரும்பாணிகள் பதித்த முள்பாதக் குறடுகள், சுக்குமாந்தடிகள், தண்டங் கள் முதலியன உள்ளன.

இந்தக் கண்ணாடியில் ஸ்ரீ விமானத்திலுள்ள சட்டநாதரின் உருவம் பிரதிபலிக்கும் என்றும் அந்த நிழல் உருவத்தையே வழிபடவேண்டும் என்பது மரபாகும். பின்னாளில் பாதுகாப்பு கருதி மதில் சுவர்கள் உயர்த்திக் கட்டப்பட்டபோது சட்டநாதரின் உருவம் கண்ணாடியில் தோன்றுவதில் தடை உண்டாகிவிட்டது. அதனால் கண்ணாடிக்கு மட்டும் பூசை நடைபெறுகிறது.

பைரவர் ஸ்ரீவிமானத்தில் உயரத்தில் இருப்பதால் ஆகாச பைரவர் என்றும் எப்போதும் மகிழ்வுடன் ஊஞ்சலில் ஆடிக்கொண்டிருப்பதால் மகா ஆனந்த பைரவர் என்றும் அழைக்கப்படுகின்றார்.

இந்த வலம்புரி மண்டபமும் வெள்ளிக்கிழமை நள்ளிரவு பூசையின்போது மட்டுமே திறக்கப்பட்டு சிறப்பு பூசைகள் செய்யப்படுகின்றன. மற்ற வேளை களில் இது மூடப்பட்டே இருக்கும்.

சித்திரைமாதம் நடைபெறும் பெருவிழா முடிந்த பிறகு வரும் வெள்ளிக்கிழமையன்று முத்து சட்டை நாதரை அலங்கரித்து வலம்புரி மண்டபத்திற்கு எழுந்த ருளச் செய்கின்றனர். அங்கு சிறப்பு அபிஷேக ஆராத னைகள் நடந்தபிறகு மீண்டும் யதாஸ்தானத்திற்கு எழுந் தருளச் செய்கின்றனர்.

சீர்காழிப் புராணம் சட்டைநாதர் இங்கு எழுந்த ருள்வதற்குக் காரணமான வரலாற்றையும் அன்பர்க ளுக்கு அருள்புரிந்த செய்திகளையும் விரிவாகக் கூறுகின்றது. இதன்படி :

ஒரு சமயம் திருமால், இரணியன் என்னும் அசுரனைக் கொல்ல நரசிம்ம அவதாரம் எடுத்தார். அவனோடு கடும்போர் புரிந்து அவனுடைய உடலைப் பிளந்து உதிரத்தைக் குடித்தார். குடலை மாலையாக அணிந்து ஆர்ப்பரித்தார். பின்னும் சினம் அடங்காத வராக உலகெங்கும் திரிந்து அட்டகாசம் புரிந்தார்.

அவருடைய கடுஞ் செயலால் அஞ்சிய தேவர் கள் சிவபெருமானைச் சரணடைந்து அவரிடமிருந்து தம்மைக் காக்குமாறு வேண்டினார். அவர் பைரவனைப் படைத்து நரசிம்மரை அடக்குமாறு கூறினார். பைரவர் சரபப்பட்சியாக உருவம் கொண்டு நரசிம்மரை அடக்கி அவரது தோலை உரித்துப் போர்த்துக் கொண்டார். அதனால் தனது இயல்பை அடைந்த திருமால் பைர வரைப் போற்றினார்.

இப்படித் தேவர்கள், மனிதர்கள் முதலியோரின் ஆபத்துக் காலத்தில் தோன்றி அருள்புரிவதால் அன்று முதல் பைரவர் "ஆபதுத்தாரணர்" என்று போற்றப்படு கின்றார். அந்தப் பெயருடன் சீர்காழி, ஸ்ரீவிமானத்தில் அமர்ந்தார்.

பின்னர், ஒருசமயம் திருமால் மாபெரும் சிவபக்த னான மகாபலிச் சக்ரவர்த்தி செய்த யாகத்திற்குச்சென்று மூன்றடி மண்கேட்டார். அவன் அதைத் தாரைவார்த்துத் தந்ததும் விண்ணுக்கும் மண்ணுக்கும் பரந்து நின்று பேருருக் கொண்டார். விண்ணை ஒரு அடியாலும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சீர்காழி - ஒருவிளக்கம்

சட்ட நாதராக விளங்கும் பைரவ மூர்த்திக்குத் தலைமைத்தானமாக இருப்பது சீர்காழியாகும்.

எதனாலும் அழிக்கமுடியாத பொருளை வைரம் பாய்ந்தது என்று போற்றுகின்றோம். எவராலும் வெல்ல முடியாத பெருமானாக இருப்பதால் உக்கிரமயமான சிவ மூர்த்தியை வஜ்ஜிர மூர்த்தி என்றும் வயிரவர் என்றும் அழைக்கின்றோம். வயிரத்திற்கு தூய தமிழ்ச் சொல் காழ் என்பதாகும். வைரவமூர்த்தியின் இடமாக இருப்பதால் இத்தலம் காழி எனப்பட்டது. சீர் என்பது சிறப்புமிகுந்த பொருளை குறிக்கும் சிறப்புச் சொல்லாகும். அதையொட்டி இத்தலம் சீர்காழி எனப்பட்டது. சீர் என்ற அடைமொழியை பைரவசமயத்தினர் அதிக அளவில் பயன்படுத்தியுள்ளனர். திருச்செங்காட்டங் குடியில் வீற்றிருந்தருளும் பைரவமூர்த்திக்கும், இங்கு பணிசெய்து பேறு பெற்ற சிறுத்தொண்டரின் திருமகனுக்கும் சீராளன் (சீர் + ஆ ளன்) என்ற பெயர் வழங்குவது குறிப்பிடத்தக்கதாகும்.

மண்ணை ஒரு அடியாலும் அளந்த, பின்னர் அவனிடம் மூன்றாவது அடிக்கு இடம் எங்கே என்றார். அவன் தனது தலையைக் காண்பித்தான். திருமால் அவன் தலைமீது அடியை வைத்து அவனைப் பாதாளத்திற்கு அழுத்தி விட்டார்.

பின்னர் அந்தச் செயலால் மிகுந்த கர்வம் கொண்டு உலகினை வருத்தினார். அவரிடம் அஞ்சிய எல்லோரும் சிவபெருமானைச் சரணடைந்தனர். அவர் பைரவரை ஏவ, வடுகர் திருமாலைப் பற்றி அவருடைய தோலை உரித்துச் சட்டையாக அணிந்து கொண்டார். அவருடைய உடலிலிருந்த மாமிசம் முதலியவற்றைத் தன் உடல்மீது பூசிக் கொண்டார். திருமால் உண்மையை உணர்ந்து அவரை வழிபட்டுப் பேறுபெற்றார்.

இதனால் இவருக்குச் சட்டைநாதர் என்பது பெயராயிற்று. இன்னும் பல புராணக் கதைகள் இவருடைய சிறப்பை விளக்குகின்றன.

இந்தக் கோயில் தருமையாதீனத்திற்குச் சொந்தமானதாகும். இந்த ஆதீனத்தில் பத்தாவது குரு மகா சந்நிதானமாகக் கொலுவீற்றிருந்த ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் வடுக நாதர் பேரில் ஆபதுத்தாரணர் மாலை என்ற நூலை அருளிச் செய்துள்ளார். இது 30 பாடல்களைக் கொண்டதாகும்.

மேலும், இவ்வூரின் மாடவீதியில் பைரவருக்கான தனிச் சிற்றாலயமும் உள்ளது.

கணநாதன்

ஆனந்தபைரவர், அறுபத்து நான்கு பைரவர்களுக்கும், அவர்களுடைய மனைவியரான அறுபத்தி நான்கு யோகினியர்களுக்கும் அந்த அறுபத்தி நான்கு யோகினியரின் சேனைகளான 64 கோடி யோகினிகளுக்கும் தலைவர். இத்தகைய பெரிய கணத்தொகுதிக்கு நாயகராக இருப்பதால் அவர் கணநாயகர் என்று அழைக்கப்படுகின்றார். இவர்கள் அனைவருக்கும் தனித்தனி உருவம் அமைத்து வழிபட முடியாது என்பதால் பெரிய பலிபீடத்தில் இவர்களை மந்திரப் பூர்வமாக எழுந்தருள வைத்து வணங்குகின்றோம். இத்தகைய பலிபீடம் ஒன்று சீர்காழி மாடவீதியின் தெற்குப் பகுதியில் உள்ளது. இங்கு பலிபீடத்திற்குத் தனி சிற்றாலயம் அமைக்கப்பட்டுள்ளது. இதனைக் கணநாதர் கோயில் என்று அழைக்கின்றனர்.

மேலும் பல ஆலயங்களில் இத்தகைய பலிபீடங்களைக் காண்கிறோம். நகரத்தார் கோயில்களில் ஒன்றான நெடுமரத்தில், பைரவர் ஆகாச பைரவர் என்று அழைக்கப்படுகிறார். இவருக்குத் தனி உருவம் அமைக்காமல் பலிபீடத்தையே அமைத்து வழிபடுகின்றனர்.

❁ கணநாதன் என்பது நடைமுறையில் விநாயகருக்கு உரிய பெயர்களில் ஒன்றாக உள்ளது. ஆனால் அது பைரவருக்கே உரியதாகும். அவர் ஓரிடத்தில் தங்காமல் தமது கணங்களுடன் சஞ்சரித்துக் கொண்டே இருக்கின்றார் என்பதால் இப்பெயர் பெற்றார்.

❁ அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர் கணநாதர் ஆவார். இவர் சிவனடியார்களை நெறிப்படுத்தியதுடன் திருஞான சம்பந்தர் மீது பக்தி பூண்டு பணி செய்து சிவலோகம் பெற்றவர் ஆவார். இவர் சீர்காழி சட்டநாதர் பெயரில் கொண்டிருந்த பக்தியால் அவருடைய பெயர்களில் ஒன்றான கணநாதர் என்ற பெயர் பெற்றார் என்பர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருப்புத்தூர் யோக பைரவர்

பாண்டிய நாட்டுப் பழம்பதியான திருப்புத்தூர் தேவாரப்பாடல் பெற்றதலமாகும். திருஞானசம்பந்தரும், அப்பரடிகளும் இத்தலத்தைச் சிறப்பித்துப் போற்றியுள் ளனர். ஸ்ரீதேவியான மகாலட்சுமியால் பூசிக்கப்பட்டதா தலின் இவ்வூர் திருப்புத்தூர் என்றும், கோயில் ஸ்ரீதளி என்றும்; இறைவர் ஸ்ரீதளி நாதர் என்றும்; சிறப்புப் பெயர் பெறுகின்றனர். இறைவன் லட்சுமி தேவிக்கும் அம்பிகைக்கும் தனது ஆடற்கோலத் தைக் காட்டிய நடராசத்தலமாதலின் அம்பிகை "சிவகாமசுந்தரி" என்று அழைக்கப் பெறுகின்றாள்.

மதுரையிலிருந்து – காரைக்குடி செல்லும் சாலை யில் அமைந்துள்ளது. இந்நாளில் திருப்பத்தூர் என்று அழைக்கப்படுகிறது. இங்குள்ள ஆலயம் கோட்டை போன்ற அமைப்பை உடையதாகும். இங்கு சிவலிங்க மூர்த்தியாகச் சீதளிநாதர் எழுந்தருளியிருந்தாலும் இங்குள்ள வைரவர் பெயரால் இது வைரவன் கோயில் என்றே அழைக்கப்படுகிறது.

இக்கோயிலின் இரண்டாவது பிராகாரத்தில் (வடக்கில்) மேற்கு நோக்கியவாறு பைரவருக்கான தனி ஆலயம் உள்ளது. கருவறை மீது அழகிய தங்கக் கலசம் கொண்ட விமானமும் ஆலயத்திற்கு முன்புறம் அழகிய மகா மண்டபமும் உள்ளன. அதற்கும் மேற்கில் சுதந்திரப் போராட்டச் சிங்கங்களான சிவகங்கைச் சீமை மருது பாண்டிய சகோதரர்களால் கட்டப்பட்ட மண்டபம் உள்ளது. இதில் அவர்களுடைய திருவுரு வங்கள் பைரவமூர்த்தியை எப்போதும் வணங்கிக் கொண்டிருக்கும் நிலையில் உள்ளன. அவர்கள் அளித்த பச்சைக்கல் பதக்கம் இக்கோயிலில் உள்ளது.

இங்குள்ள கருவறையில் பைரவர் யோகமூர்த்தி யாக எழுந்தருளியுள்ளார். இவர் வடிவம் வழக்கமாகப் பிறதலங்களிலுள்ள பைரவமூர்த்தியைப் போன்றதன்று. இதில் குழந்தை வடிவத்திலுள்ளார். தனது இரண்டு பாதங்களையும் பிணைத்து முழந்தாளை ஒடுக்கித் திருவடிகள் நிலத்தில் பதியாது உடம்புக்குள் அடங்க வைத்துள்ளார். கடைவாயின் ஓரங்களில் கோரைப் பற்கள் உள்ளன. கழுத்தில் முத்துமாலையும் மார்பில் பூணூலும் உள்ளன. வலது கரத்தில் பழத்தை ஏந்தி இடது கரத்தைத் தொடைமீது வைத்துள்ளார். உலோகத் தால் செய்த சூலம் வலது தோளில் சார்த்தப்பட்டுள்ளது.

இங்கு நான்கு கால பூஜைகள் நடைபெறுகின்றன. அர்த்த சாமத்தின்போது சிறப்பு வழிபாடு நடை பெறுகின்றது. இந்த வழிபாட்டில் அன்பர்கள் அனுமதிக் கப்படுவதில்லை. பூசை செய்யும் சிவாசாரியார், பரிசார கன், நைவேத்தியம் கொண்டு செல்வோர் வைராவிச் சேவகர் ஆகிய நால்வர் மட்டுமே இருக்கின்றனர்.

அர்த்தசாமப் பூசை முடிந்தபிறகு யாரும் இந்த சந்நிதிக்குச் செல்வதில்லை. மீண்டும் அடுத்த நாள் காலையில் தான் செல்ல வேண்டும்.

கருவறையில் பைரவர் யோ[illegible]த்தியாக வீற்றி ருந்தாலும் உலாத்திருமேனி வடுக கோலத்தில் அமைந் துள்ளது. இவர் நீண்ட சட்டையுடன் மணிமாலையைத் அணிந்து வலது கரத்தினைத் தண்டத்தின் மீது ஊன்றி யுள்ளார். அதில் பாம்பு சுற்றியுள்ளது. இடது கரத்தில் பானபாத்திரம் (கபாலம்) உள்ளது.

இத்தலம் புராணச் சிறப்புமிக்கதாகும் அதன்படி பைரவர் இங்கு அமர்ந்த வரலாற்றைக் காணலாம்:-

ஒரு காலத்தில் உலகில் அசுரர்கள் பெருகினர். அவர்களுடைய தீயசெயல்களால் உலகம் ஒளியிழந் தது. அசுரர்கள் தமது மாயையால் இருளை உண்டாக்கி உலகத்தைத் திகைக்க வைத்தனர். பிரகதாரணர் என்ற முனிவர் அசுரர்களை வென்று உலகினைக் காக்க எண்ணினர். தேவர்களையும் முனிவர்களையும் அழைத்துக் கொண்டு காசிமாநகரம் சென்றார். அங்கு கங்கைக் கரையில் உருத்திரரைக் குறித்துப் பெரிய வேள்வி ஒன்றைச் செய்தார்.

அவர்களுடைய பூசைக்கு மனமிரங்கிய சிவ பெருமான் தனது சக்தியில் ஒரு பகுதியை அங்கு வேள்வி யில் இட்டார். அது வேள்வித் தீயிலிருந்து பைரவ மூர்த்தியாக வெளிப்பட்டது. அழகிய குழந்தை வடிவில் நின்ற அந்த மூர்த்தியைக் கண்டு அனைவரும் அதிச யத்து வணங்கினர்.

பிறகு அவரைப் போற்றிப் பணிந்து வணங்கி தங்களை அசுரர்களிடமிருந்து காத்து அருளுமாறு வேண்டினர்.

பைரவர் ஒரு நொடியில் அசுரர்களின் மாயை விலக்கி சூரிய, சந்திரர்களை முன்போலவே பிரகா சிக்கச் செய்தார். அதை அறிந்த அசுரர்கள் அவர்மீது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போர் தொடுத்தனர். பைரவர் தம்மிடமிருந்து அட்ட பைரவர்களையும் பூத வேதாளங்களையும் தோற்றுவித்து அசுரர்கள் மீது ஏவினார். அவர்கள் அசுரர்களை வென்று வாகை சூடினார். முனிவர்களும், தேவர்களும் மகிழ்ந்து பைரவரைப் போற்றினர்.

பைரவர் அசுரர்களைத் தொலைத்த பாவம் நீங்க, பலதலங்களில் சிவபூசை செய்து இறுதியில் கொன்றை வனமாகிய திருப்புத்தூருக்கு வந்து யோகத்தில் வீற்றிருந்தார்.

அவருடைய யோக சாதனையால் மகிழ்ந்த சிவ பெருமான் அவருக்கு முன்பாகத் தோன்றினார். அவருக்குப் பலவரங்களைத் தந்து இத்தலத்திலேயே வீற்றிருந்து சிறப்புப் பூசனைகளைப் பெற அருள் புரிந்தார். அதன்படியே பைரவர் திருப்புத்தூரில் வீற்றிருந்து அன்பர்களுக்கு அருள்பாலித்து வருகின்றார்.

மேலும் இவருடைய அருள்பெற்று இவருடைய சந்நிதியில் வீற்றிருக்கும் ஜெயந்தனைக் காண்கிறோம்.

இந்த ஜெயந்தன் தேவேந்திரனின் புதல்வன். இவன் ஒருமுறை பூவுலகம் வந்தபோது ஒரு பெண்ணின் இசையால் கவரப்பட்டு அவளிருப்பிடம் சென்றான். அங்கு அவளைத் தழுவ முயன்றான். அவள், "ஏ. இந்திரகுமாரனே! நான் ஒரு முனிவனின் மனைவி, உடனே இவ்விடம் விட்டு அகன்று செல்" என்றான்.

மோகம் தலைக்கேறிய ஜெயந்தன், "அழகிய பெண்ணே, முனிவனால் உனக்கு என்ன பயன்? உனது அழகு வீணாகும், நாம் கலந்திருப்போம் வா" என்று கூறித் தாவி அணைக்க முயன்றான். அவள் தப்பி ஓடினாள்.

அந்த வேளையில் அப்பெண்ணின் கணவனான முனிவர் அங்கு வந்தார். ஜெயந்தனின் அடாத செயலினைக் கண்டு மிகவும் கோபித்தார். அவனை ஒரு பூதமாகும்படி சபித்தார்.

மேலும், கோபம் அடங்காதவராக ஒரு மலையைத் தூக்கி அவன் தலைமீது வைத்து அதனைச் சுமந்து திரியும்படிச் செய்துவிட்டார்.

அதனால் வுருந்திய அவன், "முனிவரே! நான் எனது தவற்றை உணர்ந்து விட்டேன் என்னை மன்னித்தருள்க என்று பலவாறு வேண்டினான்.

அவர் மனமிரங்கி, "ஜெயந்தா, நீ இந்தத் துன்பத்தைக் கொஞ்சநாள் அனுபவித்தே தீரவேண்டும். நீ தானாகவே யோகபைரவர் இருக்கும் கொன்றை வனமாகிய திருப்புத்தூர் செல்வாய். அப்போது அவர் அருளால் இந்தத் துன்பம் நீங்கும்" என்றார்.

● திருப்புத்தூர்-யோகபைரவர்

அதன்படியே ஜெயந்தன் பூதவுருவத்துடன் தலையில் மலையைச் சுமந்தவாறே பலதலங்களில் திரிந்தான். இறுதியில் கொன்றைவனமாகிய திருப்புத்தூரை அடைந்தான். அவன் மனதில் இனம்புரியாத மகிழ்ச்சி உண்டாயிற்று.

தன்னையறியாமலேயே பைரவர் முன்சென்றான். அவன் கையிலிருந்து இடி ஆயுதம் அவனிடமிருந்து விடுபட்டு பைரவரின் கரத்தில் பழத்தின் வடிவில் அமர்ந்தது. தலையிலிருந்த மலையும் விடுபட்டுத் தொலைவில் விழுந்தது. அவனுடைய பூதவடிவம் நீங்கியது. அவன் பைரவரைத் தொழுது வணங்கினான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவன் வழிபட்டுப் பேறு பெற்ற நாள் சித்திரை மாதத்து முதல்வெள்ளியாகும். அது தொடர்ந்து ஜெயந் தன் விழா என்ற பெயரில் கொண்டாடப்பட்டுகிறது.

அந்நாளில் மூலவருக்குத் தங்கக்கவசம் அணிவித்து அஷ்ட பைரவ, அஷ்டவிதார்ச்சனையும், அஷ்டவித நிவேதனமும் ஆரத்தியும் செய்யப்படு கின்றன. அஷ்டவித சமித்துக்களால் வேள்வியும் செய்யப்படுகின்றது.

மாலையில் பைரவர் குதிரை வாகனத்தில் பவனி வருகின்றார். அவர் இரவு 12 மணிக்குள் ஆலயத்திற்குத் திரும்பிவிட வேண்டும் என்று .கூறுகின்றார்.

இந்த விழாவுக்கு இணையாகக் கார்த்திகை மாதம் சஷ்டி விழா கொண்டாடப்படுகிறது. இதையொட்டி ஆறுநாட்கள் அஷ்டபைரவ அர்ச்சனை ஹோமம் முதலியன நடைபெறுகின்றன. இது சம்பாசஷ்டி என்று அழைக்கப்படுகின்றது.

இது சிறந்த பிரார்த்தனைத் தலமாகும். குழந்தைப் பேறு வேண்டுதல், குழந்தைக்கு மொட்டை அடித்து காது குத்துதல், திருமணத் தடைகள் வெல்ல; பகைவரின் துன்பம் நீங்க என்று பலவிதமான .பிரார்த்தனைகள் நேர்ந்து கொள்ளப்படுகின்றன.

❁ இங்குள்ள பெருமான் எட்டு வடிவம் தாங்கி அருள்பாலித்தார் என்று கூறப்படுகின்றது. இதில் முதன்மை பைரவ வடிவம் இங்கே இருக்க மற்ற ஏழு மூர்த்தங்கள் 1. வைரவன்பட்டி, 2. அழகாபுரி, 3. பெரிச்சிக் கோயில், 4. திருமெஞ்ஞானபுரத்தை அடுத்த வைரவன் பட்டி, 5. காரையூர், 6. இலுப்பைகுடி, 7. ஏழு நெடுமரம் ஆகிய ஊர்களில் உள்ளன.

❁ பைரவரை யோகபீடத்தில் அமர்த்திப் பூசிக்க வேண்டுமென்று பூசாபத்ததி நூல்கள் கூறுகின்றன. அதனையொட்டி பைரவருக்கு நேர் எதிரில் மூன்றாம் பிரகாரத்தில் ஒரு பலிபீடம் நிறுவப்பட்டுள்ளது. இதில் பைரவயந்திரம் பொறிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

❁ பிறதலங்களில் பைரவமூர்த்திக்கு வடைமாலை சாற்றுவதுபோலவே இங்கும் வடைமாலை சாத்தப்படு கிறது. ஆனால் அவை பக்தர்களுக்கு அளிக்கப்படுவ தில்லை. அவற்றை யாரும் உண்பதில்லை. காக்கைக்குப் போட்டுவிடுவர்.

❁ இந்த பைரவருக்கு எருமைக்கடா பலி கொடுக்கப்பட்டு வந்ததென்று கூறுகின்றனர்:

நகரத்தார்களும் பைரவரும்

தமிழகத்திலும் அண்டை நாடுகளிலும் மாபெரும் சைவப் பணிபுரிந்த செம்மல்கள் நகரத்தார்கள் எனப்படும் நாட்டுக் கோட்டை செட்டியார்கள் ஆவர். இவர்கள் கடல் கடந்து சென்று பெருவாணிகம் புரிந்து பெரும் பொருள் ஈட்டினர். அப்படி ஈட்டியதைக் கொண்டு பல்லாயிரம் அறப்பணிகளைச் செய்து வருகின்றனர்.

அவர்கள் தாங்கள் மேற்கொண்ட கடற்பயணங்களில் இயற்கையின் சீற்றங்களான புயல், மழை, கடல் கொந்தளிப்பு முதலியவை ஏற்படாமல் இருக்கவும், அப்படி ஏற்பட்டாலும் அவற்றின் தொல்லையினின்று காக்கவும், தீர்த்தராஜனும், தீர்த்த பாலகனுமான பைரவரை மிகவும் சிறப்புடன் வழிபட்டனர். அவர் கடற்பயணத்தில் தமக்குத் துணையாக இருப்பதுடன், தீ, தண்ணீர் முதலியவற்றிலிருந்தும் கடற்கொள்ளையர் முதலான பகைவர்களிடமிருந்து காப்பவராகவும், பணத்திற்கு காவல் தருபவராகவும் நம்பினர். அவரைக் குலதெய்வமாகவும் ஏற்றுக் கொண்டனர்.

தமது நாட்டில் வைரவன்பட்டி என்னுமிடத்தில் பெரிய கோயில் அமைத்து சிறப்பு வழிபாடுகளும் நடத்தி வருகின்றனர். மேலும், தாங்கள் திருப்பணி செய்த அனைத்து ஆலயங்களிலும் பைரவருக்குச் சிறப்பான சந்நிதி களைக் கட்டினர். தமது மக்களுக்கு வைரவன் என்ற பெயரைச் சூட்டி மகிழ்கின்றனர்.

❁ செட்டி நாடு என்று சொல்லப்படும் நகரத்தார் சீமையில் அஷ்டபைரவர்களுக்கான எட்டு தலங்கள் உள்ளன.

❁ இப்பகுதியில் உள்ள திருப்புத்தூர் கோயில் பைரவரின் சிரஸ்தானமாகவும், வைரவன் பட்டி, இதய ஸ்தானமாகவும் இலுப்பைக்குடி பாதஸ்தானமாகவும் கூறப்படுகிறது.

❁ வைரவன்பட்டி கோயிலைச் சார்ந்த நகரத்தார்கள் எழுதத் தொடங்கும்போது வைரவசாமி சஹாயம் என்று எழுதிய பின்னரே விஷயத்தைத் தொடர்ந்து எழுதும் வழக்கம் கொண்டுள்ளனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வைரவன் பட்டி மகாவைரவர்

மகா பைரவர் சிவகுமாரனாகத் தனிச்சிறப்புடன் வீற்றிருக்கும் திருத்தலம் வைரவன் பட்டியாகும். நாட்டுக் கோட்டை நகரத்தாரர்களால் சீரும் சிறப்புடன் போற்றப்படும், இத்தலம் பைரவ வழிபாட்டில் பல சிறப்புக்களைப் பெற்றுள்ளது. அதனை இக்கட்டுரை விளக்குகிறது.

காரைக்குடியிலிருந்து - மதுரை செல்லும் வழியில் பிள்ளையார்பட்டியை அடுத்திருப்பது வைரவன் பட்டியாகும். இங்கு பெரிய இயற்கையான சூழ்நிலையில் திருக்கோயில் அமைந்துள்ளது. கிழக்கிலும் தெற்கிலும் பெரிய குளங்கள் உள்ளன.

இங்கு பெருமான் ஜோதிவடிவாகப் பிரம்ம விஷ்ணுக்களுக்குக் காட்சியளித்ததால் வளரொளி நாதர் என்று பெயர்பெற்றார். அம்பிகையின் பெயர் வடிவுடை நாயகியாகும். சுவாமிசந்நிதிக்கு முன்பாக பெரிய அலங்காரத் தூண்களைக் கொண்ட மகா மண்டபம் உள்ளது. இதன் வடக்கில் தெற்கு நோக்கிய வாறு அம்பிகை சந்நிதியுள்ளது. அதற்கு இணையாகத் தெற்கு நோக்கியவாறு பைரவர் சந்நிதியும் உள்ளது. சுவாமி சந்நிதிக்கும் அம்பிகை சந்நிதிக்கும் நடுவில் பைரவர் இருப்பது இத்தலத்தில் மட்டுமேயாகும். (பொதுவாக பைரவரை சிவாலயங்களில் வடகிழக்கு முனையில் மட்டுமே அமைப்பர்).

இதனுள் பைரவர் பத்ம பீடத்தில் நிற்கின்றார். வலது முன்கையில் நீண்ட சூலமும், இடது கரத்தில், கபாலமும் உள்ளன. பின் கரங்களில் டமருவும், நாகமும் உள்ளன. தலையில் கேசம் ஊர்த்துவ முகமாக உள்ளது. வெள்ளிப் பிரபையும் பீடமும் உள்ளன. முன்னே பைரவ பீடம் இருக்க அதன்மீது பாதுகைகள் உள்ளன. பின்னணியில் நாய் நிற்கின்றது.

இந்தச் சந்நிதியில் தெற்கு நோக்கியவாறு வள்ளி யம்மை என்ற பெண்ணின் திருவுருவமும் நிலைப் படுத்தப்பட்டுள்ளது.

இப்பெருமானுக்கு உயர்ந்த கற்கள் இழைத்த தங்கக் கவசம் அணிவிக்கின்றனர். அது கண்கொள் ளாக் காட்சியாகத் திகழ்கிறது.

இந்தச் சந்நிதியில் தினமும் நான்கு கால பூசை சிறப்புடன் நிகழ்கிறது. பலபக்தர்கள் பிரார்த்தனை செலுத்துகின்றனர். வெள்ளிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமைகளில், சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படுகின்றன.

இங்குச் சிவபெருமான் வைரவ கோலங்கொண்டு அருள்பாலிப்பதைத் தலபுராணம் தனிச்சிறப்புடன் குறிப்பிடுகிறது அதன்படி :-

ஒருகாலத்தில் காசிப முனிவனுக்கும் மாயை என்பவளுக்கும் சூரபத்மன், சிங்கமுகன், தாரகன் என்ற மூன்று அசுர குமாரர்கள் உதித்தனர். அவர்கள் சிவ பெருமானைக் குறித்து பெருந்தவம் செய்தனர். அத்தவத்தால் மகிழ்ந்த சிவபெருமான் அவர்களுக்கு அனேக வரங்களைத் தந்தனர்.

ஸ்ரீவைரர்-வைரவன் கோயில் (எ) வைரவன்பட்டி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவர்கள் தமது அசுரபுத்தியால் தேவர்களுக்கு அனேக துன்பங்களைச் செய்தனர். அவர்களுக்கு அஞ்சிய தேவர்கள் பல இடங்களில் மறைந்து வாழ்ந்தனர். அப்படியொரு நாள் அழிஞல் வனமாகிய இத்தலத்தில் மறைந்திருந்தபோது அசுரர்கள் கண்டு பிடித்து விட்டனர். அவர்கள் மீது படைதொடுத்தனர். அதைக் கண்டு அஞ்சிய தேவர்கள் இந்தத் தலத்தில் வீற்றிருக்கும் வளரொளி நாதரையும், வடிவுடை அம்பிகையையும் சரண்புகுந்து துதித்தனர்.

அவர்களுக்கு அபயமளித்தச் சிவபெருமான் தன்னிலிருந்து ஒரு குமாரனை உற்பவித்தார். அவர் சிவனாகவே நின்றார். பைரவ கோலத்துடன் நின்ற அவரை அனைவரும் அஞ்சித் துதித்தனர். அவரிட மிருந்து அனேக பூதப் படைகள் தோன்றின. அவர் நந்தியம் பெருமானையும், கணபதியையும் அழைத்துத் தமது படைக்குத் தலைமை தாங்கும்படிச் செய்தார்.

விநாயகரும், நந்தியும் அசுரர்கள் மீது படை யெடுத்து வென்றனர். இறுதியில் சூரனின் முதன்மை தளபதியான மகாதமிஷ்டிரனும் அவனது துணைத் தலைவர்களான மணி, மல்லர் என்பவர்களும் போர் தொடுத்து வந்தனர். பைரவர் அவர்கள்மீது தமதுகைச் சூலத்தை ஏவினார். அது அவர்களைக் கோர்த்துக் கொண்டு அங்கே வந்தது. பைரவர் சூலத்திடம் அவர் களை தெற்கிலிட்டு மலைகளாக்குக என்றார். அது அவ்வாறே செய்ய அவர்கள் வீழ்ந்து மலைகளாயினர். பின்னர் சூலம் சிவதீர்த்தத்தில் மூழ்கி பைரவர் கரத் தினை அடைந்தது.

தேவர்கள் பைரவரைத் துதித்துப் போற்றினர். பைரவர்தேவர்களே! அஞ்சற்க, சிவனிடமிருந்து ஆறு முகன் தோன்றி அசுரர்கள் அழிப்பான். அதுவரை நீங்கள் இளையாற்றங்குடியில் தங்கியிருங்கள் என்று கூறி விடை கொடுத்தார். பின்பு அழிஞ்சல் வனத்தில் வளரொளி நாதர் கோயிலில் அம்பிகைக்கும் சுவாமிக் கும் நடுவில் கோயில் கொண்டார். அன்றுமுதல் இத் தலம் வைரவரன்பட்டி, வைரவன் கோயில், வடுகநாத புரம், படுகநாதபுரி என்று பலவாறு அழைக்கப்படுகிறது.

பைரவர் அசுரர்களை அழித்தநாள் கார்த்திகை சஷ்டியாகும். அதையொட்டி கார்த்திகை மாதம் இங்கு சஷ்டி விழா கொண்டாடப்படுகிறது. இதனை சம்ஹார சஷ்டி என்று அழைக்கின்றனர். அன்று பஞ்ச மூர்த்திக ளுடன் பைரவர், நந்திதேவர், துர்க்கை ஆகியோரும் எழுந்தருள்கின்றனர்.

இந்த ஐதீக விழாவில் முதலில் விநாயகரும் தொடர்ந்து நந்தியும், துர்க்கையும் இறுதியாக பைரவரும் போருக்கு எழுந்தருள்கின்றனர். பைரவர் அம்பிகையி டம் சூலம் பெறுதல் அசுரனை அழித்தல் முதலியன சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. இதற்காக மரத்தாலான பெரிய சூரன் உருவமும் உள்ளது.

இங்கு பைரவர் சந்நிதிக்கு எதிரில் சூலதீர்த்தம் உள்ளது. இதனைச் சிவதீர்த்தம் என்றும் அழைக்கின் றனர். இதிலுள்ள தீர்த்தம் மிகவும் சக்திவாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இது மலட்டுத் தன்மையை நீக்கி குழந்தைச் செல்வத்தை அருள்வதுடன், வறுமை, பயம் முதலிய துன்பங்களை நீக்குவதாகும்.

பரமனடி தொழுத பாவை - வள்ளியம்மை

இறையருளால் ஆட்கொள்ளப்பட்டு தெய்வீக நிலைபெற்ற பலபெண்களைப் பைரவ வழிபாட்டிலும் காண்கிறோம். வைரவன் பட்டியில் வள்ளியம்மை என்னும் அம்மையார் வைரவன் வழிபாட்டில் மிகுந்த பக்தியுடன் இருந்தார். ஒரு நாள் இங்கு வழிபட வந்த அவர் இங்குள்ள வைரவன் சந்நிதிக்குள்ளே சென்று அவருடனே கலந்துவிட்டார். அவருடைய திருவுருவம் இக்கோயிலில் நிலைப்படுத்தி வணங்கப்படுகிறது.

மணிமாலை

சமயவாழ்வில் மகிழ்ச்சி, வீரம், பயம் என்னும் பல்வேறு உணர்ச்சிகளைக் குறிக்க கிளி, கத்தி, தூக்கிய கை முதலிய அடையாளங்கள் காட்டப்படுகின்றன. இதுபோன்று உயிர்களுக்குக் காவலாக இருப்பதைக் குறிக்க தெய்வங்கள் ஏந்தும் அடையாளம் மணியாகும். சிவபெருமான் தனது முழங்காலில் மணியை அணிந்துள்ளார். காளி, வீரபத்திரர் முதலிய தெய்வங்கள் மணியை ஏந்தியுள்ளதைக் காண்கிறோம். மணியோசையைக் கேட்டு தீய சக்திகள் ஓட்டமெடுக்கும் என்றும் தேவர்கள் மகிழ்ச்சியுடன் ஒலிக்கப்படும் இடத்திற்கு வருகிறார்கள் என்றும் பூஜாபத்தி நூல்கள் கூறுகின்றன. பைரவர்கள் உயிர்களுக்கும் அவற்றின் உடைமைகளுக்கும் காவலாக இருப்பதால் மணிகள் கோர்த்த நீண்ட மாலையை அணிகின்றனர். உண்மையில் இதுவே மணிமாலையாகும். சட்டைநாதர் வடிவில் மணிமாலை சிறப்பான இடத்தைப்பெற்றுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரான்மலை வைரவர்

திருக்கொடுங்குன்றம் என்று தேவாரத்துள் போற்றப்பட்ட திருத்தலம் இந்நாளில் பிரான்மலை என்று அழைக்கப்படுகிறது. முல்லைக்குத் தேர் தந்த பாரிவள்ளல் வாழ்ந்த பறம்புமலை இதுவேயாகும்.

இந்த மலையின் தெற்குச் சரிவில் மூன்று ஆலயங்கள் உள்ளன. மலையின் அடிவாரத்தில் ஒன்றும், சற்று உயரத்தில் ஒன்றும்; மலையின் பாதியளவில் ஒன்றும் அடுத்தடுத்து அமைந்துள்ளன. கீழேயுள்ள கோயில் பூமி என்றும் நடுவிலுள்ளது அந்தரம் என்றும் மேலேயுள்ளது சுவர்க்கம் என்றும் அழைக் கப்படுகின்றன.

பூமிக்கோயிலில் கொடுங்குன்ற நாதரும் குயிலமுதநாயகியும் விசாலமான பெரிய திருக்கோயிலில் எழுந்தருளியுள்ளனர். சுவர்க்கக்கோயில் ஆதியில் குடைவரைக் கோயிலாக அமைக்கப்பட்டதாகும் பின்னாளில் இதையொட்டி மகாமண்டபங்களும் அலங்கார மண்டபங்களும் கட்டப்பட்டுள்ளன. குடைவரையில் பாறையிலேயே புடைப்புச்சிற்பமாக உமாமகேசுவரர் திருமணக் கோலத்தில் எழுந்தருளியுள்ளார். இவரை மங்கைபங்கர் என்று அழைக்கின்றனர்

நடுவிலுள்ள அந்தரக்கோயில் பைர வர் எழுந்தருளியுள்ளார். தெற்கு நோக்கிய எழுந்தருளியுள்ள இவர் மேற்கரங்களில் டமருக, பாசமும் கீழ்க்கரங்களில் சூலம் கபாலமும் ஏந்தியுள்ளார். பிரார்த்தனையாக செய்து வைக்கப்பட்ட பெரிய பட்டாகத்தி, திரிசூலம் ஆகியவற்றையும் காண்கிறோம். மகாமண்டபத்தில் உலாத்திருமேனியாக பைரவர் எழுந்தருளியுள்ளார். இவருக்கு பெருந்திருவிழா வுக்குப் பிறகு விழா கொண்டாடப்படுகிறது. இது ஜெயந்தன் விழா என்றழைக்கப்படுகிறது. இந்த சந்நிதியில் நிறைய விளக்குகளுள்ளன. அயல்நாடு செல்பவர்கள், செல்வதற்கு முன்பும், பின் பும் இவருக்கு நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர். புனுகும், வடைமாலையும் காணிக்கையாகச் சாத்துகின்றனர்.

❁ ஸ்ரீ பைரவர்- பிரான்மலை

இவர் அதிஉக்கிரமாக இருந்ததால் அதைத் தணிக்க இங்கு காசிவிசுவநாதரையும், விசாலாட்சியையும் எழுந்தருளி வைக்கப்பட்டனர். இங்கு மகா மண்டபத்தின் முன்னுள்ள மண்டபத்தில் சிறுதொட்டிக்குள் நிறைய வேல், சூலங்கள், கத்தி, கொடுவாள் முதலியன உள்ளன. இவை பிரார்த்தனையாகச் செலுத்தப்பட்டதாகும் மேலும் இந்த மண்டபத்தில் தூண்களில் கிழக்கு நோக்கியவாறு கருப்பர் சாமியும், மேற்கு நோக்கியவாறு சன்யாசிக் கருப்பரும் உள்ளனர். இது தலைசிறந்த பிரார்த்தனைத் தலமாக விளங்குகின்றது.

திருவொற்றியூர் - சூரசூளாமணி பைரவர்

சென்னையின் வடபகுதியில் அமைந்துள்ள திருவொற்றியூர் மூவராலும் பாடப்பட்ட தேவாரத் திருத்தலமாகும். இங்கு வடக்குப் பிரகாரத்தில் தோட்டத்திற்கு நடுவில் தெற்கு நோக்கியவாறு சூரசூளாமணி பைரவர் எழுந்தருளியுள்ளார். இவருக்கு நேர் எதிரில் (முதற்பிரகாரத்தில்) சப்தமாதர்கள் எழுந்தருளியுள்ளனர். சிவாலயங்களை சப்தமார்களை தெற்குப் பிராகாரத்தில் அமைக்கவேண்டியது முறையென்றாலும், அவர்கள் பைரவருக்கு நேராக இருக்க வேண்டுமென்பதற்காக வடக்கு பிராகாரத்தில் அமைத்து தனி வாயிலும் அமைத்துள்ளனர். இந்த இரண்டு சந்நிதிகளுக்கு மத்தியில் கொடிமரம், பலிபீடம் ஆகியன அமைந்துள்ளன. இத்தகைய அமைப்பை வேறெந்த ஆலயங்களிலும் காண முடியவில்லை. இந்த பலிபீடம் அஷ்டபைரவ ஸ்தானமாகும். இங்கு. பைரவருக்கு நாய்வாகனம் இல்லை. பைரவருடைய ஆலயம் தனிக் கருவறையுடன் முகமண்டபம், உள்மண்டபம் ஆகிய அமைப்புகளை கொண்டு திகழ்கிறது. இவருக்கு கிழக்கில் சூலதீர்த்தம் உள்ளது.

வைரவதீபம்

மிளகைச் சிறுதுணியில் மூட்டையாகக் கட்டி அகலில் வைத்து நெய் அல்லது நல்லெண்ணையை ஊற்றி தீபம் ஏற்றுவது பைரவதீபம் எனப்படும். இப்படி ஏற்றுவதன் மூலம் வறுமை நீங்கும், செல்வம் பெருகும், இழந்த செல்வத்தை மீண்டும் பெறமுடியும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இராமகிரி பைரவர்

சென்னையிலிருந்து நாகலாபுரம் வழியாகத் திருப்பதி செல்லும் சாலையில், நாகலாபுரத்திலிருந்து 4 கி.மீ. தொலைவில் அமைந்திருப்பது ராமகிரி என்னும் தலமாகும்.

இங்கு பேருந்து நிறுத்தத்திற்கு வடக்கில் பெரிய மலையும் அதன் தென்பக்க அடிவாரத்தில் பெரிய சிவாலயமும் அமைந்துள்ளன. இவை பேருந்து நிறுத்தத்திலிருந்து ஏறத்தாழ 2 கி.மீ. தொலைவில் உள்ளன.

இங்குள்ள மலை இராமகிரி என்றழைக்கப்படுகிறது. இதன் அடியில் வைரவரால் உண்டாக்கப்பட்ட வைரவ தீர்த்தம் அமைந்துள்ளதென்பர். இது மலையால் மறைக்கப்பட்டிருந்தாலும் இதன் ஒருபகுதி ஊற்று நீர்போல வெளியே வந்து கொண்டிருக்கின்றது.இதனை நந்தியின் வாய்வழியாக விழுவது போல் அமைத்துள்ளனர். இதனால் இது நந்தி தீர்த்தம் என்றழைக்கப்படுகின்றது. இப்படி விழும் நீர் சிறுகுளமாக உள்ளது. அந்தக் குளத்திலிருந்து தண்ணீர் கால்வாய் வழியாக கோயிலுக்கு வெளியேயுள்ள குளத்தை அடைகிறது. இதற்குக் காவல் தேவதை பைரவர் ஆவார்.

இந்த குளத்திற்கு தெற்கில் ஒரு பெரிய பைரவர் ஆலயம் உள்ளது. பிறதலங்களில் உள்ளதுபோல் இங்கு பைரவர், சிவனுடைய பரிவாரமாக அமையாமல் தனிக் கோயில் ஆண்டாராகவே எழுந்தருளியுள்ளார்.தெற்கு வடக்காக அமைந்த நீண்ட விசாலமான பெரிய முக மண்டபத்தைக் கடந்து தலைவாயிலை அடைகிறோம். தெற்கு நோக்கிய இந்த வாயிலின் இருபுறமும் வைராவிகள் இருவரின் உருவங்கள் உள்ளன. அதையடுத்து சித்தி விநாயகர் எழுந்தருளியுள்ளார்.

இந்த வாயிலைக் கடந்து மகாமண்டபத்தை அடைகிறோம். இதன் மையத்தில் கருவறையை நோக்கியவாறு விறைப்புடன் நிற்கும் பெரிய நாய் உருவத்தைக் காண்கிறோம். இதைச் சுற்றிலும் அன்பர்கள் பிரார்த்தனையாகச் செய்து வைத்த நாயுருவங்கள் உள்ளன.

இதற்குக் கிழக்கில் மேற்கு நோக்கியவாறு பைரவரின் தேவியான காளிகாதேவி எழுந்தருளியுள்ளாள். இவள் ஞானபைரவரின் தேவியாக இருப்பதால் மேற் கரங்களில் ஓலைச் சுவடியும், ஹோமக் கரண்டியும் ஏந்தியுள்ளாள். வலது கீழ்க்கரம் வரதமுத்திரையுடனும், இடது கரம் அபயமுத்திரையுடனும் விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும். நின்ற கோலத்தில் அன்பர்களுக்கு அருள் பாலிக்கின்றார்.

இனி உள் மண்டபம், அர்த்த மண்டபம் கடந்து கருவறையில் தெற்கு நோக்கி எழுந்தருளியிருக்கும் மூல மூர்த்தியாகிய பைரவரைக் காண்கிறோம். நிர்வாண கோலத்தில் சுமார் ஐந்தடி உயரம் கொண்டவராகப் பெருமான் அருள்பாலிக்கின்றார். வலது கரங்களில் மேலிருந்து கீழாக உடுக்கை, வாள், தண்டம், திரிசூலம் ஆகியவற்றையும்; இடது கரங்களில் மழு, பாசம், மணி, கபாலம் ஆகியவற்றையும் ஏந்தியுள்ளார். தலை மீது ஜ்வாலாமுடி அமைந்துள்ளது. மார்பில் கண்டசரம், மணிமாலைகள் மணிச்சரம் பூணூல் ஆகியன உள்ளன.

இவரைத் தியானசுலோகங்கள் வெள்ளைநிறம் கொண்டவராகக் குறிக்கின்றன. அதனால் சுவேத பைரவர் என்றும்; தேவியுடன் இருப்பதால் கல்யாண பைரவர் என்றும்; அன்பர்களுக்குக் குழந்தைப்பேற்றினை அருள்வதால் சந்தான பைரவர் என்றும் அழைக்கின்றனர்.

இவரைப் பிரார்த்தனை செய்து கொண்டு வலமாக வருகிறோம். கருவறையைச் சுற்றிலும் பஞ்ச கோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் மேற்கில் இருவரும் வடக்கில் இருவரும் ஆகக் கோட்ட பைரவர்கள் எழுந்தருளியுள்ளனர். (வடக்கு கோட்டம் வெற்றிடமாக உள்ளது. மேற்கு நோக்கியதில் ஒருவர் குருரூப பைரவராவார். இவர் கௌபீனம் தரித்து கரங்களில் ஞான தண்டம் கமண்டலம் சூலம், தாமரை ஏந்தியவராய் காட்சியளிக்கின்றார். கிழக்கு நோக்கிய கோட்டங்களிலுள்ள பைரவரில் ஒருவர் ஆறுகரங்கள் கொண்ட குமாரபைரவர், மற்றவர் எட்டு கரங்களுடன் விளங்கும் சம்ஹார பைரவர் ஆவார். இவர் சூலத்தைத் தலை கீழாகப் பிடித்துக் கொண்டிருக்கின்றார்.

இந்தப் பிராகார மண்டபத்தின், வடகிழக்கில் அமைந்துள்ள உள்வாயில் வழியாக அடுத்துள்ள சிவசந்நிதியை அடைகிறோம். வால் என்பதற்கு வெள்ளை என்பது பொருளாகும். வெண்மையான வண்ணத்தால் பிரகாசிக்கும் பைரவரால் நிலைப்படுத்தி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வணங்கப்பட்டுவதால் இறைவன் வாலீசுவரர் என்று அழைக்கப்படுகின்றார். இவர் நெடிய சிவலிங்கமாகக் காட்சியளிக்கின்றார். இவரை வணங்கி மண்டபத்துடன் கூடிய உட்பிரகாரத்தினை வலம் வரும்போது வடக்கு நோக்கியவாறு அமைந்துள்ள சப்தமாதர்களைக் காண்கிறோம். இது வைரவத் தலம் என்பதால் சப்தமாதர் களில் சாமுண்டி நடுவில் அமைக்கப்பட்டு மற்றவர்கள் இருபுறமும் எழுந்தருளியுள்ளனர்.

மேற்குப் பிரகாரத்தில் அப்பர்சுவாமிகள், ஐயனார், வடுகசண்டர் (இந்நாளில் இவர் வீரபத்திரர் என்று அழைக்கப்படுகின்றார்) ஆறுமுகர் ஆகியோர் எழுந்தருளியுள்ளார்.

இவர்களை வணங்கி வலம்வந்து பெரிய முற்றத் தில் மேற்கு நோக்கியவாறு அமைந்துள்ள அன்னை மரகதாம்பிகையைக் கண்டு மகிழ்கிறோம். சிவாசாரியா ரால் பூசை சிறப்புடன் நடை பெறுகிறது.

- இங்குள்ள மலை தெற்கிலிருந்து பார்க்கும்போது கயிலை மலையை நினைவூட்டுகிறது.
- அப்பரடிகள் போற்றிய வைப்புத் தலமாகும். அந்நாளில் இது காரிக்கரை என்றழைக்கப்பட்டது.
- சிவராத்திரியன்று சிறப்புவிழா கொண்டாடப்படுகிறது.
- மலையின் சரிவில் முருகன் ஆலயம் அமைந் துள்ளது. ஆடிக்கிருத்திகையன்று திரளான மக்கள் காவடியெடுத்து வந்து வழிபாடு செய்கின்றனர்.
- ஆலயத்தில் பல கல்வெட்டுகள் காணப்படுகின்றன.
- இறைவன் பைரவகோலத்தில் பிட்சை எடுப்பவராக இருப்பதால் பிச்சாண்டர் எனவும் அழைக்கப்படுகின் றார். இராமகிரியின் அருகில் பிச்சாட்டூர் என்ற ஊர் உள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.
- ஆதியில் இந்த பைரவர் மலையின் உச்சியில் இருந்தவர் என்றும், எளிதில் மேலேறிச் சென்று வழிபட முடியாமல் அன்பர்கள் வருந்தியபோது அவர்கள் துயர்தீர்க்க அடிவாரத்தில் கோயில் கொண்டார் என்றும் கூறுகின்றனர். மலையுச்சியில் இந்த பைரவ ஸ்தானத் தினை நினைவுகூறும் வகையில் பைரவ பாதங்கள் உள்ளன என்று கூறுகின்றனர்.

வீணா கான பைரவர்

பைரவர் போர்களத்தில் உன்மத்தராகவும், உக்கிர மயமானவராகவும் விளங்குகிறார். ஆனால் அன்பர் களிடத்தில் பிச்சை ஏற்கச் செல்லும்போது மென்மையா னவராகவும் இனிய குரலால் பாடி மகிழ்விப்பவராக உள்ளார்.

குருரூபர், விசுவரூபர் முதலிய எட்டு பைரவர்கள் வீணை ஏந்தியிருப்பதாகச் சிற்பநூல்கள் கூறுகின்றன. அவரைச் சுற்றி தும்புரு, நாரதர் முதலிய இசைமேதை கள் இருக்கின்றனர். கந்தர்வர்களும், அவருடைய தேவியர்களும் அவரைச் சூழ்ந்து நின்று இசை மழை பொழிகின்றனர்.

அஷ்டபைரவரின் தேவியர்களாகத் திகழும் அஷ்டமாதர்களில் எட்டாவதான கௌரிகை வீணை ஏந்தியுள்ளாள். இதனைச் சிதம்பரம் தில்லையம்மன் கோயில் காணலாம். பைரவர் பிட்சையேற்க நிர்வாணமாகச் செல்லும்போது இவள் அவர்பின்னே வீணையை மீட்டிக் கொண்டு நிர்வாணியாகவே செல்கிறாள்.

சப்தமாதர்களுடன் வீணையேந்தியவராக விளங்கும் பைரவரைப் பலதலங்களில் காண்கிறோம்.

பாடகச்சேரி சுவாமிகள்

அண்மைக் காலத்தில் வாழ்ந்த மகான் பாடகச்சேரி இராமலிங்க சுவாமிகள் ஆவார். இவர் குடந்தையிலுள்ள நாகேசுவர சுவாமி திருக்கோயில் முதலான பல ஆலயங்களைத் திருப்பணி செய்தவர். பைரவ உபாசனையில் சிறந்து விளங்கியவர். இவர் ஆண்டிற்கு ஒரு முறை பைரவரின் வாகனமான நாய்களை அழைத்து சமாராதனை செய்வது வழக்கம். அப்போது நாய்கள் தானே குளித்துவிட்டு வந்து வரிசையாக இலை முன்னால் அமர்வதும், சுவாமிகள் அளிக்கும் உணவை உண்பதும் காண்பதற்கு அதிசயமாக இருக்கும். நாய்கள் இந்த வேளையில் ஒன்றுக்கொன்று சண்டையிட்டுக் கொள்வதில்லை. மிகவும் அமைதியாக இருக்கும். திரும்பி செல்லும்போதும் மிக அமைதியாக இருக்கும் என்று கூறுகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கபாலம் - திருவோடு - கங்காளம்

வைரவ வழிபாட்டினரின் முதன்மையான அடையாளம் கபாலமாகும். வைரவர் பிரம்மனது ஐந்தாவது தலையைக் கிள்ளியெடுத்து அதனைப் பிட்சாபாத்திரமாகக் கொண்டார். அதனை ஏற்று மூவுலகிலும் அலைந்து திரிந்து பிச்சை ஏற்று இறுதியில் அதை காசியில் நிலைப்படுத்தினார்.

சைவத் திருமுறைகளில், பிரம்மனின் முடை நாற்றம் வீசும் தலையை உண்கலனாகக் கொண்டு பைரவர் ஊர்தோறும் சென்று பிச்சை ஏற்றது பல இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது. சிவகுமாரனாகிய பைரவர் தன் செயல் எல்லாவற்றையும் சிவார்ப்பணமாகவே செய்பவர். அதனால் அவன் செய்த செயல்கள் யாவும் சிவபெருமான் செய்ததாகவே கூறப்பட்டது.

இதையொட்டியே, திருஞானசம்பந்தப்பெருமான், "நான்முகன் தன் தலையைக் கலம் தானது கொண்ட கபாலி" என்றும், அப்பர் சுவாமிகள், "தாமரையோன் சிரமரிந்து கையில் கொண்டார்". "தலையதனில் பலிகொண்டார்". பங்கத்தோன் தன் சிரத்த ஏந்தி ஊரூர் இரந்தவன் காண் என்றும் சுந்தரர், அன்றயன் சிரம் அதில் பலிகொண்டு அமரர்க்கருள் செய்தானை என்று திருக்கோலக்கா பதிகத்திலும், பிரமன் தலையிற் பலிகொள் வானவனே என்று மண்ணிப்படிக்கரைப் பதிகத்திலும் குறித்து மகிழ்கின்றார்கள். இதனையொத்த அனேக திருமொழிகள் தேவாரம் முழுக்க உள்ளன.

மேலும் திருவாசகத்தில், "ஊனார் உடைதலையில் உண் பலித்தேர் அம்பலவன்" என்று மாணிக்க சுவாமிகள் குறிக்கின்றார்.

இப்படி பிரமன் அகந்தையை குறைக்க தலையை அறுத்து பிச்சையற்றது தவிர பெருமான் உலக நலன் வேண்டு பிச்சையேற்று வந்ததையும் புராணங்கள் குறிக்கின்றன. தாருகாவனத்து ரிஷிகளின் கர்வத்தை அடக்க ஒரு முறை பிச்சையேற்றார். அது பிட்சாடன கோலம் என்று போற்றப்பட்டு ஆலயங்களில் எழுந்தருளி வைக்கப்பட்டுள்ளது.

பின்னும் ஒருமுறை வடுகக்கோலம் கொண்டு மூவுலகிலும் பிச்சையேற்றார். இந்தக் கோலங்களில் அவர் இடது கையில் ஏந்தி நிற்பது கபாலமாகும். இது மண்டை, கங்காளம் ஓடு என்று பலபெயர் பெறுகின்றது.

சுவர்ணாகர்ஷண பைரவரின் கரத்தில் வைர மணிகளால் இழைக்கப் பெற்று பொன்னால் செய்யப்பட்ட பிட்சாபாத்திரம் இருப்பதாகச் சிற்ப நூல்கள் கூறுகின்றன.

திருச்செங்காட்டங் குடியில் சிறுத்தொண்ட நாயனாரிடம் பிச்சை ஏற்க வந்தகோலமும் வடுகோலமேயாகும். இதில் பெருமான் வலதுகரத்தில் சூலம் உடுக்கையும் இடது கரத்தில் கபாலமும் ஏந்தியுள்ளார். இவருடைய பூசைக்கு அளிக்கப்பட்ட நிலம் "திருவோட்டுக்கட்டளை" என்று கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

பல ஆலயங்கள் அன்பர்கள் வேண்டுதலாக திருவோடுகளைச் செய்து வைரவருக்கு அளித்துள்ளனர். தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள பல ஆலயங்களில் தங்கத்தால் செய்து அளிக்கப்பட்டுள்ள திருவோடுகளையும் காண்கிறோம்.

கர்னாடக மாநிலத்திலுள்ள (சமய வழிபாட்டில் பற்றுள்ள) வீரசைவர்கள் பெரிய வெண்கலப் பாத்திரத்தை உண்கலமாகப் பயன்படுத்துகின்றனர். இதற்குக் "கங்காளம்" என்பது பெயராகும்.

தென்னகத்திலுள்ள அனேக அங்காளம்மன் ஆலயங்களில் கபாலம் என்கின்ற பாத்திரம் உள்ளது இது விபூதி பெட்டகமாகவும் நீர் வைக்கும் பாத்திரமாகவும் பயன்படுத்தப்படுகிறது.

கபால பைரவர்

பைரவர்தாம் காவல்தேவதை என்பதை உணர்த்த நீண்ட மணிமாலையை அணிகின்றார். அவரே சம்ஹார பைரவராக உலகினை அழித்தபின் பிரம்மா, விஷ்ணு உள்ளிட்ட சகல தேவர்களின் மண்டையோடுகளையும் கோர்த்து மாலையாக அணிந்து காட்சிளிக்கின்றார். இந்த மண்டையோடுகளிலிருந்தே மீண்டும் அவர்கள் தோற்றுவிக்கப்படுகின்றனர்.

இப்படிக் கபால மாலையை அணிந்த பைரவ மூர்த்தங்களை அபூர்வமாகவே காணமுடிகிறது. திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற அச்சிறுபாக்கம் ஆட்சீசுவரர் ஆலயத்தில் கபாலமலை்யை அணிந்த பைரவரைக் காண்கிறோம்.

கபாலமாலை, வெண்டலை மாலை, பிரமசிரமாக எனப் பலவாறு அழைக்கப்படுகிறது. பைரவரை வழிபடும் மகாவிரதிகள் மண்டையோட்டு மாலைகள் அணிந்திருந்ததைத் தேவாரம் வெண்டலை மாலை விரதிகள் என்று குறிக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வடுகூர்-ஆண்டார் கோயில்

புதுவை மாநிலத்தில் விழுப்புரம் - பாண்டிச்சேரி சாலையில் (கண்டமங்கலம் வழி) அமைந்திருப்பது திருவாண்டார்கோயில் என்னும் திருத்தலமாகும். இது தேவாரத்தில் வடுகூர் என்று குறிக்கப்பட்டுள்ளது. திருஞானசம்பந்தரால் பாடப்பட்ட பதி. இவருடைய பதிகத்தில் பெருமானின் வடுகக்கோலம் சிறப்பிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

இவ்வூரின் மையத்தில் கிழக்கு நோக்கியவாறு சிவாலயம் அமைந்துள்ளது. இறைவர் வடுகநாதர், அம்பிகை வடுவகிர்கண்ணி.

முண்டகன் என்னும் அசுரனைக் கொன்ற பாவம் தீர பைரவர் இங்கு சிவலிங்கம் அமைத்து வழிபட்டார் என்று புராணங்கள் கூறுகின்றன. வடுகன் வழிபட்டதால் இந்தத் தலம் வடுகூர் என்றும் இறைவர் வடுகநாதர் என்றும் பெயர் பெற்றனர். வடுகன் அமைத்த தீர்த்தம் வடுகதீர்த்தம் அல்லது வாமதேவ தீர்த்தம் என்று அழைக்கப்படுகின்றது.

வடுகனுக்கு "ஆண்ட பிள்ளையார்" என்பது பெயராதலின் காலப்போக்கில் இக்கோயில் "ஆண்டார் கோயில்" என்று அழைக்கப்பட்டு, ஊருக்கும் அதுவே பெயராயிற்று.

இக்கோயிலிலுள்ள பைரவர் தனிச்சிறப்புடன் வழிபடப்படுகின்றார். கார்த்திகை மாதம் அட்டமி நாளில் இங்கு சிறப்பு விழா கொண்டாடப்படுகின்றது. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் அன்பர்கள் திரளாக வந்து வழிபடுகின்றனர்.

ஆண்ட பிள்ளையார்

சைவ நல்லுலகில் விநாயகருக்கு மூத்த பிள்ளையார்; முருகனுக்கு இளைய பிள்ளையார்; திருஞான சம்பந்தருக்கு ஆளுடைய பிள்ளையார் சண்டிகேசுவரருக்கு சேஞ்சலூர் பிள்ளையார் என்று பிள்ளைப்பெயர்கள் இருப்பதுபோலவே பைரவருக்கு "ஆண்ட பிள்ளையார்" என்பதும் பெயராகும்.

திருப்பத்தூரிலுள்ள கல்வெட்டுகள் இங்குள்ள பைரவரை ஆண்டபிள்ளையார் என்றே அழைக்கின்றன். மேலும் வடுகூர் கல்வெட்டுகள் பைரவர் பூசித்த லிங்கத்தை ஆண்டார் என்று அழைக்கின்றன. இதையொட்டி ஊருக்கு இப்போது ஆண்டார் கோயில் என்ற பெயர் வழங்குகின்றது.

ஆண்டார்கள்

பைரவ வடிவமாக வந்த சிவபெருமானின் வீர சரிதங்களைப் பாடி ஊர் தோறும் சென்று பிச்சையேற்று வாழும் ஒரு மரபினர் ஆண்டார்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் வாழ்ந்த ஊர்கள் ஆண்டார்குப்பம். ஆண்டார்பட்டி முதலிய பெயர்களைப் பெற்றன. மேல் மருவத்தூருக்குத் தெற்கில் அமைந்திருக்கும் ஒரூர் ஆண்டார் குப்பமாகும். சுமார் இருபதாண்டு களுக்கு முன்பு வரை இங்கு வசித்துவந்த ஆண்டார் கள் எனும் இனத்தினர் ஊர்தோறும் சென்று சிறுத் தொண்டன் கதையைப் பாடி பிச்சை பெறுவதைக் கண்டுள்ளேன். இதில் பலர் நிலபுலன்களுடன் நல்ல வசதியான நிலையில் இருந்தபோதிலும் இறையன்பால் இப்படிச் சென்று பாடி பிச்சையேற்று வாழ்ந்தனர்.

சென்னையின் அருகிலுள்ள ஆண்டார்குப்பமும் பைரவ அடியார்களின் தலமேயாகும்.

"ஆண்டார்கள்" என்ற சொல் வழக்கில் ஆண்டிகள் என்றானது. இந்த மரபினர் கோயில்களில் குங்கிலி யம், சாம்பராணி ஆகியவற்றைத் தணலில் இட்டுப் புகையூட்டினர். அதனையொட்டி இவர் குங்கிலிய ஆண்டிகள் என்றும் அழைக்கப்பட்டனர். பைரவர் நறும்புகையை விரும்புவதால் ஆண்டார்கள் தூபமிடு தலைச் சிவப்பணியாகக் கருதினர்.

பஞ்சமுக பைரவர்

சிவபெருமான் ஐந்து முகங்களோடு விளங்குவதைப் போலவே சிவகுமாரரான பைரவரும் ஐந்து முகங்களோடு விளங்குகின்றார். சிற்பங்களில் இவர் பஞ்சவக்திர பைரவர் என்று போற்றப்படுகின்றார். இவருடைய அரிய சிலை திருச்சி மாவட்டம், தாத்தையங்கார் பேட்டை எனும் ஊரிலுள்ள காசிவிசுவநாதர் ஆலயத்தில் உள்ளது. ஐந்து முகங்களுடன் விளங்கும் இவர் பத்துகரங்களில் சூலம், சக்ரம், மழு, கதை, கத்தி, கபாலம், டமருகம், சங்கு, பாசம், கேடயம் ஆகியவற்றை ஏந்தியுள்ளார். பின்னால் யாளி வாகனமாக உள்ளது. இவர் நீண்ட கபாலமாலை அணிந்துள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

க்ஷேத்திரபாலபுரம் - க்ஷேத்திரபாலர்

பைரவக்குரிய பெயர்களில் முதன்மையானது க்ஷேத்திரபாலர் என்பதாகும். பிள்ளையாக்குப் பிள்ளையார் பட்டியும், குமரனுக்கு சுவாமிமலையும், சிவபெருமானுக்கு சிவபுரங்களும் சிறப்புடன் இருப்பது போல பைரவருக்குச் க்ஷேத்திரபாலகர் பெயரால் அமைந்த தலம் க்ஷேத்திரபாலபுரமாகும்

இது மயிலாடுதுறைக்கும் - கும்பகோணத்திற்கும் நடுவில் அமைந்துள்ளது. இங்கு ஊரின்மையத்தில தெற்கு நோக்கியவாறு ஆலயம் அமைந்துள்ளது. இதற்குக் கிழக்கில் வடுகதீர்த்தம் நல்ல நிலையில் உள்ளது. பெரிய கருவறையில் பைரவமூர்த்தி நான்கு கரங்களுடன் எழுந்தருளியுள்ளார். கருவறை மீது அழகிய விமானம் உள்ளது. ஒரு திறந்த வெளிப்பிரகாரமும் விசாலமான மண்டபமும் உள்ளன. மண்டபத்தில் கருவறையை நோக்கியவாறு நந்தியும், வாயிலையொட்டி விநாயகரும் உள்ளனர்.

தினமும் ஒருகால பூசை சிறப்புடன் நடத்தப் படுகிறது. கார்த்திகை மாதம் சிறப்புவழிபாடுகள் நடத்தப் படுகின்றன. இது காசிக்கு நிகராகப் போற்றப்படுகிறது. பைரவமூர்த்தி இதனை நீங்காது வாசம் புரிகின்றார் என்று புராணங்கள் கூறுகின்றன.

அம்பர் வடுகன்

தேவாரப் பாடல் பெற்றத் திருத்தலமான அம்பரிலும் அம்பர்மாகாளத்திலும் வடுகதேவனுக்குத் தனி சந்நிதிகள் அமைந்துள்ளன. அம்பரில், சங்கார சீலன் என்ற அசுரனைத் தண்டிக்கச் சிவபெருமானால் உண்டாக்கப்பட்ட வடுகர் அவனைச் சங்கரித்தபின் இங்கு சட்டநாதர் என்ற பெயரில் ஊருக்கு அக்னி மூலையில் தனிக் கோயில் கொண்டுள்ளார். இவருடைய அழகிய உலாத்திருமேனி அம்பர் பிரம்மபுரீசுவரர் கோயிலில் வைக்கப்பட்டுள்ளது. சித்திரை மாதம் விழா கொண்டாடப்படுகிறது. விழாவில் காவடியெடுக்கின்றனர். மாலையில் சட்டநாதர் வீதியுலா வருகின்றார். அம்பர் புராணம் இவருடைய பெருமைகளைச் சிறப்புடன் பேசுகிறது.

திருமுறைகளில் வைரவர்

மகாபைரவரைத் திருமுறைகள் அபூர்வமாகவே குறிக்கின்றன. அவற்றில் குறிப்பிடத்தக்கது அப்பர்சுவாமிகள் அருளிச்செய்த திருச்சேறைப் பாசுரமாகும். இது

"விரித்த பல்கதிர் கொள்சூலம், வெடிபடு தமரு கங்கை
தரித்ததோர் கோலகால பைரவனாகி வேழம்
உரித்து உமை அஞ்சக் கண்டு ஒண்டிரு மணிவாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே"

என்பதாகும். இதன்பொருள் திருச்சேறைத் தலத்திலுள்ள செந்நெறி என்னும் ஆலயத்தில் வீற்றிருக்கும் சிவபெருமான் அழகிய கால பைரவர் வடிவம் கொண்டு விரிந்த பல சுடர்களை உமிழும் சூலம், வெடிபோன்று ஒலிக்கும் டமருகம், கங்கை முதலியவற்றைத் தரித்து யானை வடிவில் வந்த அசுரனின் தோலை உரித்தார். அதைக் கண்டு அஞ்சிய உமையவளைக் கண்டு தனது மணிவாய் பொலிந்து தோன்ற அட்ட காசமாகச் சிரித்தார், என்பதாகும்.

மூவராய் நின்று முத்தொழில் ஆற்றும் பைரவர்

பைரவர், ஒரு கற்பத்தில் மும்மூர்த்திகளாக நின்று படைத்தல் காத்தல் அழித்தல் என்ற மூன்று தொழில்களையும் செய்தார். அவருடைய வலக்கரத்திலுள்ள டமருகம் படைத்தல் தொழிலையும், கபாலம் காத்தல் தொழிலையும், மேனியில் பூசியுள்ள விபூதி அவர் மேற்கொள்ளும் அழித்தல் தொழிலையும் குறிக்கின்றன. அவர் மூவராய் நிற்கும்போது விரிஞ்சி வடுகர், முகுந்தவடுகர் உருத்திர வடுகர் என்று பெயர் பெறுகிறார். இவர்களுக்கு முறையே வாக்தேவி, வைஷ்ணவசக்தி, கௌரிகை ஆகியோர் தேவியராக விளங்குகின்றனர்

ஷண்பகமாலை

பைரவருக்கு உரியமாலை ஷண்பகமாகும். அவர் ஷண்பக வனங்கலில் விரும்பி உறைகின்றார். திருச்செங்காட்டங்குடியில் பைரவருக்கு ஷண்பகப்பூ உற்சவம் கொண்டாடப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாகப்பட்டினம் சட்டையப்பர்

தில்லை சிற்றம்பலத்தில் நடராஜமூர்த்தியும்; திருவாரூரில் சோமாஸ்கந்த மூர்த்தியும், திருபுகலூரில் சந்திரசேகரமூர்த்தியும் தனிச்சிறப்புடன் எழுந்தருளி யிருப்பதுபோலவே வைரவமூர்த்தி தனிச்சிறப்புடன் எழுந்தருளியுள்ள தலம் நாகப்பட்டினம் ஆகும். இங் குள்ள காயாரோகணர்-நீலயதாக்ஷி ஆலயத்திற்கு மேற் கில் ஆதிக்காயாரோணம் என்ற திருத்தலம் உள்ளது. இந்த இடத்தில்தான் வைரவமூர்த்தி சட்டையப்பராக எழுந்தருளியுள்ளார். இக்கோயில் இவர்பெயரால் சட்டையப்பர் கோயில் என்று அழைக்கப்படுகிறது.

இங்கு இவர் உயர்ந்த கட்டுமலை மீது தெற்கு நோக்கியவாறு உள்ளார். கருவறைக்கு முன்பாக உள் மண்டபம் மகா மண்டபம் முகமண்டபம் ஆகியன உள்ளன. இவையாவும் கட்டுமலை அமைந்துள்ளன. கட்டுமலை மீதில் திறந்த வெளிப்பிராகாரம் ஒன்றும் உள்ளது.

கட்டு மலையின் தெற்கில் பெரிய விசாலமான அலங்கார மண்டபமும் அதில் கொடிமரம், பலிபீடம், சிங்கவடிவம் ஆகியனவும் உள்ளன. மண்டபத்திற்குத் தெற்கில் பெரிய வாயில் அமைக்கப்பட்டு கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது.

கிழக்குப் பிராகாரத்தில் சிவதீர்த்தம் என்ற சிறு குளம் உள்ளது. கட்டுமலைக்குத் தெற்கில் ஆதி காய ரோகணர்-ஆதி நீலாயதாக்ஷி அம்மன் ஆலயங்கள் வனப்புடன் உள்ளன. இந்த சுவாமிக்கு நேராகக் கிழக்கேயும் பெரிய வாயில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு கோட்டத்திலுள்ள தட்சணாமூர்த்திக்கு முகமண் டபம் மகாமண்டபம் ஆகியன அமைக்கப்பட்டுள்ளன.

இவர்களை வணங்கி வலம்வந்து கட்டுமலை மீது ஏறுகிறோம். மண்டபவிதானங்களில் பைரவரின் திருவுருவங்கள் பெரிய ஓவியங்களாகத் தீட்டப்பட் டுள்ளன.

மகாமண்டபத்தின் இருபுறத்திலும் உள்ள அறை கள் உலாத்திருமேனிகளான சந்திரசேகரர், சண்டீசுவரர், விநாயகர் முருகன் வள்ளி தெய்வயானை முதலிய பலமூர்த்தங்கள் எழுந்தருளி வைக்கப்பட்டுள்ளன

உள் மண்டபத்தில் ஸ்ரீ பைரவஸ்தானமாகிய பலிபீடம் உள்ளது. கருவறையில் பெரியமேடைமீது கலையழகுமிக்கச் சிறுவிமானம் உள்ளது அதனுள் வெள்ளி மஞ்சத்தில் வெள்ளிப் பிரபாமண்டலத்துக் குள் சட்டையப்பர் எழுந்தருளியுள்ளார். இவர் அளவால் மிகச்சிறிய மூர்த்தியாக இருந்தாலும் மிகவும் சக்தி வாய்ந்தவராக விளங்குகின்றார்.

பத்துகரங்கள் கொண்ட இந்த ஆகாசவைரவ மூர்த்தி முன்கையில் அபயமுத்திரையைத்தாங்கி இடது கரத்தைக் கதைமீது உன்றியுள்ளர். மற்றைய எட்டுகரங்களில் பலவகையான் ஆயுதங்கள் உள்ளன.

இவருக்கு இடதுபக்கத்தில் அமுதவல்லி என் னும் அம்பிகை எழுந்தருளியுள்ளாள். பைரவர் மிகவும் உக்கிரமாக இருந்ததால் அவரைச் சாந்திப்படுத்த இந்தத் தேவி அமைக்கப்பட்டாள் என்கின்றனர்.

இருவருக்கும் தங்கக்கவசம் அணிவிக்கப்பட் டுள்ளன. வைரவரின் வலது முன்கை கவசத்தில் உயர்ந்த கற்கள் இழைக்கப்பட்டுள்ளன.

சித்திரைமாதம் சித்ராபௌர்ணமியைக் கடை நாளாகக் கொண்டு பெருந் திருவிழா கொண்டாடப்படு கின்றது. விழாவில் தினமும் சுந்திரசேகர். பவனி வரு கின்றார் ஐந்தாம் நாள் நடைபெறும் வசந்தவிழாவிலும் பத்தாம் நாள் நடக்கும் திருத்தேரிலும் சட்டையப்பர் எழுந்தருளி அன்பர்களுக்கு அருள்பாலிக்கின்றார்.

வைரவருக்கு இங்கு நடைபெறும் கொடியேற்ற மும், தேர்த்திருவிழாவும் வசந்த உற்சவமும் பிறதலங்க ளில் காணப்படாத நிகழ்ச்சிகளாகும்.

இங்கு சட்டநாதர் எழுந்தருளியதற்கான வரலாற் றைத் தலபுராணம் சிறப்பாகக் கூறுகிறது அதன்படி :-

ஒரு காலத்தில் இராமதேவர் என்ற சித்தர் அஷ்ட மாசித்திகளைப் பெற பலதலங்களை வழிபட்டு காசிமா நகரை அடைந்தார். அங்கு அனேக பைரவத்தானங் களை வழிபட்டு பலவகையான சித்திகளைப் பெற்றார். ஒருநாள் கங்கையில் மூழ்கியெழுந்தபோது அழகிய வயிரவமூர்த்தியின் திருவுருவம் கரத்தில் வந்து சேர்ந்தது. அவர் அதனை ஓரிடத்தில் நிலைப்படுத்திச் சிறப்புப் பூசைகளைச் செய்து மேலும் அரிய சித்தி களைப் பெற்றார்.

இப்படியிருக்கும் நாளில் சோழநாட்டைச் சேர்ந்த சோழீச்சுவரர் என்பவர் முத்திப் பேற்றை வேண்டி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பலதலங்களையும் தரிசனம் செய்து கொண்டு காசி மாநகரை அடைந்தார். அங்கு இராமதேவரைக் கண்டு பணிந்து நின்றார்.

இராமதேவர் சோழீசுவரரிடம் தாம் வழிபட்டு வந்த வைரவமூர்த்தியை அளித்துப் பூசிக்கும்படிக் கூறிவிட்டு கயிலைமலைக்குச் சென்றுவிட்டார்.

நாட்கள் பல கடந்தன. ஒருநாள் வைரவமூர்த்தி, சோழீசுவரரின் கனவில் தோன்றி, 'அன்ப நாம் நாகை ஆதிக் காயாரோகணத்தில் கோயில் கொள்ள விரும்பு கிறோம்'. நீ நம்மை எடுத்துக் கொண்டு அங்கே செல்க. உமக்கு அங்கே மோட்சம் அளிப்போமென்று கூறினார்.

அதன்படியே, சோழீசர் காசியில் கங்கையில் நீராடி விசுவநாதரிடம் விடை பெற்றுக் கொண்டுப் பலதலங்களை வணங்கியபின் சோழநாட்டில் நாகப்பட் டினத்தை அடைந்தார். அங்கு ஆதிக் காயாரோகணத் தில் வைரவமூர்த்தியை வைத்து வழிபட்டார். அவருக் குக் கோயில் அமைக்க எண்ணினார். அவரிடம் அதற்கான பொருள் இல்லாததால் தயங்கிநின்றார்.

அப்போது வைரவமூர்த்தி அசரீரியாக, "அன்ப, இவ்வூருக்கு அருகில் அமைந்துள்ள திருமலைராயன் பட்டினத்தை ஆண்டுவரும் மன்னின் மகளை பிரம்ம ராக்கதன் பிடித்துள்ளான். நீ அங்கு சென்று நமது நீரைத் தெளித்து அந்த பிரம்மராக்கதனைக் கட்டியி ழுத்து இங்கே கொண்டுவருக. அவன் பிடியிலிருந்து விடுபட்டு அப்பெண் சுகம் பெறுவாள். அந்த அரசனி டம் கோயிலை அமைக்கும்படிக் கூறுக" என்றார்.

அதன்படியே சோழீசர் செய்ய மன்னன் மகிழ்ந் தான். அவர் விரும்பியபடியே கோயிலை கட்டித்தந்தது டன் வழிபாட்டிற்கும் விழாக்களுக்கும் சிறப்பான ஏற்பா டுகளைச் செய்தான்.

அவன் அமைத்த பெரிய ஆலயத்தில் சுவர்ண மயமான வைரவமூர்த்தி சட்டநாதர் என்ற பெயரில் வீற்றிருந்து அன்பர்களுக்கு அருள்பாலித்து வருகின்றார்.

இவருக்கு நேர் எதிரிலுள்ள சந்நிதித் தெருவின் மையத்தில் "இராமதேவர்" அடங்கியுள்ள ஜீவசமாதி உள்ளது. அதன்மீது பைரவ பீடம் அமைக்கப்பட்டு சிறப்புப் பூசைகள் நடைபெறுகின்றன.

இத்தலம் வைரவவழிபாட்டில் தலைசிறந்த இடத்தைப் பெற்றுள்ளது.

சிவாலயங்களில் பைரவர்

அனைத்து சிவாலயங்களிலும் சிவபூசை என்பது காலையில் சூரியனிடமிருந்து தொடங்கி அர்த்த சாமத்தில் பைரவருடன் முடிவடைகிறது. ஆலயத்தின் வடகிழக்கு முனையில் பைரவரும், தென்கிழக்கு முனையில் சூரியனும் அமைத்து வழிபடப்படுகின்றனர். அபூர்வமாகச் சிலதலங்களில் பைரவமூர்த்திக்குத் தனிச் சிற்றாலயம் அமைக்கப்பட் டுள்ளதையும் காண்கிறோம்.

பைரவர் மூன்று கண்களை உடையவர். தலை மீது ஜ்வாலாமுடி விளங்க இதில் அமைந்துள்ள மணிகளால் கோர்க்கப்பட்ட நீண்ட மணிமாலையை அணிந்துள்ளார். மேற்கரங்களில் டமருகம் பாசம், கீழ்க்கரங்களில் சூலம், கபாலம் (இது சமயநூல்களில் நீர்குடிக்க உதவும் பானபாத்திரம் என்று அழைக்கப்படுகிறது) ஆகியவற்றை ஏந்தியுள்ளார். பின்புறம் வாகனமான நாய் நிற்கின்றது. நிர்வாண கோலத்தில் விளங்கும் இவர் இளமையும் கவர்ச்சியும் கொண்டவராக உள்ளார்.

சிவாலயத்தில் மாலையில் பூசை முடிந்ததும் பைரவருக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்து ஆலயத்தின் கதவுகளை மூடி சாவிகளை அவர் காலடியில் வைப்பது வழக்கம். இந்நாளில் பூசை முடிந்ததின் அடையாளமாக கைமணியையும் அபிஷேக கலசத்தையும் வைக்கின்றனர்.

பைரவருக்குப் பிரியமானவை நெய் அபிஷேகம், சிவப்பு மலர்கள், நெய்தீபம், உடைக்கப்படாத முழுத்தேங்காய், மாவிளக்கு நாரப்பழங்கள், சிவப்பு வண்ணம் தோய்த்த கல்யாண பூசனிக்காய் தேன், வடை, அவித்த உணவுகள் முதலியவையாகும். பிரம்மோற்சவத்திற்கு முன்னும் பின்னும் பைரவருக்கு சிறப்பு வழிபாடுகள் செய்ய வேண்டுமென்று பூஜாபத்தி நூல்கள் கூறுகின்றன.

அபூர்வமாகச் சிலதலங்களில் ஆறு எட்டு கரங்கள் கொண்ட பைரவரைக் காண்கிறோம். பத்து, பதினாறு கரங்களுடன் கூடிய பைரவரும் உள்ளனர். சிவாலயங்களில் பைரவர் மேற்கு நோக்கி இருப்பது உத்தமம் என்றும்; தெற்கு நோக்கியிருப்பது மத்திமம் என்றும், கிழக்கு நோக்கியிருப்பது அதமம் என்றும் பிரதிஷ்டா நூல்கள் குறிக்கின்றன.

ஸ்ரீ பைரவி உடனாய பைரவர் அருளால் அனைவரும் இனிது வாழ்க! வாழ்க!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவமஞ்சரி

சிவபெருமானின் பெருமைகளைப் பேசும் நூல்
இது சிவபெருமானுக்குச் சொல்லால் கட்டப்பட்ட திருக்கோயில்